# கன்யாசுல்கம்

(அற்புதத் திருமணம்)

குரஜாட அப்பாராவ்

தமிழாக்கம்

மு. கு. ஜகந்நாத ராஜா

# கன்யா சுல்கம்

சமூக சீர்திருத்த நகைச்சுவை

நாடகம்

# கன்யா சுல்கம்
## (அற்புதத் திருமணம்)

சமூக சீர்திருத்த நகைச்சுவை நாடகம்

தெலுங்கு மூலம் :

குராஜாட அப்பாராவ்

தமிழாக்கம் :

மு. கு. ஜகந்நாத ராஜா

பாரி நிலையம்

59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : ஜனவரி, 1964.

விலை ரூ. 5—00

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
83, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை—14.

# அணிந்துரை

பிறநாட்டு நல்லறிஞர் நூல்களைத் தமிழில் பெயர்த்தல் வேண்டும் என்பதை இந்நூற்றுண்டில் நம்மில் பலர் வற்புறுத்தி வருகிறோம். எனினும் மிகுதியான நூல்கள் மொழிபெயர்க்கப் பெறவில்லை. ஏற்கெனவே வெளிவந்துள்ள நூல்கள் பெரும்பாலும் சிறுகதை, நாவல் துறைகளையே சார்ந்தவை. பல நூல்கள் நேரடியாக மூல மொழியிலிருந்து தமிழாக்கப்படாமல், ஆங்கில மொழியின் வாயிலாக இரண்டாந் தடவையாக மொழிபெயர்க்கப் பெற்றுத் தமிழ் வடிவம் பெறுகின்றன. ஏனைய திராவிட மொழி நூல்கள்கூட சில சமயம் இவ்வாறு தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றிருப்பதை அறிவேன்.

எனவே நாடக நூலொன்று நேரே தெலுங்கிலிருந்து தமிழில் தரப்படுவது மகிழ்ச்சிக்கு உரியது. இந்த மொழிபெயர்ப்பைச் செய்திருப்பவர், முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தெலுங்கு நாட்டிலிருந்து குடியேறி இன்றைய இராஜபாளையத்தில் தமிழர்களாய் வாழ்ந்து வரும் ராஜாக்கள் சமூகத்தைச் சேர்ந்த மு. கு. ஜகந்நாதராஜா என்ற இளைஞராவர். கடந்த எட்டு ஆண்டுகளாக யான் இவருடைய அண்ணன் மு. கு. இராமச்சந்திர ராஜா அவர்களையும் இவரையும் நன்கு அறிவேன். இவருடைய பேச்சும் மூச்சும் இலக்கிய மணம் கமழும். இவருடைய முயற்சியும் ஆர்வமும் பெரிதும் போற்றுதற்குரியன.

கன்யாசுல்கம் என்னும் பெயருடைய இந் நாடகம் தெலுங்கு மொழியில் பெரும் புகழ்

பெற்றது. இது திரைப்படமாக எடுக்கப்பெற்ற தாகவும், நாடக இலக்கியம் நிறைந்த பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்க்கப் பெற்றிருப்ப தாகவும் தெரிகிறது. ரஷ்ய மொழியிலும் இது வெளிவந்திருக்கிறது. இந்த நாடகம் நிகழும் இடம் ஆந்திரமாக இருந்தாலும் இது தமிழ் நாட்டுச் சூழ்நிலையையே பெரும்பாலும் ஒத்த தாக இருக்கிறது. பாத்திரங்களின் படைப்பும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்தி இருப்பதும் இந்நாடகத்தின் சிறப்பான இயல்பு களாக விளங்குகின்றன.

இந்நூலின் தமிழ்நடை இந்நாளில் வெளி வரும் நூல்களின் நடையினின்றும் மாறுபட்ட தாக இருக்கிறது. இதற்குக் காரணம் மூலநூல் சொச்சை மொழியில் அமைந்திருப்பதே என்றும், நாடகநூல் பேச்சு வழக்கு நடையில் அமையலாம் என்றும் மொழிபெயர்ப்பாளர் கருதுவதாகும்.

இராஜபாளையத்தில் தமிழ் ஆர்வத்தை வளர்த்தவரும், தலைசிறந்த தமிழன்பராக விளங்கியவருமாகிய, பூ. ச. குமாரசாமி ராஜா அவர்களுக்கு இந்நூல் காணிக்கையாக்கப் பெற்றிருப்பது மிகப் பொருத்தமேயாகும்.

புதிய கருத்துக்களை அறியவும், தெலுங்கு-தமிழ் உறவுகள் வளரவும் இந்நூல் துணை புரியு மென்று நம்புகிறேன். திரு. ஜகந்நாத ராஜா வின் முயற்சிகள் மேன்மேலும் சிறக்க வேண்டு கிறேன்.

—'சோமலெ'

# முன்னுரை

உலக நாடக இலக்கியத்தில் தனக்கென ஒரு இடம் பெற்ற தகுதியுடைய நாடகம் "கன்யாசுல்கம்". புகழ்பெற்ற கவிஞரும், மறுமலர்ச்சி யுகத்தைச் சார்ந்த எழுத்தாளரு மான குரஜாட அப்பாராவ் தெலுங்கில் எழுதிய இந்த நாடகம் தெலுங்கிலக்கிய வரலாற்றில் சிறப்பான இடத் தைப் பெற்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் மலிந்துகிடந்த மூடநம்பிக்கை களையும் அனுசாரங்களையும் எதிர்த்து. நகைச்சுவை ததும்ப, சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் நெஞ்சில் ஊடுருவும்படியாக இந்த நாடகத்தை அமைத்துள்ளார். சுமார் அரை நூற்றாண்டுகட்கு முற்பட்ட நாடகமானாலும்கூட இன்னும் இந்த நாடகத்தில் இலக்கியத்தரம் குறையாமலிருக்கும் நகைச்சுவையையும், அற்புதமான பாத்திர சிருஷ்டியையும், அழகிய சம்பாஷணைகளையும் நம்மால் அனுபவிக்க முடிகிறது. சிறந்த கலைச்செல்வங்கள் காலவெள்ளத்தில் அழியாதென் பதை இந்த நாடகமும் நிரூபிக்கின்றது.

நவீன தெலுங்கிலக்கியத்தின் யுக புருஷராகத் திகழும் கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு—தம்மைச் சுற்றிலும் கிடந்த மூடநம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், அனுசாரங் களை அம்பலப்படுத்துவதோடு, தாமே செயலில் செய்து காட்டிய தீரர். விதவா விவாஹங்களை நடத்திவைத்து தெலுங்கு நாட்டிலும், இலக்கியத்திலும் ஒரு புரட்சியை சாதித்தார். அவருக்கடுத்தபடியாக மக்கள் மன்றத்தில் நிரந்தரமான இடத்தைப் பெற்றவர் நம் குரஜாட அப்பா

ராவ்தான். அப்பாராவ் எழுதிய முழுமையான நாடகம் கன்யாசுல்கம் ஒன்றுதான். இந்த ஒன்றே அவருக்கு நிரந்தர மான கீர்த்தியை சம்பாதித்துக் கொடுத்தது. அவரது இலக்கியப் படைப்புகள் அளவில் குறைந்தவைதான் எனினும் தரத்தில் மிக உயர்ந்தவை. ஆதலின் அப்பா ராவை ஆதர்சமாகக்கொண்டு பல கவிஞர்கள் தோன்ற முடிந்தது. தமிழ் நாட்டிற்கு பாரதியார் போன்றே தெலுங்கு நாட்டார் அப்பாராவைப் போற்றுகின்றார்கள்.

இந்த நாடகத்தை அப்பாராவ் கொச்சையான தெலுங்குமொழியில் எழுதினார். மக்கள் மொழியிலேயே இலக்கியம் படைக்க முடியுமெனக் காட்டவே அப்படி எழுதினார். எனினும் யான் தமிழாக்கும் போது தமிழ் நாட்டார் மரபுக்கேற்ப தற்கால பத்திரிகை நடையில் எழுதுவதே சிறந்ததெனக் கருதி அவ்வாறே எழுதலானேன். இந்நாடகம், கிழவர்களுக்கு இளங்குமரிகளைக் கட்டிக் கொடுக்கும் அதிபாலிய விவாஹத்தை ஒழிக்கவும், மணம் புரிய பெண்களை விலைமாடுகளைப் போல விலை பேசி கன்யா சுல்கம் (பெண்களுக்கு தரும் தக்ஷிணை) தரும் கொடும் வழக்கத்தை எதிர்த்தும் தேவதாசி முறையை ஒழிக்கவும், விதவா விவாஹத்தை ஆதரித்தும், பிற மூடப்பழக்கவழக் கங்களைக் கேலி செய்தும், சமுதாய சீர்திருத்தத்தை உண் டாக்கவே எழுதப்பட்டது. குறிப்பிட்ட லட்சியத்தை விளக்கும் உத்தேசத்துடன் எழுதப்படினும் நாடகத்தில் எங்கு நோக்கினும் கலைமணம் கமழுகின்றது. அரை நூற்றாண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட இந்த நாடகத்திற்கு இணையான நாடகம் இதுவரையும் தென்னகமொழிகளிலே இயற்றப் பெறவில்லை என்பதிலிருந்து ஒருவாறு இதன் சிறப்பை ஊகிக்கலாம். சமீபத்தில் குரஜாட அப்பாராவின் நூற்றாண்டு விழா ஆந்திர நாட்டில் மட்டுமன்றி ருஷ்யா போன்ற அயல் நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

இத்தகைய மாமேதையின் கருத்தழகும் கலையழகும் மிளி ரும் இந்த நாடகத்தை நான் 1960-ம் ஆண்டில் தமிழாக்கம்

செய்துமுடித்திருந்தேன். அதன் பிறகு இது ஆல்பிரெட் என்பவர் பிரஞ்சுமொழியில் மொழிபெயர்த்த செய்தி கிடைத்து மகிழ்வுற்றேன். 1961 நவம்பரில் அப்பாராவின் பிறந்த நாள் நூற்றுண்டு விழா நடைபெற்றபோது, சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஆசிய மக்கள் நிறுவனத்தில் ஆராய்ச்சி ஊழியரான பெத்ருனிச்சேவா-கன்யா சுல்கத்தை ரஷ்ய மொழியில் தான் மொழிபெயர்த்ததைக் குறித்துப் பேசிய செய்தி அறிந்து மிகவும் மகிழ்ந்தேன். பிற நாட்டார் பாராட்டும் இந்நூலை தமிழ் நாட்டார் படித்து இன்புறவேண்டும் என அவாவினேன்.

திரு C. பாலசுப்பிரமணியம் M. A. அவர்களை நான் எங்களூரில் சந்திக்கும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. பச்சையப்பன் கல்லூரி தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றும் அவர்களுடன் பேசும்போது எனது நூலைப்பற்றியும் குறிப்பிட்டேன். நட்பிற்கிலக்கியமாகத் திகழும் அவர்கள் "உணர்ச்சிதான் நட்பாம்கிழமை தரும்" என உணர்ந்து என்பால் அன்பும் பரிவும் கொண்டு அதை அச்சாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பாலசுப்பிரமணியம் அவர்களின் முயற்சியால் இந்நூல் வெளிவருவதைக் கண்டானந்திக்கும் நான் அவருக்கு என் நன்றியை எப்படிப் புலப்படுத்துவதென்பது தெரியவில்லை. உணர்ச்சிகளைத் தெரிவிக்க எந்த மொழியிலும் போதுமான சொற்கள் கிடைப்பதில்லையல்லவா?

இந்நூல் வெளியீட்டுக்கு தமிழறிஞரும் உலகம் சுற்றிய தமிழருமான திரு 'சோமலெ' அவர்கள் தோன்றாத்துணையாக நின்றுதவியமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு வெளியிட்ட பாரி நிலையத்தாருக்கும் என் நன்றி உரியதாகுக.

இந்நாடகப் பாத்திரமாகிய கிரீசத்தின் ஆங்கிலம் கலந்த தமிழ்மொழி நடையை மூல்நூலாசிரியரின் கருத்துக் கேற்ப ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வாசகர்கள் இந்நூலை,

குறைந்தது இரண்டு தடவையாவது படித்தால்தான் இதன் நயத்தை உணரமுடியுமென்று கருதுகிறேன். மேலும் படிப்பவர்கள் கதை நடந்த காலகட்டத்தை மனதிலிருத்திக் கொள்வதோடு பாத்திரங்களைப் பற்றிய குணாதிசயங்களையும் நினைவிற் கொள்ள வேண்டும். இதில் வரும் கிரீசம் போன்ற டாம்பீகமான பேர்வழி, சௌஜன்யராவ் பந்துலு போன்ற உன்னதமான பாத்திர சிருஷ்டி, மதுரவாணி போன்ற இலக்கியப்படைப்பு—குரஜாட அப்பாராவ் போன்ற மாமேதைகளால்தான் சிருஷ்டிக்க முடியும். எனினும் தமிழில் நாடகம் எழுதுவோர், இப்படிப்பட்ட பாத்திர சிருஷ்டிகளை உணர்ந்து, சமுதாயத்தில் புரையோடிய ஊழலை நாசூக்காக வெளிக்கொணரும் வகையிலும், சிறந்த லட்சியத்தை மையமாகக் கொண்டும் சலிப்பில்லாதபடி படிக்கப் படிக்கச் சுவையூட்டும் சம்பாஷணைகளையுடைத்தாயும், பிரத்தியட்ச வாழ்வை யொட்டி சிறந்த நாடகங்கள் தயாரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய நாடக சிருஷ்டி கர்த்தர்களுக்கு இந்த நூல் உதவுமானுல் அதுவே இம் மொழிபெயர்ப்பினுல் ஆய நற்பயனெனக் கருதுவேன்.

12—12—63
இராஜபாளையம்

மு. கு. ஜகந்நாத ராஜா

# நூலறிமுகம்

'கன்யாசுல்கம்' என்னும் இந்த நாடகம் நவீன தெலுங்கு இலக்கியத்தில் தன்னிகரற்ற சிறப்புடையதாகும். தான் வாழும் காலத்திய சமுதாய நிலையைப் பிரதிபலிப்பதாகவும், சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டி, நல்வழி காட்டு வதாகவும் அமைவதே சிறந்த நாடகமாகும். நவரச பாவங்களுடன் நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்றவகையில் சுவை பயப்பதாகவும், சிறந்த சீர்திருத்தக் கருத்துக்களை நகைச்சுவையோடு எடுத்துச் சொல்லி, நயமாக இதயத்தில் நீதியை வலியுறுத்துவதாகவும் இந்த நாடகம் அமைந் துள்ளது. சாதாரண மக்களின் நடவடிக்கைகளையும், அவர்களது வாழ்க்கை முறைகளையும் ஊன்றிப் பார்த்து, அவர்களைத் திருத்தும் வகையில் அவர்களது கொச்சை மொழியிலேயே இந்த நாடகம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. அதியற்புதமான பாத்திர சிருஷ்டிகளையும் குணசித்திரங் களையும் சிருஷ்டித்து இந்நூலாசிரியரான குரஜாட அப்பா ராவ் இந்திய நாடக இலக்கியத்தில் தனக்கெனத் தனி இடம் ஒதுக்கிக் கொண்டார். இவர் 30-11-1861-ல் தெலுங்கு நாட்டில் விசாகப்பட்டினம் ஜில்லா ராமவரத்தில் பிறந் தார். விஜய நகரம் காலேஜில் படித்து B.A. தேர்ச்சி பெற்றார். உபாத்தியாயராக இருந்த சமயம் 1896-ல் இந்த ''கன்யாசுல்க்க'' நாடகமியற்றினார். பேச்சு மொழியே இலக்கிய மொழியாக வேண்டுமெனப் பாடு பட்டார். சமுதாய சீர்திருத்த வாதியாக இருந்தார். விஜயநகரம் மகாராஜாவின் ஆதரவில் சாசனப் பரிசோத கராக சிலகாலம் இருந்தார். 30-11-1915-ல் தமது 54-ஆம் வயதில் காலமானார். புதிய முறையில் சில கவிதைகள் இயற்றி மகாகவிப்பட்டம் பெற்றார். இவர் இயற்றிய

நூல்கள் பல அரைகுறையாகவே உள்ளன. இவர் இயற்றிய தில் சிறந்ததும் முழுமையானதும் இந்த நாடகம் ஒன்று தான்.

தெலுங்கில் இலக்கிய நடையிலெழுதாமல், சாதாரண மக்களின் கொச்சை மொழியில்தான் இந்நூல் இயற்றப் பெற்றது. எனினும், அதன் பாத்திர சிருஷ்டியாலும் கருத் தாழத்தாலும் உயர்ந்தரக நாடகமாகத் திகழ்கின்றது. தமிழ் மொழி பெயர்ப்பில் மூல நூலாசிரியரைப் போல் கொச்சை மொழியைப் பயன்படுத்தாமல் சாதாரண நடை முறையிலுள்ள பத்திரிகைத் தமிழ்தான் பயன்படுத்தப்பட் டுள்ளது. தமிழ் நாட்டில் 'தூயதமிழ்' இயக்கங்கள் நடை பெறுகின்றனவே யன்றி, கொச்சைத் தமிழை, இலக்கியத் தமிழாக்க இயக்கங்கள் நடப்பதில்லையல்லவா?

50 ஆண்டுகட்கு முன்பே இவ்வளவு அழகிய நாடகம் வெளிவந்தது பெருமைப் படத்தக்கதுதான். இந்த நாடகம் இன்றைய நிலைக்கும் பொருத்தமாகத்தான் இருக்கிறது. ஒரு சில வழக்காற்றைத் தவிர பொதுவாக மற்றதெல்லாம் தமிழ் நாட்டுக்கும் பொருந்துகிறது. ஆங்கில மோகமும் போலி ஆடம்பரமுமுடைய அடிமை இந்தியாவின் அந் நாளைய நிலையைத் தெட்டத் தெளிவாக விளக்கும் பாத்திரங் களை இந்த நாடகத்தில் காணலாம். ஆசிரியர் கதையை மிக அழகாகவும் நகைச்சுவையோடும் அமைத்திருக்கிறார். நாடகப் பாத்திரங்களோ அதியற்புதமான சிருஷ்டிகள். சம்பாஷணையும் மிக நன்றாக அமைந்திருக்கிறது. இந்நாடகம் தெலுங்கு நாடு முழுதும் நடித்துக் காட்டப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான மக்கள் இரண்டு தலைமுறையினரும் கண்டுகளித்த நாடகம் இது. திரைப்படமாகத் தெலுங்கில் வெளிவந்திருந்தது. இத்தகைய ஒப்புயர்வற்ற நாடகத் தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன். இந்நாடகந்தை முதலில் தமிழில் நான் மொழிபெயர்த்தேன். இதைப் பிரஞ்சு மொழியில் 'ஆல்பிரட்' எனும் பிரெஞ்சுக்காரர் சமீபத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

விதவா விவாஹத்தை ஆதரித்தும், கிழவர்கட்கு இளம் பிள்ளைகளைக் கட்டிக் கொடுப்பதும், அதற்காகப் பணம் கொடுத்துப் பெண்களை விலைபேசிப் பெறுவதும் தவறு என்று கூறியும், தேவதாசி என்ற பெயரில் சமுதாயத்தில் தீய நஞ்சாகத் திரிந்த வேசிகளை வைத்துக்கொள்ளும் கொடிய வழக்கத்தைக் கண்டித்தும், இன்னும் போலிச்சாமியார்கள், கட்குடிப்போர், போலீஸ்காரர்கள், கிராமக் கணக்கப்பிள்ளை முதலியோரின் லஞ்ச ஊழல்களைக் கண்டித்தும் இந்த நாடகம் புரட்சிகரமான சமுதாய சீர்திருத்தத்தை உண்டுபண்ணுகிறது. தெலுங்கு நாட்டின் சமுதாயம் முன்னேறியதற்கு இந்த நூல் முக்கியக் காரணமாகத் திகழ்ந்ததென்றால், இதைவிட வேறென்ன சொல்ல வேண்டும்.

இந்த நூலில் வரும் பாத்திரங்களைப்பற்றியும் நூலைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும், நாடக இலக்கியம் பற்றியும் விரிவாக விமர்சித்து எழுதியுள்ள எனது கட்டுரையும், கதைச் சுருக்கம் முதலியனவும், அனுபந்தமாகத் தரப்பட்டிருக்கிறது.

இந்த நூல் தமிழில் நாடகமெழுதுவோர்க்கு ஒரு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்பது என் ஆசை.

மு. கு. ஜகந்நாத ராஜா

# சமர்ப்பணம்

சென்னை மாநில முதலமைச்சாய்
சிறந்த சேவை செய்தவனே
பின்னர் ஒரிசா கவர்னரெனப்
பெரிய பதவி தனிலுற்றுய்
இன்னும் காந்தி கலைமன்றம்
என்னும் கோயில் நிறுவினையே!
மன்ன! குமார சாமிராஜா!
மாசில் லாத உளத்தோனே. 1

என்பால் அன்பால் கலைமன்றத்
தெண்மர் குழுவில் செயற்படுத்தி
இன்பாய் கவுர வித்தனையே!
இளையோன் என்றும் எண்ணிலையால்.
உன்போல் யாரே நேர்மையுடன்
உண்மைக் கலையை யாதரித்தார்?
மன்போல் சிறந்த வாழ்வுடைய
வாரு டாளும் மன்னவனே. 2

குமார சாமி ராஜா நின்
கோதில் தியாக சரிதமது
இமால யந்தான் உளமட்டும்
இந்தி யர்தம் நினைவினிலே
அமையு மென்றல் மிகையன்றே!
அடியேன் உன்னைப் புகழ்வானேன்?
சமையும் என்றன் சிறு நூலை
சமர்ப்ப ணந்தான் செய்திடுவேன். 3

எளியேன் செய்த இந்நூலை
இதயங் கனிந்தே கொள்வையென
அளிக்க முன்வந் துள்ளேன் யான்
ஆதரிப்பாய் எனநம்பிக்
களிக்கும் சிந்தையுடன் வந்தேன்.
கருணை மாறு உளத்தெந்தாய்
ஒளிகொள் வாழ்க்கை உத்தமனே
உவந்தே ஏற்றுக் கொள்வாயே! 4

# பாத்திரங்கள்

அக்கினி
ஹோத்ராவதானியார்—கிருஷ்ணராயபுரம் அக்கிரகார பிராமணர். பழமைவாதி.

வெங்கம்மா —அவரது மனைவி

புச்சம்மா —அவர் மூத்த மகள். விதவை.

சுப்பம்மா —அவரது இரண்டாவது மகள். சிறுமி.

வெங்கடேசம் —அவரது மகன். கிரீசத்தின் மாணவன்.

கரடக சாஸ்திரி —அவரது மைத்துனர். விஜயநகர சமஸ்கிருத நாடகக் கம்பெனி விதூஷகர். (குண்டூர் சாஸ்திரியாகிறார்.)

சிஷ்யன் —கரடக சாஸ்திரி சிஷ்யன். மணப்பெண் வேஷத்தில் இருக்கிறான். பின் சாமியார் வேஷம் போடுகிறான்.

லுப்தாவதானியார் —ராமச்சந்திரபுரம் அக்கிரகார பிராமணர்.

மீனாட்சி —லுப்தாவதானி மகள். விதவை.

ராமப்பபந்துலு —ராமச்சந்திரபுரம் கர்ணம். மதுரவாணியை வைத்துக்கொண்டிருப்பவர்.

கிரீசம் —லுப்தாவதானியின் சித்தி மகன். படாடோபப் பேர்வழி. மதுரவாணியிடம் உறவுடையவன். புச்சம்மாவைக் காதலிக்கிறான். வெங்கடேசத்திற்கு டியூஷன் சொல்லித் தருகிறான்.

சௌஜன்யராவ் பந்துலு—வக்கீல். நன்மையே உருவெடுத்தவர்.

பீமார்ராவ் பந்துலு —பிளீடர்.

நாயுடு —பிரைவேட் வக்கீல்.

பூசாரி கவரய்யா —வைத்தியன். மாந்திரீகன்.

மதுரவாணி —தாசி. சீர்திருந்துகிருள்.

இன்னும்,

டிப்டி கலெக்டர், ஹெட் கான்ஸ்டபிள், போலீ செட்டி, சித்தாந்தி, பைராகி, கடைக்காரன், கிராம முன்சீப், ஹவல்தார், யோகினி, வேலைக்காரன் அசிரிகன், மணவாளய்யா, வீரேசம் முதலியோர்.

**இடம்**

விஜயநகரத்திலும் அருகிலுள்ள கிருஷ்ணராயபுரம், ராமச்சந்திரபுரம் ஆகிய இரு ஊர்களிலும்.

**காலம்**

சுமார் 1880 முதல் 1900 வரை.

# கன்யா சுல்கம்

## முதல் அங்கம்

### காட்சி—1

இடம்: விஜயநகரத்தில் ஓரிடம்.

[கிரீசம் வருகிறுன்]

**கிரீசம்:** சாயங்காலமாகி விட்டது. சாப்பாட்டுக் கடைக் காரிக்கு சந்தையிலே சாமான் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஒரு மாதத்துக்கு முன்பு இருபது ரூபாய் வாங்கிக்கொண்டு வந்து, அதை டான்ஸிங் கேள்ஸ் (நாட்டியக்காரி)களிடம் கொடுத்துத் தொலேத்து விட்டேன். இன்று காலேயிலே கடைக்காரிக்கும் எனக் கும் பெரிய சண்டை வந்துவிட்டது. மண்டையை உடைப்போமா என்று அவ்வளவு கோபம் வந்ததாலு லும் பூர் ரிச்சர்ட் சொன்னதுபோல, 'பொறுமை இல்லா விட்டால் இந்த உலகத்தில் காலந்தள்ள முடியாது' என்று விட்டுவிட்டேன். இப்படிப் பணம் பிடுங்கிக் கொண்டிருந்தும் இதுவரைக்கும் பல தடவைகளிலும் சும்மா இருந்தாளல்லவா? இப்போதேதோ டான்ஸிங் கேள்ஸ்களின் பேச்சை அவளிடம் யாரோ அளந்து விட்டிருக்கிருர்கள் போலத் தோன்றுகிறது. பொரு மைக்காரப் பயல் எவனுவது சொல்லி இருப்பான். காலேயில் நடந்த கதையை நினேத்தால் இனிமேல் சாப் பாடு போடுவாளென்று தெரியவில்லே. இனி இந்த ஊரில் நம்ம பருப்பு வேகாது. எங்கே பார்த்தாலும்

எல்லோரிடமும் கடன்கள்தான். வெங்குப் பந்துலு மருமகளுக்கு லவ் லெட்டர் எழுதியதற்காக எப்போ தாவது ஒரு நாள் சமயம் பார்த்து உதை விழத்தான் போகிறது.

Can love be controlled by advice?
Will cupid our mothers obey?
(காதலைக் கடிவதால் கட்டுப்படுமோ?
காமன் நம் தாய்க்குப் பணிவானோ?)

சீக்கிரம் இங்கிருந்து வெளியேறுவதே அறிவுடைமை யாகும். ஆனால், மதுரவாணியை விட்டுப் பிரியத்தான் மனம் சம்மதிக்க மாட்டேன் என்கிறது.

It is women that seduce all mankind

நான் என்னவோ உத்தியோகத்திலிருந்து ஊரார்ண்டு தன்னோடு சகல வைபவங்களோடும் வாழ்க்கை நடத் துவேன் என்று நம்பிக்கொண்டிருக்கிறாள். பேதைப் பெண்! உம்! யார், வருவது? என் அன்பார்ந்த சிஷ்யன் வெங்கடேஸ்வரன் போலிருக்கிறது. இப்போது கிறிஸ்து மஸ் விடுமுறை விட்டிருப்பார்கள். இவன் இருக்கும் தினுசைப் பார்த்தால் பெயில் ஆனாற்போலத் தோன்று கிறது. இவனைக் கொஞ்சம் ஆறுதல் கூறி இவனுக்கு விடுமுறையில் பாடம் சொல்லிக் கொடுக்கும் சாக்கில் இவனோடு இவனூருக்குப் புறப்பட்டுப் போய்விட்டால் சிக்கல்களெல்லாம் தீரும்.

[வெங்கடேசம் வருகிறான்]

என்னப்பா மை டீயர் சேக்ஸ்பியர்! முகமெதற்கு வாடி யிருக்குது?

**வெங்கடேசம்:** இனிமேல் தாங்கள் என்னோடு பேசாதீர்கள். எங்கள் டீச்சர் உங்களோடு பேசக் கூடாதென்று சொல்லிவிட்டார். உங்களோடு சஹவாசம் வைத்த தால்தான் நான் பெயிலாகி விட்டேன் என்று சொன்னார்.

**கிரீ:** நான்சென்ஸ்! முதலிலேயே எனக்குத் தெரியும். உங்கள் டீச்சருக்கு என்னைக் கண்டால் பிடிக்காது. அதனால்தான் உன்னை பெயிலாக்கினாரே தவிர, நீயாவது பெயிலாவதாவது? அவருக்கும் எனக்கும் ஏன் விரோதம் வந்தது தெரியுமா? அவர் சொல்வதெல்லாம் தப்பும் தவறுமாக இருக்கிறதென்று நியூஸ் பேப்பரிலே வெளி

யிட்டு விட்டேன். அன்றிலிருந்து என்னைக் கண்டால் அவனுக்கு வயிற்றெரிச்சல்.

**வெங்:** *உங்களாலே எனக்குத் தெரிந்ததெல்லாம் சிகரட் குடிப்பதொன்று மட்டும்தான். பாடம் சொல்லிக் கொடுக்கச் சொன்னால் எப்போதும் ஏதாவது செய்திகளைச் சொல்வது தவிர என்றாவது கொஞ்சமாவது பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களா?*

**கிரீ:** *டாமிட்! இப்படிப்பட்ட பேச்சு என்றால் எனக்குக் கெட்ட கோபம் வரும். இது முதல் தடவை. என்னோடு பேசுவதே ஒரு எஜுகேஷன் (கல்வி). அப்படிப் பார்த்தால் உனக்கிருக்கும் லாங்வேஜ் (மொழி அறிவு) உங்கள் டீச்சருக்கிருக்கிறதா? விடோ மேரேஜ் விஷயமாகவும் அதி பாலிய விவாஹ விஷயமாகவும் உனக்கு எத்தனை லெச்சர்கள் செய்திருக்கிறேன்! என்னிடம் படித்தவர்கள் எல்லோருமே சிறப்போடு இருக்கிறார்கள். பூனா டக்கன் காலேஜில் நான் படிக்கும்போது தி லெவன் காஸஸ் பார் தி டிஜனரேஷன் ஆப் இண்டியா* (The eleven causes for the degenaration of India) *குறித்து மூன்று மணி நேரம் ஒரு பெரிய லெச்சர் செய்யும்போது புரபஸர்களெல்லாம் அப்படியே பிரமித்து விட்டார்கள். முந்தா நாள் வங்காளி ஒருவன் இந்த ஊரில் லெச்சர் செய்யும்போது ஒருவனுக்காவது வாய் அசைந்ததா? நம்மவங்க சுத்த முட்டாள்கள். சிகரட் குடிக்கச் சொல்லிக் கொடுத்ததற்கு தேங்ஸ் சொல்லாமல் குற்றம் சொல்கிறாயா? சிகரட் குடிப்பதன் மஜா (இன்பம்) உனக்கு இன்னும் புரியவில்லை என்பது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. சிகரட் குடிப்பதனாலல்லவா துரைமார்களெல்லாம் பெரியவர்கள் ஆனார்கள். சிகரட் குடிக்காத வெள்ளைக்காரனைப் பார்த்திருக்கிறாயா? புகைக் குழாயைக் கொண்டுதான் ஸ்டீமர் முதலியவைகளெல்லாம் வெள்ளைக்காரன் கண்டு பிடித்தான். இல்லாவிட்டால் அவர்களுக்கு மட்டும் பிடிபடுமா? நமது சாஸ்திரத்தில் என்ன சொல்லி இருக்குது, தெரியுமா?—சூதர் சொன்னார்:*

*" கருடாழ்வார் நல்லமுதம் கொண்டுவருங் கால், வான்*
*மருவுவிண மீன் பொங்கியே மண்வீழ்ந்த தஃதே*
*திருவார் புகையிலையாய்ச் சீராய்ப் பிறந்த*
*தரும்புகை யைக்குடியா தார்கள் பிறப்பர்*
*எருதாக மீண்டும் இவண்."*

இது பெருநாரதீயம்—நான்காம் படலத்திலிருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும். உன்னைப்போன்ற அறிவுள்ள பையனை பெயிலாக்கியதற்காக உங்கள் டீச்சர்மேல் கோபம்கோபமாக வருகிறது. இந்தத் தடவை அவரைத் தனியாகச் சந்தித்து ஒரு போடு போடுகிறேன். ஆமாம்! நீ லீவில் இங்கேயே இருக்கப் போகிறாயா? ஊருக்குப் போகிறாயா?

**வெங்:** போகவேணுமென்றுதான் இருக்கிறேன். ஆனால், பாஸாகவில்லை என்று எங்கப்பா என்னைக் கொன்று விடுவாரே...?

**கிரீ:** இந்தக் கண்டத்திலிருந்து தப்புவதற்கு ஓர் உபாயம் நான் சொல்கிறேன். நான் சொல்வதையெல்லாம் கேட்கிறேன் என்று சத்தியம்செய்து கொடுப்பாயா?

**வெங்:** (கிரீசம் காலைப் பிடித்து) உங்கள் கட்டளையை எப்போதாவது மீறி நடந்திருக்கிறேனா? எங்கப்பாவுக்குக் கெட்ட கோபம் வரும். பாஸாகவில்லை என்று எலும்பை முறித்து விடுவார் (கண்ணீரைக் கையால் துடைத்துக் கொள்கிறான்.)

**கிரீ:** தடீஸ் டிரனீ. இப்போது ஒரு வங்காளச் சிறுவனா யிருந்தால், என்ன செய்வான் தெரியுமா? தாத்தாவானும் தகப்பனானும் கம்பெடுத்துக்கொண்டு அடிப்பான். சரி, உங்கள் அக்கிரகாரத்துப் பையன்கள் யாராவது இந்த ஊரிலே படிக்கிறார்களா?

**வெங்:** யாருமே இல்லை.

**கிரீ:** அப்படியானால் நான் ஓர் உபாயம் சொல்கிறேன் கேள். நானும் உன்கூட வந்து பரீட்சையில் பாஸாகி விட்டாயென்று உங்கள் வீட்டில் சொல்கிறேன். அங்கே உனக்குப் பாடம் சொல்லித் தர வந்தேன் என்று சொல்லு. விடுமுறை கழிந்ததும் உன்னை டவுன் ஸ்கூலிலே மேல் வகுப்பில் சேர்த்துவிடுகிறேன்.

**வெங்:** நீங்களே வந்துவிட்டால் பிழைத்த மாதிரிதான். போன விடுமுறையிலேயே எங்கம்மா உங்களை அழைத்துக்கொண்டு வரச் சொன்னாள்.

**கிரீ:** ஆல் ரைட். ஆனால், எனக்கிங்கே ரொம்ப வேலைகளிருக்கிறது. வேலையை விட்டு வந்தால் நஷ்டமாகிவிடும். முன்சீப் அவர்கள் குழந்தைகளுக்கு விடுமுறையில் பாடம் சொல்லிக் கொடுக்க பிவ்டீ ரூபீஸ் (ரூ. 50)

தருகிறேன் என்ருர்கள். ஆனாலும் உன் விஷயமாக எத்தனை லாஸ் வந்தாலும் கேர் செய்ய மாட்டேன். ஒரு பயம் மட்டும் இருக்கிறது. உங்களவர்கள் பத்தாம் பசலிகளல்லவா? சரியானபடி உபசாரம் செய்வார்களோ என்னவோ? நீ என்னைக் குறித்து உங்கள் தாயாரிடம் பெரிதாக சிபார்சு செய்ய வேண்டும். புதிய புஸ்தகங்களுக்கு ஒரு ஜாபிதா எழுது. கொஞ்சம் பணம் கையிலிருந்தால்தான் சிகரட் சிரமமின்றிக் குடிக்கலாம். நோட் புக் எடுத்து எழுது. 1. ராயல் ரீடர். 2. மான்யுவெல் கிராமர். 3. கோஷ் ஜாமெட்ரி. 4. பாரிஸ் அல்ஜிப்ரா. 5. ஸ்ரீனிவாசய்யர் அர்த்திமெடிக். 6. நளவெண்பா. 7. ராஜசேகர சரிதம். 8. ஷெபர்ட் ஜெனரல் இங்கிலீஷ். 9. வெங்கடசுப்பா ராவ் மேட்ரீஸி. எத்தனை புஸ்தகங்களாகிறது?

**வெங் :** ஒன்பது.

**கிரீ:** இன்னும் ஒன்று எழுது. அப்போது பத்தாகும். 10. குப்புசாமி அய்யர் மேட் டிபிகல்ட். இதோடு போதும். உங்களவர்கள் யாராவது இங்கிலீஷ் பேசச் சொன்னால் தட்டுத் தடங்கலில்லாமல் புஸ்தகத்தில் படித்த வாக்கியங்கள் ஞாபகம் இருப்பதெல்லாம் ஒப்புவி. உன்னிடம் காசு ஏதாவது இருக்கிறதா? என்னிடம் கரன்ஸி நோட்டுகள்தான் இருக்கிறது. சில்லறை மாற்றவில்லை. ஒரு ரூபாய்க்குக் காசிமிட்டாய் ஒரு சேர் வாங்கிக் கொண்டுவா. ராத்திரி சாப்பிடமாட்டேன். மார்க்கட்டுக்குப் போய் வண்டியமர்த்தி அதிலே என் டிராவலிங் டிரங்க் பெட்டிகளை வைத்து வாசற்படியிலே வண்டியை நிறுத்தி வை. இங்கே கொஞ்சம் முக்கியமான காரியங்களைக் கவனித்து விட்டுச் சரிசெய்து கொண்டு எந்நேரமானாலும் வந்து சேர்கிறேன். நீ போய் வா. மை குட் பாய். நீ புத்தியோடிருந்து நான் சொன்னதெல்லாமே கேட்டுக்கொண்டே இருந்தால் உன்னை சுரேந்திரநாத பானர்ஜி மாதிரி பெரிய மனிதனாக்கி விடுகிறேன். நான் உன்கூட வருகிறேன் என்ற செய்தி மட்டும் ஈக் குஞ்சுக்குக் கூடத் தெரியக் கூடாது. ஜாக்கிரதை! (வெங்கடேசம் போகிருன்) இந்த விவகாரம் ஒருவிதமாக பைசலாகி விட்டது. இன்றிரவு கடைசியாக மதுரவாணியைச் சந்திக்காமல் போகக்கூடாது.

[இசையுடன் பாடுகிருன்]

உனது சைட் எனது டிலைட்
உன்னை இன்றே காணு விட்டால்,
க்வைட் ரிசட் ப்ளைட் மூனிலாத நைட்

[ஒரு வேலைக்காரன் வருகிறுன்]

**வேலைக்காரன்:** நான் ராமாராவ் பந்துலு வேலைக்கார னுங்க. வருஷக் கணக்கு முடியுதுங்க. ராமாராவ் கடனை உடனே கொடுக்கச் சொன்னுங்கய்யா.

**கிரீ:** (கேளாதவன் போல நடித்து)

புல்மூனின் லைட்டாமே, மல்லி கையின் ஓய்ட்டாமே
மூனைவிட முகையை விட
உந்தன் முகமே ப்ரைட்டாமே மே...மே...மே...

**வேலைக்:** எத்தனை பேரை அனுப்பினுலும் கடனைக் கொடுக்க வில்லையாம். நான் அவங்களைப் போல சும்மா இருக்கிறவ னில்லீங்க.

**கிரீ:** கோயில் தெப்பத்துக்கு வழி இதுதான்.

**வேலைக்:** எங்கே கிடந்த செவிடன் வந்தான்டா.

**கிரீ:** செட்டியார் கடையா? பெரிய பஜாரில்தான் இருக்குது. இந்தப் பக்கம் இல்லை.

**வேலைக்:** (உரக்க—காதுக்கருகில் வாயை வைத்து) ராமா ராவ் கடனைக் கொடுப்பீங்களா? மாட்டீங்களா?

**கிரீ:** விடுதியா? ராதா பங்களாவில் தங்கலாம்.

**வேலைக்:** (மேலும் உரக்கக் கூவி) ஒரு வருஷத்துக்கு முந்தி நீங்களும் தாசியுமாக வந்து வாங்கிய கடனை எங்க முதலாளி நிறுத்தி வச்சு வாங்கிட்டு வரச்சொன்னுருங்க.

**கிரீ:** ஓகோ! நீயா! யாரோவென்று நினைத்தேன். பையப் பேசு. பையப் பேசு. நாளைக் காலையில் எட்டு மணிக்குச் சாப்பாட்டுக் கடைக்காரி வீட்டுக்கு வந்தால், அணு பைசா இல்லாமல் கடனைத் தீர்த்து விடுகிறேன். உங்க முதலாளிக்கு சினேகம், நல்லது பொல்லது நினைக்க வேண்டாமா?

**வேலைக்:** பேச்சிலே பிரயோசனமில்லே. மடியிலே கையைப் போட்டு நிக்கிற நிலையிலேயே வசூல் செய்யச் சொன்னுருங்க.

**கிரீ:** பெரிய மனுசனில்லையா? நீயும் இப்படி அவசரப்படுவது நியாயமா? உங்கப்பா எவ்வளவு பெரியமனுஷர். இந்த சிகரட்டைப் பார். எவ்வளவு மஜாவாக எரிகிற து

ஹவாஹு என்று வெள்ளைக்காரங்க சொல்வாங்க. நாளைக் காலையிலே வா. உனக்கும் ரெண்டு கட்டுத் தாரேன்.

**வேலைக்:** சித்தம். பணவிஷயத்துக்குப் பதில் சொல்லுங்கோ.

**கிரீ:** இப்போது சொல்லவில்லையா! நாளைக்குக் காலையிலே கொடுக்காவிட்டால் பறையன் மகன் சண்டாளன்.

**வேலைக்:** பறையன் மகன் சண்டாளன் இல்லாமல் பின்னே யாருங்க?

**கிரீ:** உனக்கு நம்பிக்கை யில்லையானால் இதோ பூணூலைப் பிடித்துக்கொண்டு சத்தியம் செய்கிறேன்.

**வேலைக்:** சித்தம். நாளைக்கு காலையிலே பணம் கொடுக்கா விட்டால் வம்பு வந்து சேருமுங்க.

**கிரீ:** உன் வம்பு வேறு, என் வம்பு வேறு? சரி, (வேலைக்காரன் போகிறான்.) இத்தனை நாளுக்கு இன்றுதான் இந்தப் பூணூலின் பயன் கிடைத்தது. தியாசபிஸ்டுகள் (பிரம ஞான சபையார்) சொல்கிறமாதிரி நமது உலக ஆசாரங்கள் எல்லாம் ஏதோ ஒரு பிரயோஜனத்துக்காகத் தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சொந்த அனுபவம் இருந்தால் ஒழிய தத்துவம் புலப்படுவதில்லை. இந்தப் பிசாசைத் தொலைப்பதற்குள் பாதி உயிரே போய் விட்டது. வருமுன்னர்க் காப்பதுதான் அறிவுடைமை யாகும். விடியுமுன்னேயே இந்த ஊரை விட்டுக் கிளம் பினாலன்றிக் குழப்பங்கள் தீராது. இனிமேல் மதுர வாணியின் வீட்டுக்குப் போவோம். "மேக் ஹே வெய்த் தி சன் ஷைன்ஸ்" என்னுங்க. (வெயிலுள்ளபோதே உலர்த்திக்கொள், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பார்கள்.)

## காட்சி—2

இடம்:—மதுரவாணியின் வீட்டில் ஓர் அறை.

[ராமப்பந்துலு நாற்காலியில் உட்கார்ந்திருக் கிறான். மதுரவாணி எதிரே நின்றுகொண் டிருக்கிறாள்.]

**ராம:** (சட்டைப் பையிலிருந்து சுருட்டை எடுத்து முன் பல்லால் கடித்து) ஏ! புள்ளே! தீக்குச்சி.

**மதுர:** (தீக்குச்சியைக் கொளுத்திச் சுருட்டில் பற்றவைத்துக் கொண்டிருக்கும்போது ராமப்பந்துலு மதுரவாணியின்

கன்னத்தை மெதுவாகக் கிள்ளுகிறான். மதுரவாணி சுருட்டைப் பற்ற வைக்காமலேயே தீக்குச்சியை அணைத்துவிட்டுப் பக்கத்தில் ஒதுங்கி நின்று முகத்தில் கோபக்குறியைக் காட்டியவாறு) ஆணுக்காயினும் பெண்ணுக்காயினும் நீதி இருக்கணும். தொடாதீர்கள் என்று சொன்னால் கேட்பதில்லையா?

**ராம:** உன்னைத்தான் நான் சேர்த்துக் கொள்வதற்கு எல்லாம் ஏற்பாடாகி இன்றைக்கோ நாளைக்கோ நல்ல முகூர்த்தம் பார்த்து எங்களூருக்கு அழைத்துக்கொண்டு போகலாமென்று தயாராக இருந்தால், நீ என்னமோ, எவனுக்கோ கட்டுப்பட்டுக் கிடப்பது போலவும், கற்புக்கரசி மாதிரியும் வேஷம் போடுகிறாயே, எதற்கு?

**மதுர:** தாசி என்றதுமே அவ்வளவு தாழ்வா? தாசிகளுக்கும் நீதி வேண்டாமா? எங்கள் பந்துலு(கிரிசம்)வைக் கூப்பிட்டு, ''ஐயா! இனிமேல் உங்கள் வழி நீங்கள் போங்கள். என் வழியே நான் போகிறேன்'' என்று சொல்லித் தீர்த்துக்கொள்ளும் வரைக்கும் என்னை அடுத்தவன் மனைவியாகவே நினையுங்கள். நீங்கள் குத்திக்காட்டிச் சொன்ன மாதிரி அவர் கிறிஸ்தவரானாலென்ன? சாப்பாட்டுக் கடைக்காரியை வைத்துக் கொண்டிருந்தாலென்ன? இத்தனை நாளாக அந்த மகராசனல்லவா காப்பாற்றினார்? நீங்கள் அவரைவிட ரசிகரானாலும், என் மனசைக் கொள்ளை கொண்டவரானாலும்கூட என் மட்டுக்கு அவரிடம் விஸ்வாசம் இருக்கவேண்டாமா?

**ராம:** பெரிய பெரிய பேச்செல்லாம் பிரயோகம் செய்கிறாயே! அவன் பிழைப்புக்குச் சாப்பாட்டுக் கடைக்காரியை வைத்துக் கொள்வது ஒரு கேடா? அவள்தான் அவனை வைத்துக்கொண்டு இவ்வளவு கஞ்சியாவது ஊத்துகிறாள்.

**மது:** அனியாயமாகப் பேசாதீர்கள். அவர் எவ்வளவு படித்தவர். அவருக்கு எவ்வளவு செல்வாக்கும் புகழும் இருக்கிறது. இன்றைக்கோ நாளைக்கோ பெரிய உத்தியோகம் கிடைக்கப் போகிறது.

**ராம:** அஹஹா! (சிரித்துக்கொண்டு) என்ன பைத்தியக்கார நம்பிக்கை. நீ தாசிகளிலேயே தப்பிப் பிறந்தவள். கிரீசம், கிரீசம் என்று பெரிய பேர் வைக்கிறாயே, ஏன்? எங்களூரில் இருக்கும் லுப்தாவதானியின் சித்தி மகன் தானே இவன். 'கிர்ரன்'என்று கூப்பிடுவோம். பொட்லர்

இங்கிலீஷ் ரெண்டு படித்ததுமே உத்தியோகமா? அவனுக்கெல்லாம் ஒரே ஒரு உத்தியோகந்தான் கடவுள் அவன் தலையிலே எழுதியிருக்கிறார். அது என்ன தெரியுமா? சாப்பாட்டுக் கடைக்காரி வீட்டிலே எடுபிடி வேலை செய்வதுதான்.

**மதுர:** இதையெல்லாம் அவரிடம் கேட்கட்டுமா?

**ராம:** கட்டாயம் கேள். வேணுமென்றால் நான் சொன்னதாகவும்கூடச் சொல்.

**மதுர:** ஆனாலும் அவர் யோக்கியதாம்சங்களைப் பற்றி எனக்கென்ன கவலை? எப்படியிருந்தாலும் அவர் எனது எஜமானர். அவரது குற்றங்குறைகள் என் கண்ணுக்குத் தோன்றாது.

**ராம:** அப்படியானால் அவனை எப்போது தீர்ந்துகொள்ளப் போகிறாய்?

**மதுர:** இங்கேயுள்ள கடன்கிடன் தீர்த்துக்கொள்ள நீங்கள் சொன்ன இருநூறும் கொடுத்தால் உடனேயே தீர்ந்து கொள்கிறேன்.

**ராம:** அப்படியானால் இந்தா!

[சட்டைப் பையிலிருந்து ரூபாய் நோட்டுகள் எடுத்து தருகிறான். மதுரவாணி எட்டி வாங்கும்போதே ராமப்பந்துலு கையைப் பிடித்திழுக்கிறான். மதுரவாணி கோபமுடன் கையை விடுவித்துக் கொண்டு நோட்டுகளை எறிந்துவிட்டுத் தூரமாக நிற்கிறாள்.]

**மதுர:** உங்களோடு வாழ்வதே கஷ்டம்! ஒரு கட்டுப்பாடில்லாத மனுசரை என்னவென்று நம்புவது?

**ராம:** (நோட்டுகள் எடுத்து) மன்னிக்கவும். தப்பு, தப்பு. (நோட்டைக் கையில் கொடுத்து) எண்ணிப் பார்த்துக் கொள்.

**மதுர:** இதுகூட உங்களை நம்பாவிட்டால் உங்கள் பின்னால் எப்படி வருவது? இவ்வளவு ரசிகராயிருந்தும் என் மனசைத் தெரிந்து கொள்ள முடியவில்லையல்லவா? உங்கள் பணம் உங்களிடமே இருக்கட்டும். நான் பணப் பேய் பிடித்தவளல்ல. (பணத்தைத் திருப்பிக் கொடுக்கப் போகிறாள்.)

**ராம:** வேண்டாம், வேண்டாம். உன் மனசைத் தெரிந்து கொள்ளச் சொன்னேனே தவிர வேறொன்றுமில்லை. சரி,

இந்த கிரீசம் முட்டாப்பயல், இவனை என்னமோ பெரிய மனுஷன்மாதிரி நினைக்கிறயே என்ன?

**மதுர:** அவரை என் எதிரில் வைதீர்களானல், இதோ கதவைத் திறந்துவிடுகிறேன். பேசாமல் வெளியே போங்கள். (கதவைத் திறந்து ஒரு கையால் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் வெளிப்பாதையைச் சுட்டிக் காட்டுகிருள்.) அதோ, கிரீசமே வந்து கொண்டிருக்கிருர். அந்தப் பேச்சையெல்லாம் அவரிடமே சொல்லுங்கள்.

**ராம:** கேலிக்கு விளையாடுகிருயா?

**கிரீசம்:** (வாசலிலிருந்து) மை டீயர்!

**ராம:** (தனக்குள்) அடடா! சிவபூசையில் கரடிமாதிரி கழுதைப்பயல் வந்துவிட்டானே! உதைத்தாலும் உதைப்பான். என்ன செய்வது? இந்தக் கட்டிலுக்குள் நுழைவோம். (கட்டிலுக்கடியில் நுழைகிருன்.)

[கிரீசம் வருகிருன்.]

**கிரீ:** வெல். மை டீயர் எம்ப்ரெஸ் (தோளில் மெல்லத் தட்டப் போகிருன்.)

**மதுர:** (ஒதுங்கி நகர்ந்துகொண்டு) என்னைத் தொடாதீர்கள்.

**கிரீ:** அதென்ன மாற்றம்?

**மதுர:** ஏமாற்றம். முடிவான மாற்றம்.

**கிரீ:** [தனக்குள்] நான் தெரியாமல் ஓடிப்போகிறேன் என்று இவளுக்கு எப்படித் தெரியும்? தாசிகளுக்கு காது மந்திரம் இருக்குமா? [வெளிப்படையாக] தீட்டுப் பட்டால் குளித்துவிட்டு உடனே வா!

**மதுர:** இப்போதென்ன அவசரம். தலை தொட்டுக்கொள் கிறேன்.

**ராம:** (தனக்குள்) சபாஷ்! என்ன நீதியுள்ள பெண். பயலைத் தொடவிடாமல் நல்ல காரியம் செய்தாள்.

**கிரீ:** தீட்டு கீட்டு இங்கிலீஷ்காரங்களுக்கு லட்சியமில்லை. இப்படி வா. (அருகில் செல்கிருன்.)

**மதுர:** (விரல்காட்டி) அங்கேயே நில்லுங்கள். கிறிஸ்தவராக இருக்கலாம். நான் கிறிஸ்து மதத்தில் இன்னும் சேர வில்லை. நீங்கள் கிறிஸ்தவர் என்று இப்போதுதான் ஒருவர் சொல்லக் கேட்டேன்.

**ராம:** (தனக்குள்) நான் சொன்னேனென்று சொல்லி விடாமலிருக்கணுமே.

**கிரீ:** ஒருவர் சொல்லக் கேட்டாயா? யார் சொன்னது? யாருக்கு இங்கே வரத் தைரியம் இருக்கிறது? இப்படியெல்லாம் கோள்மூட்டி விடுவதற்கு யாருக்கு நெஞ்சழுத்தம் இருக்கிறது? அந்தப் பேச்சைக் கேட்டு என்னிடம் சொல்ல உனக்கவ்வளவு தைரியமிருக்கிறதா? சொல்!

**ராம:** (தனக்குள்) உதைப்பான் போலிருக்கிறதே! தெரியாமல் சிக்கிக்கொண்டேன்.

**மதுர:** ஆண்கள்தான் சொல்லணுமா? பெண்களுக்குக் கடவுள் வாய் தரவில்லையா?

**கிரீ:** (தனக்குள்) சாப்பாட்டுக் கடைக்காரிதான் சொல்லி இருக்கிருள் போலத் தெரிகிறது. (வெளிப்படையாக) பெண்ணு? பெண்களுக்கு வாயை வைத்துக் கொண்டு பிழைக்கச் சொல்லித்தான் கடவுள் வைத்தார். மரியாதையான பெண் உன் வீட்டுக்கு எதற்கு வருகிருள்.

**மதுர:** மரியாதையான ஆண்கள் வரும்போது பெண்கள் ஏன் வரக்கூடாது? முதலில் உட்காருங்கள். பிறகு கோபப்படலாம். சிகரெட் குடித்துக்கொள்ளுங்கள். அதோ தீப்பெட்டி.

**கிரீ:** தொட்டத்தான் கூடாதென்ருல், தீக்குச்சி கொளுத்திக் கொடுக்கக்கூட நான் பாக்கியம் செய்யவில்லையா? இப்போது ரொம்ப உற்சாகத்துடனே வந்தேன். அதைக் கெடுத்துவிட்டாய்.

**மதுர:** அதென்ன உற்சாகம்?

**கிரீ:** இதோ, சட்டைப்பையில் ஹைதராபாத் நிஜாம் அவர்களிடமிருந்து வந்த பர்மாணு. என் சினேகிதர் நவாப் சதரதாலத் பாவுரல்லீகான் இஸ்பஹான் ஜங் பகதூர் அவர்கள் சிபாரிசு செய்து ஆயிரம் ரூபாய் சம்பளத்துடன் முசாயிப் உத்யோகம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது எப்போதும் பாதுஷா அவர்கள் அருகிலேயே இருப்பதுதான் வேலை.

**ராம:** (தனக்குள்) என்னடா இவன் கப்ஸா அளந்து விடுகிருன்.

**கிரீ:** இந்த நற்செய்தியைக் கொண்டுவந்தும் அருகில் வர விடவில்லையல்லவா? என்னுேடு ஹைதராபாத் வருகிருயா?

**மதுர:** (தலையசைத்து) நானெதற்கு? சாப்பாட்டுக் கடைக்காரியையே கூட்டிக்கொண்டு போங்கள்.

**கிரீ:** (திகைத்து) சாப்பாட்டுக் கடைக்காரி ஏதாவது உளறி ஞளா என்ன?

**மதுர:** உங்களுக்குத்தான் தெரியணும்.

**கிரீ:** உன் அறிவீனத்தைப் பார்ந்தால் எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. எவன் எது சொன்னாலும் அதை நம்பு வதுதானா? இப்படிப்பட்ட அண்டப் புளுகுகளையெல்லாம் உன்னிடம் எவன் சொல்கிறான் என்று கண்டுபிடிக்க முடியாதென்று நினைக்கிறாயா? ஏழு சமுத்திரங்களைத் தாண்டிப் போனாலுங்கூட அவனைப் பிடித்துத் துப்பாக்கி யாலே உடல் துண்டு துண்டாக விழும்படி டாம் டாம் என்று சுடாவிட்டால், என் பெயர் கிரீசமும் இல்லை. உயரமான சிகரம் எவரெஸ்டும் இல்லை. கபர்தார்.

**மதுர:** கடல்களைக் கடந்து தேடவேண்டாம். அந்தச் சொன்ன ஆள் உங்கள் எதிரிலேயே சொல்வார்.

**ராம:** (தனக்குள்) இந்தச் சிறுக்கி என்னைக் காட்டிக் கொடுத்துவிடுவாள் போலிருக்கிறதே! அட கடவுளே!

**கிரீ:** (தனக்குள்) கடவுளுக்கு தேங்க்ஸ்! அப்படியானால் சாப்பாட்டுக் கடைக்காரியின் உதை கிடைக்கவில்லை. (வெளிப்படையாக) இப்படிப்பட்ட தீய சொற்கள் அந்தப் புனிதவதியின் காதில் விழுந்தால் ரொம்ப வருத்தப்படுவாள். அந்தப் பாவமெல்லாம் உன்னைத் தான் சுற்றும். அந்த அம்மாள் எப்பேர்ப்பட்ட பதிவிரதை! எப்படிப்பட்ட குணவதி!

**மதுர:** விதவைச் சிறுக்கிகளுக்குப் பதிவிரதை என்ற பட்டம் இன்றுதான் கேட்கிறேன்.

**கிரீ:** அவளுக்கு...இல்லை. அந்த அம்மாளுக்குப் புருஷன் இல்லாவிட்டாலும் அந்த அம்மாளை விதவை என்று சொல்ல முடியாது.

**மதுர:** அதெப்படி முடியும்! அதுவும் நீங்கள் இருக்கும்போது விதவை எப்படி ஆவாள்?

**கிரீ:** நான்ஸென்ஸ்! (இவளை ஒரு கப்ஸா கட்டி வசப்படுத்து வோம்) இதோ பார். அந்தம்மாளின் உண்மையான வரலாறு என்னவென்றால்...அந்தம்மாள் இனிமையாகத் தளர் நடை நடக்கும் காலத்திலேயே சிறு வயசிலே ஒரு கிழவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க நிச்சயித் தார்கள். தாலி கட்டப் போகும்போதோ, கட்டிய அடுத்த நிமிஷத்திலேயோ அந்தக் கிழவன் மணவறையி

லேயே கண்ணை மூடிவிட்டான். அப்போது கல்யாணம் ஆனுற்போலா, ஆகவில்லையா என்று விவாதம் எழுந்தது. சிலர் தாலி கட்டியாகிவிட்டது என்ருர்கள். சிலர் கட்டவில்லை என்ருர்கள். பெண்ணின் தகப்பனர் மாப்பிள்ளை வீட்டார்மீது தாவா செய்தார்கள். புரோஹிதர் அவர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு தாலி கட்டவில்லை என்று சாட்சியம் கூறினன். அதோடு கேஸும் தீர்ந்தது. பிறகு அந்தம்மாளை யாரும் கல்யாணம் செய்துகொள்ளவில்லை.

**மதுர:** அப்படியானல் உங்களுக்கு மட்டும் தப்பில்லையா?

**கிரீ:** என்ன புதுசாகப் பேசுகிருய்? எனக்கு ஆதியந்தம் ஒன்றும் புரியவில்லை. அடடா! சரசம் விரசமாகப் போகிறதே! தமாசுக்காகச் சொன்னல், நீ சொல்வதெல்லாம் ஆனந்தமாக இருக்கும். எவன் இந்தப் பேச்சுகளை எல்லாம் உளறுகிருனே அவன் பெயரை உடனே சொல்கிருயா? சொல்லமாட்டாயா?

**மதுர:** ராம!

**ராம:** (தனக்குள்) செத்தேண்டா கடவுளே! பெயரைச் சொல்லிவிட்டாள்.

**மதுர:** ராம! ராம! ஒருத்தர் சொல்வதென்ன! ஊரே சொல்கிறதே.

[வீதியிலிருந்து "கதவைத் திற, கதவைத் திற" எனச் சத்தம் கேட்கிறது.]

**கிரீ:** (திடுக்கிட்டு முகம் வெளிறி) கதவைத் திறக்காதே. கதவைத் திறக்காதே. கூப்பிடுகிறவள் ஒரு பைத்தியக்காரி. ஆட்களை அடிக்கிருள்.

**மதுர:** கதவு திறந்துதான் இருக்கிறது.

**கிரீ:** உடனே போய்த் தாழ்ப்பாள் போடு.

**மதுர:** அதோ கதவைத் தள்ளிக்கொண்டு வருகிருள்.

**கிரீ:** வெளியே தள்ளு. வெளியே தள்ளு.

**மதுர:** இந்த ஒய்யாரம் பார்த்தால் உங்கள் பதிவிரதை மாதிரி தோணுகிறது.

[மதுரவாணி முற்றத்திற்குச் செல்கிருள்.]

**கிரீ:** கட்டிலுக்குள் நுழைவோம் (கட்டிலுக்குள் நுழைகிருன்) (தனக்குள்) கள்ளத்தாசி எவனையோ ஒளித்து வைத்திருக்கிருள் இந்தக் கட்டிலுக்குள்ளே! இவளை

நல்லவள் என்று மயங்கினேன். இவள் நாசமாய்ப் போக. கூந்தலைப் பிடித்திழுத்து உதைப்பேனானாலும் இது சமயமில்லை. இருந்தாலும் பிரிந்து போகிற நமக்கேனிந்த வம்பு? (ராமப்பந்துலுவோடு மெதுவான குரலில்) யாரண்ணே நீங்க, பெரிய மனுஷர்?

**ராம:** நான் ராமப்பந்துலுடா தம்பி.

**கிரீ:** தாங்களா! இதற்கெல்லாம் கட்டிலுக்கடியிலே ஒளிய வேண்டுமா பெரியவரே! என்னைக் கேட்டால் இப்படிப் பட்ட தாசிகளை இருபது பேரையாவது கன்யாதானம் செய்வேனே.

**ராம:** (தனக்குள்) பிழைச்சேண்டா கடவுளே! (வெளிப் படையாக) நீயாப்பா இவளை வைத்திருக்கிறாய்? இது தெரிந்தால் வந்திருக்கமாட்டேனே.

**கிரீ:** பேச்சு காதில் விழவில்லை. கொஞ்சம் இப்படி வாருங்கள்.

[ராமப்பந்துலு முன்னே நகர, கிரீசம் அவரைக் கடந்து சுவர்ப்பக்கம் சேருகிறான்.]

**கிரீ:** அண்ணே! இந்தத் தாசியை எப்போதும் நம்பிவிடா தீர்கள்! இப்படி இருபது பேரானாலும் ஒளித்து வைக்கும் திறமை இவளுக்கு இருக்கிறது.

**ராம:** இருநூறு ரூபாய் பிடுங்கிவிட்டாளடா தம்பி.

**கிரீ:** நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவில்லையா?

**ராம:** இவ்வளவுதானா இவள்?

**கிரீ:** பின்னே என்ன?

[மதுரவாணியும் சாப்பாட்டுக் கடைக்காரியும் வருகிறார்கள்.]

**மதுர:** நீங்கள் சொன்ன ஆள் இங்கே இல்லை என்றால் கேட்க மாட்டேனென்கிறீர்களல்லவா?

**கடைக்காரி:** உன் வீட்டுக்குள் வந்தானென்று வீதியிலிருப்ப வர்கள் சொல்லும்போது உன் பேச்சை நம்புவேனா என்ன? அந்தக் காலிப்பயல் இருந்தாலென்ன போனா லென்ன? அவன் உனக்குத் தந்த இருபது ரூபாயையும் கொடுத்துவிடு.

**மதுர:** யாருக்குக் கொடுத்தாயோ அவனிடமே கேளம்மா.

**கடைக்:** காலிப்பயல் கண்ணில் பட்டால் சிண்டைப் பிடித்து விளக்குமாற்றால் சாத்துவேன். எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?

**மதுர:** நான் எதற்கு ஒளித்துவைக்கப் போகிறேன். நான் குலஸ்திரீயுமில்லை; விதவைச் சிறுக்கியுமில்லை. என் வீட்டுக்கு வருகிறவன் மஹாராஜா மாதிரி பப்ளிக்காகவே வருவான்.

[கண் ஜாடையால் கட்டிலின் கீழே காட்டுகிறாள்.]

**கடைக்:** கட்டிலுக்குக் கீழே ஒளிந்திருக்கிறானோ என்னமோ (கட்டிலின் கீழே குனிந்து பார்த்து) உன் மதிப்பு கிழிந்தாற்போல்தானிருக்கிறது. எழுந்து வா.

[விளக்குமாற்றால் முன்னாலிருக்கும் ராமப்பந்துலுவை அடிக்கிறாள்.]

**ராம:** அடே அப்பனே! என்னை எதற்கடிக்கிறாய் விதவைச் சிறுக்கி?

[கட்டிலிலிருந்து வெளியே வந்து முதுகைத் தடவுகிறான்.]

**மதுர:** அவரை ஏன் அடித்தாய்? என் வீட்டில் வந்து இதெல்லாம் என்ன ரகளை செய்கிறாய்?

**கடைக்:** பின் ஏன் இந்தக் கட்டிலுக்குள்ளே நுழைந்தான்?

**மதுர:** உனக்கேனந்த வம்பு? அது ஒரு சரசம்.

**கடைக்:** இது ஒரு விளக்குமாற்றுச் சரசம்.

**ராம:** (முதுகைத் தடவிக்கொண்டு) உன் தலையிலே இடி விழ. பெண்ணாகப் போய்விட்டாயே. இல்லையானால் கொன்றுவிட்டுப் போயிருப்பேன். உன் கள்ளப் புருஷனை அடிக்காமல் என்னை எதற்காக அடித்தாய்? அதற்குத்தான் என்னை முன்னால் தள்ளிவிட்டு அவன் சுவர்ப் பக்கம் ஒளிந்துகொண்டானோ?

**கடைக்:** அந்தக் காலிப்பயல்கூட கட்டிலுக்குள்ளே இருக்கிறானா? நாயே! வெளியே வா.

**கிரீ:** கிறுக்கக்கா! கட்டிலுக்குள்ளே வா. உன் கிறுக்குப் போக உதைக்கிறேன்.

**கடைக்:** அக்காவாடா உனக்கு. காலிப்பயலே. உனக்குப் பயப்படுவேனென்று நினைத்தாயா? உன் தாசிச் சிறுக்கி எப்படித் தடுப்பாளோ, பார்ப்போம்.

[சாப்பாட்டுக் கடைக்காரி கட்டிலுக்குள் ஒரு பக்கம் நுழைய மறு பக்கத்தின் வழியே கிரீசம் வெளியே வந்து ராமபந்துலுவின் தலையில் ஒரு இடி இடித்துவிட்டுப் பின்வாசல் வழியே ஓடு கிறான்.]

ராம: செத்தேண்டாப்பா! (இரண்டு கையாலும் தலையைப் பிடித்துக்கொண்டு) மதுரவாணீ! என்ன கலாட்டா இது! போலீசுக்குத் தகவலனுப்பு.

மதுர: ஏன், பப்ளிக்காகக் குழப்பமும் வம்பும். இன்னொரு நாளைக்கு நீங்களே அவனுக்கு அடிக்கு அடி கொடுத்து, பழிக்குப் பழி வாங்கி விடுங்கள். (மதுரவாணி ராமப் பந்துலுவை அணைத்து முத்தமிட்டுக் கையால் தடவிக் கொடுத்து) என்ன துஷ்டத்தனம். ஆண்ணவன் வீர முடன் எதிரில் நின்று அடிக்கவேண்டும். கள்ள அடி அடிக்கிறான். அவன் திமிரை ஒடுக்கலாம், எழுந்திருங்கள்.

ராம: கவர்மெண்ட் சம்பளம் வாங்கும் போலீஸ்கள் இருக்கும்போது நமக்கெதற்கு வீண் பிரயாசை. இந்தக் காலிப்பயலை பைனல் கோர்ட் வரைக்கும் அலைக்கழிக்கா விட்டால் என் பெயர் ராமப்பந்துலு இல்லை. நான் செய்யப் போவதைப் பார்த்துக்கொண்டிரு.

மதுர: (ராமப்பந்துலுவை முத்தமிட்டு) பேசாமல் சும்மா இருங்கள். (கட்டிலுக்குக் கீழே சுட்டிக் காட்டி) கள்ள அடி அடித்தவனுக்குத்தான் அவமானம். உங்களுக்கில்லை.

ராம: வலி யாருக்கென்று நினைத்தாய்? அந்தச் சிறுக்கி கட்டிலின் கீழிருந்து இன்னும் வரவில்லையே ஏன்? விளக்குமாற்றைப் பிடுங்கிக்கொள்.

கடைக்: படீர் என்றதும் மேலும் கீழும் பார்க்கிறேன். (ராமபந்துலுவைப் பார்த்து) உன் ஆண்மை அழுதாற் போலத்தான் இருக்கிறது.

[கட்டிலிலிருந்து வெளியே வருகிறாள்.

அனைவரும் செல்கின்றனர்.]

# இரண்டாம் அங்கம்

## காட்சி—1

இடம் :—கிருஷ்ணராயபுரம் அக்கிரகாரத்தில் அக்கினி ஹோத்ராவதானி, வீடு.

[அக்னிஹோத்ராவதானி பூணூல் நூற்கிறார். கரடக சாஸ்திரி சிஷ்யனைக்கொண்டு இல்லாத பேன்களையும் பார்க்கச் சொல்லி உட்கார்ந்திருக்கிறார். வெங்கம்மா காய்கறி நறுக்கிக்கொண்டிருக்கிறாள்.]

**வெங்கம்மா:** நேற்றிலிருந்து கிறிஸ்துமஸ் லீவு என்று பையன் கடிதம் எழுதினான். அவனைப் பார்த்து எத்தனையோ நாளாகிவிட்டது. எதிர்பார்த்துக் கண் பூத்துப் போயிற்று. இன்னும் வரவில்லையே?

**அக்னி:** ஏன் சும்மா வருந்துகிறாய்? வேண்டாம், வேண்டாம் என்று சொல்லியும் இங்கிலீஷ் படிக்க வைத்தாய். தோட்டம், புஞ்சை வரவெல்லாம் அவன் செலவுக்கே சரியாகிவிடுகிறது. போன வருஷம் பரீட்சையிலே பெயிலாய்ப் போனானல்லவா? இந்த வருஷம் எப்படி வருகிறானோ தெரியவில்லை. நமக்கு இந்த இங்கிலீஷ் படிப்பு ஒத்து வராதென்று அடிச்சு அடிச்சு சொன்னேனே, கேட்டாயா? எங்க பெரியண்ணன் திப்பாவதானி மகனுக்கு, இங்கிலீஷ் படிப்புக்கு பார்வதிபுரத்திற்கு அனுப்பும்போது அங்கே நோய் வந்து, மூணு நாளிலே கீழே சாய்த்துவிட்டது. புச்சப்பி மகனுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்கலாமென்று சொல்லிக் கொண்டிருந்தபோதே உயிர் போகும்படியாக நோய் வந்துவிட்டது.

**வெங்:** நீங்கள் எப்போதும் பெரிசாக்கியே பேசுவீங்க. பணம் செலவாகிவிடுகிறதென்பதுதான் உங்களுடைய கவலை எல்லாம். முந்தாநாள் நம் கண்ணெதிரே நம் வீட்டுக்கு முன்னாலே தலைவிரி கோலமாக தெல்லிக்காய் ஆடிக் கொண்டிருந்த நல்லையா மகனுக்கு முன்சீப் உத்தியோகம் கிடைக்கவில்லையா?

**அக்னி:** நமது பையனுக்கு படிப்பு வருவதாகத் தெரியவில்லையானாலும் அவன் புஸ்தகங்களுக்கும் சம்பளத்

துக்கும் நம் புஞ்சையை இன்னும் இரண்டொரு வருஷத்திலே விற்கவேண்டியதுதான். அதற்குப் பிறகு காவியுடை தரித்துக்கொண்டு காசிக்குப் போகவேண்டியதுதான் பேசாமல் வீட்டிலேயே இருந்தால் நாலு எழுத்தைச் சொல்லிக் கொடுத்திருப்பேன். வேண்டாமென்று சொல்லியும் இந்தப் பாழும் இங்கிலீஷ் படிப்புக்கு அனுப்பி வைத்தாய்.

**வெங்:** நம் பையன் முன்சீப்பாகவாவது சப்-இன்ஸ்பெக்டராகவாவது வந்தால் கடன்களைத் தீர்த்துவிட்டு இந்த அக்கிரகார பூமிகளை எல்லாம் வாங்கிவிடுவான். வருஷத்துக்கு நூறு ரூபாய் செலவழிக்க யோசிக்கிறீங்க. உங்களைப்போலவே அவனையும் பூணூல் நூற்கச் சொல்கிறீர்களா? உங்களுக்கு கஷ்டமாயிருந்தால் என் சீதனமாக வந்த நிலத்தை விற்றுவிட்டு பையனை படிக்க வைக்கிறேன்.

**கரட:** உன் நிலம் எதற்காக விற்கணும்? நம்ம சொத்தை நல்லா தின்று கொழுப்பேறி இருக்கிறார். அவரே வைத்துக் கொள்ளட்டும்.

**அக்னி:** அப்படியானால் என்னை அலட்சியப் படுத்துகிறாயா? இன்னொரு தடவை சொன்னாயானால் உங்கண்ணன் இருக்கிறான் என்று பார்க்க மாட்டேன்.

[கிரீசமும் வெங்கடேசமும் வருகின்றனர்.]

**வெங்:** என் கண்ணே, வந்துவிட்டாயா? (அணைத்துக் கொள்கிறாள்.)

**அக்னி:** ஏ, முட்டாள்! இந்தத் தடவையாவது பாஸாகி விட்டாயா?

[வெங்கடேசம் விழிக்கிறான்.]

**கிரீ:** பாஸாகி விட்டானுங்க. பஸ்ட்டாக பாஸாகிவிட்டான். நான் ரொம்ப சிரமப்பட்டு படிப்பு சொல்லிக் கொடுத்தேனுங்க.

**அக்னி:** இந்த துலுக்கன் யாருடா?

**கிரீ:** துருக்கி! டாமிட். டெல் மேன்.

**அக்னி:** மானா? மனுஷனாத் தெரியவில்லையா? பல்லை உடைத்து விடுவேன்.

**வெங்:** (நடுங்கியவாறே தாயாரைப் பார்த்து) அம்மா! இவர்தான் எனது டியூஷன் வாத்தியார்.

**கரட:** வீட்டுக்கு பெரியவங்க வந்தால் மரியாதையில்லாமல் பேசுவதா மச்சான். அவர் ஏதோ இங்கிலீஷில் பேசினுல் புடலங்காய் திருடன் என்றதும் புஜங்களைத் தடவிப் பார்த்தவன் கதையாக உன்மேல் போட்டுக்கொள் கிருயே.

*[வண்டிக்காரன் சாமான்களை இறக்குகிருன்]*

**கிரீ:** (கரடக சாஸ்திரியுடன்) உங்கள் மச்சாஞ அக்னி ஹோத்ராவதானிகள்? என்னை உங்களுக்குத் தெரியா விட்டாலும், டிப்டி கலெக்டர் வீட்டுக்கு நீங்கள் வரும்போ தெல்லாம் நான் அவர்கள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பேன். டிப்டி கலெக்டர் அவர்கள் உங்களை எவ்வளவு மெச்சிக்கொள் வார்கள் என்று நினைக்கிறீர்கள்?

**கரட:** ஆமாம். உங்கள் முகமும் பார்த்த ஞாபகமிருக்கிறது. டிப்டி கலெக்டரவர்கள் பெரிய பிரபுவாக்கும்.

**கிரீ:** தங்களைப்போல் பல பாஷைகள் தெரிந்த வித்வான் எங்குமில்லை என்றும், சமஸ்கிருதம் ஆற்ருெழுக்காகப் பேசுவீர்கள் என்றும், உங்களைப் போன்ற விதூஷகரை எங்கும் கண்டதில்லை என்றும் டிப்டி கலெக்டர் அவர்கள் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். கவிதாரசம் அவரைப் போல் யார் ரசிக்க முடியும்? என் கவிதைகள் என்ருல் அவர் உயிரையே விட்டுவிடுவார். மஹாராஜா வுக்குக் கூட என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.

**அக்னி:** (சிடுசிடுப்புடன்) இந்தத் தடபுடல்கள் எல்லாம் இங்கே செல்லாது. இவன் தடபுடல்களைப் பார்த்தால் இங்கேயே தங்குவான்போலத் தெரிகிறது. இங்கே சாப்பாடு கொஞ்சங்கூடக் கிடைக்காது.

**வெங்:** அவர் பேச்சை சட்டை செய்யாதேப்பா! அவர் தினுசே அப்படித்தான். உங்கள் தயவாலே என் பையனுக்கு இரண்டு எழுத்துத் தெரிந்தால் அந்த நன்றியை மறக்கமாட்டோம்.

**கிரீ:** அதற்கென்ன தடை? உங்கள் பையன் விடுமுறையில் படிப்பு சொல்லிக் கொடுக்கும்படி எவ்வளவோ கட்டாயப் படுத்தவே, நல்ல பையனல்லவா என்று வந்தேனே தவிர, பட்டணத்திலே முன்சீப் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு அவர்கள் கொடுக்கும் சம்பளம் வாங்கிக் குசாலாக இருக்கத் தெரியாதென்ரு வந்தேன்?

**வெங்:** இந்தப் படிப்புக்காகப் பையனை விட்டுப் பிரிந்ததும், அவன் அயலூரிலே கஷ்டப்படுவானே என்று என் உயிர் அங்கேயே கிடந்தது. பணம் செலவழிக்க என்றும் பின் வாங்கியதில்லை. நாங்கள் பெற்றேமே தவிர அவனுக்குத் தாய் தந்தையரெல்லாம் நீங்கள்தான். எப்படிச் சீராட்டிச் சொல்லிக் கொடுப்பீர்களோ எல்லாம் உங்கள் பொறுப்பு.

**கிரீ:** தாங்கள் இவ்வளவு தூரம் சொல்லணுமா? எனது நல்லது பொல்லதெல்லாம் உங்கள் பையனைக் கேட்டால் தெரியும். முன்சீப், டிப்டி கலெக்டர் எல்லாம் தேர்ந் தெடுத்த ஆளை, என்னைப்பற்றி நானே சொல்லிக்கொள் வதா? இதெல்லாமெதற்கு? இனி மூன்று வருஷம் என் மேற்பார்வையில் விட்டால், கிரிமினல் லாயர் அதாவது போலீஸ் டிபார்ட்மெண்ட் பரீட்சையில் பாசாக்கி விடுகிறேன்.

**அக்னி:** மூணு வருஷமா? இந்த வருஷம் புஸ்தகங்களுக்கு எவ்வளவாகிறது?

**வெங்:** இருபது ரூபாயாகும்.

**அக்னி:** ஒரு தம்பிடிகூடக் கொடுக்க மாட்டேன். இந்த இரண்டுபேரும் பணத்தைப் பங்கு போட்டுக் கொண்டு தின்கப் பார்க்கிறுர்கள் போலத் தெரிகிறது. நான் வேதம் எழுபத்திரண்டு அத்யாயமும் ஒருதம்பிடி புஸ்தகச் செலவில்லாமல் படித்தேன். இதெல்லாம் குல்லாய் போடுகிற வியாபாரமாகத் தெரிகிறது.

**கரட:** (சிரித்துக்கொண்டு) லட்சத்தில் ஒரு பேச்சு சொன் ஞய் மச்சான்.

**கிரீ:** (கரடக சாஸ்திரியுடன்) த' டீஸ் பார்பர்ஸ். பார்த்தீங் களா, ஜெண்டில்மேன் அதாவது நாகரிக மனிதனை எப்படிச் சொல்கிறுரென்று? இனி நானிங்கே இருப்பது அழகில்லை. போய் வருகிறேன்.

**வெங்:** போதும் போதும். வீட்டுக்கு யார் வந்தாலும் எனக்கிதே பயம். அவர் பேச்சை விட்டுத் தள்ளுங்கள். போய்விடாதீர்கள்.

**கரட:** மச்சான்! பையனுக்கு இந்தப் படிப்பு சொல்லிக் கொடுக்கவே முன்னும் பின்னும் யோசிக்கிறுயே. புச்சம்மாளை விற்ற மூவாயிரம் ரூபாயை என்ன செய்தாய்?

**கிரீ:** செல்லிங் கேள்ஸ்! டாமிட்! (விற்பனைப் பெண்ணு! சே!)

**அக்னி:** ஒவ்வொரு முட்டாப் பயலும் விற்றுவிட்டாய், விற்றுவிட்டாய் என்று சொல்கிறார்கள். காய்கறிகளா விற்பதற்கு? அந்த ரூபாய் வாங்கியிருக்காவிட்டால் அவள்புருஷன் செத்தானல்லவா? அவள் கதி என்னவாகி யிருக்கும்?

**கரட:** செத்தானென்றால் அவன்மீதா தப்பு? கட்டிலிலிருந்து இறக்கிப் போடவேண்டிய நிலையிலிருந்தவனுக்கு உன் மகளைக் கட்டி வைத்தாய்.

**கிரீ:** தாங்கள்தானே அக்னி ஹோத்ராவதானியார்? இந்தப் பக்கத்தில் தங்களைப் போன்ற பெரியவர்கள் இல்லை என்று ராஜமஹேந்திரவரத்திலுள்ள எங்கள் பந்துக்கள் சொல்லிக்கொள்வார்கள்.

**அக்னி:** நீங்கள் ராஜமஹேந்திரவரமா? அதை முன்னாலேயே சொல்லவில்லையே. ராமாவதானியார் சௌக்கியமா யிருக்கிறாரா?

**கிரீ:** சௌக்கியமாயிருக்கிறார். அவர் என் தாய் மாமனு ருங்க.

**அக்னி:** அதை முன்னாலே சொல்லியிருக்கக் கூடாதோ?

**கிரீ:** எங்க மாமா இந்தப் பக்கத்தைப்பற்றி பிரஸ்தாபிக்கும் போதெல்லாம் தங்களைக் குறிப்பிடாமலிருக்கமாட்டா ருங்க.

**அக்னி:** எனக்கும் அவருக்கும் ரொம்ப சிநேகம். பார்த் தீங்களா? எனக்குக் கொஞ்சம் முன்கோபம். ஏதோ தெரியாமற் சொன்னதெல்லாம் மனசில் வைத்துக் கொள்ளாதீர்கள்.

**கிரீ:** அதற்கென்ன! தங்களைப்போன்ற பெரியவர்கள் சொல்வதும் என்னைப்போன்ற சிறுவர்கள் பொறுப்பதும் சகஜந்தானே.

**கரட:** (தனக்குள்) இத்தனை நாளுக்கு நம் அக்னி ஹோத்ரா வதானிக்குச் சரியான ஆள் கிடைத்தான்.

**அக்னி:** பார்த்தீங்களா? உங்கள் பெயரென்னங்க?

**கிரீ:** கிரீசம்.

**அக்னி:** பார்த்தீர்களா? கிரீசம். எங்க கரடக சாஸ்திரி சுத்த அப்பாவி மனுஷன். நல்லது பொல்லதொன்றும் அவருக்குத் தெரியாது. மாப்பிள்ளை செத்தானென்றால் அதனால் எவ்வளவு லாபம் கிடைத்தது? நிலங்கள்மீது

தாவா போட்டீரா என்று கேட்கத்தான் தெரியும்? நான் சமீபத்தில் தாக்கல் செய்த பெட்டிஷன்மேல் வந்த ஆர்டரைப் படித்துக் காட்டுங்கள்.

[அறைக்குள் சென்று ஒரு காகிதத்தைக் கொண்டு வந்து கிரீசம் கையில் தருகிறான்.]

**கிரீ:** (பார்த்து) எவனோ அரை குறையாப் படிச்ச குமாஸ்தா எழுதினாற்போல இருக்கிறது. எழுத்தே சரியாக இல்லை.

**அக்னி:** எங்க வக்கீல் கடகடவென்று படித்துவிட்டாரே.

**கிரீ:** நானும் படிக்க முடியாதா? அதைவிட வேகமாகவே படிப்பேன். லெக்சர்கள் செய்யும் வித்துவானாகிய எனக்கு இது ஒரு காரியமா?—ஆனால் எழுதியவன் மூளையை எண்ணிப் பார்த்தேன். வாழைப்பழம் உரித் தாற்போல மொழிபெயர்த்துச் சொல்லட்டுமா?

**அக்னி:** அதுதான் வேண்டும். (தனக்குள்) பணமில்லாமலேயே இவனைக்கொண்டு என் காகிதங்களை எல்லாம் மொழிபெயர்த்துக் கொடுக்கச் செய்கிறேன்.

**கிரீ:** இன்னும் இங்கிலீஷ் காகிதம் ஏதாவதிருந்தால் எறியுங்கள். எல்லாம் மொழிபெயர்த்துத் தருகிறேன்.

**அக்னி:** ஆகட்டும்.

**வெங்:** எங்க பையனும் நீங்களும் ஒரு தடவை இங்கிலீஷில் பேசுங்களப்பா.

**கிரீ:** அப்படியே ஆகட்டும் அம்மா...My Dear Venkateasam, "மை டீயர் வெங்கடேசம்", Twinkle! Twinkle! Littile Star. "ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்." how I wonder what you are? "ஹௌ ஐ வாண்டர் வாட் யு ஆர்?"

**வெங்கடேசம்:** There is a white man in the tent.

**கிரீ:** The boy stood on the burning deck. Whence all but he had fled.

**வெங்க:** Upon the same base and on the same side of it the sides of a trepeziam are Equal to one another.

**கிரீ:** of man's first disobedience and the fruit of that mango tree sing. Venkateasa! My very good Boy.

**வெங்க:** Nouns ending in 'f' or 'fe' change their f or fe into ves.

**அக்னி:** நீங்கள் பேசுவதற்கு என்ன அர்த்தமப்பா?

**கிரீ:** இந்த விடுமுறையில் எப்படிப் படிக்க வேண்டுமென்று பேசுகிறோம்.

**கரட:** தம்பீ! ஒரு தமிழ்ப் பாட்டைப் படி.

**வெங்க:** "புகை குடிப்பதும் நகையிதழ் பிடிப்பதும்."

**கரட:** சபாஷ்!

**கிரீ:** டாமிட்! டோண்ட் ரீட் த்ட். (அதைப் படியாதே) (மெதுவாக) "நளதமயந்தி யிருவரும்" படி.

**வெங்க:** " நளதம யந்தி யிருவருமன்னுள்
உளமதி லாரனல் உருக்க நீளிரும்
வளரிர வுகளை வருந்திக் கடந்தார்......"

**கரட:** இரு! இரு! "உளமதில் ஆரனல் உருக்க" என்றால் என்ன பொருள்?

**வெங்க:** [வீட்டு மேற்கூரையைப் பார்த்த வண்ணம் சும்மா இருக்கிறான்.]

**கிரீ:** சிறு பையன்களுக்கு இப்படிப்பட்ட கடினமான செய்யுள்களுக்கு அர்த்தம் தெரியுமா?

**கரட:** செய்யுளுக்குப் பொருள் சொல்லிக்கொடுப்பதில்லையா?

**கிரீ:** இப்போதைக்கு வேதம்மாதிரி மனப்பாடம் செய்விக்கிறோம். வெள்ளைக்காரர்கள் ஸ்கூலிலே தமிழ்ச் செய்யுளுக்கு மதிப்பில்லீங்க. அந்த நேரத்தில் ஜாகரபீ கீகரபீ, அர்த்மெடிக், அல்ஜீப்ரா, மாதமெடிக்ஸ் இதெல்லாம் கடம் போடச் சொல்கிறார்கள்.

**கரட:** கதை நல்லாத்தான் இருக்கிறது. இவனை விடியு முன்பே வழியனுப்பாவிட்டால் மோசம் வந்து சேரும்.

**அக்னி:** எல்லாமே சொல்லிக் கொடுக்கிறார்களா?

**கிரீ:** பின்னென்ன நினைத்தீர்கள்? உங்க பையனைப்போல படிக்கிறவங்களுக்கு ஒரு நிமிஷம்கூட ஓய்விருக்காது.

**அக்னி:** பார்த்தீங்களா? படிப்பு என்றால் அப்படிப் படிக்கணும். தெல்லிக்காய் விளையாடாமல் பார்த்துக் கொண்டால் எங்க பையனுக்கு எவ்வளவு படிப்பு வேண்டுமானாலும் வரும்.

**கிரீ:** என்னிடம் தெல்லிக்காய் கில்லிக்காய் ஒன்றும் செல்லாது. புஸ்தகத்தைக் கையில் பிடித்தால் விரல்களோடு புஸ்தகமே ஒட்டிக்கொள்ளும் படியாகச் சொல்லிக் கொடுப்பேன்.

**அக்னி:** அப்படிச் செய்தால் எங்க பையனுக்குப் படிப்பு வந்து எல்லா பரீட்சையிலுமே பாஸாகி விடுவான். அவனுக்குச் செலவில்லாமலேயே கல்யாணம் செய்யும் சாதகமும் கிடைத்திருக்கிறது.

**வெங்:** உங்க சுபாவத்தினுல் தடபுடல் பண்ணினுலும் உங்களுக்கு மட்டும் பையன்மேல் அன்பு இல்லையா என்ன? பட்டணத்திலே வைசூரி வரும்போது ஏக்கமடைந்து பையனுக்கு விடுமுறை எழுதிவிட்டு வரும்படி செய்ய வில்லையா? கல்வி கற்பிக்காமலும் கல்யாணம் செய்விக்கா மலும் இருக்க முடியுமா?

**கரட:** பணச் செலவில்லாமல் மகனுக்கும் கல்யாணம் செய்து வைப்பாயா மச்சான்? பெண் குழந்தைகளை விற்பதுபோல நினைத்துக்கொண்டாயா என்ன? இரண் டாயிர ரூபாயாவது கொட்டாவிட்டால் பையனுக்குப் பெண் கொடுக்கமாட்டார்கள்.

**அக்னி:** பணச் செலவில்லாமல் வெங்கடேசத்திற்கு எப்படிக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று நீயே பாரேன்! ராமச்சந்திரபுர அக்ரகாரத்தில் லுப்தாவதானியைத் தெரியுமா?

**கரட:** தெரியாது.

**அக்னி:** அவர் லட்சாதிபதி. இரண்டாயிரத்துக்குச் சுப்பம் மாவைக் கேட்டு வந்தார்கள். அவரே எல்லாச் செலவும் செய்வாராம். கல்யாணம் வெகு விமரிசையாகச் செய் வாராம். நாம் நம்ம குழந்தையை அழைத்துக்கொண்டு போய் அவர்கள் வீட்டில் கல்யாணம் செய்வதால் நமக் கொன்றும் இடைஞ்சல் இல்லை. அந்த இரண்டாயிரத்தை வைத்து வெங்கடேசத்துக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறேன்.

**வெங்:** மாப்பிள்ளைக்கு எத்தனை வயசு?

**அக்னி:** எத்தனை ஆனுலென்ன? நாற்பத்தஞ்சு.

**கிரீ:** லுப்தாவதானி எங்க சித்தி மகன்தானுங்க. தங்களுடன் சம்பந்தம் என்றுல் ரொம்ப சந்தோஷமுங்க. ஆனுல், அவனுக்கு அறுபது வயசுக்கு மேலிருக்குமுங்க. இவனெப்படி இருந்தாலும் செல்லிங் கேள்ஸ், அதாவது கன்யா சுல்கம் கூடாதுங்க. டாமிட். எப்படியானுலும் கூடாதுங்க. நான் பூனுவிலே இருக்கும்போது இது சம்பந்தமாக ஒரு நாள் நாலு மணி நேரம் ஒரு பெரிய

லெக்சர் செய்தேனுங்க. சாவகாசமாக உட்கார்ந் திருந்தால் கன்யா சுல்கம் கூடாதென்று தங்கள் மூல மாகவே ஒப்ப வைக்கிறேன்.

**கரட:** மச்சான்! இந்தச் சம்பந்தம் செய்தாயானால் உன் வீட்டுக்குத் தீ வைத்துவிடுவேன்.

**அக்னி:** உன் தலையிலே இடி விழ! ஒவ்வொரு முட்டாப் பயலும் கோயில் மாடுமாதிரி என் வீட்டிலே இருந்து கொண்டு என்னைத்தான் சொல்கிறார்கள். தாம்பூலம் வைத்துவிட்டேன். இனி உதைஞ்சுகொண்டு சாகுங்கள்.

**வெங்:** என்னிடம் சொல்லாமலேயா?

**அக்னி:** பொட்டச்சிகளோடு என்ன ஆலோசனை? இந்த சம்பந்தம் செய்யாவிட்டால் நான் அக்னி ஹோத்ராவ தானியில்லை. (எழுந்து போகிறான்.)

**கரட:** என்ன தெம்பு?

**வெங்:** அண்ணா! இந்தச் சம்பந்தம் செய்தால் நான் எந்தக் குளமோ குட்டையோ பார்த்துக்கொள்கிறேன். பெரி யவளைக் கண்முன்னாலேயே வைத்துச் சுமந்துகொண் டிருக்கிறோம். அவருக்கு இத்தனை வயசாகியும் கஷ்ட சுகங்களைக்கருதாமல் இந்த கண்ணாருவிச் சம்பந்தத்தைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்! நான் பிழைத்து நல்லா இருக்க வேண்டுமானால் இந்தச் சம்பந்தத்தை எப்படி யாவது தவிர்க்கணும்.

**கரட:** பெரிய, முடியாத காரியத்தைச் சொல்கிறாயே! முட்டாப்பயல். கெஞ்சினால் மிஞ்சுவான். எதிர்த்துப் பேசினால் ரொம்பவும் மேலே போவான். என்ன செய்ய முடியுமென்று உனக்கு உறுதி சொல்ல! ஒன்றும் புரிபட வில்லை.

**கிரீ:** அம்மா! நீங்களேன் இப்படிக் கவலைப்படுகிறீர்கள்? அவதானியார் சாவகாசமாக இருக்கும்போது ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தால் பணம் வாங்கிக்கொண்டு பெண்களைக் கிழவர்களுக்கு கட்டித்தருவது கூடாதென்று லெக்சர் செய்து மனதை மாற்றிவிடுகிறேன்.

**வெங்:** அப்பா! அவர் உங்க சித்தி மகனானால் உங்க காலிலே விழுகிறேன். நீங்கள் போய் அவர் மனசை மாற்றி விடுங்கள். கோடிப் புண்ணியமுண்டு.

**கிரீ:** அம்மா! என்ன சொல்வது? அவனொரு முரடன். •பெண் கிடைச்சதே போதும் அவனுக்கு. இந்தச் சம்பந்

தத்தை விட்டுவிட்டால் அவனுக்கு வேறே சம்பந்தமே கிடைக்காது. அவன் தானுகவே விட்டுக்கொடுக்க மாட்டான்.

**கரட:** வெங்கம்மா! எனக்கொரு உபாயம் தோன்றுகிறது. இப்படி வா சொல்கிறேன்.

[கரடக சாஸ்திரி, சிஷ்யன், வெங்கம்மா மூவரும் செல்கின்றனர்.]

**கிரீ:** மை டியர் சேக்ஸ்பீயர்! உங்கப்பா ஒரு வடக்கத்தியானப்பா! உங்கள் வீட்டில் யாரும் அவரை அடக்க சக்தியில்லை. நான் போடுகிற போடு பார்! இப்போது நான் செய்யப் போகிறேன் பார். கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலுவின் கன்யாசுல்கம் விஷயமாக எழுதிய உபன்னியாசங்களை இப்படி எடு. மாமாவுக்கு லெக்சர் செய்யப் படித்துக்கொள்ள வேண்டும்.

**வெங்க:** உங்க லெக்சர் அப்படிக் கிடக்கட்டும். இப்போது என் கண்டம் தப்பிவிட்டதல்லவா என்று சந்தோஷத்தோடிருக்கிறேன். நீங்கள் வரவில்லையானுல் பரீட்சையில் பெயிலானதற்கு மாடு கட்டும் கயிற்றுல் உடம்பெல்லாம் வீங்கும்படியாக அடித்திருப்பார்.

**கிரீ:** இப்படிப்பட்ட ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்வதே அறிவுடைமை எனப்படும். ஏதாவது சங்கடம் வந்தால் ஒரு அஸ்திரம் பிரயோகித்தால் துபிரம்மபேத்யமாக இருக்கவேண்டும். ராஜதந்திரம் என்ருல் வேறென்னவென்று நினைத்தாய்? பூசை நமஸ்காரங்களில்லாமல் போய்விட்டேன். இல்லாவிட்டால் நம்ம கண்ட்ரி (நாடு) மட்டும் இண்டிபெண்டண்ட் (சுதந்திரம்) ஆனுல் கிளாட்ஸ்டன் மாதிரி மந்திரியாக இருக்கமாட்டேனு? என்னப்பா! உங்கப்பா போக்கைப் பார்த்தால் புஸ்தகங்களுக்கு பணம் தரமாட்டார் போலிருக்கிறது. பட்டணத்திலிருந்து சிகரட் அரைக்கட்டுத்தானே வாங்கிக் கொண்டு வந்தோம்? என்ன செய்வது?

**வெங்க:** அப்பா தராவிட்டால் அம்மாவிடம் கேட்டு வாங்கிக்கொண்டு வருகிறேன்.

**கிரீ:** உன் அறிவு எப்படி மலர்கிறது பார்த்தாயா? இப்படிக் கெட்டிக்காரத்தனமாக இருந்தால் நீ கூட பெரிய ராஜதந்திரியாகிவிடுவாய்.

[புச்சம்மா வருகிருள்.]

**புச்ச:** தம்பீ! அம்மா கைகால் கழுவிக்கொண்டு வரச் சொல்கிருள்டா!

**கிரீ:** (தனக்குள்) ஹௌ ப்யட்டிபுல்? க்வைட்நெக்ஸ் பெக்ட்.

**புச்ச:** அய்யா! தாங்கள் பழைய சோறு சாப்பிடுவீர்களா?

**கிரீ:** நாட் திஸ் லேடெஸ்டப்ஜக்ஷன்; அதாவது கொஞ்சங் கூடத் தடையில்லே; பரிமாறுங்கள். இதோ வருகிறேன். வரும்வழியில் ஆற்றிலே சந்தியாவந்தனம் எல்லாம் முடித்துவிட்டேன். [புச்சம்மா போகிருள்.]

**கிரீ:** வாட்? இவள் உன் சிஸ்டரா? தலேகெட்டவள் மாதிரி தெரிகிறதே.

**வெங்:** எங்க அக்காதான். தலேக்கு எண்ணெய் தேய்க்க மாட்டாள்.

**கிரீ:** தலே கெடுதல் என்ருல் விடோ என்று அர்த்தம். எண்ணெய் கிண்ணெய் ஜான்தே நை. ஆமாம். இத்தனே நாளாக உனக்கு விடோ மேரேஜ் சம்பந்தமாக லெக்சர்கள் செய்யும்போதெல்லாம் இந்த விஷயத்தைச் சொல்லவில்லேயே. உங்க வீட்டிலேயே அன்பார்ச்சு நேட் ப்யூடிபுல் யங் விடோ இருக்கிறதே. என்ன கொடுமை. மை ஹார்ட் மெல்ட்ஸ். நானே தகப்பனுக இருந்தால் இந்தப் பெண்ணுக்கு விடோ மேரேஜ் செய்து சாஸ்வதமான புகழை டைவேன். (தனக்குள்) என்ன அழகு! இந்த எழிலே எங்கும் கண்டதில்லேயே. பட்டிக் காட்டுத்தனம் போகாதென்று நினேத்தேனுனுலும், இங்கேயே நிரந்தரமாகத் தங்கும் வாய்ப்பு கிடைத்தது என் அதிர்ஷ்டம்தான்.

**வெங்:** எங்கப்பா எனக்கும் கல்யாணம் செய்து வைப்பார்.

**கிரீ** இப்போதொரு பெரிய கல்யாணம் உடல் வீங்கும்படி நடக்க இருந்தது தப்பிவிட்டது. இந்த விடுமுறை நாட்கள் முடியுமட்டும் மேளக்கச்சேரி நடக்காமல் பார்த்துக் கொண்டால் நீ கெட்டிக்காரனுகிவிடுவாய். இனி உண்மையான கல்யாணமா? இவ்வளவு படிப்பு படித்தவன், உங்கப்பா பார்த்த ஒன்றும் தெரியாத சிறு குழந்தைக்கா தாலி கட்டப் போகிருய்? நல்லா சிவப்பாக அறிவோடிருக்கிற யங்விடோவை நீ கல்யாணம் செய்யாவிட்டால், ஐ ஷுட் பி'ய ஷேம் டப்வ் யூ.

## காட்சி—2

இடம் : தேவாலயம்

*[பூந்தோட்டத்தில் மண்டபத்தின் மீதமர்ந்து சிஷ்யன் இருக்கிறான்.]*

**சிஷ்ய:** ஆறுமாசத்துக்கொரு தடவை புஸ்தகத்தைத்தொட்டால், புதிய சுலோகம் பழைய சுலோகம் எல்லாம் ஒன்று போலத்தானிருக்கிறது. இப்போது புதிய சுலோகத்தைக் கண்டுபிடிக்க என்றால் முடியுமோ? பண்டிதர் எவரையாவது கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளணும். இல்லையென்றால் பட்டென்று புஸ்தகத்தைத் திறந்து எந்த சுலோகம் கண்ணில் படுகிறதோ அந்த சுலோகத்தைப் படிக்கிறேன். (புஸ்தகத்தைப் பிரித்து)

''ம்ருகா: ப்ரியாளு த்'ரும மஞ்சரீணும்.''

(மான்கள் மரப் பூங்கொத்தை விரும்புகின்றன.)

இதென்னவோ படித்த ஞாபகமாக இருக்கிறது. ஏதோ மான்கள் ஓடியது என்றல்லவா அர்த்தம்? என்ன பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்தானய்யா இந்தக் கவிஞன்! மான்கள் ஓடினாலென்ன? பாடினாலென்ன? யாருக்கு என்ன லாபம்? நாய்கள் ஓடவில்லையா? நரிகள் ஓடவில்லையா? பூனைகள் ஓடவில்லையா? பிரயோஜனமான ஒரு வார்த்தை கூட இந்தப் புத்தகத்திலே இல்லை. நாலு கணக்குப் போடுவது, வட்டிவாசி கட்டுவது இதெல்லாம் காளிதாசனுக்கு என்ன தெரியும்? வெள்ளைக்காரனுக்குத் தான் அந்தப் பெருமை எல்லாம். எந்த ஊர் எங்கே இருக்கிறது, எந்த மலை எங்கே இருக்கிறது என்று எதைக் கேட்டாலும் சரி, கிரீசம் நின்றுகொண்டே சட்டென்று பதில் சொல்கிறான்.

''ப்ரியா முகம் கிம்புருஷஸ் சுசும்ப.''

(காதலியை கிம்புருஷன் முத்தமிட்டான்.)

முத்தமிட்டானாமே முட்டாப்பயல். மூக்கைக் கடிக்கவில்லையா?

*[கரடக சாஸ்திரி சிஷ்யனுக்குத் தெரியாமல் பின்னே வந்து நிற்கிறார்.]*

''வர்ண ப்ரகர்ஷே ந. தி கர்ணிகாரம்
து'னோதி நிர்க'ந்த தயாஸ்ம சேத:''

இதுகூடப் படித்தாற் போலத்தானிருக்கிறது. அந்தப் பூ என்னமோ கவிஞனுக்குப் பிடிக்கவில்லையாம். பிடிக்க வில்லையென்றால் யாருக்கென்ன குடி முழுகிப் போய் விட்டது. எங்கள் குருவுக்குக்கூடக் கோவைக்கீரையைப் பிடிக்காது. குருவின் மனைவி வீட்டுத் தோட்டத்திலே கோவைப்பாத்தி இருக்குதென்று தினந்தோறும் அந்தக் கீரைதான் சமைக்கிறாள். வாழ்கிறவர்கள் இஷ்டமே இந்த லட்சணத்திலிருக்கும்போது செத்தவனுடைய இஷ்டம் எப்படி இருந்தாலும் நமக்கென்ன? இந்தப் படிப்பை இதோடு முடித்துக்கொண்டு கிரீசத்திடம் போய் நாலு இங்கிலீஷ் வார்த்தைகள் படித்துக்கொள் கிறேன். வெங்கடேசத்திற்கு இங்கிலீஷ் பேசத் தெரியு மென்று எவ்வளவு தடபுடலாக இருக்கிறது.

**கரட:** என்னடா தம்பி சொல்கிறாய்?

**சிஷ்ய:** என்னமோ என் சொந்த முனகல்.

**கரட:** குருவல்லவா? அதென்னவென்று என்னிடம் கொஞ்சம் சொல்லு.

**சிஷ்ய:** சொல்வதற்கு என்ன இருக்கிறது. நாடகத்தில் என்னை வேஷம் போடச் செய்து பெரிய வடம் மாதிரி இந்துஸ்தானி வார்த்தைகளை, சமஸ்கிருத வார்த்தைகளை அர்த்தம் தெரியாமல் ஒப்புவிக்கச் சொல்ல உங்களுக்கு நேரமிருக்கிறதே தவிர, எனக்கு நாலு நாளைக்கொரு சுலோகமாவது சொல்லிக் கொடுக்கச் சிரத்தையில்லை யல்லவா? பட்டணத்தைவிட்டு வந்த ஆறு மாசத்துக்கு ஒரு தடவை, அக்கிரகாரம் வந்ததும் வேறொரு வேலையு மில்லையென்று புஸ்தகம் படியென்றால் சமஸ்கிருதம் எங்கே இருந்து வரும்?

**கரட:** இனிமேல் பார், எப்படிச் சொல்லிக் கொடுக்கிறேன் என்று. தினந்தோறும் நாலு சுலோகம் சொல்லிக் கொடுக்கிறேன். சரி, புதிய சுலோகத்தைப் படி.

**சிஷ்ய:** ''அஸ்த்யுத்தரஸ்யாம் தி'ஸி தேவதாத்மா.
ஹிமாலயோ நாம நகாதி ராஜ:''

(வடதிசையில் இமாலயமென்றொரு மலை இருந்தது.)

**கரட:** முதல் சுலோகத்திற்கு வந்துவிட்டாயே என்ன?

**சிஷ்ய:** முதலும் முடிவும் ஒன்று போலத்தான் தோணுது.

**கரட:** (சிரித்து) போகட்டும். முதலிலிருந்தே படிப்போம்.

**சிஷ்ய:** படித்து என்ன உபயோகம்? இந்த சுலோகம் சுத்தப் பொய்யாம்.

**கரட:** யார் சொன்னது?

**சிஷ்ய:** கிரீசம்.

**கரட:** என்ன சொன்னுன்?

**சிஷ்ய:** இமாலயம் இரண்டு கடல்களுக்கிடையே இல்லையாம். மேப்பிலே காட்டினுன்.

**கரட:** இமாலயத்தின் தலை தடவியது போதும். அந்தப் புஸ்தகத்தை மூடிவிட்டு என் பேச்சைக் கேளு.

**சிஷ்ய:** அப்படியே. (புஸ்தகத்தை மூடுகிருன்.)

**கரட:** படிப்பு என்பது எதற்கு? வயிறு வளர்க்கத்தானே?

**சிஷ்ய:** ஆமாம்.

**கரட:** இந்தக் காலத்திலே சமஸ்கிருதப் படிப்பு யாருக்கு வேணும்?

**சிஷ்ய:** தரித்திரர்களுக்கு வேணும்.

**கரட:** நன்ருகச் சொன்னுய்? உனக்கு இங்கிலீஷ் படிக்கணுமா?

**சிஷ்ய:** யார் சொல்லிக் கொடுக்கப் போகிருர்கள்?

**கரட:** நான் சொல்லிக் கொடுக்கிறேன்.

**சிஷ்ய:** உண்மையாகவா?

**கரட:** உண்மையாகத்தான். ஆனுல், ஒரு நிபந்தனை.

**சிஷ்ய:** என்னது?

**கரட:** எனக்கொரு சிக்கலான பிரச்சினை வந்துவிட்டது. நீதான் விடுவிக்க வேண்டும்.

**சிஷ்ய:** என்னுலே ஆகக்கூடிய வேலைகூட இருக்கிறதா?

**கரட:** இந்த முக்கியமான வேலை உன்னுல்தான் ஆகவேண்டும். வேறு யாராலும் முடியாது. அதென்னவென்ருல் ஒரு பத்து நாளைக்கு நீ பெண் பிள்ளையாக மாற வேண்டும்.

**சிஷ்ய:** உடுப்புகள் பட்டணத்திலே இருந்துவிட்டதே?

**கரட:** உடுப்புகள் அவசியமில்லை. உனக்குத் தலைவாரிப் பூச்சூட்டிவிட்டுச் சீலையைக் கட்டிவிட்டால் பதினஞ்சு வயசுக் குமரி மாதிரியே இருப்பாய். உன்னை அழைத்துக் கொண்டு போய் லுப்தாவதானிக்குக் கல்யாணம் செய்விப்பேன். நாலுநாள் அவர்கள் வீட்டில் கெட்டிக்காரத்தனமாக நடமாடிவிட்டு, வேஷம் அவிழ்த்துவிட்டு தலை

மறைவாக ஓடிப் போய்விட்டு பின்பு என்னிடம் வந்து சேர். உண்மையான கல்யாணத்திற்கு ரொம்ப நாள் அவகாசம் இருக்கிறது.

**சிஷ்ய:** இதென்ன பிரமாதமான வேலையா?

**கரட:** அப்படிச் சொல்லாதே. இப்படிச் செய்தாயானால் சந்தேகப்படுவார்கள். பிடிபட்டாயானால் கழுத்து முறிந்துவிடும்.

**சிஷ்ய:** அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம்.

**கரட:** நீ சாமர்த்தியமாக நடந்து வந்தால் என் பெண்ணை உனக்குத் தந்து வீட்டோடே வைத்துக்கொள்கிறேன்.

**சிஷ்ய:** அப்படிச் சத்தியம் செய்யுங்கள்.

**கரட:** இந்தா. இந்தப் புஸ்தகத்தைப் பிடித்துக்கொண்டு சத்தியம் செய்கிறேன்.

**சிஷ்ய:** இந்தப் புஸ்தகத்தின்மேல் எனக்கு நம்பிக்கையில்லை. வேறொரு பெரிய சத்தியம் செய்து கொடுங்கள். கிரீசம் அவர்களிடமிருந்து கேட்டு ஒரு இங்கிலீஷ் புஸ்தகம் கொண்டு வரட்டுமா?

**கரட:** தப்பினால் இந்தப் பூமியின் மேல் ஆணை!

**சிஷ்ய:** நீங்கள் தப்பினால் பூமி என்ன செய்யும்? உங்கள் பேச்சே போதும். அப்படியே செய்கிறேன்.

## காட்சி—3

இடம்: அக்னிஹோத்ராவதானியின் வீட்டுக்கு எதிர் வீதி.

[கிரீசமும் வெங்கடேசமும் வருகின்றனர்.]

**வெங்:** ராத்திரி கன்யா சுல்கத்தைப் பற்றி லெக்சர் செய்தீர்களா?

**கிரீ:** லெக்சர் என்ன வேண்டிக் கிடக்கிறது? பாதி உயிரே போய்விட்டது. உங்கப்பா ஒரு மயில்ராவணன். உங்க மாமா ஒரு குள்ளநரி மாதிரி தெரிகிறது

**வெங்:** என்ன நடந்தது?

**கிரீ:** கேள். உங்க மாமா, ராத்திரி சாப்பாட்டு வேளையிலே லெக்சர் ஆரம்பிக்கவேணுமென்று எப்போது பார்த்தாலும் தொந்தரவு செய்தான். விஷயத்தை ஆரம்பித்த

தும் தானும்கூட பலமாக ஆதரித்துப் பேசுவதாக உறுதி கூறினுன். உங்கப்பா இருக்கிற நிலையைப் பார்த்தால் மட்டும் கொஞ்சம் தைரியம் பின்வாங்கி, வாய்க்கு வந்த சொல்கூட நெஞ்சோடு அடங்கிவிடுகிறது. ராத்திரி தயிரும் சோறும் பிசையும்போது, இனி சமயம் கிடைக்காதென்று துணிந்து லெக்சர் ஆரம்பித்தேன். இண்ட்ரடக்ஷன் ரெண்டு சென்டன்ஸ் சொல்லவே இல்லை. நாலு இங்கிலீஷ் வார்த்தைகள் சொல்லு முன்பே உங்கப்பாவுக்குக் கண் சிவந்துவிட்டது. உடனே "பாழாய்ப் போன இங்கிலீஷினுலே நம்ம ஆசாரமே கெட்டுவிட்டது. தேவபாஷை மாதிரி சாப்பாட்டு வேளையிலும் இங்கிலீஷிலே சொல்கிருர்கள். சந்தியா வந்தனம், காயத்ரி, புருஷசூக்தம் எல்லாவற்றையும் தொலைத்தாகிவிட்டதல்லவா?" என்று பெருங்கூச்சல் போட ஆரம்பித்துவிட்டார். அப்போது கொஞ்சம் மனசைத் திடம்செய்து கொண்டு, "த்ரோயிங் பெர்ள்ஸ் பி!போர் ஸ்வைன்" என்று நினைத்து கரடக சாஸ்திரியின் பக்கம் பார்த்தேன். அவன் என்ன செய்தான் தெரியுமா? ராஸ்கல்! வாயைக் கீயைத் திறக்கவே இல்லை. அதுதான் போகுதென்ருல் முகத்தைத் திருப்பிக் கொண்டு வயிறு குலுங்கச் சிரித்துக்கொண்டிருந்தான். பிறகு லெக்சரும் ஓடவில்லை. வாயில் ஒரு கவளச் சோறும் போகவில்லை. சீ இவ்வளவு இன்ஸல்ட் நடந்த பிறகு தட்சணமே புறப்பட்டுப் போகலாமென்று நினைத்தேன்.

**வெங்:** அடடா! புறப்பட்டுப் போகின்றீர்களா என்ன?

**கிரீ:** நோ. போகவில்லை. கடைசிவரைக்கும் கேள். உங்கப்பாவை என் கைக்குள் போட்டுவிட்டேன்.

**வெங்:** எங்கப்பாவை லெக்சர் செய்து கல்யாணத்தை நிறுத்தி விடுவேனென்றீர்களே?

**கிரீ:** கல்யாணத்தை நிறுத்த பிரம்மாவாலும் முடியாது. டெமஸ்தனீஸ், சுரேந்திரநாத் பானர்ஜி வந்து லெக்சர் செய்தாலும் உங்கப்பா கல்யாணத்தை நிறுத்த மாட்டார். லெக்சர்களெல்லாம் சிடியிலே தவிர, பட்டிக் காட்டிலே பயன்படாது. பம்பாய்மாதிரி பெரிய சிடியிலே லெக்சர் செய்தேனுனல் டென் தவ்சண்ட் பீபிள்ஸ் (10,000 ஜனங்கள்) கேட்பதற்கு வருவார்கள். நம்ம டவுனிலேயே பெரிய மீட்டிங் போடணுமென்ருல்,

தண்டோரா அடித்து நோட்டீஸ் கொடுத்து, பஜாரிலே காத்திருந்து வழியிலே போகின்றவர்களை இழுத்துக் கொண்டு வந்தாலுங்கூட ஐம்பது பேர் சேரமாட்டார்கள். பட்டிக்காட்டு ஜனங்கள் எங்கே வரப்போகிறார்கள்? முந்தாநாள் நாம் வந்த வண்டிக்காரனுக்கு நேஷனல் காங்கிரஸ் சம்பந்தமாக ரெண்டுமணி நேரம் லெக்சர் செய்ததும், அந்த முட்டாப்பயல் அவங்களூர் ஹெட் கான்ஸ்டபிளிடம் காங்கிரஸ்காரர்கள் எப்போது பதவிக்கு வருவார்கள் என்று கேட்டான். வில்லேஜஸ்லே லெக்சர் கொஞ்சம்கூட பயன்படாது. உங்கப்பாவிடம் மட்டும் லெக்சர் என்கிற பேச்சே கூடாது.

**வெங்:** அப்படியானால் அப்பாவை எப்படி உங்கள் கைக்குள் போட்டீர்கள்?

**கிரீ:** அதொரு ராஜதந்திரம். அதன் பிறகு நடந்த கதையைக் கேளு. என்மீது கூச்சல் போட்டுவிட்டு பிறகு கோப மடங்காமல் சிடுசிடுவென்று தயிரும் சோறும் வாரி இறைக்க ஆரம்பித்துவிட்டார். இதற்குள் உங்க அக்கா வந்து, கதவோரத்தில் நின்றுகொண்டு, குயில்போன்ற குரலில், "அப்பா, தம்பிக்கு கல்யாணம் செய்ய வேணுமானால் என் நகைகளை வைத்துக்கொண்டு செய்யுங்கள். ஆனால் தங்கச்சி குடியைக் கெடுத்துவிடாதீர்கள். லுப்தாவதானிக்குக் கட்டிக் கொடுக்காதீர்கள்" என்று சொன்னாள். அதோடு உங்கப்பாவுக்கு வெறி பிடித்தாற் போலக் கோபம் வந்து சாப்பிடாமல் அந்தத் தயிரும் சோறும் இலையோடெடுத்து அவள் தலையிலே போட்டார். கரடக சாஸ்திரி தடுக்கவே, அவர் தலையில் செம்புத்தண்ணீரை ஊற்றிவிட்டார். கரடக சாஸ்திரிக்கு கோபம் வந்து சிஷ்யனை அழைத்துக்கொண்டு தமதூருக்குப் போய்விட்டார்.

**வெங்:** இதுதானா எங்கப்பாவைக் கைக்குள் போட்டுக் கொள்வது?

**கிரீ:** பேசன்ஸ். முடிவைக் கேள். குள்ளநரி கரடக சாஸ்திரி போய்த் தொலைந்தான் என்று சந்தோஷப்பட்டாலும் உன் சிஸ்டரின் விதியை நினைத்தால் ரொம்ப வருத்தமாக இருக்கிறது. நானே அவள் ஹஸ்பண்டாக இருந்தால், அப்பொழுதே உங்கப்பாவை ரிவால்வரினால் ஷூட் செய்திருப்பேன். உங்கம்மா அழுதுகொண்டே ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறாள். நான் போய் வெந்நீ

ரடுப்பிலே தீப்போட்டு, நீரிறைத்து வைத்து, பிறகு உங்க அக்காவைக் குளிக்கச் சொன்னேன். சிகரட் குடிக்கலாமென்று திண்ணையிலே படுக்கை போடும் போது, உங்கப்பாவுக்கு பச்சாத்தாபம் வந்து அவரும் திண்ணையிலே படுக்கையைப் போட்டு விடியவிடிய ஏதேதோ உளறிக் கொட்டி என்னை சிகரட் குடிக்க விடாமல் என் பிராணனை வாங்கிவிட்டார். என்றாலும் மொத்தத்தில் வெற்றிதான்.

**வெங்:** அதெப்படி?

**கிரீ:** ஒரு ராஜதந்திர மஹா அஸ்திரம் பிரயோகம் செய்து வசியப்படுத்தினேன்.

**வெங்:** அதென்ன அஸ்திரம்?

**கிரீ:** ஒருவன் சொன்னதெல்லாம் ரொம்ப நல்லா இருக்குது என்று தலையாட்டுவதுதானே சம்மோஹனாஸ் திரம் என்னும் வசிய மந்திரம்.

**வெங்:** லெக்சர் செய்து எங்கப்பாவை மாற்றுவதற்குப் பதிலாக நீங்களே அவர் சொல்படி மாறிவிட்டீர்களா?

**கிரீ:** உழக்கை நிறுத்தி அளக்க முடியாவிட்டால் குப்புறப் போட்டளந்தால் கொஞ்சம் நெல்லாவது கிடைக்கும். நன்றாக யோசித்துப் பார்த்தால் இன்பெண்ட் மேரேஜ் (கிழவனுக்கு குமரியை மணம் முடிப்பது) ஒரு வகையில் நல்லதென்றே தோன்றுகிறது.

**வெங்:** இத்தனை நாளாக கூடாதென்று என்னிடம் சொன்னீர்களே?

**கிரீ:** ஒபீனியன் அவ்வப்போது சேஞ்ச் செய்யாவிட்டால் ராஜதந்திரமாகாது. எனக்குத் தோன்றிய புதிய ஆர்க் மெண்டைக் கேட்டாயா? இன்பெண்ட் மேரேஜ் இருந்தாலொழிய யங் விடோஸ் இருக்கமாட்டார்கள். யங் விடோஸ் இருந்தாலொழிய விடோ மேரேஜ் ரிபார்ம் நடக்க முடியாதல்லவா? நாகரிகத்திற்கு விடோ மேரேஜ் அடிப்படையாக இருப்பதால் இன்பெண்ட் மேரேஜ் இல்லாவிட்டால் நாகரிகமே ஸ்தம்பித்துவிடும். மேலும் முன்னேற்றமிருக்காது. ஆகையால் தவறாமல் கட்டாயம் இன்பெண்ட் மேரேஜ் செய்யவேண்டியதுதான். இது ஒரு புதிய டிஸ்கவரி நம்பர் டூ. கிழவர்களுக்குச் சிறிய கன்னிகளைக் கொடுத்துக் கல்யாணம் செய்வது நல்லது தான் என்று நான் வாதம் செய்கிறேன்.

**வெங்:** சுப்பம்மாவை லுப்தாவதானிக்குக் கட்டிக் கொடுப்பது நல்லதென்கிறீர்களா? அம்மா அந்தச் சம்பந்தம் செய்தால் கிணற்றிலே விழுந்து விடுவேன் என்கிருளே.

**கிரீ:** பிமெனென்ஸ் பூல்ஸ். கிணற்றிலே குளத்திலே விழுவது நான்ஸென்ஸ்! உங்கப்பா ரெண்டு பவுனில் நகை செய்து போட்டால் உங்கம்மா அந்தப் பேச்சே மறந்து விடுவாள். ஆனுலும் என் தீர்ப்பைக் கேள்.

**வெங்:** என்னங்க?

**கிரீ:** கல்யாணம் என்பது நல்லதா? கெட்டதா? சொல்.

**வெங்:** நல்லதுதான்.

**கிரீ:** வெரி குட். கல்யாணம் நல்லதாஞல் அளவுக்குத் தகுந்த பலனுண்டாகையாலே, சிறிய குமரியை ஒரு கிழவனுக்குக் கட்டிக் கொடுத்து அவன் செத்தால் மற்றவனுக்கு, அவனும் செத்தால் இன்னொருவனுக்கு, இப்படியே கல்யாணத்துக்குமேல் கல்யாணமாகி, இவனிடம் ஆயிரம் அவனிடம் ஆயிரம் கிடைத்து ரொட்டியில் நெய், நெய்யிலே ரொட்டி என்கிற விதத்தில் ரொம்பவும் பணம் விருத்தியான பிறகு, கடைசியில் என்னைப்போன்ற புத்திசாலியைப் பார்த்து கல்யாணம் செய்துகொண்டால், கேட்கணுமா? அது தான் பேரின்பம். இகலோக சௌக்கியம் பூர்த்தியாகக் கிட்டிஞல் பரலோக சௌக்கியமும் தாஞகவே வரும். தெரியுதா?

**வெங்:** கன்யா சுல்கம்கூட நல்லதென்று சொல்கிறீர்கள்?

**கிரீ:** பின்னென்ன? செய்வது திருந்தச் செய் என்பார்கள். செய்தால் சுத்த க்ஷவரமே யல்லாது திருப்பதி அம்பட்டன் மாதிரி க்ஷவரம் செய்யக்கூடாது. இந்த வசிய மந்திரத்திஞல்தான் உங்கப்பா வழிக்கு வந்தார். இங்கிலீஷ்காரன் 'திங்க்' என்ருன். சிந்தித்தாலன்றி உண்மை காண முடியாது. நன்ருக சிந்தித்துப் பார்த்தால் கன்யா சுல்கம் இல்லாத மேரேஜ் இந்தப் பூவுலகத்திலேயே இல்லை. கேட்டாயா?

**வெங்:** எப்படிங்க?

**கிரீ:** அப்படிக் கேள்! என்ன? பணம் கொடுத்தால்தாஞ கன்யா சுல்கமாகும். பணத்துக்குப் பதில் இவ்வளவு தங்கம், இவ்வளவு வெள்ளி என்று நகையாகப்

பிடுங்கினால் கன்யா சுல்கம் ஆகாதா என்ன? இந்தப் பெரிய பெரிய புரோகிதர்களெல்லாம் இப்படித்தானே செய்கிறார்கள்?

**வெங்:** ஆமாம்.

**கிரீ:** இனித் துரைமார்களைப் பார்த்தோமானால், அவங்க தலையிலே இடி விழ, வீட்டையே கொள்ளையடிக்கிறார்கள். துணிமணிகள் நகைகள் என்பது மட்டுமல்லாமல் மேரேஜ் செட்டில்மெண்ட் என்று குறிப்பிட்ட ஆஸ்தி கூடப் பிடுங்கி விடுகிறார்கள். இந்த ஆர்க்மெண்டை நான் சொல்லும்போது உங்கப்பா பிரம்மானந்த மடைந்தார். லுப்தாவதானியின் கல்யாணத்தாலே எல்லாவற்றையும்விட அனுகூலமான ஒரு சங்கதியைச் சொல்கிறேன் கேள்.

**வெங்:** என்னங்க?

**கிரீ:** லுப்தாவதானி கிழவன்; பணக்காரனுங்கூட. இரண்டு மூணு வருஷத்துக்குள்ளே கட்டையைப் போட்டு விடுவான். அதாவது இறைவன் திருவடி நிழலை அடைவான். அப்போது உன் தங்கை ரிச்விடோ ஆவாள். நீ பெரியவனான பிறகு அவளுக்கு விடோ மேரேஜ் செய்துவைத்து சாஸ்வதமான கீர்த்தியை மிகச் சுலபமாக அடையலாம். என்ன சொல்லுகிறாய்?

**வெங்:** ஆமாம்.

**கிரீ:** மற்றொரு பெரிய விஷயம். இந்தச் சம்பந்தம் நடந்தால் உனக்கும் எனக்கும் சம்பந்தமுண்டாகும்.

**வெங்:** அது எனக்கு சம்மதந்தான்.

**கிரீ:** ராத்திரி உங்கப்பா உன்னை ஹைகோர்ட்டு வக்கீல் வரைக்கும் படிக்கப் போடப் போவதாகச் சொன்னார். இப்போதைக்கு அவசியமான புஸ்தகங்களின் பேச்சை எடுத்தேன். கல்யாணம் முடிந்த பிறகு தருகிறேன் என்று சொல்லிவிட்டார். இதற்குள் சிகரட் குடிக்கா விட்டால் கண் விழி பிதுங்கிவிடும் போலிருக்கிறது. சிகரட்டுக்கு ஏதாவது காசு கீசு சம்பாதித்தாயா? இல்லையா?

**வெங்:** இல்லை. இன்று காலையிலிருந்து அம்மா சிடுசிடு வென்று இருக்கிறாள். எங்கப்பா பொடிக்காக வீட்டில் வைத்திருந்த புகையிலையிலிருந்து ஒரு கட்டு மடியில் ஒளித்து வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.

**கிரீ:** த'டீஸ் பொலிடிக்ஸ்! இவ்வளவு நேரமாக ஏன் சொல்ல வில்லை? சுருட்டாகச் சுருட்டி இந்தக் கோவில் கோபு ரத்தின் மேலே உட்கார்ந்துகொண்டு குடிப்போம் வா.

**வெங்:** கோயிலில் சுருட்டுக் குடிக்கலாமா?

**கிரீ:** குடித்தால் கோயிலில்தான் குடிக்கவேண்டும். இதன் புகைக்கு முன்னால் சாம்பிராணி, அகில் தூபங்க ளெல்லாம் எந்த மூலைக்கு? எங்கே கட்டை இப்படிக் கொடு (புகையிலைக் கட்டை வாங்கி முகர்ந்து பார்த்து) ஆகா! எவ்வளவு அருமையான புகையிலை! உண்மையிலே கண்ட்ரி லைப்லே எவ்வளவு இன்பம் இருக்கிறது. பெஸ்ட் டொபாக்கோ, பெஸ்ட் மில்க், நல்ல நெய் எல்லாம் கிடைக்கிறது. அதனால்தான் போயிட்ஸ்களெல்லாம் 'கண்ட்ரி லைப்' 'கண்ட்ரி லைப்' என்று பிராணனை விடுகிறார்கள்.

**வெங்:** நீங்களும் போயிட்ஸ் தானே?

**கிரீ:** அதற்கு ஆட்சேபணை என்ன? எனக்கும் கண்ட்ரிலைப் இஷ்டந்தான். ஆனாலும் சீமையிலே போல ப்யூடிபுல் ஷெபர்டன்ஸ், லவ் மேகிங் இருக்காதப்பா! கி'ராஸ் கே'ள்ஸ் வேண்டிய அளவிருந்தாலும்கூட ரொம்ப டர்ட்டீ ஸ்மெல். அதோடு சுமுகமாகவும் இருக்க மாட்டார்கள். இக் காலத்தில் லவ் மேகிங் விடோக் களைச் செய்ய வேண்டுமேயன்றி வேறு கதியில்லை.

**வெங்:** நீங்கள் விடோ மீதெழுதிய பாட்டுத் தருகிறேன் என்று சொல்லிவிட்டுத் தரவே இல்லையே?

**கிரீ:** கேட்டதுமே கொடுத்தால் அந்தச் சரக்கின் மதிப்புக் கெட்டுவிடுகிறது. அதோடு இன்னும் இரண்டு மூன்று வருஷம் போனாலன்றி அதன் சுவை உனக்குத் தெரியாது. ஆனாலும் ஸ்பெஷல் கேஸாக உனக்காக உபதேசம் செய்கிறேன். நோட் புக் எடுத்து எழுது.

[கிரீசம் சுருட்டுப் பிடித்துக்கொண்டே, இடை யிடையே அதைக் கையில் வைத்துக் கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகப் பாட்டைச் சொல்லி வரவும் வெங்கடேசம் அதை எழுதுகிறான்.]*

**கிரீ:** இந்தப் பாட்டை நான் "ரிபார்மரி"ல் அச்சிட்டபோது டெனிஸன் பார்த்து நெஞ்சிலடித்துக்கொண்டான்.

---

*இங்குள்ள இங்கிலீஷ் பாட்டும் அதன் தமிழாக்கமும் அனுபந்தத்தில் காண்க. [மொ—ர]

சரி. சுருட்டுக் குடிப்பதை முடித்துவிட்டு வீட்டுக்குப் போவோம் வா. ரொம்ப நேரமாகிவிட்டது.

[இருவரும் நான்கு எட்டு எடுத்து வைக்குமுன் எதிரே அக்னிஹோத்ராவதானி வருகிறார்.]

**அக்னி:** என்னங்க, அனுமந்த ராயரே! உங்க பேர் என்ன?

**கிரீ:** கிரீசம்.

**அக்னி:** பாருங்கள் கிரீசம். ராத்திரி நாம் பேசிக்கொண்டபடி நம் தாவாக்கள் ஜெயிக்குமென்பதுதான் உங்கள் அபிப்பிராயமா?

**கிரீ:** ஜெயிக்காவிட்டால் என் காதை அறுத்துக்கொண்டு போய் விடுகிறேன். உங்கள் யோசனைகளெல்லாம் சாமானியமானதா? அதிலும் "எது நீதியோ அதுவே ஜெயிக்கும்" என்கிறபடி நியாயம் உங்க பக்கம் இருக்கிறது. புச்சம்மாவின் கேஸ் விஷயமாக ஜபல்பூர் ஹைகோர்ட்டுத் தீர்ப்பு ஒன்று பெரிய பலமான ஆதாரமாக இருக்கிறது. எங்க பெரியப்பா இப்படிப்பட்ட கேஸ் ஒன்றில்தான் சமீபத்தில் ஜெயித்தார்.

**அக்னி:** நம்ம கேஸுக்குள்ள கஷ்டமென்னவென்றால் இந்த கேஸை காக்கிநாடாவில் போடவேண்டி வந்ததுதான். எங்கள் கரடக சாஸ்திரியை அனுப்பியதற்கு எவனோ ஒரு அப்பாவி வக்கீலை அமர்த்தினான். அவன் எப்போது பார்த்தாலும் பணம் அனுப்பும்படி எழுதுவதே தவிர கேஸ் விஷயமாக ஒன்றுகூட எழுதமாட்டான். அடிக்கடி போய் வரலாமென்றால் தூரமல்லவா?

**கிரீ:** நீங்க சொன்னால் நானே ஸ்டீமரில் போய் அந்த விவகாரமெல்லாம் பைசல் பண்ணிக்கொண்டு வருகிறேன். எங்க பெரியப்பா காக்கிநாடாவிலேயே சாமர்த்தியமான வக்கீல். அவர் தொட்ட கேஸ் எதுவும் என்றைக்கும் பெயிலானதே கிடையாது.

**அக்னி:** நீங்க போனால் நான் போனமாதிரிதான். எவ்வளவு பீசானாலும் உங்க பெரியப்பாவிடமே வக்காலத்து தருவோம். என்ன சொல்கிறீர்கள்?

**கிரீ:** உங்களிடம்கூட பீஸ் வாங்குவதா? செலவுக்கு மட்டும் கொடுத்தால் பீஸ் இல்லாமலேயே காரியத்தை முடித்து விடுகிறேன்.

**அக்னி:** *நீங்கள் அப்படிச் சொல்வீர்களென்று எனக்குத் தெரியும். ஆனாலும் கேஸ் ஜெயித்த பிறகு நமக்குத் தோன்றியபடி சன்மானம் தருவோம்.*

**கிரீ:** *கொடுத்தாலும் சரிதான். கொடுக்காவிட்டாலும் சரிதான்.*

*[புச்சம்மா வருகிறாள்]*

**புச்:** *அப்பா! அம்மா குளிக்கக் கூப்பிடுகிறாள்.*

**அக்னி:** *சரி.*

*[புச்சம்மா போய்க்கொண்டிருக்க, கிரீசம் கடைக் கண்ணாலே பார்க்கிறான்]*

**அக்னி:** *சாப்பாடானதும் காகிதங்களை உங்கள் கையில் தருகிறேன். அதெல்லாம் சாவகாசமாகப் பாருங்கள். நம்ம வீட்டுக்குக் கிழக்கு வீட்டு ராமாவதானிமேல், வெளிச் சுவர் விஷயமாக நான் போட்ட தாவாவை, லஞ்சம் வாங்கிக்கொண்டு முன்சீப் அனியாயமாகத் தள்ளிவிட்டான். அதனால் ஜட்ஜ் கோர்ட்டிலே தாக்கல் செய்திருக்கிறோம். எங்கள் வக்கீல் எதிராளி பக்கம் சேர்ந்து கொண்டு கேஸைப் பாழாக்கிவிட்டான். உங்களைப் போன்றவர்கள் எனக்கு ஒத்தாசைக்கு இருந்தால் ராமாவதானியை ஒரு கலக்குக் கலக்கியிருப்பேன். ஆகட்டும். கிழக்குச் சுவர் ராமாவதானியுடையதானால் மேற்குச் சுவர் நம்முடையதாக வேண்டுமல்லவா? நியாயம் சொல்லுங்கள். இதோ பாருங்கள், சுவரை என்னவெல்லாம் செய்திருக்கிறானென்று. கிரிமினல் கேஸ் நடத்தும்படி எல்லோரும் ஆலோசனை சொல்கிறார்கள்.*

*[புச்சம்மா வருகிறாள்]*

**புச்ச:** *அப்பா! அம்மா குளிக்கக் கூப்பிடுகிறாள்.*

**அக்னி:** *விதவைச் சிறுக்கி! பெரிய மனுஷர்களோடு விவகாரம் பேசிக் கொண்டிருந்தால் ராமாயண காலட்சேபத்திலே வரட்டி தட்டினாற்போல ஊடே வந்து கூப்பிடுவதா?*

**கிரீ:** *தப்பாமல் கிரிமினல் கேஸ் போட வேண்டியதுதான். க்ரிமினல் புரோசிஸர் கோடு 171வது செக்ஷன்படி போடுவோமா? 172வது செக்ஷன்படி போடுவோமா?*

**அக்னி:** *இரண்டு செக்ஷன்களும் என்ன சொல்கிறது?*

கிரீ: குற்றம் நடந்த இடம், ஆக்கிரமணம்—இரண்டு செக்ஷனும் ஒத்து வருகிறது. சரித்தான். கண்ணாலே பார்த்தேனுகையாலே இந்தச் சுவர் உங்களுடையதுதான் என்று உறுதியாகச் சாட்சியங்கூடச் சொல்வேன். இந்தச் சுவர் தெளிவாக உங்க சுவர் மாதிரியே தெரிகிறது.

அக்னி: அதற்குச் சந்தேகமென்னங்க? நான் அலட்சியமாக இத்தனை நாளாகச் சும்மா இருந்து விட்டேன். பின் பக்கத்துச் சுவரைக்கூடப் பாருங்கள். அக்காப்பத்தரின் மூக்கறுத்து ஜெயித்துவிட்டேனுனாலும் இந்தத் தாவாவினுலே நல்ல நஞ்சையை விற்கவேண்டி வந்தது. ராமாவதானி கேஸும் ஜெயித்தால் அந்தக் கவலையும் எனக்கில்லாமல் போகும்.

[அனைவரும் போகின்றனர்.]

# மூன்றும் அங்கம்

## காட்சி—1

இடம் : ராமச்சத்திரபுரம் அக்கிரகாரம்.

[ராமப்பந்துலு வீட்டு முற்றத்து அறை—மதுரவாணி வருகிருள்.]

மதுர: இந்த ராமப்பந்துலுவின் சரித்திரம் மேலுக்கு மினுக்கு, உள்ளே சூனியம்மாதிரி தெரிகிறது. நிலபுலங்களெல்லாம் ஒத்தியாக இருக்கிறதாம். இன்னும் கடன் வேறு இருக்கிறதாம். வந்தவன் போனவனுக்கெல்லாம் முடிபோட்டு வாழ்க்கை நடத்துகிருனும். இந்த ஊரைக் காலா காலத்தில் காலி செய்துவிட்டுக் கைக்கெட்டிய பணத்தைக் கைப்பற்றிக் கொண்டு விடியுமுன்னே வேறொரு கொம்பைப் பிடிக்கவேண்டியதுதான். (பாடுகிருள்) "தெரியாமல் மோசம் போனேனய்யா! தெரியாமல்......"

[பாடிக் கொண்டிருக்கும்போது ராமப்பந்துலு வருகிருன்]

ராம: என்ன அந்த மோசமீ போன படலம்? மீதியைப் பாடு.

**மதுர:** மீதி என்ன இருக்கிறது? உங்களை நம்பித்தான் மோசம் போனேன்.

**ராம:** அதென்ன அப்படிச் சொல்கிறாய்? உன்னை மோசம் செய்யவில்லையே. நிர்ணயித்தபடி இருநூறு ரூபாயைப் பட்டணத்தில் தந்தேனே. மாசச் சம்பளம் மாசத்துக்கு முன்பே தந்தேன். இன்னுமென்ன மோசமிருக்கு?

**மதுர:** என்ன விசித்திரமாகப் பேசுகிறீர்கள்? எனக்குப் பணம் தான் பெரிதென்று உங்க மனசுக்கு தோன்றுகிறதா? எனக்குப் பணம் ஓட்டுக்குச் சமானம். உங்கள் நிலபுலங்கள் கடன் பட்டிருக்கிறது என்று தெரிந்தால் உங்களிடமிருந்து இருநூறு ரூபாய் வாங்குவேனோ? உங்கள் செலவுகளைக் குறைத்துக்கொண்டு குடித்தனம் சரியாக நடத்தாவிட்டால் நான் சும்மா விடுவேனோ? இன்ன பந்துலு இன்ன தாசியை வைத்துக் கொண்டு நன்றாக வாழ்கிறார் என்றால், எனக்கும் நல்ல பேர் கிடைக்கும். எங்கள் குடும்பச் சம்பிரதாயமிது. உலகத்திலே எல்லாத் தாசிகளையும் ஒன்றாக நினைத்து விடாதீர்கள்!

**ராம:** நிலபுலங்கள் ஒத்தி என்பது சுத்தப் பொய். யார் சொன்னதுவோ? நான் மஹாராஜாமாதிரி இருக்கிறேன்.

**மதுர:** என் கண்ணுக்கு மகாராஜா மாதிரி தோன்றப் போய்த்தான் வீடுவாசலை விட்டுவிட்டு மானம் பிராணன் எல்லாம் உங்களிடம் ஒப்படைத்துவிட்டு உங்களை நம்பிப் பின்னே வந்திருக்கிறேன். என்னைமட்டும் மோசம் செய்துவிடாதீர்கள். உங்களுக்குப் பாபம் வந்து சுற்றிக் கொள்ளும்.

**ராம:** நான் மோசஞ்செய்கிற மனுஷன்தானா?

**மதுர:** அப்படியானால் லுப்தாவதானிக்கு கல்யாணம் எதற்காக அமர்த்தினீர்கள்? எனக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டீர்களா? அந்தக் கிழவனுக்குக் கல்யாணம் எதற்கு? உங்களுக்காகத்தான் இந்த ஏற்பாடெல்லாம்.

**ராம:** ஹஹ்ஹஹா! ஆகா! இதுவா உன் சந்தேகம்? கொஞ்சம் தலை நரைத்திருக்கிறதாலே என்னைக்கூடக் கிழவன் என்கிறாயா என்ன?

**மதுர:** மீசை நரைச்சாலும் ஆசை நரைக்குமா? இருட்டிலே நட்சத்திரங்கள் மாதிரி அங்கங்கே ரெண்டு வெள்ளை மயிர் இருந்தால்தான் அழகு.

ராம: ரொம்ப அழகாகச் சொன்னாய். எங்கே ஒரு முத்தம்.

[ராமப்பந்துலு மதுரவாணியை முத்தமிட முயல்கிறான்.]

மதுர: (கையால் தடுத்து, முகத்தைச் சுளித்து) அதற்கு நேரங்காலமில்லையா? லுப்தாவதானி கல்யாணத்தை நிறுத்தினாலொழிய முத்தமிட விடமாட்டேன்.

ராம: எல்லாம் ஏற்பாடான பிறகு என்னால் நிறுத்த முடியுமா?

[பலாத்காரமாக முத்தமிடுகிறான்]

மதுர: சத்திருக்கிறதென்று முரட்டுத்தனம்?

ராம: என் சத்தை இப்போதென்ன பார்த்தாய்? சிறு வயசில் கோயில் துவஜஸ்தம்பத்தை அடித்தேனானால் அதிலுள்ள மணிகள் கணகணவென்று ஒரு நாழிகை சத்தம் போடும். ஒரு தடவை நோய் வந்து மெலிந்து விட்டேன்.

மதுர: இதா மெலிவு? என் கையைப் பாருங்கள், எப்படிக் கன்றிவிட்டதென்று. அப்பப்ப! முரட்டுத்தனம்.

ராம: என்னுடைய இப்போதுள்ள சத்தே உனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது.

மதுர: இந்தக் கல்யாணத்தை நிறுத்தாவிட்டால் நான் உங்களோடு பேசமாட்டேன்.

ராம: தலைவலி போய் திருகுவலி வந்ததாம். இரண்டு வருஷமாக அந்தக் கிழட்டுப்பயலை என் சூழ்ச்சிகள் எல்லாம் பிரயோகித்துக் கல்யாணத்திற்குச் சம்மதிக்க வைத்து விட்டு இப்போதெப்படி நிறுத்துவது?

மதுர: என்ன சூழ்ச்சி செய்தீர்கள்?

ராம: அப்படிக் கேள். என் அறிவுத்திறமையும் வெளியாகும். லுப்தாவதானி பரமலோபி; மகாகஞ்சன். அவன் குணம் இப்படி இருக்குமென்று தெரிந்துதான் போல் இருக்கிறது, அந்தப் பெயரைச் சிறு வயசில் வைத்திருக்கிறார்கள். கல்யாணம் செய்தால் கொள்ளைலாபம் பணமாக வருமென்று ஆசை காட்டியிருக்கிறேன்.

மதுர: அதென்ன அற்புதம்? கல்யாணம் செய்தால் செலவாகுமே தவிர, வரவு எப்படி வரும்?

ராம: சூழ்ச்சி என்றால் என்னவென்று நினைத்தாய்? அசாத்தியமானதைச் சாத்தியமாக்குவதும், சாத்தியமானதை

அசாத்தியமாக்குவதும்தானே? நம்ம ஜோசியரை முழுக் காட்டிய பிறகு அவன் என்ன செய்தான் தெரியுமா? லுப்தாவதானியின் ஜாதகத்தைப் பார்த்து, சீக்கிரத்தில் விவாகயோகமிருப்பதாகவும் அந்த விவாகத்தின் மூலம் தனலாபம்கூட இருப்பதாகவும் சொன்னான். அதோடு கிழவனுக்குப் பணம் வரும் என்ற ஆசை முன்னுக்கும், பணஞ் செலவாகுமே என்ற பயம் பின்னுக்கும் இழுக்க ஆரம்பித்தது. இதற்குள் பண்டாரத்தையும் தயார் பண்ணினேன். அவனிடமும் சந்தேகம் தெளிவதற் காக லுப்தாவதானி ஜாதகத்தைக் காட்டவே அவன் என்ன சொன்னான் தெரியுமா? "விவாக தனயோகங்கள் இணைந்து வருகிறது. ஆனால், நீங்களோ வயசானவர்கள். இப்போது உங்களுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? கல்யாணமெப்படி யாகும்? இப்படி நடக்க முடியாத மகாயோகங்கள் ஜாதகத்தில் இருந்தால், பெரும் நன்மைக்குப் பதிலாக தீமைதான் விளையும். அதாவது மரணமோ தனநஷ்டமோ ஏற்படலாம். கிரக சாந்தி செய்து பிராமணர்களுக்குத் தடபுடலாகப் பெரிய விருந்துகள் வைத்துத் தானதருமங்கள் செய்தால் ஏதோ கொஞ்சம் நோய் கீய் வந்ததோடே பீடை தொலையும். நல்ல நாள் பார்த்து சூரியன் நமஸ்காரத்தை ஆரம்பி யுங்கள்" என்று சொன்னான். சொன்னதுமே அவ தானியின் நெஞ்சுடைந்து தூள் தூளாகி விடவே கல்யாணத்துக்கு முயற்சி எடுக்க ஆரம்பித்தான். இதுதான் கதை.

**மதுர:** என்ன கற்பனை!

**ராம:** இன்னும் இருக்கிறது. கிருஷ்ணபுரத்தில் அக்னிஹோத் ராவதானி மகள் ஜாதகம் எப்படி இருக்கிறது தெரியுமா? சொல்லி முடியாது. அவள் கால்வைத்த இடம் பொன் விளையுமாம். தொட்டதெல்லாம் தங்கமாகுமாம்.

**மதுர:** நிஜந்தானா? அதுவும் உங்கள் கைவரிசையா?

**ராம:** அதுமட்டும் என் கை வரிசை யில்லை. அக்னிஹோத் ராவதானியே ஜாதகம் அப்படி எழுதிவைத்திருக்கிறான். எங்கள் பிராமணர்களிலே இது வழக்கந்தான். கல்யாண வீடுகளுக்கு அனுப்பும் ஜாதகம் ஒன்றுகூட உண்மை யாக இராது.

**மதுர:** என்ன மோசம்?

**ராம:** திறமை திறமை என்று சொல்லு.

**மது:** இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

**ராம:** நம்பின இடத்தில் செய்தால் மோசம்; நம்பாத இடத்தில் செய்தால் திறமை.

**மது:** தான் செய்தால் திறமை, மற்றவன் செய்தால் மோசம் என்று சொல்லக்கூடாதா? பொய்க்குப் பொருளென்ன?

**ராம:** என்ன சொன்னுய்? பொய்யா? உத்யோக தருமம், உலகவழக்கு என்று கடவுள் அதை ஒரு கடமையாக சிருஷ்டித்திருக்கிருர். அந்த உலக வழக்கு எப்படிப் பட்டது தெரியுமா? உண்மையைப் போன்ற பொய் சொல்லிப் பணம் சம்பாதிப்பது. இந்தத் தரும சூட்சுமங்களெல்லாம் உனக்கெப்படித் தெரியப் போகிறது?

**மதுர:** எனக்குத் தெரியாதென்பது உண்மைதான். அது சரி. இந்தக் கல்யாணத்தின் மூலம் பணம் சம்பாதிப்பதெப்படி?

**ராம:** (தனக்குள்) என்னையே சோதிக்கிருள். இவள் நாசமாய்ப் போக... (வெளிப்படையாக) உன்னை நாட்டியத்துக்கு அமர்த்தியிருக்கிறேனல்லவா? உனக்குப் பத்துக்காசு கிடைத்தால் பணம் சம்பாதித்தாற் போலத்தானே?

**மதுர:** என்ன விசித்திரமான மனிதராக இருக்கிறீர்கள்.(வெற்றிலைச் சுருளால் மெல்ல அடித்து) நான் வரப்போகிறேனென்று ரெண்டு வருஷத்துக்கு முன்பே கனவு கண்டு, என் நாட்டியத்தை அமர்த்துவதற்காகத்தான் இந்தக் கல்யாணத்தை ஏற்பாடு செய்ய பகீரத பிரயத்தனம் செய்தீர்களா? பணம் சம்பாதிப்பதெப்படியோ எனக்குப் புரிந்துவிட்டது. மணப் பெண்ணை வசப்படுத்திக் கொண்டு அவள் மூலமாகக் கிழவனின் மூட்டை முடிச்சுகளை எல்லாம் கடத்தி விடுவீர்கள். நான் அப்பாவியாக இருந்தாலும் இதுகூடவா தெரியாமல் இருப்பேன். இல்லை என்ருல் நான் எவ்வளவோ கட்டாயப் படுத்தியும் இந்தக் கல்யாண ஏற்பாட்டை நிறுத்த மாட்டேன் என்று சொல்வானேன்? உங்களால் முடியாத காரியம் இருக்கிறதென்ருல் நான் நம்புவேனு?

**ராம:** அதுவும் உண்மைதான். ஆனுலும் எல்லா வேலைகளும் பணம் சம்பாதிக்கத்தானு? அந்தக் கிழவனைக் காப்பாற்ற வேணுமென்றுதான் இந்தக் கல்யாணத்தில் தலையிட்டேன்,

மதுர: "அற்புதம், அற்புதம், மகா அற்புதம்" என்று ஒரு கதை இருக்கிறது. அதைப் போலத்தான் உங்க வேலைகளெல்லாம் இருக்கிறது.

ராம: அந்தக் கதை என்னவோ சொல்லு. எனக்குக் கதை என்ருலே உயிர்.

மது: போக்கற்ற கதைகளெதற்கு? முதலில் உங்கள் விசித்திரமான கதை என்னவோ அதைச் சொல்லுங்கள்.

ராம: அது சொல்லக் கூடாது. சொல்ல மாட்டேன்.

மது: சொல்லாவிட்டால் சும்மா விட மாட்டேன்.

ராம: விடாமல் என்ன செய்வாய்?

மதுர: இந்தச் சடையாலே அடிப்பேன். சாஸ்திரத்தில் காதலர்களுக்குச் சொல்லப்பட்ட ஆயுதம் இது.

ராம: நான் அடிபடுகிற ஆசாமி யில்லை. சாஸ்திரம் கீஸ்திரம் ஒரு பக்கத்திலே வைத்துவிட்டு, முரட்டுச் சரசத்தை நிறுத்து. சொல்லவேண்டுமென்று கட்டாயப் படுத்திஞல் சொல்கிறேன். ஆஞலும் இப்படிப்பட்ட செய்திகளை நீ கேட்கக்கூடாது. வேறென்றுமில்லை. லுப்தாவதானியின் விதவை மகள் மீனுட்சியின் நடத்தை சரியில்லை. அடிக்கடி கருவைச் சிதைப்பதும், சிசுஹத்தியுமாக இருப்பதால் போலீஸ்காரர்கள் பய முறுத்திப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு போகிருர்கள். பணச் செலவு என்ருல் கிழவனுக்கு உயிர் போன மாதிரிதான். குடும்பத்தையே மீனுட்சி குட்டிச் சுவராக்கி விட்டாள் என்கிருன். கல்யாணமாஞல் அவள் கொட்டம் அடங்கி விடுமல்லவா?

மதுர: மீனுட்சி நடத்தை சரியில்லையென்று நீங்களா சொல்வது? உங்கள் கண்ணில் பட்ட பிறகு எந்தப் பெண்ணின் நடத்தைதான் சரியாக இருக்கிறது?

ராம: இதோ பார்! இப்படிச் சொல்வாய் என்றுதானே சொல்ல மாட்டேனென்றேன்.

மதுர: இந்த விவகாரமெல்லாம் எனக்குத் தெரியாது. கல்யாணத்தை நிறுத்திவிடுங்கள்.

ராம: இந்தக் கல்யாணத்திற்கு உன் நாட்டியத்தை அமர்த்தி, பத்துக்காசு தரச் சொல்கிறேன். சும்மா பேசாமல் இரு.

மதுர: (மூக்கில் விரலைவைத்து) லுப்தாவதானி எதிரில் என் • பரத நாட்டியமா?

ராம: பேருக்கு அவனுனுலும் சபையில் பெரியவன் நான் தானே?

[ஹெட்கான்ஸ்டபிள் சுருட்டுக் குடித்துக்கொண்டே புகுந்து நாற்காலியில் உட்காருகிருன்]

ஹெட்: ராமப்பந்துலு! இன்ஸ்பெக்டருக்கே குல்லாய் போட்டாயாமே?

ராம: (காதோடு) அய்யா என்று சொல்லப்பா.

ஹெட்: எப்போதுமில்லாத அய்யா இப்போதெதற்காம்?

ராம: பெண்கள் இருக்குமிடத்திற்கு கதவைத் தள்ளிக் கொண்டு வருவதுதானு?

ஹெட்: பெண்கள் என்கிருயே. நீ கூடச் சேர்ந்துதானு? ஹஹ்ஹஹா.

ராம: சிரிப்பதற்கும் வேளை தெரியணும்.

ஹெட்: நான் சிரிக்க வரவில்லை. இன்ஸ்பெக்டர் பேரைச் சொல்லி ராம நாயுடுவிடம் முப்பது ரூபாய்வரை பிடுங்கினுயாமே. இப்படி எத்தனை பேரிடம் பிடுங் கினுனே, ராமப்பந்துலுவை நிற்கிற நிலையிலே கையோடு கூட்டிக்கொண்டு வா என்று என்னிடம் கச்சிதமாகச் சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் பாளையம் போயிருக்கிருர்.

ராம: சிறு வயசிலிருந்தே இன்ஸ்பெக்டரும் நானும் ஒன்ரு கப் படித்தவர்கள். ஆகையால் எங்களுக்குள் எதுவா னுலும் பரவாயில்லை. ராம நாயுடு சங்கதி மட்டும் சுத்தப் பொய். நீங்க முதலில் போங்க. நான் குதிரை வண்டியிலே வந்து சந்திக்கிறேன்.

ஹெட்: நானெப்படி உன்னேடு வருவது? எனக்குக் கொள்ளை வேலை கிடக்கிறது. ஒரு கான்ஸ்டபிளை உன்னேடு அனுப்புகிறேன்.

ராம: (ஹெட் காதில்) என் வீட்டில்மட்டும் நீ என்று சொல் லாதே. உனக்குப் புண்ணியமுண்டு.

ஹெட்: இதுவா உன் கூப்பாடு? ஆகட்டும். (போகிருன்)

ராம: (தனக்குள்) அதோ மறுபடி நீ என்று ஒருமையிலேயே கத்துகிருன். (வெளிப்படையாக) யாரடா அங்கே?

வேலையாள்: (வந்து) என்னங்க சாமி?

ராம: குதிரையைப் பூட்டச் சொல்லு.

வேலையாள்; ஆகட்டும் சாமி! (போகிருன்)

**ராம:** பார்த்தாயா மதுரவாணி! நான் நிற்கிற இடத்திலேயே ரூபாய் கலகலவென்று கொட்டுகிறது. இந்த இன்ஸ்பெக்டருக்கு இந்த இடத்துக்கு வந்த பிறகு அஞ்சாறு ஆயிர ரூபாய்வரை கொடுத்திருக்கிறேன். தெருக்கதவைச் சாத்திக்கொண்டு சங்கீதசாதகம் செய்து கொள். கல்வியைப் போன்ற சிறந்த வஸ்து வேறில்லை. (வாசற்படி தாண்டி நாலு எட்டுப் போய் திரும்பிவந்து) அதற்குள் வீணையை எடுத்துக்கொண்டாயா? இந்த ஊரில் ரொம்பக் கெட்ட பயல்கள் இருக்கிறார்கள். என் சினேகிதன், பந்துக்கள் பேர் வைத்துக்கொண்டு யாராவது வருவார்கள். வரவிடாதே. கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக்கொள். (போகிறான்)

## காட்சி—2

இடம்: ராமப்பந்தலு வீட்டில் படுக்கையறை

[மதுரவாணி உட்கார்ந்துகொண்டு வீணை வாசித்துக் கொண்டிருந்து, பின் வாத்தியத்தை நிறுத்தி]

**மதுர:** கல்வி போன்ற சிறந்த பொருள் வேறில்லை என்பது உண்மைதான். ஒன்றைத் தவிர, அது என்னவென்றால் செல்வம். பணம் சம்பாதிக்க உதவாத கல்வி வறுமைக்கு மூல காரணமாகும். ஆகையால் இந்த வீணையை இப்படி வைப்போம். ஏட்டு சைகை செய்து விட்டுப் போனான். அவன் கொடுப்பதொன்றுமில்லை யானாலும் ஏதாவதொரு சமயத்திற்கு ஒத்தாசையாக இருப்பான். (தெருக்கதவு தட்டப்படுகிறது) வந்து விட்டான் போலிருக்கிறது. (கதவருகே வந்து) யார் நீங்கள்? பந்துக்களா?

[கரடக சாஸ்திரியும் பெண் வேஷத்தில் சிஷ்யனும் வந்து கதவுக்கப்பால் இருக்கிறார்கள்.]

**கரட:** ஆபத்துக்கு உதவுகிறவர்கள்தான் பந்துக்கள். நாங்கள் உங்களுக்குப் பந்துக்களில்லாவிட்டாலும் நீங்கள் எங்களுக்குப் பந்துக்களாகலாம்.

**மதுர:** சினேகிதர்களா?

கரட; (தனக்குள்) இந்தக் குரல் கேட்ட மாதிரி இருக்கிறதே. (வெளிப்படையாக) சிநேகம் செய்ய வந்தோம்.

மதுர: எதைக்கொண்டு செய்வீர்கள்?

கரட: (தனக்குள்) இந்தத் தாசி மதுரவாணியாக இருக்குமோ? ஒருவர் குரல்போல் வேருெருவருக்கிருக்கலாமல்லவா? (வெளிப்படையாக) சிநேகம் செய்வதற்கெல்லாம் ஒரே ஒரு வழிதானே இருக்கிறது.

மதுர: அந்த வழி என்ன?

கரட: பணம் தரல்.

மதுர: எங்கள் பந்துலுவுக்குப் பந்துக்களோ சிநேகிதரோ இல்லாவிட்டால் கதவைத் திறக்கலாம். (கதவைத் திறக்கிருள்)

கரட: (தனக்குள்) அடே! மதுரவாணி!

மதுர: ஆச்சரியம்!

கரட: என்ன ஆச்சரியம்!

மதுர: இந்த வேஷம்.

கரட: வயிற்றுக்காக வேஷம் போடத்தானே வேண்டியிருக்கிறது. இது தெய்வம் தந்த வேஷம்.

மதுர: என்னிடந்தாளு ரகசியம்? இந்தப் பெண் யாரோ?

கரட: என் மகள்.

மதுர: நாடகத்தாலே கெட்டு பகல் வேஷம் போட ஆரம்பித்து விட்டாளா? ஏதோ இருக்கிற மகாராசனுக்கு ஏனிந்தக் கஷ்டங்கள்?

கரட: உன் தயவாய் கடவுள் தந்த நிலைமைக்கொன்றும் குறைச்சலில்லை. உன்னைப் பார்க்கலாமென்று வந்தோம்.

மதுர: இத்தனை நாள் கழிந்த பிறகாவது இந்த ஏழையின் ஞாபகம் வந்ததே.

கரட: உன்னைப் போன்றவள் வேருெருத்தி உலகத்திலுண்டா? உன்னைப் பார்ப்பதே பிரம்மானந்தமல்லவா? உன்னிடம் வராததற்குக் காரணம் உன்மேல் அன்பில்லாமலென்று நினைக்கிருய்? டிப்டி கலெக்டரின் மகன் உன்னைக் கைப்பிடித்தத பிறகு அவருக்கும் தெரிந்துவிட்டதால், நான் உன் வீட்டுக்கு வந்தால் ஏதாவது செய்வாளுே என்று பயந்துகொண்டு சங்கீடப்

பட்டேன். அவர் எப்போது மாற்றலாகிப் போவார். நம் மதுரவாணியை எப்போது பார்ப்போம் என்று சதா சர்வகாலமும் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். நீ இங்கே எத்தனை நாளாக இருக்கிறாய்?

மதுர: டிப்டி கலெக்டரின் மகன் படிப்புக்காக சென்னைப் பட்டினம் போனதும் இரண்டு மூனு மாசம் அவர் சினேகிதர் கிரீசத்தின் மூலமாக பணம் அனுப்பினார். அதன் பிறகு முந்தா நாள் வரைக்கும் கிரீசமே என்னை வைத்துக் கொண்டார். ஆனாலும் பணத்திற்கு தட்டுப் பாடாக இருந்தது. டிப்டி கலெக்டருக்குப் பயந்து பேருள்ளவன் எவனும் என் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டான். ஆகையால் கொஞ்ச காலம் வெளியூரிலிருப்போமென்று இந்த ஊருக்கு வந்தேன்.

கரட: (வியப்புடன்) கிரீசம் உன்னை வைத்துக்கொண்டிருந்தானா? என் மருமகனுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க அமர்ந்துகொண்டு என் மச்சான் வீட்டிலிருக்கிறான். அவனை விடிந்ததுமே விரட்ட வேண்டியதுதான்.

மதுர: (வியப்புடன்) என்னிடம் வந்தவனெல்லாம் கெட்டு விட்டானா? என்னிடம் வரமுடியாமல் சங்கடப்பட்டதாக நீங்கள் இப்போதுதானே சொல்லி டிப்டி கலெக்டரையும் வைதீர்கள்? இப்போது என்னிடம் வந்ததற்காக உங்கள் மனைவி முதலில் உங்களை கழுத்தைப் பிடித்து வீட்டிலிருந்து விரட்டியடிக்கணும். தனக்கொரு நீதி அடுத்தவனுக்கொரு நீதியா?

கரட: செயலில்லாவிட்டாலும் கூட பேச்சிலே அந்த மரியாதை அவள் மூலமாக எப்போதும் கிடைக்கிறது.

மதுர: (புன்சிரிப்புடன்) இந்த சுமங்கலி எங்கள் பந்துலு கண்ணில் பட்டால் இவள் குட்டெல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும்.

கரட: அதற்குள்ளே சுமங்கலியாக்கி விட்டாயா? கன்னிப் பெண். இவளை கல்யாணம் செய்து வைக்கத்தானே உன்னிடம் அழைத்துக்கொண்டு வந்தேன்.

மதுர: எங்க பந்துலுவுக்குத்தானா கல்யாணம்?

கரட: "ஏகா நாரீ சுந்தரீ வா தரீ வா" என்றார்போல திரிலோக சுந்தரியாகிய நீ கிடைத்த பிறகு உன் பந்துலுவுக்கு இன்னொரு கல்யாணமெதற்கு?

**மதுர:** அப்படியானால் யாருக்கு கல்யாணம் செய்துவைக்க? எனக்கா என்ன? அப்படியானால் சரித்தான். ஆண் வேஷம் போட்டுக்கொண்டு மணவறையிலே உட்கார்ந்திருக்கிறேன். இப்படிப்பட்ட மனைவி கிடைப்பாளா? உலகப் பிரசித்திபெற்ற கரடக சாஸ்திரியின் மாப்பிள்ளையாவதுதான் முடியுமா? தெய்வீக அழகு என்று என்னைப் புகழ்ந்ததுமே என் தோள்கள் பூரிக்குமென்று நினைத்தீர்கள் போலிருக்கிறது. இந்த பெண்ணுக்கு முன்னே என் போன்றவர்கள் சூரியனுக்கு முன்னே மின்மினிப் பூச்சிமாதிரிதான். பெண்ணைப் பெண் மெச்சினால்தான் அழகு. ஆண்களின் கண்கள் மருண்டது. உங்களுக்கென்ன தெரியும்? சரி. என் மனைவியை என்னிடம் விட்டுவிட்டு உங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு நீங்கள் போகலாம். (சிஷ்யனின் கையைப் பிடித்திழுக்கிறாள்)

**சிஷ்யன்:** பார்த்தாயா அப்பா? என்னை எப்படிப் பிடித்துகொண்டாளென்று பார்.

**மதுர:** (அடக்க முடியாமல் சிரித்து) சபாஷ். இதுதானே பெரிய மனுஷத்தனம். புருஷன் கூப்பிடும்போது போகாவிட்டால் நாலு பேர் என்ன சொல்வார்கள்?

**சிஷ்ய:** அடிப்பாள் போலிருக்கிறதப்பா! வீட்டுக்குப் போவோம் வா.

**மதுர:** ஒன்றுந்தெரியாத குழந்தையா? பின்னால் கல்யாணம் செய்துகொள்ளலாம். முதலில் முத்தம் கொடு. (முத்தமிடுகிறாள்)

**கரட:** தெரியாத பெண்ணை கெடுக்கிறாய்.

**மதுர:** என்னைப்போன்ற நூறு பேர்களுக்கும் சொல்லிக் கொடுத்து கெடுத்துவிடும் சக்தி உங்கள் சிஷ்யனுக்கிருக்கிறதே! இந்த கன்னிப் பெண்ணின் வாய் கொஞ்சம் சுருட்டு வாசனை யடிக்கிறதே.

**கரட:** அதுதான் போலிருக்கிறது. என் டப்பாவிலுள்ள சுருட்டெல்லாம் அடிக்கடி மாயமாகிக் கொண்டிருந்தது. மதுரவாணி! கடவுள் எனக்கு உன்னைத்தான் காட்டியிருக்கிறார். பந்துலு இல்லாத சமயம் பார்த்து வந்தேன். திரும்பி அவர் வருவதற்குள்ளே என் பேச்சைக் கேட்டு எனக்கு வந்த சிக்கலைத் தீர்க்க வேண்டும்.

மதுர: உங்களுக்கு வந்த சிக்கலென்ன? நான் செய்ய முடிந்த உதவி என்ன?

கரட: வேறொன்றுமில்லே. நன்ருகக் கேள். இந்த ஊரில் கிரீசத்தின் சித்தி மகனுகிய லுப்தாவதானி என்று ஒரு கிழவன் இருக்கிருன். அவனுக்கு என் தங்கையின் மகளேக் கொடுக்க எங்க மச்சான் முடிவு செய்திருக்கிருன். இந்த சம்பந்தம் நடந்தால் கிணற்றில் விழுந்து விடுவேன் என்று என் தங்கை பிடிவாதம் செய்கிருள். என்ன உபாயம் செய்வாயோ? அவள் உயிரை காப்பாற்ற வேண்டும்.

மதுர: இந்த பெண்ணே அதற்கும் குறைந்த தொகைக்கு விற்ருல், லுப்தாவதானி ரொம்ப சந்தோஷத்தோடு கல்யாணம் செய்து கொள்வார். அவர்வரைக்கும் போகணுமா? நானே வாங்கிக் கொள்கிறேன்.

கரட: ஏன் என்ருல் எண்ணேயே கொண்டுவரும் உனக்கு சொல்லித் தர வேணுமா என்ன!

மதுர: இதற்கு முன் முடிவான சம்பந்தத்தை என்ன சாக்கு சொல்லி நிறுத்துவது?

கரட: உன் புத்திக்கு முடியாததுமுண்டா? பணத்துக்கு முடியாததுண்டா?

மதுர: புத்தியால் ஒன்றும் முடியாது. ஆனுலும் பணத்துக்கெல்லாம் முடியும். இந்த கல்யாணத்தின் மூலம் எங்க பந்துலு பத்துக்காசு சம்பாதிக்கலாமென்கிருரே?

கரட: என் சம்பந்தம் செய்து கொண்டால் நான் இருபது காசு தருவேனல்லவா?

மதுர: சரித்தான். ஆனுல் நாடகத்தில் எவ்வளவு வேண்டுமானுலும் தமாஷ் செய்யலாம். செல்லுபடியாகும். நடவடிக்கையில் தமாஷ் செய்தால் என்ன ஆகுமோ, யோசித்தீர்களா?

கரட: நடுவிலுள்ள உனக்கும் எனக்கும் என்ன சிரமமிருக்கிறது. இந்த ஒட்டு மீசை, ஒட்டுத்தாடிகளே கழுவிவிட்டு என் வழியே நான் போகிறேன். இந்தச் சேலேயை உன்னிடம் எறிந்துவிட்டு எங்க சிஷ்யனும் போவான். இதென்னடா ஆச்சரியமாக இருக்கிறதென்று நீயும் நாலு பேரோடு சேர்ந்து ஆச்சரியப்படுவதாக நடி. உங்க பந்துலுவிடம் சிபாரிசு செய்து

இந்த காரியத்தை எப்படி முடிப்பாயோ நன்ருக ஆலோசித்துப் பார்.

**மதுர:** எங்க பந்துலு ஒருவரால் மட்டும் ஆகிற காரிய மில்லே.

**கரட:** இன்னும் யார் காலேப் பிடிக்கணுமோ சொல்லு.

**மதுர:** எங்க பந்துலுவோடு பேசியான பிறகு, லுப்தாவ தானியின் மகள் மீனுட்சியை அவள் அப்பனுக்குத் தெரியாமல் சந்தித்து, ஏதாவது ரெண்டு நோட்டு தருகிறேன் என்று சொல்லுங்கள். அப்படியே ஜோசி யனேப் பார்த்து அவனுக்கும் ஆசை காட்டுங்கள். இந்த காரியத்துக்கு ஜோசியன்தான் விசை. நான் திரை மறைவிலிருந்து சமயோசிதப்படி வேலே செய்கிறேன்.

**கரட:** உன் பேச்சுக்குத் தடை வேறுண்டா? உன்னே சந்தோஷப்படுத்துவது என் கடமை.

**மதுர:** நீங்களிப்படிச் சொல்வது எனக்கு ரொம்ப வருத்த மாக இருக்கிறது. ஏதோ குலத் தொழிலிலுலே தாசி யாகையால் பிடுங்க வேண்டிய இடத்தில் பணம் பிடுங்குகிறேனே தவிர, மதுரவாணிக்கு தயை தாட்சண்ணியமில்லே என்று நினேத்தீர்களா? உங்க ளுடன் பிறந்தவளுக்கு ஆபத்து வரும்போது நான் பணத்துக்கு ஆசைப்படுவேனு? அதைவிட்டு எது வந்தாலும் காப்பாற்றுகிறேன். ஏட்டுக்கு மட்டும் உண்மையைச் சொல்வோம். அவன் இப்போது வந்து விடுவான். நான் பேசுகிறேன். நீங்கள் இங்கே உட்காருங்கள்.

**கரட:** நம்ம ஆள்தானு? குடியை கெடுத்துவிடமாட்டானே?

**மதுர:** ஊஹூம். (போகிருள்)

**கரட:** வா உட்காருவோம்.

**சிஷ்ய:** என் பெயர் என்னங்க?

**கரட:** குடியை கெடுத்துவிடுவாய் போலிருக்கிறதே. சுப்பு. சுப்பு. தெரிந்ததா? மதுரவாணியைப் பார்த்த உடனே மதிகெட்டு விட்டதா என்ன?

**சிஷ்ய:** அவள் சிரிப்பின் அர்த்தம் தெரியாமல் ஆலோசனே செய்கிறேன்.

**கரட:** சோப்பு என்ற சொல்லே ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் உன் பெயர் சுப்பு என்பது மறக்காம லிருக்கும்.

[ராமப்பந்துலு குதிரை வண்டியிலிருந்து இறங்கி நடந்து வந்து]

**ராம:** (கரடகசாஸ்திரியிடம் மெதுவாக) உள்ளே யாராவது போனார்களா?

**கரட:** (உரக்க) யாரோ இரண்டு மூன்று பேர்கள் வந்தார்கள் என்றாலும் உங்கள் மனைவி வந்து வெளியே போகச் சொல்லி விரட்டிவிட்டார்கள்.

**ராம:** நீங்கள் யார்? எதற்கு வந்தீர்கள்?

**கரட:** நாங்கள் கிருஷ்ணா நதிக்கரைவாசிகள். என் பெயர் குண்டூர் சாஸ்திரிகள். தங்களிடம் ஒரு அவசர காரியத்துக்காக வந்தேன்.

[வீதியிலிருந்தவாறு]

**போலீஸ் ஜவான்:** "இன்ஸ்பெக்டர் நான் வரும்வரைக்கும் ஆலமரத்தடியிலே குதிரைமேலிருந்தபடியே காத்திருப்பார்கள். ரூபாயை சீக்கிரம் கொடுங்கள்."

[மதுரவாணி வருகிறாள்.]

**ராம:** யார் வந்தார்கள்?

**மதுர:** யார் வருவார்கள்? உங்கள் சிநேகிதர்களாம்.

**ஜவான்:** சீக்கிரம் ரூபாயைக் கொடுங்களய்யா!

**ராம:** (மதுரவாணியிடம்) முந்தாநாள் உனக்குத் தந்த ரூபாயைக் கொடு. சாயந்திரம் திருப்பித் தருகிறேன். இந்த சைத்தான் உயிரைப் பிடுங்குகிறான்.

**மதுர:** நீங்கள் கொடுத்த ரூபாயை பட்டணத்துக்கு அனுப்பி விட்டேன். நான் பணத்தை இங்கே ஒளித்துக் கொண்டால் எங்க அம்மா அங்கே எப்படி காலட்சேபம் செய்வாள்?

**ராம:** சுத்தப் பொய்!

**மதுர:** (சாவிக் கொத்தை இடுப்பிலிருந்து எடுத்து ராமப் பந்துலுமேல் எறிந்து) வேண்டுமென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

**ராம:** (புஜத்தைத் தடவியவாறு) அகங்காரம் கூடாது. வீசி எறிந்தால் அடிபடாதா?

**மதுர:** குறும்பாகப் பேசினால் அடிபட்டாலும் தப்பில்லை.

**ஜவான்:** என்னய்யா. இன்ஸ்பெக்டரிடம் போய் ரூபாய் தரவில்லை என்று சொல்லட்டுமா?

மதுர: (கழுத்துச் சங்கிலியைக் கழற்றி) இதை அடகு வைத்து வேண்டிய பணம் எடுத்துக் கொள்ளுங்கள்.

ராம: (தனக்குள்) ஆகா! எவ்வளவு யோக்கியமானவள்! இல்லாத பொல்லாத சந்தேகங்கள் படக்கூடாது.

கரட: பந்துலு! எவ்வளவு ரூபாய் வேண்டும்?

ராம: இருபத்தஞ்சு.

கரட: நான் கொடுக்கிறேன். (ஜவானிடம் கொடுக்கிறார்)

ராம: சுக்கிரதசைக்கு பணமிப்படி வந்துகொண்டிருக்கிறது. உங்களுக்கென்ன காரியமாகவேண்டும்?

கரட: இவள் என் மகளுங்க! இவளுக்கு கல்யாணம் செய்து வைத்து அந்தப் புண்ணியத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ராம: கல்யாணம் செய்துவைக்க நான் புரோகிதரில்லையே. எனக்கு மந்திரங்களொன்றும் தெரியாதே (ஜோபியிலிருந்து சுருட்டை எடுத்து நுனியைக் கடித்து) என்ன சொல்லுகிறாய் மதுரவாணி! தீக்குச்சி எடு.

[மதுரவாணி தீக்குச்சியைத் தந்தவாறே பந்துலுவிடமிருந்து சிஷ்யன் பக்கமும் சிஷ்யனிடமிருந்து பந்துலுவின் பக்கமும் கோபமுடன் பார்க்கிறாள்.]

கரட: மந்திரமென்றால் புரோகிதர்கள் மந்திரம் எதற்குங்க. இந்தக் காலத்தில் வைதீக மந்திரங்களெல்லாம் போச்சுதுங்க. இப்போதெல்லாம் உத்யோகஸ்தர்களிடம் தான் மந்திரமெல்லாம் இருக்கிறது. தங்களைப் போன்ற சாமர்த்தியசாலிகளுக்கு மந்திரம் தானே பேசுமுங்க.

ராம: மதுரம்! என்ன சொல்கிறாய்? இந்தப் பெண்ணை நான் கட்டிக்கொள்ளட்டுமா?

[மதுரவாணி ராமப் பந்துலுவையும் சிஷ்யனையும் குறுகுறுவென்று பார்த்துவிட்டுப் போகிறாள்.]

ராம: அழகிகளுக்கு கோபம்கூட ஒருவித சிருங்காரமல்லவா சாஸ்திரிகளே.

கரட: வைதீகர்களாகிய எங்களுக்கு இந்த சிருங்காரங்களெல்லாம் எப்படித் தெரியும்? எங்க மனைவிமாருக்கு கோபம் வந்தால் விளக்கமாறுகள் பறக்கும். சரஸம் என்பது புஸ்தகத்தில் படித்ததே தவிர அனுபவ ரீதியாக எங்களுக்குத் தெரியாது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் ராதையோடு சொல்கிறார். ஹே! ராதா! உன் கோபத்தை

தீர்த்துக்கொள்ள வேண்டுமானால், "க'டய பு'ஜ பந்தனம், ரச' அத'ர கண்டனம்; யேன வா. ப'வதி சுகஜாலம்" அதாவது கவிஞன் என்ன சொல்கிறான் என்றால் கைகளாலே மூச்சுத் திணறும்படி அணைத்துக் கொள். மேலும் கொவ்வைச் செவ்வாயை இரத்தம் வரும்படியாக கடித்துவிடு என்கிறான்.

**ராம:** (மதுரவாணி போன வாசல் பக்கம் பார்த்து) உப்ப மைந்தற்றால் புலவி என்றார்கள். மதுரவாணிக்கு மட்டும் இப்படிப்பட்ட பைத்தியக்காரத் தனமான கவிதைகளைச் சொல்லாதீர்கள். என்னைப்போன்ற மென்மையான வர்கள் முரட்டுச் சரசத்தைத் தாங்க முடியாது.

**கரட:** அந்தம்மாள் உங்க மனைவியில்லையா? குடும்பப் பெண்ணைவிட மரியாதையாக இருக்கிறாளே இவள். உங்களதிர்ஷ்டம் என்னவென்று சொல்ல?

**ராம:** கைராசி. எல்லாம் கைராசியிலே இருக்குதுங்க. நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லவில்லையே?

**கரட:** லுப்தாவதானிக்கும் தங்களுக்கும் ரொம்ப சிநேக மென்று கேள்விப்பட்டேன். அவர் தங்கள் சொல்லைத் தட்டமாட்டாராம்.

**ராம:** அந்தப் பயலுக்கு சிநேகம்வேறா? அவன் உயிருக்கு பணம் ஒன்றுதான் குறி. பணத்துக்கும் அவனுக்கும் சிநேகமே தவிர மற்ற யாருடனும் சிநேகமில்லை. ஆனாலும் அவனுக்கு விவகார ஞானம் இல்லாததாலும், கோர்ட்டு என்றால் பயம் ஆகையாலும் என் ஆலோசனை யில்லாமல் பிழைக்க மாட்டான். அவன் மட்டுமா? இந்தப் பக்கத்தில் சிவில் மாஜிஸ்டிரேட்டுகள் எங்கே இருந்தாலும் ராமபந்துலு இல்லாமல் ஒன்றும் நடை பெறாது.

**கரட:** அந்தப் பேச்சைக் கேட்டுத்தான், தாங்கள் செல்வாக் குடைய பிரபுக்கள், எங்களை காப்பாற்றுவீர்கள் என்று தங்களைத் தேடி வந்தேன். எங்க சின்னம்மா மகன் பீயெ பீயெல் (B.A;BL) பாசானானுங்க. டிப்டி கலெக்டர் வேலை பார்க்கிறான். அவனாலே பந்துக்களுக்கு இம்மி யளவு உதவி இல்லாவிட்டாலும்கூட ஏதாவது கொடுத் தனுப்பினாலும் அதைத் திருப்பி யனுப்பி விரட்டி விடுவான். கொடுக்க வாங்க உங்களைப்போன்ற பிரபுக்களே தவிர அவர்களுக்கெல்லாம் மண்ணாங்கட்டி உத்தியோகமுங்க.

" கொடுத்து கொடுப்பிக்கும் கோமானுக் கன்றி
அடுத்தவர் கேஞே ஆண்மீசை "

என்று கவிஞன் சொல்கிருன்.

ராம: இந்த இங்கிலீஷ் படிப்பு கூடியதும் வைதீகர்கள் மட்டுமல்லாமல் எல்லா ஜாதியாரும் உத்யோகம் பார்க்கிருர்கள். ஆனுல் எவ்வளவு படித்தாலும் உங்க வைதீகர்களுக்கு எங்கள் திறமை வருகிறதா? எங்கள் திறமை எங்களோடே உடன் பிறந்ததுங்க. உங்களுக்கு இடையிலே வந்ததுதானே. இரவல் சரக்கு இரவல் சரக்குதானே? கேட்டீங்களா? உங்களாட்கள் லஞ்சம் வாங்க கையாலாகாமல் பதிவிரதை வேசம் போடு கிருர்கள்.

கரட: எங்களாட்களுக்கு இதெல்லாம் தெரிந்தால் என் நிலைமை இப்படியாகுமா? எங்க பையன் பத்து பார்ட்டி களிடம் சொன்னுல் பத்துப் பணம் கிடைக்கும். இந்த தொந்தரவெல்லாம் இருக்காதல்லவா?

ராம: என்ன அந்த தொந்தரவுகள்?

கரட: கடன் தொல்லை எக்கச்சக்கமாக இருக்கிறது. நாலஞ்சு நாட்களுக்குள்ளே ஒரு பத்திரத்துக்கு பணம் கட்டவில்லையென்ருல் கோர்ட்டேற வேண்டியதுதான். இந்தப் பெண்ணை நல்லூரில் வெங்கட தீக்ஷிதருக்கு இரண்டாயிரத்துக்கு கொடுப்பதென்று நிச்சயித்து முடி வாகும் போது, ரூபாய் இப்போது தர முடியாது. இன்னும் ஒரு மாசம் கழித்துத்தான் தரமுடியுமென்று சொல்லிவிட்டார்கள். ஆகையால் அதைவிட்டு, லுப்தா வதானி விவாஹப் பிரயத்தனத்தில் இருப்பதாக கேள்விப்பட்டு தங்களைப் பார்க்க வந்தேன். இதை முடித்துத் தந்தால் தங்களுக்கு கேட்கிறதைத் தருகிறேன்.

ராம: நான் நாப்பதைம்பது ரூபாய் விவகாரத்தில் புகுகிறவனல்ல.

கரட: தாங்கள் செய்கிற உதவிக்கேற்ப எவ்வளவு வேண்டு மானுலும் தருகிறேன். என் கடன் இரண்டாயிரம் இருக்கிறது. அதற்குமேல் எவ்வளவு வந்தாலும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்.

ராம: ஆனுல் கீனுல் என்கிற வியாபாரமே நம்மிடத்தில் கூடாது. அக்னி ஹோத்ராவதானிக்கு இர்ண்டாயிரம்

தருகிறேன் என்ருனல்லவா? அதற்கும் கீழே இருநூறு முன்ஹூறு குறைக்காவிட்டால் லுப்தாவதானி உங்க சம்பந்தத்தைச் செய்துகொள்ள மாட்டான். அந்த தொகையில் கடன் தீர்ப்பதா? எனக்குப் பணங் கொடுப்பதா? இந்தக் காரியம் இப்படி காலங் கடந்து விட்டது. பத்து நாளைக்கு முன்பே வந்திருந்தாலும் எல்லாம் சரிப்படுத்தியிருப்பேன். அக்னிஹோத்ராவ தானி சம்பந்தத்தை முதலில் அமர்த்தியதே நான்தான். என் கையிலிருந்து விவகாரத்தை போலிசெட்டி பிடுங்கிக் கொண்டான். மதுரவாணியின் நாட்டியத்தை அமர்த்தவே பாதி உயிர் போய்விட்டது. வேருெரு உபாயம் சொல்கிறேன் கேளுங்கள். உங்களுக்கு மைன ரான பையன் இருக்கிருஞ?

கரட: சின்னவனுக்கு மைனர் வயசு கடந்து மூணு வருஷமாகி விட்டதுங்க.

ராம: அப்படியாளுல் என்ன செய்வது? அந்தப் பையன் மைனர் என்று வாதிப்போம்.

கரட: சாட்சியம் எப்படி ஒத்துவரும்?

ராம: ஹா ஹா ஹா! உங்களுக்கென்ன தெரியும்? இப்படிப் பட்ட விவகாரங்கள் என் தலையில் எத்தனை மயிர் உண்டோ அத்தனை பார்த்திருக்கிறேன். கேட்டீர்களா? எல்லாம் பணத்தாலே முடியும்.

கரட: ஜாதகம் இருக்கிறதே என்ன செய்வது?

ராம: காகிதமாளுல் தீக்குச்சியோடு பைசல். பனை ஓலையா ளுல் அடுப்புக்குள் ஸ்வாஹா. புது ஜாதகம் தயாரிப்பது அஞ்சு நிமிஷ வேலை. எங்க ஜோசியர்மட்டும் முக்கால மும் நன்ருக இருக்கணும். என்னிடம் பழைய பனை யோலைகள், எழுத்தாணிகள், விதவிதமான மைகள் இருக்கிறது. நூறுருபாய் எனக்கு பீஸ் தந்தால் போதும் கதையை நான் நடத்துகிறேன்.

கரட: வழிச் செலவுக்கு கொண்டுவந்த ருபாயெல்லாம் உங்களுக்கு கொடுத்துவிட்டேன். இனி கையில் காபி குடிக்கக்கூட ஒரு தம்பிடி இல்லை. கோர்ட்டிலே திரிவ தற்காகவாவது கையிலே பணம் வேண்டாமா? இவள் அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு என் கூடவே இருந்தால் எப்படி கோர்ட்டுக்கலைகிறது. தங்கள் புத்திக்கு அசாத்தியமானது ஒன்றும் இல்லை. எப்படி யாவது முன் அமர்த்திய சம்பந்தத்தை நிறுத்தி என்

சம்பந்தத்தை அமர்த்தி, எனக்கு கொடுக்கும் பணத்தில் பத்திலொருபாகம் எடுத்துக்கொண்டு மீதியை எனக்குத் தாருங்கள். இவளை புருஷன் கையில் ஒப்படைத்துவிட்டு பிறகு நம் கதையைப் பார்க்கலாம்.

**ராம:** பத்தில் ஒரு பங்கு போதாது. நம்ம வியாபாரம் எப்போதும் பாதிக்கு பாதிதான்.

**கரட:** பாதி உங்களுக்குத் தந்துவிட்டால் நான் எப்படி கடனைத் தீர்ப்பது?

**ராம:** கடன் கொடுக்கவேண்டியதில்லாதபடி நான் செய்கிறேன். இப்போதே பணம் உங்க கையில் வந்து விட்டது போல பேசுகிறீர்களே. நான் எவ்வளவு சிரமப்பட்டு பணம் வரவேண்டும், முதலில் அதை நினைத்துப் பார்த்தீர்களா?

**கரட:** நீங்களிப்படிச் சொன்னால் நான் என்ன சொல்ல முடியும்? ரத்தமும் மாமிசமும் விற்கும்போது கிடைக்கும் கால்ப்பணமாவது சந்தோஷமாக கிடைக்க வேண்டாமா? கடன் தொல்லையாலும், இந்தப் பெண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற ஆத்திரத்தினாலும் இப்படி அவசரப்படுகிறேனே தவிர, கொஞ்சம் அவகாசமிருந்தால் மூவாயிரத்துக்கு விற்றுக்கொள்ள மாட்டேனா?

**ராம:** பேரம் பேசக் கூடாதென்று முன்பே சொல்லவில்லையா? அஞ்சிலொரு பாகமாவது தருவீங்களா?

**கரட:** இந்த பாபப் பணத்துக்கா ஆசைப் படுகிறீர்கள்?

**ராம:** பாபப் பணம்கூட என் கைக்கு வந்ததும் பவித்திரமாகிவிடும். ஒருவருக்கு கொடுக்கத்தானே யன்றி எனக்கு எதற்கு?

**கரட:** அப்போ சரிதான்.

**ராம:** இனி என் கை வரிசையைப் பாருங்கள். மதுரம், மதுரம்! காகிதம் பேனா மைப் பாட்டில் கொண்டுவா. வழக்கமான மையில்லாமல் கூண்டிலே இருக்கிற பெரிய மைப் பாட்டிலைக் கொண்டுவா.

**மது:** (அப்பாலிருந்து) என்னைவிட மதுரமானது உங்கள் கண்ணில் பட்ட பிறகு நானெதற்கு?

**ராம:** பெண்களுக்கு சந்தேகம் அதிகம். கேட்டீங்களா? அது ஒரு சரசம்.

**கரட:** நல்ல வைரத்தைத்தான் சம்பாதித்திருக்கிறீர்கள்,

ராம: வைரந்தானுங்க. பட்டணவாசப் பழக்கத்தாலே நாலு பேரோடு பேசினுலொழிய அவளுக்கு நிம்மதியிராது.

கரட: அந்தமட்டுக்கும் சுதந்திரம் கொடுப்பதுதான் நல்லது. பெண்களை ரொம்பவும் அதட்டக்கூடாதுங்க.

ராம: அதட்டினுல் என்ன செய்வாளாம்?

கரட: இப்படிப்பட்ட மானமுள்ள பெண்கள் குளங் குட்டையிலே விழுந்தாலும் விழுவார்கள்.

ராம: அப்படியா?

கரட: அதில் சந்தேகமென்ன? நாசூக்கான மனசுடைய பெண்களை மல்லிகை பூ மாதிரி பயன்படுத்த வேண்டும்.

ராம: நாசூக்கெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியும்?

கரட: எல்லாம் புத்தகத்தில் படித்தவைகள்தான். தலைவன் கைவிட்டதுமே தலைவி உடனே பூங்காவிற்குச் சென்று பூங்கொடியினுலே சுருக்கிட்டு உயிரை மாய்த்துக் கொள்வாள். மகாகவிகள் நாடகங்களிலே அப்படித் தான் நடித்தாற்போல எழுதி வைத்திருக்கிறுர்கள்.

ராம: மற்ற யாருடன் பேசினுலும் தப்பில்லை. ஆனுல் ஏட்டுடன் மட்டும் பேசவேண்டாமென்று புத்திமதி சொல்லுங்கள். நீங்கள் தகப்பன் மாதிரியல்லவா?

கரட: ஊம்! அவ்வளவு அதிர்ஷ்டமிருக்கிறதா எனக்கு? இப்படிப்பட்ட பெண் எனக்கிருந்தால் நாலஞ்சு ஆயிரத்துக்காவது விற்று கடன் கிடன் இல்லாமல் நிம்மதியாக இருப்பேன். இவளையும் நாலு பக்கம் காண்பித்திருந்தேனுனுல் மூவாயிரமாவது இதற்கு முன்பே கைக்கு வந்திருக்கும். இவளுடைய தாய் மாமனுக்கு கட்டிக்கொடுக்க வேணுமென்று இவள் தாய் பிடிவாதமாக இருக்கப் போய் இந்தத் தொந்தரவுகள் வந்து சேர்ந்தது. அதனுல்தான் வீட்டிலே சொல்லாமல் இந்த பெண்ணை பின்னுல் இழுத்துக் கொண்டுவந்து இங்கே உங்களுக்குக் காட்டி இருக்கிறேன்.

ராம: என் சகாயத்திற்கு குறைவிராது.

கரட: அப்படியென்றுல் காரியம் முடிந்தாற்போலத்தான்.

ராம: எங்கே இப்படி வாம்மா! கையைக் காண்பி.

[சிஷ்யன் பயப்படுவதுபோல நடித்து பின்தங்கு கிறுன்.]

கரட: காட்டம்மா! பயப்படாமல் காட்டு.

[கரடக சாஸ்திரி சிஷ்யனை ராமப்பந்துலுவின் பக்கம் தள்ளுகிருன். ராமப்பந்துலு கையைப் பிடித்துக் கொண்டு உள்ளங் கையைப் பார்க்கிருன். சிஷ்யன் கையை இழுத்துக்கொள்வது போல் நடிக்கிருன். மதுரவாணி, மைக்கூடு, பேனு, காகிதங்களுடன் ராமப்பந்துலுவின் பின்னே நிற்கிருள்.]

**ராம:** ஆகா! எப்பேர்ப்பட்ட ரேகை! சந்தான யோகம் நல்லா இருக்குது.

**மதுர:** நீங்க கையைப் பிடித்தபிறகு அதற்கொன்றும் குறையிருக்காது.

[மைக் கூட்டிலுள்ள மையை ராமபந்துலுவின் முகத்தில் ஊற்றிவிட்டு சரேலெனச் செல்கிருள்.]

## காட்சி—3

**இடம்:** கிருஷ்ணபுரம் அக்கிரகாரத்தில் அக்னிஹோத்ராவதானியின் வீடு.

[முற்றத்தில் கிரீசம் நின்றுகொண்டு மெதுவாகப் பாடுகிருன்.]

**கிரீசம்:** ''மன்மதன் மலரம்பின் போரினை

என்னென்று பொறுப்பேன் தோழீ—நான்
என்னென்று பொறுப்பேன் தோழீ.''

இவன் தலையிலே இடிவிழ. இவன் அம்புகள் பூக்களாமே! யார் நம்புவார்கள். ஏதோ பைத்தியக்காரர்கள்தான் நம்பவேண்டும். அனுபவித்துத் தெரிந்த உண்மை என்னவென்ருல் நன்ருக கூர்மையாகத் தீட்டிய எஃகு நுனியிலே டயமெண்ட் பாயிண்ட்டைப் போட்டு பாய்சனில் முக்கி கண்ணுக்குத் தெரியாமல் மந்திரித்து எறிகிருன். அதனுல்தான் மேலே காயம் தெரியாவிட்டாலும், போலீஸ்காரர்கள் அடிமாதிரி உள்ளே தகதகவென்று எரிகிறது. இந்த விடோ ப்யூட்டியைப் பார்த்தால் எனக் கொன்றுமே தோன்றுவதில்லை. ஆனுல் இவள் சொன்னபடி யெல்லாம் வசமாகிற ஆளாகத் தெரியவில்லை. பழைய முறைகளொன்றும் பயனில்லை. என் எக்ஸ்பீரியன்ஸ், என் சிங்காரச்

சேட்டைகள் இம்மிகூட பயன் தரவில்லை. இவ்வளவு பேதைப் பெண்ணை எங்கேயும் பார்த்ததில்லை. இவளுக்கு லவ் சிக்னல்ஸ், அடராமா! ஒன்றுகூடத் தெரிவதில்லை. சமத்காரமாகப் பேசினால் அர்த்தமொன்றும் புரியாமல் அந்த மான்போன்ற கண்களால் மருளமருள விழிக்கிறாள். நான் இவளை மனதாரக் காதலிக்கிறேன். இவளைப் பார்த்தபிறகு டவுன்லவ், டான்ஸிங் கேள்ஸ், மீது வெறுப்பாகி விட்டது. பாஸிடிவ் யப'ஹரென்ஸ் அவர்களது மாயப் பேச்சுகள், உள்ளர்த்தங்கள், வெளிப் பகட்டுகள், டாமிட் எல்லாம் மோசம் அல்லவா? இத்தனை நாளாக மதுரவாணியின் வலையிலே சிக்கி எப்படி முட்டாளாகப் போனேனோ எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. மதுரவாணிக்கும் இவளுக்கும் கம்பாரிஷன் இருக்கிறதா? அது நிறம் போட்ட பீங்கான். இவளோ ப்யூர் டயமண்ட். இல்லை என்று எவனாவது சொன்னால் அவன் கழுத்தை முறித்துவிடுவேன். இவளை கெடுக்க முயற்சிக்கக் கூடாது. முயன்றாலும் முடியாது. ஆகையால் புதிய பாதையில், நியாயமான பாதையில் போக வேண்டும். என்னவென்றால் தந்திரமாக இவளைக் கடத்திக் கொண்டுபோய் விடோமேரேஜ் செய்து கொண்டால் புகழும் உண்டு. இன்பமும் கிடைக்கும். டூ பேர்ட்ஸ் அட் ஒன் ஷாட். (ஒரே குறியில் இரு பறவைகள்) இப்படிப்பட்ட அட்டர்லீ இன்னோஸண்ட் விடோவை சம்மதிக்க வைத்து கல்யாணம் செய்துகொண்டால் பேரின்பம். பிரயோஜனமும் ஆகும். அதில்லாமல் ரெண்டு மூணு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு துலுக்கனோடும் தூர்த்தனோடும்கூடப் போக தயாராக இருக்கும் கள்ளச் சிறுக்கிகளை விடோமேரேஜ் செய்துகொண்டால் நரகம்தான். சாப்பாட்டுக் கடைக்காரியைப் போன்ற சிறுக்கியைக் கல்யாணம் செய்துகொண்டால் விடோமேரேஜ் ஆகாது. அது கள்ளச் சிறுக்கி கல்யாணம். இந்த புச்சம்மாவோ பரமபவித்திரமான பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகுந்த விடோ. ஆனால் மகாராஜ ராஜ என் கிரிசன் அவர்கள் விடோமேரேஜ் செய்து கொள்வதா? விடோமேரேஜ் செய்வதா? வேண்டாமா? இதுதான் பிரச்னை. ஷேக்ஸ்பியர் பட்ட அவஸ்தை நமக்கும் வந்து சேர்ந்தது கல்யாண அவசரத்தில் தாலிகட்ட மறந்துபோன கதையாக என்னைப் போன்ற புத்திசாலிகள் அவசரப்பட்டு எந்தக் காரியமும் செய்யக் கூடாது.

அதன் லாபநஷ்டங்களைக் கணக்கிட்டு வரவு செலவைக் கவனித்துப் பிறகுதான் முடிவு கட்டவேண்டும். கணக்கிட்டுப் பார்ப்போம். இம்ப்ரிமிஸ் முதற்கலம் டெபிட் (நஷ்டம்) விடோமேரேஜ் செய்தால் நம் சுற்றத்தார்கள் நம்மை கவனிக்க மாட்டார்கள். இதற்கு க்ரெடிட் (லாபம்) அவர்கள் இப்போதென்ன செய்துவிட்டார்கள்? ஆகையால் பேலன்ஸ் (மீதி) நில் கோழி முட்டைதான். இரண்டாவது கலம் டெபிட் (செலவு) உலகம் என்னை பகிஷ்காரம் செய்யும். அதற்கு க்ரெடிட் (வரவு) உலகத்தைவிட விலையுயர்ந்த பொருளை நான் அடைந்து, பசையற்ற இந்த உலகை நான் பகிஷ்காரம் செய்துவிடுகிறேன். ஆகையால் க்ரெடிட் பேலன்ஸ் (இருப்பு) என்ன? நெகடிவ் (எதிர்மறை) யட்வாண்டேஜ் ஹேவிங் நதிங் டு டு விதேவேர்ல்டு. பாஸிடிவ் (உடன்பாடு) யட்வாண்டேஜ் பாஸிஸிங் ஆல் இட்ஸ் வெல்த். மூன்றுவது கலம் டெபிட் (நஷ்டம்) இவன் மனைவி ஒரு விதவை என்பார்கள். இது உண்மையாகவே நஷ்டந்தானு? ஆடிட் டிபார்ட்மெண்ட்காரர்களிடம் கேட்டு சந்தேகம் தீர்த்துக் கொள்ளவேண்டும். அது வரைக்கும் ம-ா-ா-ஸ்ரீ கிரீசம் அவர்களின் அபிப்பிராயம் என்னவென்றுல், வீடோ என்றுல் என்ன? ஏ நேம். ஒரு பெயர். அந்தப் பெயர் ஆள் மூஞ்சியிலே எழுதியிருக்கிறதா? ஆளை சிங்காரித்து எதிரே நிறுத்திஞல் இது சுமங்கலி, இது விதவை என்று சொல்ல முடிந்த பெரிய மனுஷன் யார்? ஒருத்தனும் இல்லை. ஆகையால் விடோ என்ற வஸ்து எங்கே இருக்கிறதய்யா? பல்லிளிக்கும் விதவைகளின் வாயில்தான் இருக்கிறது. இதற்கு க்ரெடிட் (லாபம்) என்னவென்றுல் விதவை கல்யாணம் செய்து கொண்டால் அமங்கலம், என்று நினைத்து எவனும் அவளை ஏறிட்டுப் பார்க்கமாட்டான். இனி டெபிட் இல்லாத சுத்தக் க்ரெடிட் நம்பர் போர் (நெ. 4) என்னவென்றுல் "விண்டல மீன்களைப் போல, கற்பூரத் துண்டுகள் போல உன்றன் தூய புகழ்தான் மண்டலம் மூன்றும் நிறைந்தது" என்று சொல்வதுபோல கிரீசம் அவர்கட்கு புகழ் விண்ணை முட்டும். கிரீசம் அவர்களின் விதவா விவாஹமகோத்ஸவம் மறுநாள் நியூஸ் பேப்பரில் கொட்டை எழுத்திலே போடுவான். க்ரெடிட் நம்பர் பைவ் (நெ. 5) விடோமேரேஜ் அஸோஸியேஷன் ஏதாவதொரு தொகை கொடுப்பார்கள். புச் சம்மாவுக்கும்

கொஞ்சம் சொத்திருக்கிறது. டெபிட் (நஷ்டம்) கேஸ் போட்டாலொழிய அவதானி மாமா அந்த சொத்தில் தம்பிடிகூடத் தரமாட்டார். தற்போதைய முடிவு என்னவென்ருல் அவசியம் விடோமேரேஜ் செய்து தீரவேண்டியதுதான். ஆனுல் எப்படிச் செய்வது? ஏதாவதொரு வழி கண்டுபிடித்து கரையேறவேண்டியது தான். (மேலே பார்த்தவாறு ஆலோசித்து) வெங்கம்மா கணவனேடு கோபித்துக் கொண்டு கிணற்றில் விழுந்து விட்டபோது நான் துணிந்து குதித்து அவளைக் காப்பாற்றியதிலிருந்து என்னை ஊராரெல்லோரும் சாக்ஷாத் சத்ய ஹரிச்சந்திரனுகவே நினைக்கிருர்கள். அடிக்கடி புத்தி தடுமாறுகிறதே யன்றி நானும் அரிச்சந்திரனைப் போன்றவனில்லையா? அன்புக்கு உயிரையே தந்து விடுவாரே கிரீசம் அவர்கள் சாமானியமானவரா? ஆகையால் புச்சம்மாவிடம் நெருங்கிப் பழகிஞலும் சுதிமீறும் வரைக்கும் யாரும் தப்பாக நினைக்க மாட்டார்கள். இராத்திரி அரேபியன் நைட்ஸ், விக்கிரமாதித்தன் கதை, மதன காம ராஜன் கதை, சொல்லிக் கொண்டிருந்தால் எவ்வளவோ பிரியமுடன் பக்கத்திலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிருள். லவ் ஸ்டோரீஸ் மூளையிலே ஏற்றியிருக்கிறேன். ஆகையால் கொஞ்சம் முன்னேற்பாடாகி இருக்கிறது. ஆகையால் இனி விடோமேரேஜ் நல்லதென்று போதனை செய்வோம். பழமாஞல் ராமவரம் சலோ விடோமேரேஜ் கரோ. லெட்மி பிகின் தி காம்பைன் அட் ஒன்ஸ். (கதவிடுக்கில் எட்டிப் பார்த்து) பலகையிலுட்கார்ந்து கொண்டு இலை தைத்துக்கொண்டிருக்கிருள். முதன் முதலில் கொஞ்சம் மியூசிக் எடுத்துவிடுவோம். (எப்படி பொறுப்பேன் தோழீ என்ற ஜாவளியை மெல்ல பாடிக் கொண்டு) புச்சம்மா அண்ணி! கதவைத் திறங்கள்! (புச்சம்மா கதவைத் திறக்கிருள்.) அண்ணி! வெல். வெங்கடேசம் என்ன செய்கிருன்?

**புச்ச:** பின்பக்கம் தெல்லிக்காய் விளையாடிக் கொண்டிருக்கிருன்.

**கிரீ:** இந்த ஊருக்கு வந்தால் மீண்டும் படிப்பு கெட்டுவிடுகிறது. பட்டணத்திலிருக்கும்போது மேஜையை விட்டு நகர விடமாட்டேன். ஒருதடவை...கூ...கூப்பிடுகிறீர்களா? பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்.

[புச்சம்மா தம்பியை கூப்பிடச் செல்கிருள்.]

அடடா! நாசமாய்ப் போச்சு! முகம் எதிரே பார்த்ததும் புத்தி தடுமாறுகிறது. ஒன்று சொல்ல நினைத்து மற்றொன்றைச் சொல்லிவிடுகிறேன். வேறு யாருமில்லை தனித்திருக்கிறாளல்லவா? இப்படிப்பட்ட சரியான சந்தர்ப்பத்தில் என் மனதிலிருப்பதைச் சொல்லிவிட்டால் நல்லதல்லவா? அந்தக் குரங்கை கூப்பிடச் சொல்லிவிட்டேனே. ஆனாலும் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது ஒரு சிறிய லெக்சர் கொடுப்போம். (வெங்கட்டேசம், புச்சம்மா இருவரும் வருகிறார்கள்) என்னப்பா மைடியர் பிரதரின்லா வெங்கடேசம்! பாடம் படிப்பதை சுத்தமாக விட்டு விட்டாயே. இங்கே இன்னுமொரு மாசம் இருந்தால் உள்ளதையும் மறந்துவிடுவாய். எங்கே டெஸ்ட்புக் எடு. (வெங்கடேசம் புஸ்தகத்தை எடுக்கிறான்) கா'ட்ஸ் ஒர்க்ஸ் என்ற பாடத்தைப் படி. ரீட் ஆன் மை குட் பாய்.

**வெங் :** (தடுமாறிக்கொண்டே) தேர் இஸ் நாட் ஆன் ஆப்ஜெக்ட் இன் க்ரியேஷன் விச் டஸ் நாட் ஸெர்வ் சம் யூஸ்புல் பர்பஸ்.

**கிரீ :** அப்படித்தான்! அங்கே நிறுத்து. க்ரியேஷன் என்றால் என்ன?

**வெங் :** க்ரியேஷன் என்றால்...என்றால்...பசுக்கள்.

**கிரீ :** நான்ஸென்ஸ்! படித்தால் இருக்கிற புத்திகூட போய் விடுகிறது. பசுக்கள் எதிரே இருக்கிறதென்று பசுக்கள் என்று சொல்கிறாய். நன்றாக யோசித்துச் சொல்லு.

**வெங் :** வாக்கியத்துக்கு அர்த்தமா கேட்டீர்கள்.

**கிரீ :** க்ரியேஷன்.

**வெங் :** அதா! க்ரியேஷன் என்றால் பிரபஞ்சம். நான் எதிரே பசுக்களைப் பார்த்ததும் இந்த பசுவின் தயிர் இன்னும் ஒரு மாதத்துக்குத்தானே கிடைக்குமென்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

**கிரீ :** ஒன் திங் அட் எ டைம். இப்போது பாடத்தை நினை. க்ரியேஷன் என்ற விஷயத்தைப்பற்றி மட்டும் ஒரு மணி நேரம் லெச்சர் கொடுக்கலாம். பிரபஞ்சம் எப்படி இருக்கிறது. கபித்தாகார பூகோளமென்று மனு தர்ம சாஸ்திரம் சொல்லுகிறது. கபித்தமென்றால் என்ன?

**வெங்** ஆரஞ்சுப்பழம்.

கிரீ : வெரி குட். அதற்கு அமரநிகண்டுவிலுள்ள செய்யுள் தெரியுமா?

வெங் : தெரியாது. சொல்லுங்கள். எழுதிக்கொள்கிறேன்.

கிரீ : ''இவ்வள வாரஞ் சுப்பழம் எழிலார்
செவ்விள நீருடன் சிறப்புடை பந்து
ஒவ்விய தாமரை மொட்டோ டொக்கும்
செவ்விய கும்பமாம் செறிமுலை கட்கே''

இந்தப் பிரபஞ்சத்தில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன.

வெங் : பசுக்கள்.

கிரீ : நான்ஸென்ஸ். இன்னும் பசுக்கள் என்றுதானா சொல்கிருய்? என்ன இருக்கிறதோ நன்ருக யோசித்துச் சொல்.

வெங் : எருமைகள்.

கிரீ : தட் வில் நாட்! மறுபடியும் யோசித்துச் சொல்.

வெங் : அப்படியானால் எனக்குத் தெரியாது.

கிரீ : விடோஸ். இவ்வளவு சிறிய கேள்விக்கு பதில் சொல்லத் தெரியவில்லையே. பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களிலே 'மிக முக்கியமான வஸ்து விடோஸ். இந்த விஷயத்தைப்பற்றி பெரிய லெக்சர் செய்யலாம். நம் நாட்டில் ஒரு கெட்ட வழக்கம் இருக்கிறது. ஆண்கள் மனைவியிறந்து விட்டால் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்கிருர்கள். பெண்கள் புருஷன் இறந்து விட்டால் எவ்வளவு இளமையாக இருந்தாலும் எவ்வளவு அழகாக இருந்தாலும் மற்ருெருவனைக் கல்யாணம் செய்ய முடியாது. இது அநியாயமா இல்லையா?

வெங் : நிச்சயமாக அநியாயம்தான்.

புச்ச : என்னங்க, கிரீசம் அவர்களே! விதவைகள் கல்யாணம் செய்வது பாவமல்லவா?

கிரீ : அடடா! இன்னும் பத்தாம் பசலியாக இருக்கிறீர்களே என்று நினைத்து வருந்துகிறேன். விதவைகள் கல்யாணம் செய்து கொள்ளலாமென்று பராசரஸ்மிருதியில் தெளிவாக சொல்லியிருக்கிறது. வேதத்தில் கூட இருக்கிறது. ராஜமஹேந்திரவரத்தில் இதையெல்லாம் பெரிய பெரிய பண்டிதர்கள் கூடி சித்தாந்தம் செய்திருக்கிருர்கள். முன்காலத்தில் விதவைகள் கல்யாணம் செய்துகொண்டார்கள். வெங்கடேசம்

நளசரிதத்தில் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரப் பாடலைப் படி.

**வெங் :** எனக்குத் தெரியாது.

**கிரீ :** இவ்வளவு முக்கியமான 'பாட்டை மறந்து போவது எவ்வளவு பெரிய தப்பு. நோட்டை எடுத்து எழுதிக்கொள்.

> "தமையந்தி இரண்டாம் சுயவரத்திற்காய்
> இமையோர் இறைவர் எல்லோரும் வரவே"

பார்த்தீர்களா? உலகத்திலுள்ள அரசர்கள் தேவர்கள் எல்லோரும் விதவையைக் கல்யாணம் செய்துகொள்ள வந்தார்களாம். (புச்சம்மாவைப் பார்த்து) பார்த்தீர்களா? சாஸ்திரங்களெல்லாம் ஒப்புவதோடல்லாமல் விதவைகள் கல்யாணம் செய்து கொள்ளாமலிருப்பது பாவம் என்றுகூடச் சொல்கிறது. இது சம்பந்தமாக ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்கூட ஒரு பத்திரிகையை பிரகடனப் படுத்தி யிருக்கிறார்கள்.

**புச்ச :** அப்படியானால் நம்மவர்கள் எல்லோரும் ஏன் விதவைகளைக் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்று சொல்கிறார்கள்?

**கிரீ :** அதெல்லாம் வீட்டு வேலைகள் செய்ய ஆள் வேண்டுமென்றுதானே ஒழிய வேறொன்றுமில்லை. விடியுமுன்னே எழுந்து மறுநாள் ராத்திரி பன்னிரண்டு மணிவரை மாடாக உழைக்கும்படியாக செய்கிறார்களல்லவா? ஒருவேளை தவிர அதிகமாக சாப்பிடவிடமாட்டார் களல்லவா? அப்ஸரஸ்திரீ மாதிரி எவ்வளவு அழகாக இருந்தாலும், நல்ல துணிமணிகள் கட்டிக்கொள்ள விடமாட்டார்கள். கருமேகம் போன்ற கூந்தலைக்கூட களைந்து விடுகிறார்களல்லவா? உதாரணமாக உங்கக்காவுக்கு அந்த சந்திரபிம்பம்போன்ற அழகிய முகத்தில் ஒரு சிறு குங்குமப் பொட்டிருந்தால், அந்த முக்கண்ணனேயானாலும் பார்க்க ஆசையாக யிராதா? அந்தோ இந்த நிலைமையைப் பார்த்தால் என் இதயமே உடைந்துவிடும் போலிருக்கிறது. ஆல் ரைட். இன்னும் பிரபஞ்சத்தில் என்னென்ன இருக்கிறது.

**வெங் :** உழுந்து வடைகள்.

**கிரீ :** நான்ஸென்ஸ். எப்போது பார்த்தாலும் தின்பண்டத்தைப்பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறாய்.

பாச்சிலர்ஸ்—பிரம்மச்சாரிகளும் இருக்கிறார்கள். அவர்கள் செய்யவேண்டிய வேலை என்ன?

**வெங் :** வேதம் படிப்பதும் கன்றுக் குட்டிகளுக்கு புல் கொண்டு வருவதும்.

**கிரீ :** நான்ஸென்ஸ். அது உங்கப்பனிடம் படித்த சிஷ்யர்களின் சங்கதி. பிரம்மச்சாரிகளின் ரீயல் டியூடி அதாவது விதிக்கப்பட்ட கடமை என்னவென்றால் விதவைகளைக் கல்யாணம் செய்து கொள்வதுதான். இன்னும் க்ரியேஷனில் என்ன இருக்கிறது.

**வெங் :** எனக்குத் தெரியாது.

**கிரீ :** ராமவரத்தில் விதவாவிவாஹம் செய்து கொண்டவர்களுக்கெல்லாம் மாசம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் கொடுத்து பாதுகாக்க விடோமேரேஜ் சபை ஒன்றிருக்கிறது. இதுவரை அஞ்சாயிரம் விதவைகளுக்கு விவாகம் செய்துவைத்து சுமங்கலிகளாக இருக்கிறார்கள். ஆல்ரைட். க்ரியேஷன் என்ற சொல்லுக்கு முழுப் பொருள் சொல்லு.

**வெங் :** இன்னுமொரு தடவை நீங்கள் சொல்லிக்கொடுத்த பிறகு நான் சொல்கிறேன்.

**கிரீ :** ஆல்ரைட். பிரபஞ்சத்தில் கடவுள் ஒவ்வொரு பொருளையும் ஏதோ ஒரு உபயோகத்திற்காக படைத்திருக்கிறார். உழுந்தவடை ஏன் படைத்திருக்கிறார்?

**வெங் :** தின்பதற்கு.

**கிரீ :** தடீஸ் ரைட். பசுக்களை ஏன் படைத்திருக்கிறார்?

**வெங் :** பால் தர.

**கிரீ :** பெர்பெக்ட்லீ ரைட். பெண்களை ஏன் படைத்திருக்கிறார்?

**வெங் :** சமையல் செய்வதற்கு.

**கிரீ :** நான்ஸென்ஸ்! கல்யாணம் செய்வதற்கும் குழந்தைகளைப் பெறுவதற்கும். ஆகையால் கல்யாணமாகாமலிருக்கும் விதவைப் பெண்கள் கடவுளின் கட்டளையை மீறிய பாவத்தை அடைகிறார்கள்.

[அக்னி ஹோத்ராவதானி வருகிறார்.]

**அக்னி:** என்ன கிரீசம்! நம்ம பையனுக்கு படிப்பு சொல்லித் தருகிறீர்களா?

**கிரீ:** ஆமாம்.' ஒருமணி நேரமாக சொல்லித் தருகிறேனுங்க,

**அக்னி :** எங்கே நானும் கேட்கிறேன். கொஞ்சம் சொல்லுங்கள்.

**கிரீ :** மைடீயர் பாய். கா'ட் மேட் க்ரியேஷன். சிருஷ்டி யார் செய்தார்கள்?

**வெங் :** கடவுள்.

**கிரீ :** பாதர் இஸ் நெக்ஸ்ட் கா'ட். கடவுளுக்கு அடுத்தபடியாக முக்கியமானவர் யார்?

**வெங் :** தகப்பனார்.

**அக்னி :** மொத்தத்தில் உங்க இங்கிலீஸ் படிப்பு நல்லதாகவே தென்படுகிறது. மொழிமாறுதலே தவிர நம்ம கருத்துக்களைத்தான் அவர்களும் சொல்கிறார்கள்.

**கிரீ :** வெங்கடேசம். கடவுள் சிருஷ்டித்த பிரபஞ்சத்தில் இன்னும் என்ன பொருள்கள் இருக்கின்றன? ஸே கோர்ட்ஸ்.

**வெங் :** விதவைகள்.

**கிரீ :** நான்ஸென்ஸ். ஸே. கோர்ட்ஸ்.

**அக்னி :** இதென்னப்பா! பிரபஞ்சத்தில் விதவைகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறான்? இங்கிலீஸ் புஸ்தகத்தில் இதுதானா இருக்கிறது?

**கிரீ :** வித்-அவேகள் என்பது லத்தீன் பாஷையுங்க. அந்த சொல்லுக்கு நியாயஸ்தலங்கள் என்று அர்த்தம். கோர்ட்டுகள் எதற்கிருக்கிறது?

**வெங் :** வழக்குகள் கொண்டு வருவதற்கு.

**கிரீசம் :** த'டீஸ் ரைட். பார்த்தீர்களா? உங்க பையனுக்கு கோர்ட்டு விவகாரம் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறேன்.

**அக்னி :** அப்படியானால் நம்ம தாவா விஷயமாக நான் கொடுத்த காகிதங்க்ள் எல்லாம் கடைசிவரைக்கும் பார்த்தீர்களா?

**கிரீ :** கேஸ் ஜெயிக்குமென்பதில் ஒன்றும் சந்தேகமில்லை. உங்களுக்கு தெரிவதற்காக புஸ்தகம் முழுவதும் மொழி பெயர்க்கிறேன் மாமா. உங்க விஷயமாக எவ்வளவு சிரமப் பட்டாகிலும் அமலாபுரம் போய் அங்கே கோர்ட்டில் ஜெயிக்கா விட்டால் என் பெயரை மாற்றி வையுங்கள்.

**அக்னி :** ஏதோ எல்லாம் உங்களை நம்பித்தான் நானிருக்கிறேன். எவ்வளவு பணமானாலும் கேஸ் ஜெயித்தால் போதும். கல்யாண வேலைகளுக்கு உங்கள் துணை இல்லாமல் ஒன்றுமே முடியாது. என்மேல் கோபத்துடன் கரடக சாஸ்திரிகூட போய்விட்டார்கள். அவரும் வருவதாக தோன்றவில்லை.

**கிரீ :** நீங்க உட்கார்ந்த இடத்தை விட்டு காலை நகர்த்த விடாமல் எல்லா ஏற்பாடுகளும் நானே செய்கிறேன், பாருங்கள்.

*[எல்லோரும் செல்கின்றனர்.]*

## காட்சி—4

**இடம் :** பின்கட்டில் கொய்யா மரத்தின்மேல் ஏறி வெங்கடேசம் உட்கார்ந்து கொண்டு கொய்யாப் பழம் கடித்துக் கொண்டிருக்கிறான்.

*[மரக்கிளைகள் சூழ்ந்த கிணற்றில் புச்சம்மா நீர் இறைக்கிறாள்.]*

**புச்ச :** தம்பீ. கிரீசம் பெரிய மனுஷரா்டா?

**வெங்:** பெரியமனுஷர் என்றால் இப்படி அப்படிப் பெரிய மனுஷரென்று நினைத்தாய்? சுரேந்திரநாத் பானர்ஜியைப்போல பெரிய மனுஷர்.

**புச்ச் :** அவர் யார்?

**வெங் :** எல்லோரையும் விடப் பெரிய மனுஷர்.

**புச்ச :** அப்படியானால் கிரீசத்திற்கு உத்தியோகமொன்றும் இல்லையே.

**வெங் :** நான்ஸென்ஸ். நீ பெண்பிள்ளை. உனக்கொன்றும் தெரியாது. உத்தியோகமென்றால் பெரிசாக நினைத்துக் கொண்டாய். உத்தியோகமென்றால் என்ன வென்று தெரியுமா? செர்வண்ட் என்று அர்த்தம்.

**புச்ச :** அப்படி என்றால் என்ன?

**வெங்:** செர்வண்ட் என்றலா? வேலையாள் என்று அர்த்தம். நம்ம எருமைகள் மேய்க்கும் அசிரியான் ஒரு செர்வண்ட். நம்ம வீட்டைப்பெருக்கும் கருப்பாயி ஒரு செர்வண்ட். இவர்கள் நம்ம வேலைக்காரர்கள். போலீஸ், முன்சீப் இவர்கள் வெள்ளைக்காரனுக்கு வேலைக்காரர்கள்.

சம்பளம் கூட இருந்தால் பெரிசாக நினைத்தாயா என்ன? சுரேந்திரநாத் பானர்ஜி, கிரீசம் போன்ற பெரிய மனுஷர்கள் வெள்ளைக்காரர்களிடம் மட்டுமல்ல, கடவுளிடம்கூட வேலை செய்யமாட்டார்கள். கலெக்டர் என்ன சொல்கிறார் தெரியுமா? போலீஸ் இன்ஸ்பெக்டர் போனால் ஸ்டாண்ட்—நில் என்கிறார். கிரீசம் அவர்கள் போனால் ஷேக் ஹாண்ட் செய்து நாற்காலியில் உட்காருங்கள் என்கிறார். அவருக்கு ஹைதராபாத் நவாப் ஆயிரரூபாய் உத்தியோகம் தருகிறேன் என்றால் உன் வேலை யாருக்கு வேணும் போ என்று சொல்லி விட்டார்.

**புச்ச :** அவருக்கு கல்யாணமாகி விட்டதா?

**வெங்க:** இல்லை.

**புச்ச:** தம்பீ. விதவைகள் கல்யாணம் செய்வது நல்ல தென்கிறார் அல்லவா? அவர்மட்டும் எதற்கு கல்யாணம் செய்து கொள்ளவில்லை.

**வெங்க:** உனக்கு எவ்வளவு சொன்னாலும் தெரியாது. (உரக்க) அவர் உத்யோகம் வேண்டாம் என்பதும், கல் யாணம் வேண்டாம் என்பதும் இந்த உலகத்தை மரா மத்து செய்வதற்காகவாம். இப்போது புரிந்ததா?

**புச்ச:** எப்படி மராமத்து செய்கிறார்டா!

**வெங்க:** என்னைப் போன்ற பையன்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுப்பது (மெதுவாக) சிகரட் குடிக்க கற்பிப்பது (உரக்க) தாசிகளை எல்லாம் தேசத்திலிருந்து வெளியேற்றுவது ஒன்று. நேஷனல்காங்கிரஸ்-அதாவது மந்திரி பதவி யடைவது ஒன்று. இப்போது தெரிந்ததா?

**புச்ச:** உத்தியோகம் செய்ய மாட்டார் என்றாயே. மந்திரி பதவி எந்த ராஜாவிடமோ?

**வெங்க:** எந்த ராஜாவிடமா?-பெண்பிள்ளை உனக்கேனிந்த விவகாரங்கள்.

**புச்ச:** நீ கூட உலகத்தை மராமத்து செய்வாயாடா?

**வெங்க:** ஆஹா!

**புச்ச:** அப்படியானால் விதவைச்சிறுக்கியைக் கூட கல்யாணம் செய்து கொள்வாயா?

**வெங்க:** அப்பா அடிக்காமலிருந்தால் தப்பாமல் செய்து கொள்வேன். ஆனால் உதைப்பாரென்றால் எனக்கவ்சிய மில்லை.

[கிரீசம் வருகிருன்]

**கிரீ:** அண்ணி! இந்த மரத்தின் கீழ் நின்ருல் நீங்கள் வ்ன லட்சுமி மாதிரி இருக்கிறீர்கள்.

[புச்சம்மாவின் பக்கம் பார்க்கிருன்]

**புச்ச:** கேட்டீர்களா? தம்பி விதவையை கல்யாணம் செய்து கொள்வானும்.

**கிரீ:** என்னுடைய பிரிய சிஷ்யனும் உங்கள் அன்புடைய சகோதரனுமான வெங்கடேசம் விதவாவிவாஹத்தையே செய்து கொண்டால் நாங்கள் எல்லோரும் இவனை ஊர்வலமாகக் கொண்டாட மாட்டோமா?

**புச்ச:** இவனுடைய குருவாகிய நீங்கள் ஏன் முதலில் செய்து கொள்ளவில்லை?

**கிரீ:** கேட்க வேண்டியதைத்தான் கேட்டீர்கள்! சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் கேட்ட பிறகு சொல்லாமலிருப்பது நல்லா இருக்காதென்று சொல்லுகிறேனே தவிர இதெல்லாம் சொல்லத் தகுந்ததல்ல. ஏனென்று கேட்கலாம். என் பெருமையை நானே சொல்லிக் கொள்ளக் கூடாதல்லவா? இதொன்று. இதைவிட முக்கியமான விஷயம் இன்னுமொன்றிருக்கிறது. பார்த்தீர்களா? முதலிலிருந்தே விதவா விவாஹம் கூடாது கூடாது என்று தப்பபிப்பிராயத்துடன் இருக்கும் அத்தை மாமா போன்ற பெரியவர்களுக்கு நாம் எத்தனை சாஸ்திரங்களை எடுத்துச் சொன்னுலும் அவர்கள் மூளையில் ஏருது. இப்பேர்ப்பட்ட விஷயங்களை அவர்களிடம் சொல்வதே ஆபத்து. மாமா அவர்கள் வேதம் மட்டும் படித்திருக்கிருரே தவிர நான் சாஸ்திரங்களையும் எல்லாம் படித்திருக்கிறேன். அடேயப்பா! நான் நம்ம சாஸ்திரங்களின் கரையைக் கண்டவன். சாஸ்திரத்திலே என்ன சொல்லியிருக்கிறது. "பாலாதபி சுபா,ஹிதம்" என்றிருக்கிறது. அதாவது நல்ல விஷயங்களை கைக் குழந்தை சொன்னுலும் கேட்டு அதன் படி நடக்க வேண்டும் என்ருர்கள். ஆனுல் நம்ம பெரியவர்கள் சாஸ்திரத்தில் சொன்ன பிரகாரம் நடப்பார்களா? கொஞ்சங்கூட நடக்க மாட்டார்கள். நாம் சாஸ்திரத்தை எடுத்துக் காட்டினுலும் "இந்தக் குட்டிப் பயல்கள் சொல்வதும் நாம் கேட்பதா?" என்று சொல்வார்கள். என்னைப் பற்றி ஒன்றுமில்லை. எனக்கு இரும்பு உடல். அடித்தால் கம்பு ஒடியணுமே தவிர

நம்மை ஒன்றும் செய்யாது. என்னுடைய பிரிய சிஷ்ய னுக் கார்னுலோ உங்களுக்கெல்லோருக்குமே மென்மை யான இளஞ்சரீரங்கள். ஆகையால் அடித்தால் எலும்பு முறிந்துவிடும். ஆகையால் இந்தப் பேச்சுகள் நமக்குள்ளே ரகசியமாக பேசிக்கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களுடன் உயிர் போனலும் சொல்லக் கூடாது. என்னசொல்கிறீர்கள்?

**புச்ச:** ஆமாம்!

**கிரீ:** ஆமாம் என்ருல் போதாது. யாரிடமும் இந்த சங்கதி யைச்சொல்ல மாட்டேன் என்று நீங்கள் சொன்னலன்றி என் மனசிலிருக்கிற நாலுபேச்சை எப்படிச் சொல்வது?

**புச்ச:** யாரிடமும் சொல்லமாட்டேன்.

**கிரீ:** சத்தியம் செய்யுங்கள்.

**புச்ச:** என்னென்று சத்தியம் செய்ய வேண்டும்?

**கிரீ:** நீங்கள் யாரிடமாவது சொன்னல் என் தலே வெடித்து விடும் என்று சத்தியம் செய்யுங்கள்.

**புச்ச:** அய்யோ! அப்படிச் செய்யமாட்டேன். உங்கள் தலே குளிர்ந்திருக்கணும். வேண்டுமானல், 'என் தலே வெடிக் கட்டும்' என்று சத்தியம் செய்து விட்டேன்.

**கிரீ:** அதற்கு நான் ஒப்புவேன? என் தலே வெடித்த பிற கல்லவா உங்கள் தலே விஷயத்துக்கு வரவேண்டும். அதல்லாமல் உங்கள் உயிருக்கு என் உயிரைத் தத்தம் செய்ய மாட்டேன?

**புச்ச:** எங்கம்மாவைக் காப்பாற்றினீர்களல்லவா? நீங்கள் அப்படிப்பட்டவர்கள் தான்.

**கிரீ:** அந்தச்செய்தியை நீங்களே சொன்னீர்களா கையாலே கேளுங்கள் சொல்கிறேன். எனக்கு கல்யாணமாகி குழந்தை குட்டிகளிருந்தால் அவர்களே நினைத்த பிறகு உயிருக்குத் துணிந்து உங்கம்மாவைக் காப்பாற்ற கிணற் றில் குதித்திருப்பேன? இந்த ஜன்மம் முழுவதும் உலக உபகாரத்திற்காக செலவழிப்போம் என்று நிச்சயித்துக் கொண்டு இதுவரை பிரம்மச்சாரியாகவே இருந்தேன். உண்மைதான். என்ருலும் உங்களேப் போன்ற என் நன்மையைக் கோருபவர்கள் ''கல்யாணம் செய்து கொள்'' என்ருல் அந்த வார்த்தையை தள்ளுவது கூடாதுதான். ஆனல் ஒரு வார்த்தை மட்டும் பதில் நியாயமாகச் சொல்லுங்கள். ஒருவருக்கு உபகாரம்

செய்வது பெரிசா? உலகத்துக்கு உபகாரம் செய்வது பெரிசா?

**புச்ச:** உலகத்துக்கெல்லாம் உபகாரம் செய்வதுதான் பெருமை என்று நினைக்கிறேன்.

**கிரீ:** சரித்தான். அந்த வார்த்தையை மறந்துவிடாதீர்கள். கல்யாணம் செய்து கொண்டு மனைவி மக்களுடன் மூணு பேருக்கு உபகாரமாக இருப்பதைவிட, உலக உபகாரி யாக இந்த வாழ்க்கையைத் தியாகம் செய்வது புண்ணிய மல்லவா? இறக்கும் காலத்தில் சுவர்க்கமே எதிரே வரு மல்லவா?

**புச்ச:** உலகத்துக்கு என்ன உபகாரம் செய்வீர்கள்?

**கிரீ:** அப்படிக் கேளுங்கள். சோஷல் ரிபார்ம் சோஷல் ரிபார்ம் என்றால் சமூகசீர்திருத்தம் என்று அர்த்தம். அசல் இங்கிலீஷ் வார்த்தை எவ்வளவு புரியுமோ அவ்வளவு தான் உங்களுக்கு அதன் மொழிபெயர்ப்பும் புரியும். விளக்கிச் சொல்லவேண்டுமானல் ஒரு சிமிலி அதா வது உவமானம் சொல்லி விளக்குகிறேன். உலகம் தவறன வழியில் போய்க் கொண்டிருந்தால் அந்த வழியிலிருந்து திருப்பி நல்ல வழிக்குக் கொண்டு வருவதுதான் சோஷல் ரிபார்ம்.

**புச்ச:** என்ன அந்தத் தவறன வழி?

**கிரீ:** வழுக்கலும் சேறும் குழியுமான வழி எப்படி இருக் குமோ இப்போது நம் மக்களது ஆசாரமும் அப்படித் தான் இருக்கிறது. அந்த வழியிலிருந்து வண்டியை திருப்பி நல்ல தார் போட்ட ஹைரோடுக்கு திருப்ப வேண்டும். அந்த வண்டிக்கு இரண்டு சக்கரங்கள். ஒன்று விதவா விவாஹம். மற்றொன்று நாசி கொஸ்டின். அதாவது தாசிகளைத் தொலைப்பது. இந்த ரெண்டுதான் ராஜ பாட்டைகள்.

**புச்ச:** நம் மக்களுடைய கெட்ட ஆசாரங்கள் என்னவோ எனக்குப் புரியவில்லை.

**கிரீ:** அப்படியானல் சொல்கிறேன் கேளுங்கள். கிழவர் களுக்கு சிறிய குழந்தைகளைக் கொடுத்து கல்யாணம் செய்வது ஒன்று; பணத்துக்காக குழந்தைகளை விற்பது ஒன்று: ஆமாம் என்கிறீர்களா? இல்லை என்கிறீர்களா?

**புச்ச:** ஆமாம்.

**கிரீ:** அந்தக் கிழவர்கள் இறந்தால் இன்பதுன்பமறியாத குழந்தைகள் விதவைகள் ஆகின்றார்கள். உப்பும் புளிப்பும் தின்கிறதால், ஒன்றும் தெரியாத சிறு பிள்ளைகள் பூரண யௌவன தசையில் மனத்தைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் அவர்களைக் குற்றம் சொல்லி என்ன பிரயோஜனம். விதவாவிவாஹம் கூடாது கூடாது என்று பயனற்ற சொற்களைச் சொல்லிக்கொண்டே பணத்துக் காசைப்பட்டு கிழட்டுக் கல்யாணம் செய்கின்ற முட்டாள்கள் மேலல்லவா தப்பிருக்கிறது. என்ன சும்மா இருக்கிறீர்கள்?

**புச்ச:** எனக்குத் தெரியாது.

**கிரீ:** ஆமாம். பிறகு நீங்கள் என்ன சொல்வீர்கள்? தாய் தந்தையர்களை என்ன சொன்னாலும் மனசுக்குள்ளே போட்டுக் கொண்டு அடக்கி. கொள்ள வேண்டும். அதுவன்றி உங்களைப் போன்ற நல்லவர்கள் வெளியே சொல்வீர்களா? என்னைப் போன்றவர்கள் "என்ன மாமா. அழகும், இளமையும், அறிவுமுள்ளவனாகிய மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கவேண்டு மென்று சாஸ்திரத்திலே இருக்கிறதல்லவா? சாஸ்திரத்துக்கு விரோதமாக எதற்காக பணப்பேய் பிடித்து கிழடுகளுக்கு பெண்ணைக் கொடுக்கிறீர்கள்? சாஸ்திரத்தில் விதவைகளுக்கு கல்யாணம் செய்துவைக்கவேண்டும், கல்யாணம் செய்து வைக்கவேண்டும் என்று கட்டளையிட்டிருக்க, நீங்கள் ஏன் செய்து வைப்பதில்லை" என்று கேட்டால், உடனே வெளியே விரட்டிவிடுவார்கள். ஆகையால்தான் "மௌனம் கலக நாஸ்தி" என்று வாயை மூடிக்கொண்டிருக்கிறேன். இனி தாசிகளின் விஷயத்தைக் கேளுங்கள். தாசிகளை எல்லாம் ஒழித்துக் கட்டுவது நல்லதா? இல்லையா?

**புச்ச:** அவர்களைக் கொன்று விடுவீர்களா என்ன?

**கிரீ:** கொல்லவேண்டியதில்லை. புகையைப் போட்டபின் போவென்று சொல்லவேண்டியதில்லை யல்லவா? அதைப் போல கல்யாணத்திற்கு தாசிகளை கூப்பிடாமலிருப்பது, அவர்கள் வீட்டுக்குப் போகாமலிருப்பது, அவர்களை வைத்துக்கொள்ளாமலிருப்பது, மீறிச் செய்கிறவர்களைக் கண்ட இடத்திலெல்லாம் வைவது—இப்படி என்னைப் போன்ற புத்திசாலிகள் எல்லாம் ஒன்று கூடி கொஞ்ச காலத்துக்கு முயன்றால் மருந்துக்குக் கூட தாசி இருக்க

மாட்டாள். இப்போது பாருங்கள். நம் வெங்கடேசத்துக்கு கல்யாணம் செய்யும்போது தவருமல் தாசிமேளம் கூப்பிடுவார்கள். எனக்குத் தெரியும். கூடாதென்கிற வேலே யெல்லாம் மாமா செய்வார்கள். செய்யவேண்டியதைச் செய்யமாட்டார்கள். தாசிமேளம் அமர்த்துவது சனீஸ்வரனே விலேக்கு வாங்கினுற் போலத்தான். கல்யாணத்தன்று என் பிரிய சிஷ்யனுக்கு பருவ வயது வருமல்லவா? அந்த தாசிச் சிறுக்கிகள் சிகப்பாக, கண்ணுக்கு குளிச்சியாக இருப்பதைப் பார்த்து, பெண்டாட்டிமேலே வெறுப்பாகி 'இவள் வளர்வது எப்போது, குடும்பத்துக்கு வருவதெப்போது?' என்று நினேத்து இந்த தாசிகள் ரொம்ப ஆனந்தகரமாக இருக்கிருர்கள் என்று அவர்களேச் சேர்த்துக் கொண்டால் நம் குடி முழுகாமல் என்ன செய்யும்? என்ன சொல்கிறீர்கள்?

**புச்ச:** ஆமாம். நிஜந்தான்.

**கிரீ:** ஆகையால் உலகம் சீர்திருந்துவதற்காக விதவைகளேக் கல்யாணம் செய்யவும், தாசிகளேத் தொலேக்கவும், வீரசபதம் செய்துகொண்டேன். ஆகையால்தான் உங்கள் தம்பியைப் போன்ற அநேக இளேஞர்கட்கு கல்வியறிவு ஊட்டுகிறேன். தைரியசாலி யாகையால் கிணற்றிலே குளத்திலே விழுந்தவர்களேக் காப்பாற்றுகிறேன். இன்னும் நேஷனல் காங்கிரஸ் என்றிருக்கிறது. அதில் நான் செய்யும் தொண்டு அனுமார் வாலேப் போல வியாக்கியானம் செய்தாலொழிய புரியாது. பல பல விதங்களிலே உபகாரம் செய்கிறேன்.

**புச்ச:** இந்த வேலேகள் எல்லாம் கல்யாணம் செய்துகொண்டால் மட்டும் செய்ய முடியாதா?

**கிரீ:** எப்படிச் செய்வது? உலகமென்ருல் சோற்றுப் பானே என்று நினேத்துக் கொண்டீர்களா? ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்று அஞ்சுகண்டங்கள். அதில் அமெரிக்காவில் மனுஷர்கள் தலே கீழும் கால் மேலுமாக நடக்கிருர்கள். இங்கே இப்போது பகலல்லவா? அங்கே இப்போது ராத்திரி. நார்த்போல் (வடதுருவம்) என்றெரு தேசமிருக்கிறது. அங்கே ஆறு மாசமும் பகல்தான். அப்போது ராத்திரியே இராது. பிறகு ஆறு மாசமும் ஒரே ராத்திரியேதான். அப்போது பொழுதே புறப்படாது. அங்கே எப்படி இருக்கிறது தெரியுமா?

கடல் முழுவதும் பனிக்கட்டியாகி யிருக்கிறது. மான்களை வண்டிகளில் பூட்டி சவாரி செய்து வாயுவேக மனோ வேகத்தில் போகிறார்கள். இத்தனை தேசங்களுக்கும் போய் அங்கே இருப்பவர்களுக் கெல்லாம் உதவி செய்தால்தானே உலக உபகாரம் ஆகும். பெண்டாட்டி, பிள்ளை குட்டிகள் இருந்தால் எப்படி அவர்களை விட்டு விட்டுப் போவது? ஆனாலும் கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என்று நீங்கள் சொன்ன பேச்சையும் தட்டிக் கழிக்கக்கூடாது. உலகத்துக்காக வாழ்வதே உத்தமம். ஆனால் உலகம் எவ்வளவு மதிப்போ அதைவிட விலை உயர்ந்த மாணிக்கம்போன்ற ஒரு பெண் கிடைத்தால் தவறாமல் கல்யாணம் செய்து கொள்ளவேண்டியது தான். இந்த ஊருக்கு வரும் வரைக்கும் எனக்கப்படிப் பட்ட தெய்வீகப் பேரழகுடைய உருவம் கண்ணிற் படவில்லை. முகத்திற்கெதிரே சொல்லக்கூடாது. அப்பேர்ப் பட்ட பெண் இந்த ஊரில் காணப்பட்டாள். எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடக் கூடாதென்று மனசை மாற்ற எவ்வளவோ முயற்சி செய்தாலும் மனசு அடங்க மாட்டேன் என்கிறது. கடவுள் என்ன செய்ய இருக்கிறாரோ? மனசுக்குள் என்ன சொல்லிக்கொள்கிறேனென்றால் "ஏ! பைத்தியக்கார மனமே! நீ விரும்பிய பெண் ஆணி முத்துத்தான் என்றாலும் இத்தனை நாளும் கல்யாணம் வேண்டாம் என்றிருந்துவிட்டு இப்போது "கல்யாணம் செய்வோம் கல்யாணம் செய்வோம்" என்று ஆத்திரப்படுவதேன்? "ஸம்சாரசாகரம் துக்கம் தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத" என்று சொல்லி யிருக்கிறார்களே. சம்சார சாகரத்திலே விழுந்து விட்டால் மீண்டும் உன்னால் உலகத்துக்கு உபகாரம் செய்ய முடியுமா?" என்று மனசுக்கு போதித்துக்கொண்டிருக்கிறேன். கல்யாணம் செய்தால் கொஞ்சங்கூட உலக உபகாரம் செய்ய முடியாமல் போகிறது பார்த்தீர்களா அண்ணி! ஒரு பேச்சுக்கு நாம்தான் கல்யாணம் செய்து கொள்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். குடும்பத்தை நடத்த பணம் சம்பாதிக்க வேண்டுமல்லவா? இதற்கு முன்னால் பிரம்மச்சாரியாக இருந்ததால் சத்திரத்தில் சாப்பாடு மடத்திலே உறக்கம் என்று கழிந்துவிட்டது. ஏதோ பேச்சு வரிசைக்கு உங்களைக் கல்யாணம் செய்துகொண்ட பிறகும் அப்படியே இருக்க முடியுமா? நாம்தான் மாமாவின்

அறியாமையை லட்சியம் செய்யாமல் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் ராமவரத்துக்குப் போய் அங்கே சாஸ்திர முறைப்படி கல்யாணம் செய்து கொண்டோமானால், தற்போதைக்கு விடோமேரேஜ் சபையார் நமக்கு மாதம் நூறுரூபாய் தருவார்கள். ஒரு நாலஞ்சு மாசம் வரைக்கும் அப்படி காலட்சேபம் செய்துவிட்டு, ஹைதராபாத்திலாவது, பரோடாவிலாவது ஒரு ஆயிரரூபாய் சம்பளத்தில் நல்ல உத்தியோகமாக சுலபத்தில் சம்பாதிக்கலாம். ஹைதராபாத் நவாப் ஒரு தடவை ஒரு மாசத்துக்கு முன்புதான் ஒரு பெரிய உத்தியோகம் தருகிறேன் என்றான். நான் ஒருத்தனிடம் வேலை செய்வதா என்று தெம்பாக விட்டு விட்டேன். நீங்கள் கல்யாணம் செய்து கொள்ளுங்கள் என்று யோசனை சொல்வீர்கள் என்று அப்போதே தெரிந்தால் அந்த உத்யோகத்தை விட்டிருக்க மாட்டேன்.

**புச்ச:** நீங்கள் உத்யோகம் செய்யமாட்டீர்கள் என்று தம்பி சொன்னானே.

**கிரீ:** ஆமாம். பிரம்மச்சாரியாக இருந்து பரோபகாரம் செய்துகொண்டிருக்கும் வரைக்கும் கல்யாணம் செய்வதில்லை என்று சபதம் செய்திருந்தேன். ஆனால் இப்போது என் அதிர்ஷ்டத்தாலே உலகத்தைவிட விலை உயர்ந்த மாணிக்கம்போன்ற மனைவி கிடைத்தால் கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்க முடியுமா? உலகத்தின் மதிப்பு வெள்ளி என்று வைத்துக்கொள்வோம். உலகம் வெள்ளியானால் உங்களைப்போன்ற தங்க நிறமுடைய சொர்ண விக்கிரகம், பத்தரை மாத்துத் தங்கம் ஆகுமா ஆகாதா? தங்கத்தின் மதிப்பு அதிகமா? வெள்ளியின் மதிப்பு அதிகமா? சொல்லுங்கள்.

**புச்ச:** தங்கந்தான் அதிகம்.

**கிரீ:** சரிதான். உங்களைப் போன்ற தங்கப் பதுமையே கிடைத்தபோது உலகம் கிலகமெல்லாம் அப்புறம் வைத்துவிட்டு கல்யாணம் செய்யாமல் இருக்க முடியுமா? பேச்சுக்காக நாம் கல்யாணம் செய்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். கல்யாணமான பிறகு குடும்பம் சௌக்கியமாக நடைபெறுவதற்கு நிறையப் பணம் வேண்டுமல்லவா? உத்யோகம் செய்யாமல் பணம் நிறையக் கிடைக்காதல்லவா?

**புச்ச:** ஆமாம்.

**கிரீ:** பணம் எதற்கென்று ஒருவேளை கேட்பீர்கள். சொல்கிறேன், கேளுங்கள். குடும்பத்துக்கு வீடு என்று ஒன்றிருக்க வேண்டுமல்லவா? என்ன?

**புச்ச:** ஆமாம்.

**கிரீ:** எனக்கு மாடி வீடில்லாவிட்டால் சரிப்படாது. இப்படிப்பட்ட சிறிய வீட்டிலே என்னால் வசிக்க முடியாது. வீட்டைச் சுற்றிலும் பூந்தோட்டம் இருக்க வேண்டும். மா, பலா, வாழை, கொய்யா, தென்னை முதலிய மரங்கள் எல்லாம் இருக்க வேண்டும். நம் வெங்கடேசம் குரங்கு மாதிரி பழங்களைத் தின்றுகொண்டு எப்போது பார்த்தாலும் மரத்துமேலேயே இருப்பான்.

**வெங்:** அந்த மரத்துப் பழங்களெல்லாம் நான்தான் பறிப்பேன்.

**கிரீ:** அதற்கென்ன! நாம் அப்படி வீடு வாசல் தோட்டம் துரவு ஏற்படுத்திக்கொண்டு வாழும்போது நமக்கு சிறு குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களைப் பாதுகாக்க வேண்டுமல்லவா? அவர்கள், நான் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு எழுதிக்கொண்டிருக்கும்போது வந்து கையைப் பிடித்திழுத்து, ''அப்பா! அது வேணும் இது வேணும்'' என்பார்கள். நீங்கள் பீர்க்கம் பூவைப்போல உடல் நிறைய நகைகள் அணிந்து கொண்டு, அழகாக மஞ்சளும் குங்குமமும் பிரகாசிக்க மகாலட்சுமி மாதிரி வீட்டில் அதிகாரம் பண்ணிக்கொண் டிருப்பீர்கள். ஒரு குழந்தை இந்தப் பக்கம் கழுத்தை அணைத்துக் கொண்டும் ஒரு குழந்தை அந்தப் பக்கம் அணைத்துக்கொண்டும், ''அம்மா அதைக்கொடு, இதைக் கொடு'' என்று கேட்பார்கள். அவர்களுக்கு நகை நட்டுகள் செய்ய வேண்டும். பட்டுத் துணிகள் தைக்கணும். கிரீசம் அவர்களின் குழந்தைகளை கூட்டிக் கொண்டு வா என்று ஒரு சமயம் நவாப் அவர்கள் உத்தரவிடுவார்கள். நம் குழந்தைகளை வெங்கடேசம் மாதிரி சுதேசி வேட்டி சட்டைகளோடு அனுப்ப முடியுமா? அவர்களுக்கு ஒரு சிறிய வண்டிகிண்டி வாங்க வேண்டும். அவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்து பெரியவர்களாக்க வேண்டாமா? இதெல்லாம் குடும்ப பாரம் அல்லவா? இதற்குள் விழுந்துவிட்டால் பிறகு உலகத்துக்கு உபகாரம் செய்ய நேரமிருக்குமா? சொல்ல

மறந்துவிட்டேன். அப்போது நம்ம வெங்கடேசம் நம்மிடமிருந்துகொண்டு படித்துக் கொள்வான்.

**புச்ச:** அப்படியானால் அப்பாவுக்கு செலவிருக்காது. அப்பாவும் அம்மாவும் அவன் படிப்புக்காக சண்டையும் போடமாட்டார்கள்.

**கிரீ:** நான் மாட்டேன் என்கிறேனா?

**வெங்:** எனக்கொரு சிறிய குதிரை வண்டி வேண்டும்.

**கிரீ:** உனக்கு வேறே குதிரை வண்டி எதற்கு? நம்ம குழந்தைகளின் வண்டியிலேயே நீயும் போகலாம். அவர்கள் சச்சரவிடாமலும், கீழே விழுந்துவிடாமலும் பார்த்துக்கொள்வாய்.

**வெங்:** அக்காவைக் கல்யாணம் செய்து கொள்வீர்களா என்ன?

**கிரீ:** சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னால் புத்தியில்லாதவன் மாதிரி பேசுகிறாயே?

**புச்ச:** அவ்வளவுதானா?

**கிரீ:** அவ்வளவுதானா என்றால் இதைவிட அதிர்ஷ்டம் எனக்கெங்கே கிடைக்கப் போகிறது. இந்தப் பேச்சை நீங்கள் சொன்னாலும் நான் சொன்னாலும் உங்கள் சுற்றத்தார் உதைத்து விடுவார்கள். வெங்கடேசமாகிலும் சொன்னான் என்றால் மாடு கட்டும் கயறு இருக்கவே இருக்கிறது.

**வெங்:** ஐயையோ! (முதுகைத் தடவிக் கொள்கிறான்) கப் சிப் முச்சு விடமாட்டேன்.

**புச்ச:** என் சிநேகிதி அச்சம்மாள் நீங்கள் ஒப்புக் கொண்டால் உங்களைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லுகிறாள்.

**கிரீ:** கல்யாணம் செய்ய நிச்சயித்தால் அச்சம்மாவையும் பிச்சம்மாவையுமா கல்யாணம் செய்வேன். எப்போதானாலும், "மற்றவர்களைப்பற்றி நமக்கென்ன கவலை. நம் வாழ்க்கை இன்பம் எதுவோ அதைப் பார்த்துக் கொள்வோம்" என்று தங்களைப்போன்ற பேரழகி, நல்ல குணவதி, என்மேல் இரக்கப்பட்டு, "கிரீசம் அவர்களே! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்" என்று சொன்னால் கல்யாணம் செய்து கொள்வேனே தவிர, அச்சம்மாக்களையெல்லாம் கழுத்திலே கட்டிக்கொண்டு

உத்தம பிரம்மச்சரியத்தையும், பரோபகாரத்தையும் விட்டுவிடுவேனென்று நினைத்தீர்களா?

**வெங்:** நல்ல பழம் விழுந்து விட்டது. எடுத்துக் கொள்ளுங்கள்.

**கிரீ:** (பழத்தை எடுத்து) ஆகா! என்ன அழகான நிறம்! அண்ணி! உங்கள் மேனி நிறம் இந்தப் பழத்துக்கிருக் கிறது. இந்தாருங்கள்.

**புச்ச:** குடத்தில் போட்டுவிடுங்கள். தம்பி! இறங்கி வந்து குடத்தைத் தூக்கு.

**கிரீ:** அவன் வேண்டாம். நான் தூக்குகிறேன். (தூக்கிக் கொடுத்து) ஆகா! என்ன ஒய்யாரம்! (புச்சம்மா போகிருள்) சிஷ்யா ரெண்டு பழத்தை உலுக்கிப் போடு.

**வெங்:** அப்பா கொல்லேப்புற வழியே வருகிருருங்க. என்ன செய்வது?

**கிரீ:** இலேகள் நெருக்கமான இடமாகப் பார்த்து ஒளிந்து கொள். நான் தண்ணீர் இறைக்கிறேன்.

[அக்னி ஹோத்ரவதானி வருகிருர்.]

**அக்னி:** என்னங்க கிரீசம்! தண்ணீர் இறைக்கிறீர்களா? வேலேக்காரன் இறைப்பானே. இங்கிலீஷ் படித்த நீங்கள் எதற்கிந்த சிரமப்படுகிறீர்கள்?

**கிரீ:** உழைப்பைப் போன்ற உத்தமமான வஸ்து உலகத்தில் வேறே இல்லேங்க. சும்மா உட்கார்ந்துகொண்டிருக்க என்ருல் முடியாதுங்க. தண்ணீர் இறைத்தால் செடி களுக்கும் நல்லது. எனக்கும் தேகாப்பியாசமாகும். கவர்னர், தோட்டத்திலே மண் வெட்டுகிருங்க. சீமை ராணியார் ஏழைகளுக்குக் கொடுக்க, துணிமணிகள் தைக்கிருர். இங்கிலீஷ்காரனுக்கு சோம்பேறித்தனமே பிடிக்காது. அவர்களது மகாகவியாகிய சேக்ஷ்பீயர் என்ன சொன்ஞன் என்று தெரியுமா? டிக்னிடி ஆப் லேபர் என்ருன். அதாவது கலேக்டர் பெரியவன் இல்லே. ஜட்ஜ் பெரியவன் இல்லே. மெய்வருந்த உழைப் பவன்தான் பெரியவன் என்ருன். ஆகையால்தான் பெரிய பெரிய துரைகள் எல்லாம் பேரெடுக்கவேண்டு மென்று தோட்டவேலே செய்கிருர்கள். மரம்மட்டை களிலே ஏறுவதும் அவர்களுடைய பெரிய படிப்பாகும். லாபமில்லாத தொழில் எதுவும் துரைமார்கள் செய்ய மாட்டார்கள். மாமா துரைமார்கள் ஊரிலிருந்து

ஊருக்குப்போவார்களல்லவா? அப்போது தாகமெடுக்கு மல்லவா? நடுவழியிலே தென்னை முதலான மரங்களிலே ஏறத் தெரியாவிட்டால் தாகத்தோடு சாகவேண்டியது தான். ஏஜன்ஸி கமான் செய்துகொண்டிருக்கும்போது பெரிய புலி வருகிறது என்று வைத்துக்கொள்வோம். துரைக்கு மரமேற முடிந்தால் சடாரென்று மரத்திலேறி உயிரைக் காப்பாற்றிக் கொள்வான். ஆகையால்தான் படிக்கிற படிப்போடு மரமேறக்கூட சொல்லித் தருகிறார்கள்.

**அக்னி:** துரைகளின் நடவடிக்கைகள் எல்லாம் ஒரு தினுசாகத்தான் இருக்கிறது. வெங்கடேசம் எழுதிக்கொண்டிருக்கிறானா? படிக்கிறானா?

**கிரீ:** இவ்வளவு நேரமும் சொல்லிக் கொடுத்துவிட்டு இப்போதுதான் "மரம் மட்டையில் ஏறி விளையாடிக் கொள்" என்று பத்தி விட்டேன்.

**அக்னி:** உங்களுக்கென்ன மதி கெட்டுவிட்டதா? கையைக் காலை ஒடித்துக்கொண்டால் என்ன செய்வது?

**கிரீ:** நாளைக்கு நம்ம பையன் தாசில்தாராகி காட்டில் கமானுக்கு போகும்போது எதிரே பெரிய புலி வந்தால் மரமேற முடியாமல் கைகால் நடுங்கி மல்லாந்து விழ வேண்டுமென்பதுதான் உங்கள் விருப்பமா?

**அக்னி:** நம்ம பையனுக்கு தாசில்தார் வேலை கிடைக்குமா?

**கிரீ:** ஏன் கிடைக்காது? குதிரை ஏற்றம், மர ஏற்றம் நம்ம பையனுக்குத் தெரியாவிட்டால் தம்பீ, நீ கமான்களுக்கு உபயோகப்படமாட்டாய். 'டெஸ்க் அருகில் உட்கார்ந்து கொண்டு குமாஸ்தா வேலை செய்துவா. தாசில்தார் வேலையை கனவிலும் நினைக்காதே' என்று துரைகள் சொல்லிவிடுவார்கள்.

**அக்னி:** அப்படியானால் சிறிய மரமாகப் பார்த்து ஏறுங்கள். பெரிய மரங்களிலே இப்போதே ஏறச் சொல்லாதீர்கள்.

**கிரீ:** ஆகையால்தான் கொய்யா மரத்தில் ஏறச் சொன்னேன். பார்த்தீர்களா?

**அக்னி:** அடே! குரங்குப்பயலே.

**கிரீ:** இதோ பார்த்தீர்களா? வைகிறீர்களே. துரைகள் படிப்பைப் படித்தால் துரைகளுக்கு தருகிற மரியாதையை தரத்தான் வேண்டும். நீங்கள் இப்படி வைதால்

பயந்துகொண்டு கீழே விழுந்துவிடுவான். இப்படிப் பட்ட வேலைகள் உங்களுக்கிஷ்டமில்லா விட்டால் இங்கிலீஷ் படிப்பை நிறுத்திவிட்டு வேதம் சொல்லிக் கொடுங்கள்.

**அக்னி:** மறந்துபோய் வைதுவிட்டேன். இந்த இங்கிலீஸ் காரர்கள் விஷயமெல்லாம் ஒன்றும் புரிவதில்லை.

**கிரீ:** உங்களைப் போன்ற அறிவாளிகளே இப்படிச் சொல் வது எனக்காச்சரியமாக இருக்கிறது. அவர்களது நடவடிக்கைகள் நல்லதாக இருப்பதால்தான் கடவுள் அவர்களுக்கு மட்டும் இவ்வளவு ராஜயோகங்களைத் தந்திருக்கிறார். நமது சாஸ்திர விஷயங்களை நாம் மறந்துவிட்டோம். அந்த விஷயங்களைத்தான் வெள் ளைக்காரர்கள் கள்ளத்தனமாகக் கொண்டுபோய், சாஸ் திரம் சொன்னபடி யெல்லாம் நடந்து நம்ம ராஜ்யத் தைப் பிடுங்கிக்கொண்டார்கள். நீங்கள் எல்லாம் தெரிந்தவர்களல்லவா? நீங்களே சொல்லுங்கள். குருக் களிடம் சிஷ்யர்கள் என்ன செய்வார்கள்? காட்டில் போய் மரத்திலேறி சமிதைகள் கொண்டுவருவார்கள். சிரமங்களைப் பொறுத்துக்கொள்வார்கள். இப்போது இவ்வளவு அறிவாளியாகிய நீங்கள்கூட என்ன சொல் கிறீர்கள்? நம்ம பையன் வீட்டைவிட்டு நகர்ந்தால் கறுத்துவிடுவான், கொய்யாமரத்தில் ஏறினால் கையைக் காலை ஒடித்துக்கொள்வான் என்று பயப்படுகிறீர்கள். உங்களுடைய சிஷ்யர்கள் பிரம்மாண்டமான ஆலமரத் தின் நுனியிலே ஏறி இலைகளைப் பறித்துக்கொண்டு வருவ தில்லையா? நம்ம புஷ்தகங்களிலே இருக்கிற ரகசியங் களைத்தான் கண்டறிந்து துரைமார்கள் முன்னேறி வருகிறார்கள். நாம் நம்ம புஸ்தகங்களுக்கு பூசை செய்து கும்பிடுகிறோம்.

**அக்னி:** உங்களுக்கு நிறையத் தெரியும். இந்த வெள்ளைக் காரன் செய்கிற வித்தைகளெல்லாம் நம்ம புஸ்தகங் களிலே இருந்து கொண்டு போனதுதான். இந்த ரயில் கியில் எல்லாம் நம்ம வேதத்திலே இருக்கிறதாம். உங்க ளுக்கு ரொம்ப புத்தி கூர்மை இருக்கிறது. நம்ம கேஸ் ஜெயிப்பதற்காக நீங்கள் எழுதியவைகள் ரொம்ப நன்றாக இருக்கிறது.

**கிரீ:** இன்னும் நல்லா இருக்கும். ரிக்கார்டு பூர்த்தியாக வில்லை. சில காகிதங்களை நீங்கள்தான் தொலைத்தீர்

களோ? உங்கள் வக்கீல் தான் வைத்துக்கொண்டாரோ எனக்கொன்றும் புரியவில்லை.

**அக்னி:** நான் தொலேக்கவில்லிங்க. எனக்கு இங்கிலீஷ் தெரியாததால் ரொம்ப சங்கடமாக இருக்கிறது.

**கிரீ:** உங்களுக்கு மட்டும் இங்கிலீஷ் தெரிந்தால் பாஷ்யமய் யங்கார் மாதிரி ஆகிவிடமாட்டீர்களா? இந்த தோட்டத் துக்கு நீர் பாய்ச்சியானதும் இருக்கிற காகிதங்களை எல்லாவற்றுக்கும் ஜாபிதா தயாரிக்கிறேன். நீங்கள் போய் வாருங்கள்.

**அக்னி:** நீங்கள் குடித்தனம், வேலைவெட்டிகள் எவ்வளவு சிரத்தையோடு செய்து கொள்கிறீர்கள். எங்க பையனும் உங்களைப்போல உபயோகமானவனுக இருந்தால் எனக்கு வேருெருத்தன் தயவு வேண்டியிருக்காது. அவன் இறங்கும்போது மெதுவாக கைத்தாங்கல் கொடுத்து இறக்கி விடுங்கள். எதற்கும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். (போகிருர்.)

**வெங்:** (மெதுவாக) அப்பா வீட்டுக்கு போய் விட்டாருங்க.

**கிரீ:** பைய இறங்கு.

**வெங்:** (குதித்து) பிழைக்கவைத்தீர்கள். (போக முயல் கிருன்.)

**கிரீ:** இரு. இரு.மடியிலே இருக்கும் பழங்களைக் கொண்டுவா.

**வெங்:** எல்லாமே பிடுங்கிக் கொள்ளாதீர்கள்! அனியாயம்.

**கிரீ:** "அனியாயம் பாபநாசனம்" என்பார்கள். ஒரு அனி யாயத்தோடு பாவங்களெல்லாம் தொலைந்துவிடுகிறது. எல்லாப் பழங்களையும் நீமட்டும் தின்னப் பார்க்கிருயா என்ன? தின்ருல் வயிற்று வலி வரும். வயிற்று வலி வந்தால் உங்கம்மா வாயைப் பிளந்து ஆழாக்கு விளக் கெண்ணெயை தொண்டைக்குள் ஊற்றிவிடுவாள்.

**வெங்:** நான் விளக்கெண்ணே குடிக்கமாட்டேன்.

**கிரீ:** அப்படியாஞல் பழங்களை எல்லாவற்றையும் தின்ஞதே.

[இறைக்கும் வாளியை விட்டுவிட்டு வெங்கடேசத் தின் மடியிலுள்ள பழங்களை எண்ணுகிருன்.]

**வெங்:** (வருந்தும் பாவனையோடு) பெரிய பழங்களாக பிடுங்கிக் கொள்கிறீர்களே!

**கிரீ:** பெரியவர்களுக்குப் பெரிய பழம்; சிறியவர்களுக்கு சிறிய பழம். இவ்வளவு நேரமும் அணில் மாதிரி மரத்தி

லிருந்து கொறிச்சது போதாதா? (நாலைந்து பெரிய பழங்களை எடுத்துக்கொண்டு, வெங்கிடேசன் முதுகைத் தட்டி) மை டீயர் பிரதரின்லா. இனி உன் இஷ்டப்படி மரத்திலே ஏறு. இங்கிலீஸ்காரன் நேச்சர்ஸ்டடீ செய்யச் சொன்னான். கொய்யா மரத்தில் ஏறும்போது மட்டும், பழம், செங்காய், காய் இவற்றின் தராதரம் நன்றாகத் தெரிந்துகொண்டு பழங்கள் மட்டும் பறிக்கவேண்டும். அதில் நாலஞ்சு குருதக்ஷிணையாக எனக்குத்தரவேண்டும். இல்லையென்றால் வயிறு உப்பிக்கொள்ளும். நீ ஒரு தடவை மரமேறிய பிறகு வலை போட்டுப் பார்த்தாலும் செங்காய்கூட கிடைக்காது. "தெர்ந்தெடேல் செங் காயை" என்பார்கள். ரன் அவே. (வெங்கடேசம் தாண்டிக் குதித்து ஓடுகிறான்.) காய் பழுத்ததாகவே தெரிகிறது ஆகா என்ன அழகு!

"நதியோ உந்தி நளினமோபதங்கள்
மதியோ மலரோ மாசில் வதனம்
புதிதோரமுதோ புன்னகை தானும்?
நிதியோ ரதியோ நெஞ்சே யறியேன்"

[செல்கிறான்.]

# நான்காம் அங்கம்.

## காட்சி—1

இடம்: *ராமபந்துலு வீட்டு முற்றம்.*

*[ராமபந்துலு நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருக்க, மதுரவாணி நின்றுகொண்டு வெற்றிலை பாக்கு மடித்துத் தருகிறாள்.]*

**ராம:** நான் சிறு வயசிலே இங்கிலீஷ் படித்திருந்தால் ஜட்ஜுகளுக் கெதிரே மடமட வென்று பேசமாட் டேனா? எனக்கு வாக்கு ஸ்தானத்திலே வியாழனிருக் கிறான். அதனால்தான் இங்கிலீஷ் தெரியாவிட்டாலும் என் செல்வாக்கு இப்படிப் பிரகாசிக்கிறது.

**மதுர:** பேசத் தெரிந்த நாயை வேட்டைக்கனுப்பி உசுக் காட்டினால் உசுக்காட்டிற்றாம்.

**ராம:** என்னையா நாய் என்கிறாய்?

மதுர: ஏதோ தமாசுக்குச் சொன்னால் அதெல்லாம் உண்மை என்று நினைத்துக்கொள்வதா?

ராம: தமாசுக்கா சொன்னாய்?

மதுர: பிறகு, உங்களிடம் சிரித்து விளையாடாவிட்டால், ஊரிலுள்ளவர்களோடு சிரித்து விளையாடச் சொல்கிறீர்களா?

ராம: எல்லாருடனும் சிரித்து விளையாடினால் எனக்குத் தெரியாதா?

மதுர: அதனால்தான், நாயென்றாலும் பேயென்றாலும் உங்களைத்தான் சொல்லவேண்டுமின்றி மற்றவர்களைச் சொல்ல முடியுமா? உங்களை என்ன வேண்டுமானாலும் சொல்ல எனக்குரிமை இருக்கிறது. இன்னும்...உங்கள் பேச்சுத் திறமையை என்னிடம் சொல்ல வேண்டுமா என்ன? உங்கள் பேச்சிலே மயங்கித்தானே உங்கள் மாயையில் விழுந்துவிட்டேன்.

ராம: எனக்கு இங்கிலீஷ் மட்டும் தெரிந்தால், வெள்ளைக் கார துரைச்சானிகள் எல்லாம் என் பின்னால் ஓடி வர மாட்டார்களா?

மதுர: உங்கள் அழகுக்கு நாங்கள் போதாதா? இங்கிலீஷ் என்றதும் ஞாபகம் வந்தது. கிரீசம் அவர்கள் பேசினால் துரைமார்களைப் போலவே அழகாகப் பேசுவாராம்.

ராம: பேசுவாரா? உனக்கென்ன தெரியும். அவன் வெறும் பொட்லர் இங்கிலீஷ் உளறுகிறான். அவன் பேச்சை கோர்ட்டிலே உளறினால் செருப்பாலடித்து விரட்டி விடுவார்கள்.

மதுர: அதென்னமோ எனக்கென்ன தெரியும்? சரி; கிரீசம் லுப்தாவதானியின் தம்பியாமே? நீங்கள் சொல்லவில்லையே!

ராம: உன் மனசெதற்கு அவன் மேலேயே போகிறது. அவன் இருந்தாலென்ன போனாலென்ன? உனக்கெதற்கு இந்த வம்பெல்லாம்?

மதுர: மதியிலாத பேச்சு, சுதியில்லாத பாட்டு என்றுதான்.

ராம: எனக்கா மதியில்லை என்கிறாய்?

மதுர: உங்களை எதற்குச் சொல்கிறேன். எனக்குத்தான்.

ராம: எற்காக?

மதுர: தலையிலே எழுதியிருக்கிறதால்.

ராம: என்னவென்றுஎழுதி யிருக்கிறது.

மதுர: கவலைப்படும்படி எழுதியிருக்கிறது.

ராம: எதற்காகக் கவலை?

மதுர: கிரீசம் லுப்தாவதானியின் தம்பியானால் கல்யாணத்துக்கு வருவார். வந்து உங்களோடு ஏதாவது சாக்கு வைத்து கை சாய்ப்பாரோ என்றுதான் கவலை.

ராம: ஆமாம். நல்லா ஞாபகப் படுத்தினாய். ஆனால் பணம் செலவாகுமென்று லுப்தாவதானி பந்துக்கள் யாரையுமே கூப்பிடமாட்டான்.

மதுர: கிரீசம் கூப்பிடாவிட்டாலும் வருவார்.

ராம: ஏன்? நீ ஏதாவது கூப்பிட்டிருக்கிறாயா?

மதுர: உங்களுக்குத்தான் நீதியில்லை என்றால் எனக்கும் இல்லையா?

ராம: பின் அவன் வருவான் என்று உனக்கெப்படித் தெரியும்?

மதுர: பெண் வீட்டில் பெண்ணின் அண்ணனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க அமர்ந்துகொண்டு, அவர்கள் வீட்டில் கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் அவர்தான் கவனிக்கிறாராம். ஆகையால் கட்டாயம் வருவார் என்றுதான் நினைக்கிறேன்.

ராம: அவன் வந்தால் என்ன செய்வது?

மதுர: என்னையா கேட்கிறீர்கள்?

ராம: கல்யாணமே நின்றுவிட்டால்...?

மதுர: எப்படி நின்றுவிடும்?

ராம: நிறுத்துவதற்கு ஒரு தந்திரம் செய்திருக்கிறேன்.

மதுர: அப்படியானால், மதுரம் பேச்சைக்கொண்டு செலுத்திவிட்டீர்களே!

ராம: கொண்டு செலுத்தாவிட்டால் சும்மா விடுவாயா?

மதுர: எங்கே ஒரு முத்தம். (முத்தமிடுகிறாள்)

ராம: ஆனாலும் மதுரம், சாதக பாதகங்களை நன்றாக ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டும். ஒரு வேளை முயற்சி தவறி அவனே வந்துவிட்டால் என்ன செய்வது?

மதுர: பெண்ணாகிய என்னையா கேட்கிறீர்கள்?

ராம: பெண்களின் புத்தி ரொம்ப சூட்சுமம் என்பார்கள். கோர்ட்டு விவகாரம் என்றால் சொல்லு. ஒவ்வொரு

எடுப்பிலும் இந்திரஜாலம் மஹேந்திர ஜலாம் மாதிரி நடத்திக் காட்டுவேன். கை கலந்து சரசமாட மட்டும் எனக்கு கை கால் ஓடாது.

**மதுர:** கல்யாணம் நடக்கிற நாலு நாளும் சுதலை மூடிக கொண்டு வீட்டிலேயே இருங்கள்.

**ராம:** பெண்புத்தி சூட்சுமம் என்றேனல்லவா? ரொம்ப நல்ல யோசனே சொன்னுய்.

**மதுர:** ஆனுலும் எனக்கொரு பயம் உண்டாகிறது. அவன் நடுநிசியிலே வெளியே பூட்டைப்போட்டு பூட்டிவிட்டு தீ வைத்தாலும் வைத்துவிடுவான்.

**ராம:** செத்தேன்! அவன் தீ வைக்கிற கொள்ளிதான்! வேறெ கதியில்லையா?

**மதுர:** இருக்கிறது. சொன்னுல் என்ன தருவீர்கள்?

**ராம:** நீயே சாக்ஷாத் என்னேக் காப்பாற்றிய பரதேவதை என்று புகழ் பாடுகிறேன்.

**மதுர:** (மூக்கில் விரலே வைத்து) அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. தப்பு.

**ராம:** நல்ல யோசனேயாகச் சொன்னுல் நாலு பணம் தருகிறேன்.

**மதுர:** பணம் கேட்கவில்லேயே. கௌரவந்தானே கேட்டேன். நான் என்னுயிருக்கு சமமான உங்களேக் காப்பாற்றுவது எனக்குத்தானே நல்லது.

**ராம:** ஆசைக்காக தருவதுகூட தப்புத்தானு?

**மதுர:** தப்பில்லேயா? தாசி என்றதுமே தயவு தாட்சண்யங்கள் இருக்காதா?

**ராம:** தப்பு, தப்பு. கன்னத்திலே போட்டுக்கொள்கிறேன். சொல்லு.

**மதுர:** சாப்பாட்டுக் கடைக்காரியை கல்யாணச் சமையலுக்கு அமர்த்தி விடுங்கள்.

**ராம:** சபாஷ்! எத்தகைய உயர்ந்த யோசனேயைச் சொன்னுய்! எங்கே ஒரு சிறிய முத்தம் (முத்தமிடப் போய், நிறுத்தி) ஆனுலும் கிரீசம், என்னேயும் அவளே யும் சேர்த்து உதைப்பானே என்னமோ?

**மதுர:** அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம். சாப்பாட்டுக் கடைக்காரியைப் பார்த்துவிட்டால் போதும். ஒரே

ஓட்டமாக ஓடிவிடுவார். அவள் வாய் ரொம்பவும் கெட்டது.

ராம: அவள் வாய் மட்டுமல்ல. கைகூட ரொம்பவும் கெட்டதுதான். அவள் அடி உனக்கென்ன தெரியும்? ஆனாலும் மிக நல்ல யோசனையைத்தான் சொன்னாய். எங்கே ஒரு முத்தம். (முத்தமிடுகிறான்)

[அப்போது லுப்தாவதானி ஒரு கடிதத்தைக் கையில் பிடித்துக்கொண்டு வருகிறார்.]

லுப்தா: என்ன இந்த சேட்டைகள்!

ராம: (திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து) மாமா! இளம் வயதல்லவா? ஆனாலும் என் மதுரவாணியை நான் நடு வீதியிலே முத்தமிட்டாலும் எவன் என்னைக் கேட்கப் போகிறான்?

மதுர: நடுக் குப்பை மேட்டிலேறி முத்தமிடமாட்டீர்களே? அசட்டுத்தனத்துக்கும் ஒரு அளவிருக்கணும். மச்சானுக்கு நமஸ்காரம். வாருங்கள்.

[நாற்காலி கொண்டுவந்து போடுகிறாள்]

லுப்தா: எனக்கு மாமாவானால் உனக்கெப்படி மச்சான் ஆவார்?

மதுர: எங்கள் குலத்துக்கு எல்லோரும் மச்சான்கள்தான். உங்களுக்கு எப்படி மாமாவானாரோ? (லுப்தாவதானியைப் பார்த்து) ஏன் உட்காரவில்லை. என்ன காரணமோ மச்சான் கோபமாகக் காணப்படுகிறார். நாளைக்கு கல்யாணமானபிறகு, அக்காவை வீட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு முத்தமிடுவதைப் பார்க்கத்தானே போகிறேன். ஆனாலும் உங்க மாப்பிள்ளைக்கு சிறு பிள்ளைத்தனம் இன்னும் போகவில்லை.

ராம: முப்பது வயசில் சிறுபிள்ளைத் தனமில்லாமல் பெரிய மனுஷத்தனம் எப்படி வரும்? என்ன மாமா. கோபமா?

லுப்தா: எனக்கு கல்யாணமும் வேண்டாம். மண்ணாங்கட்டியும் வேண்டாம்.

ராம: (மதுரவாணியிடம் காதோடு ரகசியமாக) பார்த்தாயா மதுரம்! நம்ம மந்திரம் இப்போதே வேலை செய்கிறது. (லுப்தாவதானியிடம் வெளிப்படையாக) அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள். எல்லாம் ஏற்பாடான பிறகு கோபித்து என்ன பிரயோசனம்?

**லுப்தா:** உன் பணமென்ன போகுது. கோபம் கீபம் இல்லை. எனக்கிந்த கல்யாணமே வேண்டாம்.

**மதுர:** (ராமப்பந்துலு காதோடு) அந்தக் கடிதம் என்னவோ?

**ராம:** (மதுரவாணியின் காதில்) அக்னிஹோத்ராவதானி யின் பேரால் நான்தான் எழுதினேன்.

**மதுர:** (ராமப்பந்துலு காதில்) என்னவென்று?

**ராம:** நீ கிழடனுகையால் உன் சம்பந்தம் எனக்கு வேண்டாம் என்று.

**மதுர:** அற்புதம். சொல்லிவிடுவேன்.

**ராம:** (மதுரவாணியின் காதில்) உன் மூளை கெட்டு விட்டதா என்ன? கல்யாணத்தை நிறுத்த வேண்டு மென்று நீ என் உயிரை வாங்கியதால் இந்த யுக்தியைச் செய்தேன். வாயை மூடிக்கொண்டிரு.

**மதுர:** (லுப்தாவதானியின் காதோடு ரகசியமாக) இந்த சம்பந்தத்தை உங்கள் கழுத்திலே கட்டலாமென்று பார்க்கிறார். ஒப்புக் கொள்ளாதீர்கள்.

**ராம:** (மதுரவாணியிடம்) என்ன குறும்புத்தனம் (லுப்தாவ தானியிடம்) பெண்புத்தி பின் புத்தி என்பார்கள். அவள் பேச்சைக் கேட்காதீர்கள். இவள் பெரிய சூழ்ச்சிக்காரி.

**லுப்தா:** (கையிலுள்ள கடிதத்தைக் காட்டி ஆட்டிக் கொண்டு) இந்த சதியெல்லாம் உன்னுடையதுதான்.

**ராம:** (கூர்மையாக மதுரவாணியின் பக்கம் பார்த்துவிட்டு, லுப்தாவதானியிடம்) கோபம், கோபம் மாதிரி இருக்க வேண்டுமே தவிர, ஒருமையிலே பேசக்கூடாது.

**லுப்தா:** இதெல்லாம் உங்கள் சூழ்ச்சிதான். என் குடியைக் கெடுக்கப் பார்க்கிறீர்கள். இந்தக் கடிதத்தைப் படியுங்கள்.

**ராம:** (கடிதத்தை வாங்காமல் நாற்காலியை இழுத்து) அந்த கடிதத்தின் சங்கதிகள் எனக்கென்ன தெரியும்?

**லுப்தா:** செய்தவன் உனக்குத் தெரியாமல் வேறு யாருக்குத் தெரியும்?

**ராம:** அதோ பாருங்கள். மறுபடியும் ஒருமையில் பேசுகிறீர்கள். மெதுவாகப் பேசுகிறேனென்று இப்படிப் பேசுகிறீர்கள்? கடிதம் கிடிதம் என்னுடைய சூழ்ச்சி யென்று மீண்டும் சொன்னீர்களானல் கதை ரொம்பு

தூரம் முற்றிவிடும். இத்தோடு நில்லுங்கள். ராமப் பந்துலுவை என்னவென்று நினைத்துக்கொண்டீர்கள்?

லுப்தா: நீ......

ராம: பார்த்தீர்களா? மறுபடியும்.

லுப்தா: உங்கள் சூழ்ச்சியானுலென்ன வேறு யாருடைய சூழ்ச்சியானுலும் என்ன? என்னுடைய முட்டாள்தனந் தான். நடுவிலே இருக்கிற விதவைகளோடு எனக் கென்ன பேச்சு? உடனே புறப்பட்டுப் போய் அந்த அக்னிஹோத்ராவதானியையே கேட்கிறேன்.

ராம: பேச்சு ரொம்ப அழகாய்த்தான் வருகிறது. ஜாக்கிரதை (லுப்தாவதானி போகிருர்) என்னைத் தாஞு விதவைகள் என்கிருன்?

மதுர: என்னையுங்கூடச் சொல்லச் சொல்கிறீர்களா?

ராம: எனக்குமட்டும் விதவைப் பட்டம் சூட்டுகிருயா?

மதுர: நானிருக்கும்போது விதவை எப்படி ஆவீர்கள்.

ராம: என்னை விதவையாக்கிவிட்டாய். இன்னும் என்ன செய்யப் போகிருய்?

மதுர: என்ன இப்படிப் பேசுகிறீர்கள்?

ராம: அந்தக் கடிதம் நான் செய்த சூழ்ச்சிதான் என்று அந்தப் பயலிடம் ஏன் சொன்னுய்?

மதுர: உங்கள்மேல் ஆணையாக நான் சொல்லவில்லை.

ராம: நான்தான் செய்தேனென்று அவனுக்கெப்படித் தெரிந்தது.

மதுர: ஏனிந்த கலவரம்?

ராம: பின், அந்த விதவைப் பயல் அந்த கடிதத்தை அக்னி ஹோத்ராவதானியிடம் காட்டினுல், அவன் என்மேல் உடனே கேஸ் போட்டால் என்ன செய்வது? ஜெயிலுக் கல்லவா போக வேண்டும்.

மதுர: மந்திரம் தலைகீழாக வேலை செய்கிறதா? அப்படி யானுல் மாற்று மந்திரம் போடுவோம்.

[மதுரவாணி விரைவாக வீதிக்குச் செல்கிருள்.]

ராம: இவள் எங்கே ஓடுகிருள். இவள்தான் சொல்லி விட்டாள். ரகசியமாகச் செய்வதை யாரிடமும் சொல்லக்கூடாது. ஓடிப் போய் லுப்தாவதானி கையிலுள்ள கடிதத்தை பிடுங்கிக்கொண்டு வரட்டுமா?

கிழட்டுப் பயல் கையைக் கடித்துவிட்டால்? போய் மீனாட்சியின் காலைத்தான் பிடிக்க வேண்டும்.

[மதுரவாணி ஒரு கையில் கடிதமும், ஒரு கையில் லுப்தாவதானியின் கையையும் பிடித்துக் கொண்டு வருகிறாள்]

**மதுர:** (ராமப் பந்துலுவிடம்) போதும். போதும். நீங்களும் உங்கள் மரியாதையும். மச்சானுக்கு அண்ணனா தம்பியா மகனா? யாரிருக்கிறார்கள்? உங்களை நண்பர் என்று நம்பி யோசனை கேட்க வந்தால், யோசனை சொல்லாமல், ஒருமை பன்மையென்று உளறுகிறீர்களே மச்சான். நாற்காலியில் உட்காருங்கள். (நாற்காலியில் உட்காரவைத்து ராமப்பந்துலுவிடம்) இந்தக் கடிதம் என்னவென்று சாவகாசமாகப் படித்துப் பாருங்கள்.

[கடிதத்தை ராமப்பந்துலு கையில் தருகிறாள்]

**ராம:** (கடிதம் வாங்கிக்கொண்டு—தனக்குள்) பிழைத்தேண்டா கடவுளே (படித்துப் பார்த்து) அடே! இது என் கடிதமில்லையே. என் நிழலை நானே பார்த்து பயந்து விட்டேன். (வெளிப்படையாக) மாமா! வரும் போதே திட்டிக்கொண்டே வந்தால் எப்பேர்ப்பட்டவனுக்கும் கொஞ்சம் கோபம் வரத்தானே செய்யும்? நிம்மதியாக, மரியாதைதந்து, என்னிடம் எந்த உதவி கேட்டாலும் செய்யமாட்டேனா?

**லுப்தா:** அப்படியானா இந்த படாடோபமெல்லாம் வேண்டாமென்று எழுதுங்கள். அவருக்கு படாடோபம் வேண்டுமானால் அவர் செலவிலே செய்து கொள்ளட்டும்.

**மதுர:** (லுப்தாவதானியின் முடியை அவிழ்த்து உதறி) எவ்வளவு தூசி. சம்ரட்சணை செய்ய ஆளிருந்தாலல்லவா?

[வாசனைத் தைலம், சீப்பு கொண்டு வந்து தலைவாரி விடுகிறாள்]

**ராம:** (கடிதத்தை திருப்பி கடைசியில் பார்த்து படிக்கிறான்) சேவகனான தம்பி கிரீசம்—இவனா?

**மதுர:** மேலே படியுங்கள்.

**ராம:** உன் கிரீசம் என்றதும் மேலே படிக்கணுமா?

**மதுர:** அப்படியானால் நீங்களே படித்து மகிழுங்கள்.

**லுப்தா:** "உன் கிரீசம்" என்பதேன்?

**ராம:** அது வேறே கதை.

லுப்தா: மேலே படியுங்கள்.

ராம: (படிக்கிறான்) "சேவகனாகிய தங்களுடைய அத்யந்த பிரியசகோதரன் கிரீசம், தங்கள் பாதாரவிந்தங்களுக்கு அநேக நமஸ்காரம் செய்து எழுதும் விண்ணப்பம் என்னவென்றால், இப்பவும், நீங்கள் முதுமையிலாவது மீண்டும் கல்யாணம் செய்துகொண்டு ஒரே குடும்பத்தா ராவதற்கு நிச்சயித்துள்ளீர்கள் என்ற செய்தி கேட்டு உவகைப் பெருங்கடலில் மூழ்கிப் பேரின்பம் அடைந்தேன்"

லுப்தா: முட்டாப் பயல் முதுமை என்கிறானே. முந்தா நாள் தானே ஐம்பது வயசாயிற்று.

மதுர: (சீப்பை இடுப்பில் சொருகி, லுப்தாவதானி முடியை முடிந்து) சம்ரட்சணையில்லாமல் இப்படி இருக்கிறீர்களே தவிர யார் உங்களைக் கிழவன் என்பது?

ராம: (படிக்கிறான்) "உங்களுக்கு வரப்போகும் மனைவி, என்னுடைய பிரிய சிஷ்யன் வெங்கடேசத்தின் தங்கை யாகையால், எனக்கு பிரம்மானந்தமாக உள்ளது. நான் அக்னிஹோத்ராவதானி வீட்டிலிருந்துகொண்டு கல்யாண ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக் கிறேன். அவர்கள் என்னை தமது மகனைப் போலவே ஆதரிக்கிறார்கள். அவர் மிக நல்லவரே என்றாலும்கூட சந்திரனுக்குக் களங்கமிருப்பது போல அவருக்கு கொஞ்சம் பண ஆசையும், கொஞ்சம் முன்கோபமும் உள்ளன."

இலக்கணம் எழுதுகிறான்டா பயல்.

"குறிப்பு: அந்தக் கோபம் வரும்போது மாத்திரம் எதிரே நிற்காமல் ஒதுங்கிக் கொண்டால் நம் எலும்பும் முறியாது. உயிர் தப்பலாம். மற்றதெல்லாம் பரவா யில்லை. பண ஆசை, அதாவது அது அவருக்கும் உங்களுக்கும் ஒத்து வராது. உங்களூர்க்காரன் எவனோ தெரியவில்லை. ஒரு போக்கிரிப்பயல் நீங்கள் பெரிய பணக்காரர் என்றும், கல்யாணம் வெகு விமரிசையாக நடத்துவீர்கள் என்றும் சொல்லிவிடவே, ஐம்பது வண்டிகளிலே இந்த ஊர்க்காரர்களை எல்லோரையும் கூட்டிக்கொண்டு வர இருக்கிறார். அதோடு, திவான் ஜீயைக் கேட்டு ஒரு யானையும், மூன்று ஒட்டகமும், அஞ்சு குதிரையும்கூட கொண்டுவரப் போகிறார். தங்கப் பல்லக்கும் கொண்டு வருவார்கள். அதன்மேல் சவாரி

செய்து வெகு விமரிசையாக ஊர்வலம் வந்து, நீங்கள் கல்யாணம் செய்து கொள்வது கண்கொள்ளாக் காட்சியே யானாலும், இதெல்லாம் வீண் செலவல்லவா என்று என்போன்ற தங்களுக்கு வேண்டியவர்கள் மிகவும் வருந்துகிறோம். மாட்டின் புண் காக்கைக்கு ருசி என்ற கதையாக ராமப்பந்துலுவின் பணமா செல வாகப் போகிறது.''
விதவைப்பயல், என்பேரை ஏன் இழுக்கிறான்?
''இதில் ஒரு பரம ரகசியம்—அது என்னவென்றால் இந்த ராமப்பந்துலு சூழ்ச்சிக்கு ஜாகால், அறிவிலே பிக்ஆஸ்''
இதென்னடா பொட்டலர் இங்கிலீஷ்?
''அதாவது''—வியாக்கியானம் கூட செய்கிறாண்டா!
''ஜாகால் என்பது குள்ளநரி—விதவைப் பயல்.
''பிக் ஆஸ் என்றால் பெரிய-க—''
இவன் தலையிலே இடிவிழ. நாசமாய்ப் போகிற காலம் வந்துவிட்டதா? இவன் மேல் இப்போதே மானநஷ்ட வழக்குத் தொடர்கிறேன்.

[மதுரவாணி சிரிப்பு வரவே அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.]

ஏன் இப்படிச் சிரிக்கிறாய். உன் புருஷன் என்னைத் திட்டிக்கொண்டிருக்கிறான் என்று ஆனந்தம்?

மதுர: (சிரிப்பினால் பேச முடியாமல், கொஞ்சநேரத்திற்கு) இல்லை இல்லை. உங்கள்மேல் ஆணை! ஒட்ட...!

ராம: என்மேலாணை என்ன? நான் செத்தால் உனக்கு ஆனந்தம்தான்.

மதுர: (மூக்கில் விரலை வைத்து, ராமப்பந்துலுவின் அருகில் சென்று, தலையை அணைத்து முத்தமிட்டு) ஏனிப்படிப் பேசுகிறீர்கள்?

ராம: பின் ஏன் சிரிக்கிறாய்?

மதுர: ஒட்ட... ஒட்ட.... ஒட்ட...!

ராம: என்னத்தை ஒட்ட...?

மதுர: ஒட்டகம்...கம்.

ராம: ஆமாம். ஒட்டகம். அதற்கென்ன?

மதுர: (சிரிப்பை சமாளித்துக் கொண்டு) எதற்காகவோ?

ராம: எதற்காகவோ எனக்கென்ன தெரியும்?

ஜுப்தா: கடிதத்தின் மூலம் நீங்கள்தான் வரவழைத்ததாக தெரிகிறதே.

ராம: நானா? நானா? எனக்கெதற்கு ஒட்டகம்?

மதுர: (மீண்டும் அதிகமாகச் சிரித்து) ஏறுவதற்கு.

ராம: நானா ஏறுவது?

மதுர: ஏன் கூடாது. நீங்கள் ஒரு ஒட்டகம், மச்சான் ஒரு ஒட்டகம், பொ பொ போலி செட்டி கல்யாண ஏற்பாடு களை கவனிப்பதாலே அவர் ஒரு ஒட்டகம்—மூவரும் ஏறி காடெல்லாம் சுற்றி ஊர்வலம் வாருங்கள். அந்த வைபவத்தைக்...கண்ணார...காண்போம். (அதிகமாகச் சிரிக்கிருள். சிரிப்பை அடக்கி சமாளித்துக்கொண்டு) மச்சான் மன்னியுங்கள். அந்த துஷ்டன் கடிதத்துக்காக கேலியே தவிர வேறொன்றுமில்லை.

ராம: துஷ்டன் மட்டுமா? கழுதைப் பயல்.

ஜுப்தா: நீங்கள் ஒரு பெரிய கழுதைகூட வரவழைத்தீர்கள் போலிருக்கிறது. எழுதியிருக்கிறானுங்க.

ராம: இல்லை இல்லை. கழுதை என்கிற சொல்லே கடிதத்தில் எங்கேயுமில்லை.

ஜுப்தா: இருக்குது. நான் படிச்சேனுங்க. கழுதை எதுக்கு வரவழைத்தீர்கள். என் தலைமேலே...?

ராம: உமக்கு புத்தி கெட்டுவிட்டதா என்ன? கழுதை என்கிற பேச்சே இல்லை என்கிறேன். (மதுரவாணி மீண்டும் சிரிக்கிருள்) உனக்குக்கூட புத்தி கெட்டு விட்டதா? எதற்கிந்த சிரிப்பு என்னைப் பார்த்தா? அவதானியைப் பார்த்தா?

மதுர: ஏனிந்த சந்தேகம்? பழமொழி சொல்வாங்க.

ராம: என்ன அந்த பழமொழியும் கிழமொழியும்?

மதுர: கழுதை சொன்னதாம்—பாட்டுக்கு நானும், ஆட்ட துக்கு எங்க அப்பாவும் என்று.

ராம: என்ருல்?

மதுர: கல்யாணத்துக்கு கழுதை ஒட்டகம் என்று இத்தனை நாளைக்கு இன்றுதான் கேட்கிறேன்.

ராம: கேட்டால்?

மதுர: சிரிப்பு வந்தது. நீங்கள்கூட சிரிக்கக் கூடாதா? ஏன் இந்த ரகளை?

ராம: இவன்மீது மானநஷ்ட வழக்கைப் போடுகிறேன்.

**மதுர:** (லுப்தாவதானியிடம்) மச்சான், ஏன் எங்க பந்துலு மேல் அனியாயமாக சந்தேகப் படுகிறீர்கள். அவர் உண்மையாகவே உங்களை அண்ணன் மாதிரி நினைக்கிறார். கிரீசம் அவர்மேல் இப்படி எழுதுவதற்கு வேறே காரணம் இருக்கிறது. உங்களிடம் சொல்லத்தகாத செய்தியேயானாலும், உங்கள் இருவருடைய சினேகமும் கெட்டுவிடும் போலிருப்பதால் சொல்லாமல் இருக்க முடியாது. உங்கள் கிரீசம் எனக்கு சிலநாள் இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்தார். சிலகாலம் என்னை வைத்துக் கொண்டார். எங்க பந்துலு அவரிடமிருந்து பிரித்து என்னை அழைத்துக் கொண்டு போய்விட்டார் என்ற வருத்தத்தாலே இல்லாத பொல்லாததெல்லாம் கற்பித்து நரி கிரி என்று எழுதியிருக்கிறார், அதெல்லாம் சுத்தப் பொய் நம்பாதீர்கள்.

**ராம:** ''நரி, கிரி'' சும்மா போகுமென்று நினைத்தாயா? மான நஷ்ட வழக்கு தொடர்ந்த பின்னால் அதன் சங்கதியெல்லாம் தெரியும்.

**மதுர:** மச்சான். இன்னொரு விஷயம். யோசித்துப் பாருங்கள். பந்துலுவுக்கு என்ன லாபமென்று? யானை, குதிரை, ஒட்டகம், கழுதை (சிரிக்கிறாள்).

**ராம:** நீ மனுஷியில்லையா? கழுதைப் பேச்சே இல்லை என்கிறேன்.

**மதுர:** போகட்டும். உங்களுக்கெதற்கு கோபம். கழுதையில்லாவிட்டால் தொலைகிறது. இதெல்லாம் உங்கள் வீட்டுக்கு வந்து தின்பதாலே பந்துலுவுக்கு என்ன லாபம் சொல்லுங்கள். ஒரு வேளை வைக்கோல் வியாபாரம் நடத்துவதால் உங்கள் போலி செட்டிக்கு வேண்டுமானால் லாபமிருக்கலாம்.

**லுப்தா;** சரியாகச் சொன்னாய்! போலி செட்டி செய்த வேலைதான்.

**ராம:** சிக்கனமாக செய்வான் என்று கோமட்டிச் செட்டியை செலவு செய்ய நியமித்தாய். அனுபவி.

**மதுர:** இப்போதென்ன குடிமுழுகிவிட்டது. கல்யாணப் பெண்ணை அனுப்பி வைத்தால் பத்துரூபாய் செலவோடு இங்கே முடிச்சுப் போட்டு விடுவோம். நீங்கள் யாரும் வரவேண்டாம் என்று உங்க மாமா பேருக்கு கடிதம் எழுதுங்கள்.

**ஜப்தா:** மிக நல்ல யோசனை சொன்னாய். பந்துலு! மதுரம் ரொம்ப புத்திசாலி.

**ராம:** இதோ பாருங்கள்! மதுரம் கிதுரம் என்று நீங்கள் சொல்லக்கூடாது. மதுரவாணி என்று சொல்ல வேண்டும்.

**ஜப்தா:** தப்பு! அது சரி. முடிவாக பெண்ணை மட்டும் அனுப்பிவிட்டால்...?

**மதுர:** பின்னென்ன? உங்களுக்கு நல்லதுதானே. கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.

**ஜப்தா:** என் உயிர் போனாலும் இந்த சம்பந்தம் செய்து கொள்ளமாட்டேன். அந்தக் கடிதம் கடைசிவரைக்கும் படித்தால் அந்த போக்கிரித்தனம் உங்களுக்கே புரியும்.

**மதுர:** படிக்காமல் என்ன யோசனை செய்கிறீர்கள்.

**ராம:** கிரீசத்தின்மேல் மானநஷ்ட வழக்கு தொடராமல் விடமாட்டேன். அவன் மூஞ்சியைப் போலத்தான் இந்த கடிதமும் இருக்கிறது. படிக்கிற தென்னத்தை?

**ஜப்தா:** எங்க கழுதைப்பயல் என் மானத்தை மட்டும் ஏதாவது விட்டு வைத்தானா? குறையையும் படியுங்கள்.

**ராம:** (படிக்கிறான்) குறிப்பு; சின்னவள் ரொம்ப அழகாக இருக்கிறாள். ஆனால் சிறிய சுழி மட்டும் இருக்கிறது. அதை நம்மவர்கள் விதவைக் கடையாளம் என்பார்கள். இது வெறும் சூபர்—ஸ்டிஷன். அதாவது அறிவில்லாத மூட நம்பிக்கை. நம்போன்ற அறிஞர்கள் கணக் கெடுக்கக்கூடாது. உட்குறிப்பு: இதற்கு ஒரு சிறிய பைராகி தாயத்து இருக்கிறது. பாச்சாவோடு, அந்த சுழியிலுள்ள மயிர்களைப் பிடுங்கி ஒரு பௌடர், அதாவது மாவு—இருக்கிறது. அதைத் தேய்த்தால் மறுபடியும் சுழி வராது. இதற்கிடையே தெய்வாதீனமாக விதவை யாக ஏற்பட்டால், அடிக்கடி சிரைப்பதால் சுழி மயிர் ஒன்றும் பாதிக்காது. இரண்டாம் நம்பர் ஷரா ஒரு வேளை விதவையே யானாலும், என் அண்ணியார் கூந்தல் வளர்க்கும் பட்சத்தில் நான் என்ன செய்வது. நீங்கள் என்ன செய்வது.

**மதுர:** போதும் போதும். இதோடு நிறுத்துங்கள். கிரீசம் எத்தகைய போக்கிரி.

**ராம:** இப்போதாவது அவன் சொரூபம் உனக்கு புரிந்ததா? (மேலும் படிக்கிறான்) மூன்றாவது ஷரா: இந்த நர்ட்

களில் பெண்கள் விதவாவிவாஹம் செய்து கொள்வது தடபுடலாக இருப்பது தாங்கள் அறிந்ததே. தாங்கள் சுவர்க்கத்திலே இந்திரபோகம் அனுபவித்துக்கொண் டிருக்கும்போது, இங்கே அவர்கள் விதவாவிவாஹம் செய்துகொள்ள ஆசைப்படலாம். அதைமட்டும் நான் தடுக்க முடியாதென்று தெளிவாக அறிவித்துவிடுகிறேன். ஏனென்ருல் தடுத்து வேண்டாம் என்று புத்திமதிகள் கூறினுல், "உங்களண்ணு மட்டும் சுவர்க்கத்தில் ரம்பை யுடன் பிரம்மானந்தமாக இருக்கும்போது. என் கதி என்னுவது" என்று திருப்பிக் கேட்டால் நான் என்ன பதில் சொல்வது.''

**மதுர:** சரி போதும். நிறுத்துங்கள்.

**ராம:** உன் இஷ்டப்படி படித்து உன் இஷ்டப்படி நிறுத்தி விடுவேனென்று நினைத்தாயா? (படிக்கிருன்) நான்கா வது ஷரா: மீதி எல்லா அம்சங்களும் மிக நன்ருக இருக்கிறது. தவருமல் இந்த சம்பந்தத்தை நீங்கள் செய்து கொள்ள வேண்டியதுதான். உங்கள் அத்தை சாக்ஷாத் அருந்ததியைப் போன்றவர்கள். நமக்குள் ஒரு ரகசியம். அந்த அம்மாவுக்கு இந்த சம்பந்தம் கொஞ்சம் கூட பிடிக்கவில்லே. தாலி கட்டும்போது உங்கள் வீட்டுக் கிணற்றில் விழுந்து தற்கொலே செய்து கொள்ளப் போவதாக பக்கத்து வீட்டுக்காரிகளிடம் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். என்ருலும் பரவா இல்லே. அந்த நாலு நாழிகையும் கையைக் காலேக் கட்டிப் போட்டு வைப்போம். மூன்று மூடிச்சு போட்ட பிறகு கிணற்றில் விழுந்தால் விழுந்து விட்டுப் போகட்டும். நமக்கென்ன நஷ்டம். போலீஸ்காரர்கள் தொந்தரவு மட்டும் இல்லாமல் அவர்களுக்கு ஏதாவது கொடுத்து சரிக்கட்டிக் கொள்ளலாம். இந்த சங்கதிகளெல்லாம் உங்கள் நன்மைக்காக எழுதினேன். இங்குள்ளவர் களுக்குத் தெரியக்கூடாது. மறந்து போய்விட்டேன். பெண் ஜாதகம் ரொம்ப விசேஷமாக இருக்கிறதாம். அந்த ஏற்பாடுகூட ராம—

**மதுர:** ராம—?

**ராம:** அது பெண்கள் கேட்க வேண்டிய விஷயமில்லே.

**லுப்தா:** அதுகூட உங்கள் ஏற்பாடுதான் என்று சொல் கிருனே என்னங்க?

**ராம:** அவன் வாய்க்கு உண்மை பொய் என்றிருக்கிறதா? கேஸ் போடா விட்டால் சரிப்படாது.

**லுப்தா:** கொஞ்சமாவது உண்மையில்லாமல் போகுமா என்று எனக்குப் பயம். அத்தைக்கு இஷ்டமில்லை என்று போலிசெட்டிகூட சொன்ஞன். இந்த சம்பந்தத் துக்கு ஆயிரம் நமஸ்காரங்கள். எனக்கு வேண்டவே வேண்டாம்.

**மதுர:** நல்லாச் சொன்னீங்க. முன்பின் யோசியாமல் உங்க சம்பந்தம் எனக்கு வேண்டாமென்று உங்க மாமா வுக்கு உடனே எழுதிப் போடுங்கள். காகிதம், பேஞ கொண்டுவரட்டுமா?

**லுப்தா:** மாமாவா? முன்பின் யோசியாமல் உடனே கடிதம் எழுதிவிடுங்கள்.

[நின்று மதுரவாணியின் காதிலே ரகசியம் பேசு கிருன். மதுரவாணி லுப்தாவதானியின் காதில் பேசுகிருள்.]

**ராம:** முகத்தோடு முகம் வைத்து என்ன குசுகுசுவென்று பேசுகிறீர்கள்?

[வெளியே போஸ்ட் பியூன் வருகிருன்.]

**பியூன்:** லுப்தாவதானி இருக்கிருரா? கடிதம் வந்திருக்கு.

[மதுரவாணி கடிதம் வாங்கிக்கொண்டு வந்து லுப்தாவதானி கையில் தருகிருள்.]

[லுப்தாவதானி ராமப்பந்துலு கையில் தருகிருர்.]

**லுப்தா:** கண்ணுடி கொண்டுவரவில்லை. நீங்களே படியுங்கள்.

**ராம:** (தனக்குள் படித்துக்கொண்டு) பின்னென்ன, சிக்கலே தீர்ந்துவிட்டது. உங்க மாமாவிடமிருந்துதான் வந் திருக்கிறது.

**லுப்தா:** என்னவென்று? யானை, குதிரை, ஒட்டகம் என்று சொல்கிருஞ என்ன?

**ராம:** உங்கள் சம்பந்தமே வேண்டாமாம்.

**லுப்தா:** என்ன? எதற்காக? அவனுக்கு வேண்டாமா? எனக்கு வேண்டாமா? அவன் மதிப்புக்கு நான் குறைந்தவஞ என்ன?

**மதுர:** நிமிஷத்துக்கு முன்புதானே கல்யாணம் வேண்டாம் என்றீர்கள். அதற்குள் இப்போது கல்யாணம் தப்பி விட்டது என்று கோபமா?

**லுப்தா:** இன்னும் என்ன கூச்சல் போடுகிறுளே சொல்லுங்கள்!

**ராம:** நீங்கள் மகாக் கஞ்சன் என்று யாரோ சொன்னுர்களாம்.

**லுப்தா:** நானு கஞ்சன்? ஒரே மூச்சிலே இரண்டாயிரம் ரூபாய் எந்தக் கஞ்சன் தருவான்? இவ்வளவு பணம் எப்போதாவது ஒரே தடவையில் அக்னிஹோத்ராவதானி கண்ணுரப் பார்த்திருப்பானு? குடும்பத்தை சிக்கனமாக நடத்தினுல் அவன் கஞ்சனு? அவன் பணத்தை அவன் மூஞ்சியிலே விட்டெறிந்த பிறகு நான் எப்படிப்பட்டவனுக இருந்தாலும் அவனுக்கென்ன?

**மதுர:** எப்படிப்பட்டவர்களா? தங்கக் கட்டி மாதிரி இருக்கிறீர்கள்.

**ராம:** நீங்கள் கிழடு என்றும் க்ஷயரோகம் இருப்பதாகவும் யாரோ சொன்னுர்களாம்.

**லுப்தா:** நான் கிழடா? அவன் தலையிலே இடி விழ! ஐம்பது வயசுக்கே கிழடனு? கொஞ்சம் இருமல் இருந்ததுமே க்ஷயரோகமா? (இருமுகிருன்) நிறைய பணம் கொடுத்து பெண்ணை வாங்கிய பிறகு, எங்கள் ஜோலிக்கு ஏன் வருகிருன்? பணங் கொடுத்த பிறகு செத்த பிணமானுலும் கட்டாமல் விடக்கூடாது. என்ன பேசாமலிருக்கிறீர்கள்?

**ராம:** ஆமாம்; நிசந்தான். நீங்கள் கிழடானதுமே—

**லுப்தா:** இதோ! கிழடானதுமே என்கிறீர்களே என்ன? நீதான் இந்தக் கொள்ளி எல்லாம் வைத்தாய் போலிருக்கிறது.

**ராம:** எல்லாக் கொள்ளியும் வைக்க, உங்கள் தம்பி கிரீசம் அங்கேயே இருக்கிருனல்லவா?

**லுப்தா:** இவன் அங்கே எப்படிப் போனுனய்யா எனக்கு சனிமாதிரி?

**மதுர:** என்ன இந்த ஆண்களின் நடத்தை. இவ்வளவு நேரமும் கல்யாணம் வேண்டாம் என்று வருத்தப்பட்டீங்க. இப்போது கல்யாணம் தப்பிவிட்டதே என்று வருத்தப்படுகிறீங்க. உண்மையாகவே உங்களுக்கு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று இருக்கிறதா?

ஹுப்தா: இருக்கிறதோ இல்லையோ. அதற்காக இந்த அவமானச் சொற்களைக் கேட்டுக்கொண்டு சும்மா இருப்பேனா?

மதுர: பின் என்ன செய்வீர்கள்?

ராம: என்ன செய்வாரா? மான நஷ்ட வழக்குப் போடுவார்.

ஹுப்தா: தாவா கீவா ஒன்றும் வேண்டாம். உனக்கு புண்ணியமுண்டு. சும்மா இரு.

ராம: இல்லை என்றால் இதைவிட நல்ல இடமாகப் பார்த்து சம்பந்தம் செய்துகொண்டால், அக்னிஹோத்ராவ தானியை செருப்பாலடித்தாற்போலிருக்கும்.

ஹுப்தா: நல்ல இடமாகக் கிடைப்பதெப்படி?

மதுர: என் பேச்சைக் கேட்டு கல்யாணத்தை மறந்து விடுங்கள்.

ஹுப்தா: என்ன? கிழடனாக உனக்கும் தோன்றுகிறதா என்ன?

மதுர: நீங்களா கிழடர்? யார் அப்படிச் சொன்னது?

ஹுப்தா: உனக்கிருக்கிற புத்தி அந்த அக்னிஹோத்ராவ தானிக்கு இருந்தால் நல்லா இருக்கும்.

மதுர; பல் அசைஞ்சதா? பார்வை குறைந்ததா? பாருங்கள் உங்கள் புஜங்களை.

ராம: என்ன வர்ணனை?

மதுர: கடிதத்தை உங்களுக்குள்ளே படித்துக்கொள்கிறீர்களே. உரக்கப் படியுங்களேன்!

ராம: நீ எனக்கு கட்டளை இடுகிறாயா? நாங்கள் படித்துக் கொள்வோம். இதெல்லாம் பெண்கள் கேட்கக்கூடாது. நீ அப்பால் போ.

மதுர: நான் நகரமாட்டேன்.

ராம: அலக்கா தூக்கி வீட்டுக்குப் பின்னால் போட்டு விடுவேன்.

மதுர: (நாற்காலிக்குப் பின் நின்று ஹுப்தாவதானியின் தோளை கையால் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு) மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைப் பிடித்துக்கொண்டது போல மச்சானைப் பிடித்துக் கொள்கிறேன். எப்படி இழுத்துக்கொண்டு போகிறீர்களோ பார்க்கிறேன்.

**லுப்தா:** (தனக்குள்) எவ்வளவு மெதுவான கைகள். தலையை தலைக்கருகே கொணர்ந்ததும் எவ்வளவு கமகம வென்றிருக்கிறது. (வெளிப்படையாக) பாலாத் அபி சுபாஷிதம் (குழந்தைகளாலும் நல்ல மொழிகளைக் கேள்) என்றார்கள். மதுரவாணி இங்கேயே இருக் கட்டும். நல்ல புத்திசாலியானவள். உண்மையைக் கண்டுபிடிப்பாள்.

**ராம:** அப்படியானால் கேள். (படிக்கிறான்) உங்கள் மகளின் நடத்தை நன்றாக இல்லையாகையால் உங்களை ஜாதி பிரஷ்டம் (ஜாதியிலிருந்து வெளியேற்றல்) செய்த தாகவும் ஜனங்களிடையே பேச்சு பலமாக அடி படுகிறது.

**லுப்தா:** (சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு) நீதான் என் குடியைக் கெடுத்தாய்...!

**மதுர:** பந்துலுதானா?

**லுப்தா:** ஒருத்தரைச் சொல்லி பிரயோஜனமென்ன?

**மதுர:** (சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு) நான் உங்கள் வீட்டுக்கு வந்துவிடுகிறேன். வாருங்கள். கல்யாணம் கில்யாணம் வேண்டாம். உங்களை பெண்டாட்டியை விட அதிகமாக சம்ரட்சணை செய்கிறேன்.

**லுப்தா:** (ஆனந்தமுடன்) ஏழையாகிய என்னால் பணங் கொடுக்க முடியாதே. உன்னைப்போன்ற விலையுயர்ந்த பொருளை பந்துலுதான் சுமக்கவேண்டும்.

**மதுர:** எனக்குப் பணம் வேண்டாம். சாப்பாடு போடுவீர் களல்லவா?

**லுப்தா:** ஆகா, அதற்கென்ன குறைவா?

**மதுர:** அப்படியானால் புறப்படுங்கள். இந்த பந்துலுவின் மாயப்பேச்சுக்களைக் கேட்காமல் கல்யாணத்தை மறந்து விட்டு சுகமாக வீட்டிலே உட்கார்ந்திருங்கள்.

**ராம:** (மதுரவாணியைக் கூர்மையாகப் பார்த்து) நீ சாப்பிடவில்லை என்பதை மறந்துவிட்டாயா?

**மதுர:** உங்கள் செய்கைகளைப் பார்த்தாலே வயிறு நிறை கிறதே.

[சரேலென வீட்டுக்குள் போகிறாள்]

**லுப்தா:** இந்த மதுரவாணி, கேட்டீர்களா மாமா. தாசி தானானாலும் ரொம்ப புத்திசாலியான பெண். இவளுக்

கிருக்கிற புத்தி நம் குலஸ்திரீகளுக்கு மட்டும் இருந்தால் நாம் பிழைத்துக்கொள்வோம்.

ராம: ஆமாம்; புத்திசாலிதான். ஆனாலும் மெய்மறந்த கோபம் வந்துவிடும். ஏதாவது பைத்தியக்காரத்தன மான சந்தேகங்கள் வந்துவிட்டால் கீழும் மேலும் பார்க்கமாட்டாள். பார்த்தீர்களா மாமா, உங்களைப் போன்ற பெரியவர்கள் தாசிகளின் உடலைத் தொடக் கூடாது. அவள் சிறுபிள்ளைத்தனமாக முகத்துக்கருகே முகம் கொணர்ந்தாலும் நீங்கள், "குழந்தாய்! எதிரே நின்று பேசு" என்று சொல்லவேண்டும். இவளிடம் ஒரே ஒரு கெட்ட குணம்தான் இருக்கிறது. மற்றவர் களோடு பேசாமல் இருக்கவே முடியாது போலிருக் கிறது. பட்டணவாசத்தினாலே இந்த கெட்ட வழக்கமும் ஒட்டிக்கொண்டது.

லுப்தா: சிறுபிள்ளைத்தனம்தானே. மதுரவாணி என் பிள்ளைமாதிரி. தொட்டதெல்லாம் ஒரு தப்பாக நினைக் காதீர்கள்.

ராம: உனக்கென்ன நஷ்டம்; அதில்லை. பார்த்தீர்களா மாமா! வைத்திருக்கிற முட்டாள் பயலுக்கெதிரேயே மற்றொரு ஆண் பிள்ளையிடம் வருணனை பேசிக்கொண்டு காதோடு வாய் வைத்து குசு குசுவெனப் பேசினால் வயிறெரியுமா இல்லையா?

லுப்தா: தப்பு! தப்பு. மன்னிக்கணும். கன்னத்தில் போட்டுக்கொள்கிறேன்.

ராம: உங்கள் கன்னத்தில் போடுவதால் பிரயோஜனமில்லை. அவள் கன்னத்திலே போடவேண்டும். உங்கள் மேலே அவளுக்குக் கொஞ்சம் இஷ்டம் இருப்பது போலத் தெரிகிறது. கண்டித்து புத்தி சொல்லுங்கள்.

லுப்தா: என்மீது இஷ்டமா? எங்காவது நடக்குமா?

ராம: உங்கள் வீட்டுக்கு வந்துவிடுகிறேன் என்கிறாளே. அப்போது கூட்டிக்கொண்டு போங்கள்.

[பேசிக்கொண்டிருக்கும்போதே மதுரவாணி பட்டுச் சீலை உடுத்திக்கொண்டு வருகிறாள்.]

மதுர: அப்படியே கூட்டிக்கொண்டு போவார். உங்களுக்கு பாரமாக இருந்தால் போகிறேன். இந்த மகானு பாவருக்கு சேவை செய்தால் புண்ணியமாவது கிட்டும்.

**லுப்தா:** பந்துலு கேலிக்கு சொல்லுகிருரேயன்றி உன்னே விட்டுவிடுவாரா? நான் தகுந்தவனல்ல; எனக்கு தகுதியுமில்லே.

**ராம:** அப்படி புத்தி சொல்லுங்கள்.

**மதுர:** அவர் கேலிக்கு சொன்னுலும் நான் நிசத்துக்கு சொல்கிறேன். புத்திமதிகள் கழுதையிடம் போய் சொல்லுங்கள்.

**ராம:** இதோ பார்! மறுபடியும் கழுதை என்கிருயே.

[மதுரவாணி சிரிப்பை அடக்க முகத்தை திருப்பிக் கொண்டு உள்ளே சென்று விழுந்து விழுந்து சிரிக்கிருள்.]

**லுப்தா:** மதுரவாணிக்கு உங்களிடம் பயபக்திகூட இருக்கிறது.

**ராம:** இருக்கிறது. கோபம் வந்தால் அமளி துமளி பண்ணி விடுவாள். மற்றவர்கள் இருக்கிருர்களே என்றுகூடப் பார்க்கமாட்டாள்.

**லுப்தா:** கல்யாண முயற்சியைக் கைவிட்டுவிடுவதே நல்லதென்று நினேக்கிறேன். தங்கள் யோசனே எப்படியோ?

**ராம:** என் யோசனே என்ன வேண்டிக் கிடக்கிறது. கல்யாணம் வேண்டாம் என்று மதுரவாணி சொல்லி விட்டாளல்லவா? அவள் புத்தியை வியந்து போற்றி அப்படியே நடந்து கொள்கிறீர்கள். பெண் புத்தி பின் புத்தி என்றும் பெண்ணே நம்பாதே என்றும் சொல்லவே சொன்னுர்கள்.

**லுப்தா:** நீங்கள் வேண்டியவர்களாயிற்றே என்றல்லவா உங்கள் யோசனேயைக் கேட்க வந்தேன். மதுரவாணி சொன்னதற்காகவா கல்யாணம் வேண்டாமென்கிறேன்? ஏதோ கல்யாணம் தானுகவே நின்றுவிட்டது. செலவும் மிச்சம் என்று சந்தோஷப்படுகிறேன்.

**ராம:** ரெட்டி வந்தான். முதலிலிருந்து தொடங்கடா என்று சொன்ன கதைமாதிரிதான் இருக்கிறது. சாதக பாதகங்கள் எத்தனே சொன்னுலும் அதெல்லாம் கண்டிக்கப்பட்டு முடிவில் மறுபடியும் பணச் செலவுக்காகப் பயந்து போய்விடுகிறீர்கள். கல்யாணம் செய்து கொண்டு வயிறு குளிர இருந்தால் உங்கள் வீடு பத்து மடங்கா காதா? கல்யாணம் செய்துகொள்ளாமல் திடீ

ரென்று போய்விட்டால் இந்த கஷ்டப்பட்டு சம்பாதித்த பணமெல்லாம் யார் கையில் சேர்வது?

**லுப்தா:** பார்த்தீர்களா? ஏதோ ரொம்ப பணம் இருக்கிற மாதிரி பேசுகிறீர்களே. எனக்கென்ன இருக்கிறது.?

**ராம:** இருக்கவேண்டிய அளவு இருக்கிறது. மறுமைக்கு இவ்வளவு பிண்டம் வார்க்கிறவன் வேண்டாமா?

**லுப்தா:** அப்படியானல் நீங்களேன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?

**ராம:** நான் என் பூர்வீகமான சொத்தெல்லாம் தொலைத்து விட்டேன். இனி மறுமைக்காக என்ருல் நான் சாக்தேய மதத்தை சேர்ந்தவன். யோக சாதகம் செய்கிறேன். எனக்கு கருமமெல்லாம் கிடையாது.. ஏதோ உலகத்துக்காகவேண்டி திதி கொடுக்கிறேன். ஆனல் தாசியை ஏன் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்கலாம். காமியின்றி மோட்ச காமியாகான் என்ற உபதேசத்தைக் கேட்டிருப்பீர்கள். இனி உங்கள் சங்கதி அப்படியில்லை. நீங்கள் உறங்கும் சமயம் பார்த்து என்ருவது ஒரு நாள் மீனுட்சி நகை நட்டுகளோடு கள்ளப் புருஷனேடு ஓடி விடுவாள். அதன் பிறகு உங்களை தரித்திர தேவதை கல்யாணம் செய்துகொள்ளும்.

**லுப்தா:** அப்படியானல் என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

**ராம:** நீங்கள் மறுபடியும் முயற்சி செய்து கல்யாணம் செய்து கொள்ளுங்கள். மனைவியின் பயத்தாலே மீனுட்சி கட்டுப்பட்டுக் கிடப்பாள். மீனுட்சியின் பயத்தாலே மனைவியும் கட்டுப்பட்டிருப்பாள். சரியா? தப்பா?

**லுப்தா:** உண்மையான பேச்சுத்தான்.

**ராம:** உண்மையாயிருந்து என்ன செய்ய? உங்களுக்கு ரொம்ப அலட்சிய புத்தி இருக்கிறது. சாதகபாதகங்களை அடிக்கடி ஞாபகப் படுத்திக்கொண்டே இருக்க வேண்டும். உங்களுடைய ஜாதகத்தின்படி கல்யாணம் நடக்காவிட்டால் மரணம் சம்பவிக்கலாம் என்று இருக்கிற செய்தியை அலட்சியப்படுத்துகிறீர்களா?

**லுப்தா:** அலட்சியமில்லை. ஆனல் இத்தனை நாள் சிரமப் பட்டு இப்போது இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு சம்பந்தம் கிடைத்து முடிவில் கல்யாண சமயத்தில்

அதுவும் முறிந்துவிட்டதல்லவா? இப்போது இனி சலூசான சம்பந்தம் கிடைக்குமா? கிடைக்காது கிடைக்காது.

**ராம:** நேற்று வந்தானய்யா. குண்டூரிலிருந்து ஒரு பிராமணன். இருக்கிருனே போய் விட்டானே?

**லுப்தா:** சம்பந்தத்திற்கா?

**ராம:** ஆமாம். அடாடா! எவ்வளவு முட்டாள்தனமான காரியம் செய்து விட்டேன். என் மூலம் எங்காவது சம்பந்தம் கிடைக்குமா? என்று கேட்டான். கேட்டதற்கு இல்லை என்று சொல்லிவிட்டேன். இந்த சம்பந்தம் முறிந்துவிடும் என்று நான் கனவு கண்டேனு என்ன? அவன் நல்லா வேதம் படித்த சம்பிரதாயமான குடும்பத்தைச் சேர்ந்தவன். அந்த சம்பந்தத்தைச் செய்தால் அக்னி ஹோத்திராவதானியை செருப்பால் அடித்தாற்போலிருக்கும்.

**லுப்தா:** விலை என்ன சொன்னுன்.

**ராம:** வியாபாரம் ரொம்ப சலுசு. அதுதான் ரொம்ப வருத்தப்படுகிறேன். அவன் குண்டூரிலிருந்து வந்தவன். அந்தப் பக்கத்துக்காரர்களுக்கு நம்ம பக்கத்து வியாபார நிலவரம் இன்னும் தெரியாது. ஆகையால் நந்தியூரில் ஆயிரத்தை நூறுக்கு சம்பந்தம் அமர்த்திஞன். காலாகாலத்தில் மாப்பிள்ளை வீட்டார் பணம் செலுத்த முடியாதென்று சொல்லிவிட்டார்களாம். அந்த பிராமணனுக்குக் கடன் இருக்கிறதாம். வாயிதாவன்று பணம் செலுத்தாவிட்டால் கேஸ் நடக்குமென்று பயந்து எங்காவது பெண்ணைத் தள்ளிவிடப் பார்க்கிருன். ஒன்றிரண்டு இடங்களிலே ஆயிரத்து எண்ணூறுக்கு கேட்டார்களாம். ஆயிரத்தெண்ணூறுக்கு குறையமாட்டானும்.

**லுப்தா:** கூட ஒரு நூறு ரூபாய் கொடுப்போம் நாம்.

**ராம:** அவன் இருந்தால்தானே நூறும் ஐம்பதும் கொடுப்பதற்கு?

**லுப்தா:** தேடிப் பாருங்கள். உங்களுக்கு புண்ணியம் கிட்டும். எங்கே இருப்பான்?

**ராம:** பணம் இன்று இருக்கும். நாளை போகும். பணப் பேச்சை விட்டுத் தள்ளுங்கள். அந்தப் பெண் எவ்வளவு சிகப்பு எவ்வளவு ஐஸ்வரிய லட்சணங்கள். தனரேகை

பூரான் மாதிரி ஓடுகிறது. சந்தான ரேகை தெளி வாக இருக்கிறது. பெண் தங்க விக்கிரகம்தான்.

[மதுரவாணி வருகிருள்.]

**மதுர :** கிரகமா? அதென்னது?

**ராம :** கிரகமா? அவதானியாரின் கிரக நிலையைப் பார்க் கிறேம். ஜாதக ரீதியில் இந்த வருஷம் கல்யாணம் ஆகாமல் தப்பாது.

**மதுர :** உங்கள் பேச்சை நான் நம்ப மாட்டேன். (அவதானி அருகில் சென்று முகத்திற்கு எதிரே முகம் வைத்து) அந்தப் பேச்சு நிசந்தானு?

**லுப்தா :** எல்லோரும் நிசம் என்கிருர்கள்.

**மதுர :** சித்தாந்தியார் என்ன சொன்னர்?

**லுப்தா :** ஜாதகம் பார்த்த சித்தாந்திகள் எல்லோரும் அதைத்தான் சொல்கிருர்கள். இதுவரைக்கும் என் ஜாதகப்படியே நடந்து வருகிறது. ஒன்றுகூட தவற வில்லை.

**மதுர :** அப்படியானல் உங்கள் தலைவிதிப்படியே நடக் கட்டும். அந்த சுழியுள்ள பெண்ணை மட்டும் பந்துலு வின் மாயப் பேச்சுக்களை கேட்டு மயங்கி கட்டிக் கொள்ளாதீர்கள்.

**ராம :** சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே வந்தாயே? என்ன குடி முழுகிப் போகிற காரியமோ?

**மதுர :** வெள்ளிக்கிண்ணம் எடுக்க வந்தேன்.

**ராம :** எடுத்துக்கொண்டு போ. (மதுரவாணி போகிருள்)

**லுப்தா :** கல்யாணம் செய்யாதீர்கள் என்கிருளே என்னங்க.

**ராம :** மெதுவாகப் பேசும். தாசி எங்காவது கல்யாணம் செய்துகொள்ளச் சொல்வாளா? உங்கள் மேல் ஒரு கண் வைத்திருக்கிருள்.

**லுப்தா :** என்மேல் கண் வைக்கிறதென்ன மாமா! யார் கேட்டாலும் சிரிக்கப் போகிருர்கள்.

**ராம :** நீங்கள் கல்யாணத்தை நிறுத்திவிட்டால் உங்க வீட்டுக்கு வந்து அரட்டை அடிப்பாள். அவள் மணி யடித்ததுபோல சொல்லிக்கொண்டே இருப்பது காதில் விழவில்லையா என்ன? அவளோடு நீங்கள் ஏதாவது பைத்தியக்காரச் சேட்டைகள் செய்தீர்களேயானல்

அப்புறம் உங்களுக்கும் எனக்கும் பெரிய பகை மூளும். ஜாக்கிரதையாக தெரிந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

லுப்தா : நானு? நானு? என்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள் மாமா. என் மகள் வேறு அவள் வேறு? அந்த குண்டூர் சாஸ்திரி இருக்கிருனே போனுனே ஒரு தடவை பார்க்க மாட்டீர்களா?

ராம : அவன் வீட்டிலேயா தங்கியிருக்கிருன் பார்ப்பதற்கு? மதுரவாணி சாப்பாடு எந்த நிலேயில் இருக்கிறது என்று பார்த்துவிட்டு பிறகு செல்கிறேன். (உள்ளே போய்விட்டு வந்து வெளியே போகிருன்.)

லுப்தா : மதுரவாணியை கடத்திக் கொண்டு போய் விடுவேன் என்று இந்த பந்துலு நினேக்கிருன். அஹ்ஹஹ்ஹா! (பொடியை உறிஞ்சி) மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள தாரதம்மியங்களே தாசிகள்தான் கண்டுபிடிக்க வேண்டும். பந்துலுமாதிரி மீசை வைத்துக் கொண்டு தலேமயிரில் மையைத் தடவினுல் மீண்டும் இளமை வந்துவிடும். இந்த சலுசான சம்பந்தம் கிடைத்தால் நான் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி!

[ராமப்பந்துலு பெண்வேஷத்திலுள்ள சிஷ்யனே கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வருகிருன்.]

ராம : (உள்ளங்கையை காட்டி) மாமா! என்ன அதிர்ஷ்டம் அடிக்கிறதய்யா உனக்கு. இதோ பார் தனரேகை. கை முனேக்கு வந்து பின்பக்கம் புகுந்தாற் போலிருக்கிறது. இதோ பார் சந்தான ரேகைகள். கழுத்துக்குப் பக்கத்தில் பார்த்தாயா மாலே ரேகைகளே.

லுப்தா : ரொம்பவும் பரிசீலனே வேண்டாம். போதும்.

[பேசிக் கொண்டிருக்கும் போதே மதுரவாணி பின்புறமாக வந்து பந்துலுவின் தலேயில் செம்பிலுள்ள நீரைக் கொட்டுகிருள்.]

ராம : என்ன முட்டாள்தனம்.

மதுர : மங்களஸ்னனம் (சிஷ்யனின் மோவாய்க் கட்டையை கையால் இடித்து) உனக்கு வெட்கமில்லேயா, தாசி? (மதுரவாணி போகிருள்)

ராம : கோபம் வந்தால் தலேகால் தெரியாது. இனி வெண் சாமரையை பிடித்துக் கொண்டு வந்து விரட்டி

யடிப்பாள். இந்தப் பெண்ணை இழுத்துக்கொண்டு ஓடி விடுவோம் வாருங்கள்.

[சிஷ்யனின் கையைப் பிடித்துக்கொண்டு வெளி யேறுகிறுன்.]

**லுப்தா:** அவளாகவே நடப்பாள். கையை விட்டு விடுங்கள்.

**ராம:** (கையை விட்டுவிட்டு) ஓஹோ! எதிர்கால மனைவி என்று?

[மூவரும் சென்று தெருவழியே போகின்றனர்]

**லுப்தா:** இவளை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்பது உங்கள் அபிப்பிராயமா?

**ராம:** என் அபிப்பிராயம் எதற்கு? உங்கள் மனச் சமா தானத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். பெண் வாட்ட சாட்டமாக மூக்கும் முழியுமாக இருக்கிறுள். என்பதை கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

**லுப்தா:** குடும்பத்தானுக்கு என்ன அழகு வேண்டிக் கிடக் கிறது? (சித்தாந்தி (ஜோசியன்) விரைவாக எதிரே வருகிறுன்)

**சித்தா:** (லுப்தாவதானியை பார்த்து) யார் மாமா இந்தப் பெண்?

[லுப்தாவதானி பதில் சொல்லாமல் ராமப் பந்து லுவைக் காட்டி சைகை செய்கிறுர்.]

**ராம:** நம்ம ஆள்தான்.

**சித்தா:** (நிதானித்து) பாக்கிய லட்சணங்கள் எத்தனை நிறைந்திருக்கிறது இவளுக்கு!

**ராம:** என்னுங்க.

**சித்தா:** பரந்த கண்கள் அந்த அழகிய செவிகள், அந்த சுருண்டகேசம் கேட்டீர்களா? எங்கே காட்டம்மா கையை (கையைப் பார்த்து) எந்த அதிர்ஷ்டசாலி இவளைக் கட்டிக்கொண்டானே என்றுலும்...

**ராம:** இன்னும் கல்யாணமே ஆகவில்லையுங்க.

**சித்தா:** நீங்கள் கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மானுல் இதைவிட பாக்கிய ஐஸ்வரியங்கள் சொத்து சுகம் உள்ள பெண் கிடைக்காது. இது சௌபாக்கிய ரேகை. இது தன ரேகை. பந்துலு! உடனே இரும்புப் பெட்டிகள் செய்யச் சொல்லுங்கள். எங்கே அம்மா,

கையை திருப்பு. சந்தானம்ஒன்று இரண்டு மூன்று (கையைவிட்டு லுப்தாவதானியிடம்) பொடி டப்பா எங்கே மாமா? (பொடியை உறிஞ்சி) போலிசெட்டி மகளுக்கு பிரசவ காலம் ஆயிண்டிருக்கு. ஜாதகம் எழுதணும்; வந்து பார்க்கிறேன்.

**ராம :** ஒரு விஷயம். (சித்தாந்தியுடன் இரகசியமாகப் பேசுகிறான். சித்தாந்தி கக்கத்திலிருந்து பஞ்சாங்கத்தை எடுத்து பிரித்து பார்க்கிறான் மீண்டும் நாலு பேச்சுப் பேசிவிட்டு பஞ்சாங்கத்தைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு வேகமாகப் போகிறான்.)

**லுப்தா :** என்ன சொல்கிறான்?

**ராம :** நான்தான் இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று நினைத்துவிட்டான். நாளை திரயோதசியன்று நல்ல முகூர்த்தம் என்று சொல்கிறான்.

**லுப்தா :** அன்று விவாஹ முகூர்த்தமே இல்லையே.

**ராம :** நல்லதை சீக்கிரமாகவே முடிக்கவேண்டும் என்பார்கள். இரண்டாந்தாரக் கல்யாணத்துக்கு அவ்வளவாக முகூர்த்தம் பார்க்கவேண்டிய அவசியமில்லை. திதி நட்சத்திரம் நல்லா இருந்தால் போதும். இதோ உங்க மாமாவே வந்துகொண்டிருக்கிறார்.

**லுப்தா :** பேரம் நடத்திப் பாருங்கள். (கரடக சாஸ்திரி பிரவேசிக்கிறார்.)

**கரட :** கங்காஜலம் தலையிலே ஊற்றியாகி விட்டதா என்ன? பந்துலு! எங்க பெண்ணை எங்கே அழைத்துக் கொண்டு போகிறீர்?

**ராம :** (கரடக சாஸ்திரியிடம்) ஒரு செய்தி (இருவரும் இரகசியமாக பேசுகின்றனர்.)

**ராம :** (லுப்தாவதானியை இடது பக்கமாக அழைத்து) இரண்டாயிரத்து இருநூறு ரூபாய் கேட்கிறான். யாரோ இரண்டாயிரத்து முன்னூறுக்கு கேட்டார்களாம்.

**லுப்தா :** இதுதானா நீங்கள் எனக்கு செய்த சகாயம். பரவாயில்லை இரண்டாயிரத்துக்காவது முடியுங்கள்.

**ராம :** உபகாரம் செய்ய வந்ததற்கு என்னையா சொல்கிறீர்கள்? விரும்பி நாம் கேட்டால் திரும்பிக்கூட பார்க்கமாட்டேனென்கிறார்கள். நான் என்ன செய்வது? (கரடக சாஸ்திரியுடன் இரசியமாய் பேசி திரும்பி வந்து

லுப்தாவதானியிடம்) மாமா! ரொம்பவும் மன்ருடி முடிவில் ஒப்பவைத்தேன். பெண்ணுக்கு நகை செய்து போட்டால் ஒழிய முடியாதென்று பிடிவாதம் செய்கிருன். என்ன சொல்கிருய்?

**லுப்தா :** அதெல்லாம் என்ஞல் முடியாது.

**ராம :** சும்மா இருங்கள்! இப்படித்தான் சொல்வாய்! மதுரவாணியின் நகையை கொண்டுவந்து அந்நேரத்துக்கு காட்டிவிட்டுப் பிறகு திருப்பிக் கொடுத்து விட்டால் போகிறது.

**லுப்தா:** அதென்னமோ? நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

**ராம :** நானே பார்த்துக் கொள்கிறேன். செலவைச் சுருக்கி கொஞ்சத்திலே நன்ருக நடத்தி விடுவோம். போலி செட்டியை சபிளக்கு வைக்காதீர்கள். பெரிய பாளையம் பந்துக்களை யார் போய் அழைக்கிறது?

**லுப்தா :** எனக்கு யார் இருக்கிருர்கள்? நீங்கள்தான் அழைக்கணும்.

**ராம :** பந்துக்களை அழைக்கப் போகும்போது துணிமணிகள் நன்ருக இருக்கவேண்டும். எல்லாம் ரெடி செய்து வைக்கிறேன். (செல்கின்றனர்.)

## காட்சி—2

இடம்: லுப்தாவதானியார் வீடு.

**ஷப்தா:** ஆமாம். நீங்கள் சொன்ன பேச்சு சரியாகத்தான் இருக்கிறது. திவ்ய ஸ்தலங்களில் ஒரே நாள் கல்யாணம் செய்வது வழக்கம்தான்.

**கரட:** பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள்கூட இப்பொழுதெல்லாம் ஒரே நாள் கல்யாணம்தான் செய்கிருர்கள். இந்த ஊரில் கோதண்டஸ்வாமி சுயம்புவானவர். ஆஞ்சநேயரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவராயிருக்கும் போது திவ்யஸ்தலமில்லை என்று யார் சொல்வார்கள்?

**லுப்தா:** அது சரிதான். ஆனுல் இந்த ஊரை திவ்யஸ்தலமாக நினைத்து இதுவரைக்கும் இங்கே யாரும் ஒரே நாள் கல்யாணம் செய்யவில்லையே. எல்லாரும் மூன்று நாள் கல்யாண விசேஷம் செய்தார்கள். நாம் மட்டும் செய்தால் என்ன சொல்வார்களோ?

**கரட:** திவ்யஸ்தலம் ஆனபிறகு யார் என்ன சொன்னாலும் நமக்கென்ன நஷ்டம்?

**லுப்தா:** அப்படியானால் பந்துலுவிடம் சொல்வோம்.

**கரட:** என்ன பத்தாம் பசலியாக இருக்கிறீர்களே மச்சான். இந்த கல்யாண சாக்கிலே நாலு காசு சம்பாதிக்கலாமென்று பார்க்கும் பந்துலுவும் போலி செட்டியும் ஒரே நாள் கல்யாணத்திற்கு சம்மதிப்பார்களா? தாலி கட்டி முடியும்வரை அந்த பேச்சை அவர்களிடம் சொல்லாதீர்கள்.

**லுப்தா:** பந்துலுவிடம் சொல்லாவிட்டால் என்ன குறும்பு செய்வாரோ?

**கரட:** நீங்களேன் பயப்படுகிறீர்கள்? அவன் உங்களுக்கு எஜமானனா? ஏதாவது குறும்பு கிறும்பு செய்தால் பல்லை உடைத்துவிடுகிறேன்.

**லுப்தா:** உங்களால் முடியாது. ஆனாலும் நம்ம சித்தாந்தியிடம் அஞ்சு ரூபாய் கொடுத்தால் அந்த தொல்லைகள் எல்லாம் அவன் தன் தலைமேலே போட்டுக்கொள்வான். அவன் எதிரே இந்தப் பந்துலுவால் வாய் திறக்க முடியாது.

**கரட:** பாம்பு விஷத்துக்கே மருந்திருக்கும்போது பந்துலுவுக்கிருக்காதா? (செல்கின்றனர்.)

## காட்சி—3

இடம்: லுப்தாவதானியார் வீட்டில் பின்புறம்.

[கரடக சாஸ்திரியும் மீனாட்சியும் பிரவேசிக்கின்றனர்.]

**மீனா:** உங்கள் மகளை என் கண்போல பார்த்துக்கொள்ள மாட்டேனா தாத்தா.

**கரட:** கண்ணல்லவா? அதனால்தான் அடிக்கடி சொல்கிறேன். அவளுக்கு தாயும் நீதான். தந்தையும் நீதான். (வருந்துவதாக நடிக்கிறான்.)

**மீனா:** வருந்தாதீர்கள் தாத்தா. அவளுக்கு எந்தக் குறையும் வரவிடமாட்டேன்.

**கரட:** அம்மா உனக்குத் தரும்படி என் குழந்தையிடம் ஒரு நகை தந்திருக்கிறேன், வாங்கிக்கொள்.

**மீனு:** கொடுப்பாள், இப்போதென்ன அவசரம் தாத்தா. அவளிடம் இருந்தால் என்ன? என்னிடமிருந்தா லென்ன?

[சித்தாந்தி வருகிறார்.]

**சித்:** இவ்வளவு நேரமும் காய்கறி நறுக்கவும் சமையலுக்கு தயார் செய்யவுமாக இருக்கிறார்களே தவிர லக்கினத் துக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தயார் செய்வதிலே அக்கரையே இல்லை. என் சிஷ்யன் எருமை மாடு போலத் தூங்குகிறான்.

**மீனு:** விடிந்த பிறகு நாலு நாழிகைக்குத்தானே லக்கினம். அதற்கு இப்போதே அவசரப் படுத்துவானேன்?

**சித்தா:** படிக்கப்போட்டால் உள்ள அறிவும் போச்சுதாம். விடிய நாலு நாழிகை இருக்கும்போதுதான் சுப முகூர்த்தம்.

**மீனு:** எங்கப்பா எப்போதுமே இப்படித்தான். எந்த விஷயத்தையும் வீட்டிலுள்ள சிறுக்கிகளிடம் உள்ளதை சொல்லாவிட்டால் எப்படி கட்டியழுவதாம்? அப்பா! அப்பா!

**லுப்தா:** (வந்துகொண்டே) ஏன் இந்த கூச்சல்?

**மீனு:** விடிய நாலு நாழிகை இருக்கும்போதே முகூர்த்த மென்று சித்தாந்தி மாமா சொல்கிறார்.

**லுப்தா:** அதென்னங்க! நாலு நாழிகைக்கே முகூர்த்தம் வைத்துவிட்டீர்கள்?

**சித்:** நாற்பது நாழிகைக்கு வைக்கவா? உங்க பைத்தியக் காரத்தனத்தை கட்டிவைத்துவிட்டு விரைவாக மங்கள ஸ்னானம் செய்யுங்கள். பிராமணர்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

**லுப்தா:** கொன்றுவிட்டீர்களே! குளிர் — அப்படியானல் ராமப்பந்துலு விடிந்த பிறகு நாலு நாழிகைக்கு முகூர்த்தம் என்று நினைத்துக்கொண்டானே. அவன் வந்து பெரியபாளையம் பிராமணர்களை நாலு நாழி கைக்கு அழைத்து வருவானே என்னவோ?

**சித்தா:** சதான் தம் கூபம் ப்ரவிசன்தி. அம்மா பெண்ணுக்கு ஸ்னானம் செய்யுங்கள்.

**மீனு:** இதோ நிமிஷத்தில் செய்விக்கிறேன்.

**சித்:** பெண்கள் பரவாயில்லை. கல்யாணப் பந்தலில் ஏற்பாடுகளைக் கவனிக்கிறேன்.

**லுப்தா:** பந்துலு இல்லாமல் முகூர்த்தம் நடந்தால்...

**சித்:** கல்யாணம் உங்களுக்கா, பந்துலுவுக்கா? பேசாமல் ஸ்னானத்தை முடியுங்கள். (போகிறான்.)

## காட்சி—4

இடம்: லுப்தாவதானியார் வீட்டுத் திண்ணையில்.

[மஞ்சள் வேட்டி உடுத்திக்கொண்டு லுப்தாவதானியும் ஸ்திரீ வேஷத்திலுள்ள சிஷ்யனும் சில பிராமணர்களும் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள். ராமப்பந்துலு மேள தாளத்தை அழைத்துக்கொண்டு வந்து திண்ணையில் அலுப்போடு அமர்ந்து.]

**ராம:** அப்பப்பா! எவ்வளவு சிரமப்பட்டேன். (வேலைக்காரர்களிடம்) நாகசுரத்தை நிறுத்திச் சும்மா இருக்கச் சொல். பல்லக்குத் தூக்குகிறவர்களும் நாயனம் வாசிப்பவர்களும் ஊர் சேரும்போது சத்தம் பெரிதாகப் போடுவார்கள். கால் தேய்ஞ்சு போச்சி. பெரிய பாளையம் எவ்வளவு தூரம் இருக்கிறது? (திரும்பிப் பார்த்து) இதென்ன மஞ்சள் வேட்டியும் பெண்ணோடு ஒன்றாக உட்கார்ந்து கொண்டிருப்பதும்? மாப்பிள்ளையாகிவிட்டாரயென்று? முதுமையிலே ஆசை ஜாஸ்தி (அதிகம்).

**லுப்தா:** முகூர்த்த வேளைக்கு நீங்கள் இல்லாமற் போய் விட்டீர்களே என்று ரொம்ப வருத்தப்பட்டேன்.

**ராம:** (திடுக்கிட்டு) என்ன? முகூர்த்தமா? அதென்ன?

**பூசாரிகவரய்யா:** முகூர்த்த வேளைக்கு நீங்கள் இல்லாமற் போய்விட்டீர்களே என்று நாங்கள் எல்லோரும் வருத்தப்பட்டோம். நீங்கள் ஏதோ விவகாரத்தாலே வர முடியவில்லை என்று நினைத்துக் கொண்டோம். நீங்கள் இல்லாததால் சபை அழகே இல்லாமற் போய் விட்டது. ஒரு பாட்டுக்கூட...

**ராம:** சும்மா உளருதே. முகூர்த்தத்துக்கு முன்பே எப்படித் தாலி கட்டினாய்யா?

**பூசாரி:** *சித்தாந்தியார் நக்ஷத்திர நாழிகை கணக்கெல்லாம் பார்த்து சரியாக முகூர்த்த வேளைக்குத்தான் தாலி கட்டினார்.*

**ராம:** *இன்னும் நாலு நாழிகைப் பொழுதாகவில்லையே?*

**பூசாரி:** *விடிய நாலு நாழிகை இருக்கும்போதல்லவா முகூர்த்தம்?*

**ராம:** *சித்தாந்தி, விடிந்த நாலு நாழிகைக்கு முகூர்த்த மென்று சொன்னானே!*

**பூசாரி:** *பஞ்சாங்கத்தை யாராவது மாற்ற முடியுமா ஐயா! விடிவதற்கு நாலு நாழிகை இருக்கும்போது முகூர்த்தமென்று சொல்லி இருப்பார். நீங்கள் பராக்கில் கேட்டிருப்பீர்கள்.*

**ராம:** *பஞ்சாங்கத்திற்குப் பஞ்சமா இந்தப் பட்டிக் காட்டிலே. சித்தாந்தி ஆடியதே ஆட்டம். பாடியதே பாட்டு. எவ்வளவு பெரிய துரோகம் செய்துவிட்டான் அந்தச் சித்தாந்தி?*

**பூசாரி:** *சித்தாந்தி எவ்வளவோ வருத்தப்பட்டார், நீங்கள் வரவில்லையென்று. என்ன தடையோ என்று லுப்தாவ தானியார் தவியாய்த் தவித்தாருங்க. நாதசுர சப்தம் கேட்டபிறகல்லவா அவர்கள் மனசு நிம்மதியடைந்தது.*

**லுப்தா:** *நிஜந்தான் மாமா.*

**பூசாரி:** *இன்னும் மதுரவாணி அந்தப் பந்துலுக்கருகே ஆடாமல் அசையாமல் தங்கப்பதுமை மாதிரி நின்று கொண்டிருந்தாளே தவிர, பிராமணர்கள் எல்லோரும் எவ்வளவு கெஞ்சியும் பாடவே இல்லீங்க.*

**கொண்டிபொட்டு:** *அவ்வளவு நேரமும் ஏட்டையாவுடன் பேசிக்கொண்டு நின்றாளே தவிர இத்தனை பேர் கேட்ட தற்கு ஒரு பாட்டாவது பாடக் கூடாதோ?*

**மற்றொருவன்:** *அடே முட்டாள்! பந்துலு சபையில் இல்லாதபோது எப்படிடா பாடுவாள்?*

**பூசாரி:** *ஏட்டையாவோடு என்ன பேசினாளென்று நினைக் கிறாய்? பந்துலு பணத்தோடு போனாரே என்ன ஆபத்தோ, முகூர்த்த வேளைக்கு வந்து சேரவில்லை. ஜவான்களை அனுப்பித் தேடச் சொல்லுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.*

**கொண்டி:** *இந்தக் கவரய்யா சரடு விடுகிறார்டா! ஏட்டையா வும் அவளும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து சிரித்துக்*

கொண்டிருந்தால், பந்துலு வரவில்லை என்று ஏங்கிக் கொண்டிருந்ததாகக் கற்பனை செய்கிறார்.

**ராம:** வைதிகம்! வைதிகம்! இந்த இழவை எல்லாம் கட்டி யழாமல் உங்க வேலையை நீங்கள் பாருங்கள்.

**பூசாரி:** சும்மா இரு கொண்டிபொட்டு! சிறிசு பெரிசு தெரிய வேண்டாமா?

**ராம:** உன் பெருந்தன்மை என்ன வாழுதாம்? நீதான் முதலிலே கிளப்பினாய்.

**பூசாரி:** அதனாலென்னங்க! ஹி...ஹி...ஹி...!

**ராம:** அவனெங்கே? அவன் பேரென்ன?

**பூசாரி:** யாருங்க?

**ராம:** அவன்தான், அந்தக் குண்டூர் சாஸ்திரிகள் எங்கே ஐயா?

**பூசாரி:** எந்தக் குண்டூர் சாஸ்திரிகள்?

**லுப்தா:** அவரா? வந்து...வந்து...அவர் ஊருக்குப் போய் விட்டார்.

**ராம:** என்ன முட்டாள்தனமான பேச்சு! மகளுக்குக் கல்யாணம் நடக்கும்போது ஊருக்குப் போய்விட்டானா?

**லுப்தா:** கல்யாணம் ஆய்விட்டதல்லவா?

**ராம:** வடிகட்டின முட்டாள்தனம். முகூர்த்தம் நான் இல்லாதபோது நடத்திவிட்டாய்! கல்யாணம் மூன்று நாளைக்காவது நடக்குமல்லவா?

**பூசாரி:** ஒரே நாள் கல்யாணம்தானுங்க. அதனாலே பிரதான ஹோமம் சேஷஹோமம் எல்லாம் ஆய் விட்டதுங்க.

**ராம:** (திடுக்கிட்டு லுப்தாவதானியிடம்) என்ன நம்பிக் கைத் துரோகம் ராஸ்கல்! முட்டாள்!

**பூசாரி:** (வாயை மூடி) ஐயா! ஐயா! பொறுங்கள், பொறுங்கள். (லுப்தாவதானியைப் பார்த்து) காலிலே விழப்பா! (பந்துலுவைப் பார்த்து) நீங்கள் நடத்திய சுபகாரியம்; வேறொன்றும் சொல்லாதீர்கள். சித்தாந்தி யும் இவர் மாமாவும் சாஸ்திர சர்ச்சை செய்து முகூர்த்தத்துக்கு ஒரு நாழிகைக்கு முன்புதான் ஒரே நாள் கல்யாணம் என்று முடிவு செய்தார்கள்.

**ராம:** என்ன சதித்திட்டம்? அவனுக்கு பணம் தரவில்லையே?

**லுப்தா:** நாளைக்குப் பணம் கட்டவில்லை என்றால் தாவா

செய்வான் என்று அவசரப்படுத்தி ரூபாய் வாங்கிக் கொண்டு போய்விட்டார். திரும்பி ஒரு வாரத்திலே வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

**ராம:** நான் தரகனாக இருக்கும்போது நானில்லாமல் இந்த விவகாரத்தை எப்படி பைசல் பண்ணுவாய்? நான் எவ்வளவு அட்வான்ஸ் அவனுக்குத் தந்தேனோ, உனக்குத் தெரியுமா? அதற்குள்ளாகவே மாமாவோடு சேர்ந்துகொண்டு எனக்குக் குல்லா போடுகிறாயா?

**லுப்தா:** நீங்கள் நிர்ணயித்தபடியே ரூபாய் கையில் தராமல் தாலி கட்டவிடமாட்டேன் என்று சொல்லிவிட்டான். என்ன செய்வது?

**ராம:** தாலி கட்டாவிட்டால் குடி முழுகியா போய்விடும்? நான் வருவதற்கு முன்பே என்ன கொள்ளை போகுது? அவன் என்னவோ பெரிய வேலை செய்துவிட்டு, நான் வந்தால் பிடித்துக் கொள்வேனென்று ரூபாயைக் கையில் வாங்கிக்கொண்டு கம்பி நீட்டிவிட்டான். அவன் பேர் என்ன?

**பூசாரி:** அவன் பேரா? வந்து...வந்து...அவதானியாருக்குத் தெரியும்.

**லுப்தா:** எனக்குத் தெரியாது.

**ராம:** அட அப்பாவி மனுஷா! இனி அவன் திருட்டுப்பயல் என்பதில் சந்தேகமென்ன?

**லுப்தா:** அவனை நீங்கள்தானே பெரிய மனுஷன் என்று சொன்னீர்கள். அதனாலேதான் நானும் நம்பினேன்.

**ராம:** நீ நம்பினாலென்ன, நம்பாவிட்டாலென்ன? அவனுக்குக் கல்யாணச் செலவுக்கு என்று தந்த நூறு ரூபாயும் எடுத்து வை.

**லுப்தா:** யாரிடம் தந்தீர்களோ அவனிடமே கேளுங்கள்.

**ராம:** சரிதான். உன்னிடம் கேட்கமாட்டேன். இனி உன்னோடே பேசவே மாட்டேன். இனி உன் வீட்டில் ஒரு நிமிஷங்கூட இருக்கமாட்டேன். (எழுந்து) எல்லோரும் கேளுங்கய்யா! இந்தக் குண்டூர் சாஸ்திரிகள் பெரிய திருட்டுப் பயல். இல்லையென்றால் இந்த அறிவில்லாதவன் கொடுத்த ரூபாயை எடுத்துக்கொண்டு பேர்கூடச் சொல்லாமல் போய் ஒளிந்து கொள்வானா? என் பணத்தைக்கூட எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டான். அவன் நடவடிக்கைகளைப் பார்த்தால்

இரண்டாந்தாரத்துப் பெண்ணையோ, விதவைப் பெண்ணையோ, கீழ்சாதிப் பெண்ணையோ இந்த அறிவில்லாதவன் இரண்டாம் புருஷனாக, விற்றுவிட்டுப் பறந்தோடிவிட்டான் என்று தோன்றுகிறது. ஆகையால் ஏ, குப்பா! ஏ, சுப்பா! ஏட்டையாவிடம் போய் ரெண்டு போலீஸ்காரர்களைக் கூட்டிக்கொண்டு வா. அவனை எப்படியாவது கண்டுபிடித்து உதைப்போம்.

[மேலும் பேசிக்கொண்டிருக்கும்போதே, சித்தாந்தி வந்து ராமப்பந்துலு பேசி முடிந்து வெளியேற முயலும்போது கையைப் பிடித்து நிறுத்துகிறான்.]

**சித்தா:** எங்கே போகிறீர்? கொஞ்சம் நில்லுங்கள்.

**ராம:** என்ன பலவந்தம் செய்கிறாய்?

**சித்தா:** குண்டூர் சாஸ்திரிகளின் பெயரென்னவென்று உங்களுக்குத் தெரிய வேண்டுமா?

**ராம:** என்ன பெயர்?

**சித்தா:** பேரி, ராமசாஸ்திரிகள், அவர் பெயர் உனக்கெதற்கு?

**ராம:** அவன் எனக்குப் பணம் தரவேண்டும்.

**சித்தா:** அவன் உங்களுக்கு ஒரு தம்பிடிகூட பாக்கி தர வேண்டியதில்லை. அந்த உண்மை எனக்குத் தெரியும்.

**ராம:** கையை ஏன் அழுத்துகிறாய்?

**சித்தா:** வைதீகர்களின் கை மெதுவாக இருக்குமா? லுப்தாவதானியார் தந்த பணத்தில் மீதி எவ்வளவிருக்கிறதோ சொல்லுங்கள்.

**ராம:** நீ யார் கேட்பதற்கு? அண்ணா! கையை அழுத்துகிறாயே! அடிக்கப் போகிறாயா என்ன?

**சித்தா:** சுபவேளையிலே மணமகளை விதவை கிதவை என்றால் யாராவது சும்மா இருப்பார்களா?

**ராம:** விதவையில்லை. சுமங்கலிதான். கையை விட்டுவிடு.

[லுப்தாவதானி சிஷ்யனுக்கருகே செல்கிறார்.]

**சித்தா:** கோபம் வந்தாலும் சுபாவத்தை மறக்கக் கூடாது. நீங்கள் பெரியவர்கள். நாங்கள் உங்களை அண்டியிருக்கிறோம். உங்கள் நன்மைக்குத்தான் சொல்கிறேன். இப்படி வாருங்கள்.

**ராம:** மரியாதையாகப் பேசினுல் என்னைப்போன்ற நல்லவன் இருக்கமாட்டான்.

**சித்தா:** அவதானிகளே! நீங்கள் கூட இப்படி வாருங்கள்.

[லுப்தாவதானி, சித்தாந்தி, ராமப்பந்துலு மூவரும் ரகசியமாகப் பேசுகின்றனர்.]

**ராம:** (உற்சாகத்துடன்) சித்தாந்தி, எங்கே கொஞ்சம் பொடி கொடுங்கள். யாரய்யா சமையல்காரர்? எங்கள் வீட்டுக்குப் பலகாரங்கள் எல்லாம் போய் விட்டதா? கொண்டிபட்டு! ஒரு சங்கதி. நீ இப்படி வா.

[கொண்டிபட்டு வருகிருன்.]

**கொண்:** என்ன உத்தரவு?

**ராம:** எங்கள் வீட்டுவரைக்கு என்னுடன் வா.

**கொண்:** சித்தம்.

**ராம:** எங்கள் தோட்டத்தில் நல்ல பலாக்காய்கள் இருக்கின்றன. இரண்டு பறித்துத் தருகிறேன். கொண்டு போ. உங்களப்பாவுக்கு பலாக்காய் என்ருலே ரொம்ப இஷ்டம்.

**கொண்:** சித்தம்.

**ராம:** கல்யாணத்திலே என்னப்பா புதிர்?

**கொண்:** புதிரொன்றும் இல்லேங்க.

**ராம:** மதுரவாணி பாடவில்லேயே ஏன்?

**கொண்:** பாடினுள்...

**ராம:** ஆ......!

**கொண்:** இல்லேங்க.

**ராம:** அப்படிச் சொல். அவ்வளவு நேரமும் ஏட்டையாவுடன் பேசிக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது.

**கொண்:** இல்லேங்க. ஒரு பேச்சுக்கூட பேசவில்லே.

**ராம:** அவள் பேசினுள் என்று இவ்வளவு நேரமும் ஏன் சொன்னுய்?

**கொண்:** வந்து...வந்து...வந்து...காம்பொட்டு அப்படிச் சொல்லச் சொன்னுனுங்க.

**ராம:** அவன் வேலேயைத் தொலேக்கிறேன் பார். என்னேடா குறும்புத்தனம் செய்கிருன்? நீ மட்டும் அவனேடு சேராதே! சிறு வயசிலிருந்தே உன்னே எனக்குத் தெரியும். நீ ரொம்ப உண்மையானவன்.

கொண்: ஆமாமுங்க; நான் எப்போதும் உண்மையைத் தான் பேசுகிறேன்.

ராம: சரிதான்; ஆனாலும் ஏட்டையா விஷயமாக மட்டும் உண்மை சொல்லமாட்டேன் என்கிறாய். உன் குல தெய்வத்தின்மீது சத்தியம் செய்து உண்மையாகச் சொல்லு. மதுரவாணி யார் யாருடன் பேசினாள்?

கொண்: வந்து...வந்து...உண்மையைச் சொல்லிவிடவா?

ராம: உண்மையானவன் என்றுதானே உன்னைக் கேட் கிறேன்.

கொண்: அப்படியானால்...எல்லோருடனும் பேசினாள்.

ராம: எல்லோரும் என்றால் யார் யார்?

கொண்: யார் யாரா? கல்யாணத் திண்ணையை விட்டுவிட்டு எல்லோரும் மதுரவாணியைச் சூழ்ந்துகொண்டோம். செட்டியாருடன் பேசினாள். இன்னும் வந்து...

ராம: இன்னும் யாருடன் பேசினாள்.

கொண்: சித்தாந்தி மந்திரம் ஓதுவதை மறந்துவிட்டு மதுரவாணி காதிலே மறைவாக ஏதேதோ பேசினார்.

ராம: இன்னும் யாருடனே?

கொண்: வந்து...வந்து...ஏட்டையாவோடு!

ராம: அடே அற்பா! ஏட்டையாவுடன் பேசவில்லை என்றாயே?

கொண்: ஆமாம்; பேசவில்லை!

ராம: ஜாக்கிரதை! பேசினாளா, பேசவில்லையா?

கொண்: தொலைஞ்சேண்டா கடவுளே!

ராம: பொய் சொன்னால் எனக்கு ரொம்பக் கோபம் வரும். சத்தியமாக உண்மையைச் சொல். பொய் சொன்னால் தலை வெடித்துவிடும். பேசினாளா? இல்லையா?

கொண்: இல்லை.

ராம: சத்தியமாகச் சொல்.

கொண்: சத்தியமாகத்தான்.

ராம: இப்போதுதான் உண்மையைச் சொன்னாய். கேட்டாயா! நீ இளைஞன். பெண்கள்மீது அனியாய மாக ஒருவர் சொல்லச் சொன்னாலும் சொல்லக்கூடாது. தெரிந்ததா?

கொண்: மதுரவாணி மிகவும் நல்லவள்.

**ராம:** ஊரில் அப்படிச் சொல்லிக்கொள்கிறார்களா?

**கொண்:** எல்லோருமே சொல்லிக்கொள்கிறார்கள்.

[ராமப்பந்துலுவின் வீட்டுக்கெதிரே]

**ராம:** நான் கதவைத் தட்டுகிறேன். நீ ஒரு சிறிய வேலை செய்யணும்.

**கொண்:** அப்படியே!

**ராம:** இந்த ரூபாயை மடியில் வைத்துக்கொள். எங்கள் வீட்டுப் பின் சுவருக்கப்பால் ஒரு நாழிகை நில். கொல்லைப்புற வழியில் எட்டையாவாவது மற்ற யாராவது வந்தால் கையைப் பிடித்துக்கொண்டு கூச்சல் போடு. நான் வருகிறேன். இல்லையென்றால் விட்டுவிடு. (கொண்டுபட்டு போகிறான்) கதவைத் திற! கதவைத் திற! (தனக்குள்) உடனே கதவைத் திறக்க மாட்டேனென்கிறாளே! சந்தேகத்திற்குக் காரணம்? இவன் உண்மையைச் சொன்னானா, பொய்யைச் சொன்னானா? நான் பாளையத்திலிருந்து வந்து செய்தி யனுப்பிய பிறகு வராமல் சரேலென்று கல்யாணத்திற்கு எனக்கு முந்தி ஏன் ஓடினாள்? கதவைத் திற! கதவைத் திற! இன்னும் வரவில்லையே. (மதுரவாணி கதவைத் திறக்கிறாள்) இவ்வளவு நேரமும் என்ன செய்தாய்?

**மதுர:** காலையிலிருந்து ராத்திரிவரை செய்யும் வேலைகள் எல்லாம் நாளையிலிருந்து எழுதி வைக்கிறேன்; வாருங்கள்.

[இருவரும் செல்கின்றனர். கொண்டுபட்டு வருகிறான்.]

**கொண்:** பந்துலு! பந்துலு!

[ராமப்பந்துலு மதுரவாணியுடன் வருகிறான்.]

**ராம:** (மதுரவாணியிடம்) நீ உள்ளே போ! (கொண்டுபட்டு விடம்) என்ன?

**கொண்:** வந்து...வந்து...பிடிக்கவில்லை?

**ராம:** (கோபமாக) ஏன் பிடிக்கவில்லை.

**கொண்:** சொல்லத்தகாததை (பன்றி) எப்படிப் பிடிப்பது?

**மதுர:** சொல்லத்தகாததை ஏன் பிடிக்கணும்?

**கொண்:** கொல்லைப்புற வழியே யார் வந்தாலும் பிடித்துக் கொண்டு கூச்சல் போடும்படி பந்துலு சொல்லி யனுப்பினார்.

**மதுர:** என்ன அதிசயம்! கேவலம். பார்ப்பானுக்குப் பைத்தியம் பிடிக்கிறது போலிருக்கிறது.

**ராம:** (மதுரவாணியின் பின்னால் நின்றுகொண்டு கை சாடையால் கொண்டுபட்டுவைப் போகும்படி சைகை செய்து) உளறுவாய்ப் பார்ப்பான். ஏதோ குறும்புக்குச் சொன்னால் உண்மை என்று நினைக்கிறயே.

[உள்ளே போகிறான்.]

[ராமப்பந்துலு வீட்டுக்குள் போனதும் மதுரவாணி பின்பக்க வாசல் வழியாகக் கதவிலிருந்து கொண்டு, கொண்டுபட்டுவை உள்ளே வரும்படி சைகை காட்டுகிறாள். அவன் வரவும் முத்தமிடுகிறாள்.]

**மதுர:** (மெதுவாக) நல்லவேளை! காப்பாற்றினாய்.

**கொண்:** மதுரவாணி, இதோ பந்துலு தந்த அரை ரூபாய். இதோ ஏட்டையா தந்த அரை ரூபாய். இந்தா இதோடு வைத்துக்கொள். (தருகிறான்).

**மதுர:** (வாங்கிக்கொண்டு) நீ நல்லவன். இன்றிலிருந்து உனக்கும் எனக்கும் சினேகம். தெரிந்ததா? (மறுபடியும் முத்தமிட்டு) இனி, போகலாம்.

[கொண்டுபட்டு தாண்டிக் குதித்து வீதி நடுவே குதிப்பாட்டம் போடுகிறான். காம்பட்டு வருகிறான்.]

**காம்பட்டு:** என்ன குதிப்பாட்டங்கள்?

**கொண்:** முத்தமிட்டாள்டா.

**காம்:** பைத்தியக்கார வேஷமெல்லாம் போடாதே. இந்தக் குரங்கு மூஞ்சியை பார்த்தா?

**கொண்:** போடா பைத்தியம். நாங்கள் சினேகமாகி விட்டோம்.

[போகின்றனர்.]

## காட்சி 4

இடம் : கிருஷ்ணராயபுரம் அக்ரகாரம்.

[அக்கினி ஹோத்திராவதானி வீட்டின் முன் புறத்தில் கிரீசம் வேலையாட்களைக் கொண்டு பந்தல் போட்டுக்கொண்டிருக்கிறான்.]

**கிரீ:** என்னப்பா, இடது கன்னம் சிவந்திருக்கிறது?

**வெங்:** அப்பா பல்லை உடைத்துவிட்டார்.

**கிரீ:** என்ன செய்தாய்?

**வெங்:** சந்தியா வந்தனம் செய்யவில்லை என்று...

**கிரீ:** இதுகூடத் தெரியாதா? சந்தியா வந்தனம் செய்வது போல பாசாங்கு செய்வதுதானே?

**வெங்:** பார்க்கமாட்டார் என்று நினைத்தேன்.

**கிரீ:** நினைக்கிறதெல்லாம் சமயத்துக்கு உதவாது மச்சான். நாம் ஏதாவது வேஷம் போட்டால் ஒருவன் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் ஒரேமாதிரியாக இருந்தால்தான் தப்பிக்கலாம். தினந்தோறும் நான் எவ்வளவு நேரம் கொக்குமாதிரி தியானம் செய்கிறேன் என்று பார்க்கவில்லையா?

**வெங்:** என்னவென்று தியானம் செய்கிறீர்கள்?

**கிரீ:** என்ன தியானமா? இந்தப் பிராமணன் எப்போது பூசையை முடிப்பான், எப்போது நம் இலையிலே சோறு விழும் என்று ஒரே தியானம் செய்கிறேன்.

**வெங்:** மந்திரங்களைப் படித்து கடவுளைத் தியானம் செய்ய வேண்டுமேயன்றி, சோற்றுக்காகத் தியானம் செய்தால் பாபம் இல்லையா?

**கிரீ:** இக்னொரன்ஸ். மத சம்பந்தமான சங்கதிகள் உனக்கொன்றும் தெரியாது. இந்தக் கல்யாணம் முடிந்த பிறகு உன்னை மத, தத்துவங்களிலே தேர்ச்சியடைய வைக்கிறேன். எல்லா மதங்களையும் பரிசீலித்து அவற்றிலுள்ள எஸ்ஸென்சை (சாரம்) எடுத்து ஒரு புதிய மதம் ஏற்படுத்தியிருக்கிறேன். அதை அமெரிக்காவிற்குச் சென்று பிரச்சாரம் செய்து நிலைநாட்டப் போகிறேன். இப்போதைக்கு உன் சந்தேகத்தைத் தீர்க்கிறேன். என்ன சொன்னாய்? சோற்றையா தியானிப்பது என்றுதானே? உன் உபநிஷத்திலே என்ன சொல்லியிருக்கிறது தெரியுமா? ''அன்னம் ப்ரஹ்மேதி வ்யஜானாத்''

அன்னமே பிரம்மம் என்று தெரிந்துகொள் என்கிறது. வெள்ளைக்காரன் தினந்தோறும் என்னவென்று தியானம் செய்கிறான்? "பாதர் கிவ் அஸ் அவர் டெய்லி ப்ரைட்" அதாவது, "என்னை ஈன்ற தந்தையே தினந்தோறும் ஒரு ரொட்டித் துண்டைத் தா" என்றுதான். இனி நாம் என்னவென்று தியானிப்பது? "தந்தையே, தினந் தோறும் பருப்புஞ் சோறும் தருவாயாக" என்று தியானம் செய்யவேண்டும். நமது *சமகத்தில் என்ன சொன்னான்? "ஸ்யாமகாஸ் சமே". "சம்பாச் சோறு மிக நன்றாயிருக்கிறது. எனக்கு வேண்டும் தெய்வமே!" என்றான். இந்தச் சமகத்தில் யாருக்கு எது வேண்டு மானாலும் சேர்த்துக்கொள்ளலாம். பருப்பும் சமகம் தான். பெருங்காயமும் சமகம்தான். இதைத்தான், †ரிலிஜஸ் ரிபார்மர் என்கிறார்கள்.

**வெங்:** எருமைத் தயிரும் சமகந்தான். வடையும் சமகந் தான்.

**கிரீ:** சபாஷ்! அதுதான் ஒரிஜினாலிடி. கேட்டாலன்றி தாய் கூடத் தரமாட்டாள். கடவுள் மட்டும் முத்தங் கொஞ்சுவார் என்று நினைத்தாயா? உனக்கு எப்போது எது வேண்டுமானாலும் அப்போது அந்தப் பொருளைச் சேர்த்துச் சொல்லி சமகபாராயணம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

**வெங்:** அப்படியானால் நான் தினந்தோறும் நாளையிலிருந்து சமகபாராயணத்தை ஆரம்பிக்கிறேன்.

**கிரீ:** மனதிற்குள் செய்யவேண்டும். வெளிப்படையாகச் சொன்னால் உங்கப்பாவிற்கு எஜுகேஷன் இல்லாததால் ரீசம் தெரியாமல் இதென்னடா சமகத்தைப் பாழ் செய் கிறான் என்று இரண்டு உதை கொடுத்து ஒன்பதாவது கனமந்திரத்தைப் பாராயணம் செய்யச் சொல்வான்.

**வெங்:** முந்தாநாள் செட்டியார் வீட்டிலிருந்து நீங்கள் புகையிலைக் கட்டை எடுத்துக்கொண்டு வந்தீர்களே, பாபம் செய்தீர்கள் என்று கடவுள் உங்கள்மேல் கோபப் படமாட்டாரா?

**கிரீ:** சிறு வயசிலே எங்கள் சித்தப்பன்—உங்கப்பாவைப் போல சாப்பாட்டுராமன்தான்—என் காதைத் திருகி என்னை உபநிஷத்துக்களைப் படிக்கச் சொன்னான். அந்த

---

* சமகம்; பிராமணர்கள் ஓதும் மந்திரம். † மத சீர்திருத்தம்.

இழவு பேர் மறந்துவிட்டது, ஏதோ ஒரு உபநிஷத்திலே சிஷ்யன் கேள்வி கேட்டுக்கொண்டிருக்க, குரு பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். அந்த உபநிஷத்திலே சொன்ன சிஷ்யனைப் போன்ற சிஷ்யன்தான் நீ. அப்படிப்பட்ட குரு நான். நம்முடைய கேள்வி பதில்களை யாராவது பனையோலையிலே எழுதித் தொலைத் தானுனல், ஒரு இருநூறு வருஷங்கள் கழிந்த பிறகு, "டொபாக்கோபனிஷத்" (புகையிலை உபநிஷத்து) ஆகி விடும். புகையிலைக் கட்டினுல் பாபம் என்னப்பா? எரித்து சாம்பலாக்குவதொரு பாவமா? அதுவும் பொடி செய்கிற புத்தியற்றவர்களிடமிருந்து புகையிலையைக் கொண்டு வருவது பரோபகாரம்தானே!

**வெங்:** எப்படிங்க பரோபகாரம்?

**கிரீ:** எப்படியா? இதோ பார். இப்படிச் சுருட்டைக் குடித்தால் ஸ்டீம் என்ஜின்மாதிரி குப் குப் என்று புகை ஆகாசத்துக்குப் பறந்தோடி மேகமாகி மழை பொழி கிறது. பொடியாக உறிஞ்சினுல் தும்மலினுல் ஆகாசமே அதிர்கிறது. மூக்கிலிருந்து தூளிகள் பெய்து உடலும் உடையும்கூட அழுக்காகிவிடுகிறது. ஆகையால் பொடி செய்கிற மூடர்களின் வீட்டிலிருக்கிற புகையிலையை எல்லாம் களவாடி, சுருட்டாக்கி எரிக்க வேண்டியது தான். ஒருவேளை கிரீசம் அவர்களே, தாங்கள் திருட்டுத் தனம் செய்தீர்கள். சில நாட்கள் நரகத்திற்கு விஜயம் செய்யுங்கள் என்று கடவுளே சொன்னுலும் ஒரு சிறிய லெக்சர் செய்து திகைக்க வைத்துவிடுவேன்.

**வெங்கடேசம்:** என்னவென்று லெக்சர் செய்வீர்கள்?

**கிரீ:** என்னவென்ரு? ஓ! கடவுளே! என் மனதை இன்டி பெண்டண்ட்டாக (சுதந்திரமாக) சிருஷ்டித்தீர்களா? அல்லது டிபெண்டண்டாக சிருஷ்டித்தீர்களா? இண்டி பெண்டண்டாகச் சிருஷ்டித்தால் என் இஷ்டப்படி யெல்லாம் நான் செய்தேன். என்னைக் கேட்க நீ யார்? இப்படிப்பட்ட சிக்கல்கள் எல்லாம் வைத்தால் ஹெவ னில் (சுவர்க்கம்) சிறிய நேஷனல் காங்கிரஸ் ஒன்று உண்டாக்கிவிடுவேன். அல்லது என்னை டிபெண்டண் டாக (பராதீனமாக) செய்தாயா? அப்படியானுல் நீயே என் மூலம் பாபத்தைச் செய்வித்தாய். ஆகையால் உனக்கே அந்தத் தண்டனை வேண்டியது. தேர்போர் சலோ! நரகத்திற்கு சலோ! அங்கிருந்து நீ திரும்பி

வரும் வரைக்கும் அஞ்சு நாழிகை சுவர்க்கத்தில் உன்னுடைய அதிகாரம் எனக்குத் தந்தால் கொஞ்சம் சிருஷ்டியிலுள்ள குறைபாடுகளைச் சீர்திருத்தி வைக்கிறேன் என்பேன்.

வெங் : என்ன குறைகள்?

கிரீ : சாமானியமான குறைகளா? உன் மூலமாகவே ஒப்ப வைக்கிறேன் நம்பர் ஒன். உங்கள் வாத்தியாரைப் போன்ற உபயோகமில்லாதவனைப் பிறப்பித்தது குறையா, இல்லையா?

வெங் : குறைதான்.

கிரீ : உன் சிஸ்டர் போன்ற ப்யூட்டிபுல் யங் கேளை விடோவாகச் செய்தது தப்பென்கிறயா? சரியென்கிறயா?

வெங் : தப்புத்தான்.

கிரீ : இப்படிப்பட்ட தப்புந்தவறும் குறையும் குற்றங்களும் கோடி கோடி. இனி அனாவசியமான சிருஷ்டிகள் எத்தனை இருக்கிறது என்கிறாய்? எத்தனை சமுத்திரங்கள் இருக்கின்றன? சொல் பார்க்கலாம்.

வெங் : ஏழு.

கிரீ : ஏழும் பாழாய்ப் போச்சு! பாற்கடல் இருக்கும்போது வேறே தயிர்க்கடல், நெய்க்கடல் எதற்கப்பா? இது ப்ளியோனிசம். அதாவது கூறியது கூறல் என்னும் குற்றம். இன்னுமொரு முட்டாள்தனம் பார்த்தாயா? எதற்கும் உதவாத உப்புக்கடலை நம் தலையிலேயே போட்டுவிட்டு, கருப்பஞ்சாறு பால், தயிர், நெய்க்கடல்களெல்லாம் எங்கோ யாருக்கும் எட்டாத தூரத்திலே வீசி எறிந்து விட்டான். ஒரு வருஷம் மட்டும் எனக்கு கடவுள் மந்திரி பதவி தந்தால் பீமபட்டணத்திலே பாற்கடலும் விசாகப்பட்டினத்திற்கு நன்னீர்க் கடலும் சென்னைப் பட்டணத்திற்குக் கரும்பம் சாற்றுக் கடலும் கொண்டுவருவேன். இந்த ஈஸ்டான் காட்'ஸ் (கிழக்குத் தொடர்ச்சி மலைகள்) முழுதும் புகையிலைக் காடாகச் செய்வேன். இப்படி லெக்சர் செய்ததும் கடவுள் என்ன செய்வார் தெரியுமா? இவன் பெரிய ஆளாக இருப்பான் போலிருக்கிறது. முன்பு 'புது எமனா, பழைய எமனா?' என்று கேட்ட பெரிய மனுஷனைவிட ஒரு படி அதிகம் படித்தவன் போலத் தெரிகிறது. ஆகையால் இவனுக்கு ஒரு ஜோடி குதிரை பூட்டிய ரதத்தைத்

தந்து சுவர்க்கத்தில் இருக்கிற எல்லா மகால்களும் பூங்காக்களும் காட்டி, எது வேண்டுமோ அதைக் கொடுக்கும்படி தேவதூதர்களுக்குக் கட்டளை இடுவார். என்சிஷ்யன் வெங்கடேசத்தைக் கூட்டிக்கொண்டு வந்தாலன்றி எனக்கொன்றும் வேண்டாம் என்று சொல்வேன். அப்போது உன்னை புஷ்பக விமானத்தில் ஏற்றிக் கொண்டு வருவார்கள். நாமிருவரும் சுவர்க்கத்தில் ஆனந்தமாக இருப்போம். இப்போதைக்கு மதத்தைப் பற்றி இவ்வளவு சொன்னது போதும். இனி கோயில் நந்தவனத்திலே விளையாடப் போ. சாயங் காலம் உங்கப்பா வரும்போதுமட்டும் விளக்கெதிரே இருந்துகொண்டு புஸ்தகத்தைப் புரட்டிக்கொண்டு புளியோதரைச் சோற்றுக்குத் தியானம் செய். பெருங்காயம் போட்டு பிரமாதமாக புளியோதரை தயார் செய்கிறேன். (வெங்கடேசம் போகிறான்.) ரன் அவே. (புச்சம்மா வருகிறாள்)

புச்ச: இந்த உரல் நிறைய பனை ஓலைத் துண்டுகள் விழுகின்றன. கொஞ்சம் இந்தப் பக்கம் நகர்த்தி வைக்கிறீர்களா?

கிரீ: இதென்ன பெரிய வேலை? (கிரீசம் உரலை பந்தலுக் கப்புறம் நகர்த்துகிறான். புச்சம்மா உரலைக் கழுவி பருப்பு ஆட்டுகிறாள்.)

கிரீ: (பாடுகிறான்) "பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் பஜ மூடமதே!" என்ன அண்ணி. கண்ணீர் விடுகிறீர்கள்?

புச்ச: ஒன்றுமில்லை.

கிரீ: நீங்கள் கண்ணீர் விட்டால் என் மனம் கலங்குகிறது.

புச்ச: உங்களுக்கென்ன மகாராஜாக்கள். எங்கள் கஷ்டம் எங்களைத்தானே வாட்டும்.

கிரீ: என்ன இப்படி இரக்கமில்லாத பேச்சைச் சொல்கிறீர்கள்? நீங்களிப்படி துக்க சாகரத்திலே மூழ்கிக் கிடந்தால் எனக்கேனிந்தப் பாழான வாழ்க்கை? உங்களுக்காக எதைச் செய்யவேண்டுமானாலும் அதைச் செய்வேனே. உயிரைக் கொடுக்கச் சொன்னாலும் தந்துவிடுவேனே. நீங்கள் மட்டும் சொல்லுங்கள். இதோ அரிவாள்மணை.

**புச்ச :** (அரிவாள்மணையை அருகில் இழுத்துக்கொண்டு) என் தங்கச்சியின் இந்தச் சம்பந்தத்தைத் தடுக்க முடிய வில்லையல்லவா?

**கிரீ :** அது ஒன்று மட்டும் என்னுல் முடியவில்லை.

**புச்ச :** அப்படியானுல் உங்களோடு எனக்கென்ன வேலை? இவ்வளவு தடபுடலாக கல்யாண வேலைகளைச் செய் கிறீர்களே, எங்கள் அப்பாவுக்குத்தான் தோன்ற வில்லை என்ருல் உங்களுக்காவது தோன்ற வேண் டாமா? இந்தச் சம்பந்தத்தை நிறுத்த வேண்டும் என்று உங்களுக்குக்கூட அவள்மீது இவ்வளவு இரக்கமில்லையா? லுப்தாவதானி உங்களண்ணு என்றுதான் போலிருக் கிறது உங்களுக்கும் சந்தோஷமாக இருக்கிறது.

**கிரீ :** எனக்கா சந்தோஷம்? எத்தகைய கொடுஞ் சொல்லைச் சொன்னீர்கள். இந்த சம்பந்தம் நடக்கிறதே என்று என் மனசில் எவ்வளவு வருத்தப்படுகிறேன் என்று அந்த பகவானுக்குத்தான் தெரியும். இந்த சம்பந்தத் தைத் தடுக்கவேண்டுமென்று சொல்லிவைத்து புத்தி சொல்லி எங்களண்ணுவுக்கு இரண்டுதரம் கடிதம் எழுதினேன் காதில் போட்டுக்கொள்ளவில்லை. நான் என்ன செய்வது? அவனை நினைத்தாலே பாவம் வரும். சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தால் உங்கப்பா என்ன நினைப்பாரோ என்று உங்கள் வீட்டில் ஏதாவது வேலைகள் செய்துகொண்டு, உனக்கு என்றைக்காவது இரக்கம் வராதா என்று, ஒருத்தனுக பத்தாள் வேலை யைச் செய்து கொண்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இந்த நம்பிய வேலைக்காரன் உன் மனதிற்கு பாரமாகத் தோன்றினுல் யாருக்கும் தெரியாமல் இன்று ராத்திரியே எழுந்து எங்கள் ஊருக்குப் போய்விடுகிறேன்.

**புச்ச :** போய்விடாதீர்கள்.

**கிரீ :** நான் மட்டும் எப்படிப் போவேன். எத்தனையோ தடவைகளில் என்னை சொல்லிக் கொள்கிறேன் தெரியுமா? இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியவில்லை யல்லவா? என் உயிரைவிடப் பிரியமான இந்தத் தங்க விக்கிரகம் போன்ற புச்சம்மாவை சுமங்கலியாகச் செய்ய முடியவில்லையல்லவா? என்று விரத்தியடைந்து, வெளியேறி விடுவோம் என்று நிச்சயிக்கும்போது கால் முன்னுக்குப் போனுல் மனது பின்னுக்கிழுக் கின்றது. வெளியே போய்விடலாம் என்று நினைத்

தாலும், என் புச்சம்மா காணப்படாத இடத்திலே எப்படிப் போய் வாழ்வது? அவளுக்குக் கொஞ்சம்கூட இரக்கம் இல்லாவிட்டாலும் இங்கேயே கிடந்து, பார்த்தாவது சந்தோஷப்படுவோம் என்று இங்கேயே இருக்கிறேன்.

**புச்ச:** நீங்கள் சொன்னால் லுப்தாவதினியார் கல்யாணம் வேண்டாமென்று சொல்லிவிடுவாரென்று தம்பி சொல்கிருனே.

**கிரீ:** நான் சொல்கிற பேச்சை இந்தப் பூலோகத்திலே எவனுமே மீறமாட்டான். ஆகையால் வெங்கடேசம் அப்படிச் சொல்லி இருப்பான். ஆனாலும் உங்கப்பா ஒன்று, எங்களண்ணு ஒன்று—இந்த இருவரும் உலக விதியைக் கடந்தவர்கள். இவர்கள் பிரம்மா சொன்னு லும் கேட்கமாட்டார்கள். இவருக்கு முன்கோபம். அவன் சுத்தக் கஞ்சன். எங்க அண்ணன் சுகப்படவா இந்தக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கிருன்? உன் புருஷன் உன்னைக் கட்டிக்கொண்டு எவ்வளவு சுகத்தை யடைந்தானே அதே மாதிரிதான் எங்களண்ணுவும் உன் தங்கையைக் கட்டிக் கொண்டு சுகமடையப் போகிருன். ஆப்பிரிக்கா தேசத்திலே ஸ்லேவரி —அதாவது அடிமை — முறை என்று ஒன்று இருக்கிறது. அதாவது ஆட்களைப் பிடித்துக்கொண்டுபோய் மாடுகள் மாதிரி பஜாரில் விற்கிருர்கள். யார் வாங்குகிருர்களோ அவர்கள் வீட்டில் அந்த ஆள் வாழ்நாள் முழுதும் உழைக்கவேண்டும். அது மாதிரிதான் எங்களண்ணன் உன் தங்கையைக் கல்யாணம் என்கிற சாக்கிலே வாங்கு கிருன். அவன் வீட்டில் இவள் சம்பளம் இல்லாத கூலி யாளாக வேலைவெட்டி செய்வாள் என்பது அவனுடைய நம்பிக்கை. நான் கூடாதென்று எவ்வளவோ சொல்லி யும் கேட்கவில்லை. இந்தக் கஷ்டமெல்லாம் இப்படி இருக்க எனக்கு மற்ருெரு பயம் தோன்றுகிறது. சொன்னல் கோபிக்க மாட்டாயே?

**புச்ச:** நீங்கள் என்ன சொன்னலும் கோபம் வராது.

**கிரீ:** இவ்வளவு தைரியம் சொன்னல் போதாதா? வேறென்ன வேண்டும்? ராமச்சந்திரபுர அக்கிரகாரத் திலுள்ளவர்கள் ரொம்ப மோசமான அயோக்கியர்கள். எங்களண்ணு செத்த பிறகு உன் தங்கையை நேர்மை யோடு வாழ விடமாட்டார்கள். அவளும் எங்கள் மீனட்சி மாதிரி ஆகிவிடுவாள்.

**புச்ச:** மீனாட்சிக்கு என்ன குறை வந்துவிட்டது?

**கிரீ:** என்னவென்று சொல்வது? சொல்லவே வாயெழவில்லை. ஆனாலும் உன்னிடம் நான் ஏன் மறைக்க வேண்டும்? அவள் புருஷன் போன பிறகு வருஷா வருஷம் வயிற்றில் போட்டுவிடுவதும் அதைக் கரைப்பதுமாக இருக்கிறாள். ஒவ்வொரு சமயம் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். அந்த ஊரில் ராமப்பந்துலு என்றொரு பரம அயோக்கியப்பயல் இருக்கிறான். அவன் ஒரு தாசியை வைத்துக்கொண்டிருக்கிறான். எத்தனையோ குடும்பப் பெண்களைக் கெடுத்தவன். எங்களண்ணா விவகாரங்களை எல்லாம் அவன்தான் மேற்பார்க்கிறான். எங்களண்ணா செத்த உடனேயே உன் தங்கைக்கு நிறையச் சொத்து கைக்கு வரும். சுதந்திரமும் கிடைக்கும். என்ன என்று கேட்பவனிருக்க மாட்டான். இனி கெட்டுப்போவதற்குத் தடை என்ன இருக்கிறது. "நான் கட்டோடு இருக்கிறேனே" என்று நீ சொல்லலாம். உன் புருஷன் சொத்து உன் கைக்குக் கிடைக்கவில்லை. புருஷன் வீட்டுக்குக்கூட போகவே இல்லை.

**புச்ச:** ஆமாம்.

**கிரீ:** தாய் தந்தையர்களின் நிழலிலேயே கட்டுப்பட்டு இருக்கிறாய். அடுத்தவன் வீட்டில் அடி எடுத்து வைக்கவில்லை. ஆனாலும் இப்படி எத்தனை காலத்துக்கு ஓடும்? உன்னைத் தாய் தகப்பன்மார் என்றென்றைக்கும் காப்பாற்ற முடியாதல்லவா? அவர்கள் கண்ணுக்குப் பிறகு உனக்குச் சுதந்திரம் கிடைக்கப் போகிறது. எப்போதும் மனசு இப்படியே இருக்குமா? அப்போது கால் வழுக்கிய பிறகு நீ என்ன நினைப்பாய்? "ஐயோ! அன்றைக்கு கிரீசத்தை சாஸ்திர விதிப்படி கல்யாணம் செய்துகொண்டு சுமங்கலியாகி இருந்தால் குழந்தை குட்டிகள் உண்டாகி பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்வேனல்லவா? இந்த இழிநிலை வந்திருக்காதல்லவா?" என்று வருத்தப்படுவாய். அப்போது நான் எங்கிருப்பேனோ? சுவர்க்கத்தில் உனக்காக எதிர் பார்த்துக்கொண்டிருப்பேன். இந்தக் கல்யாணம் முடிந்ததும் வெங்கடேசமும் நானும் பட்டணத்துக்குப் போய் விடுவோம். உன்னை நினைத்து நினைத்து ஊணுறக்கமின்றிச் சில நாட்கள் இருப்பேன். எவ்வளவு காலம் வரைக்கும் மனுஷன் ஊண் உறக்கமின்றி

யிருப்பான்? உன்னை நினைத்துக்கொண்டு நினைத்துக்கொண்டு, உறக்கம் பிடிக்காமல் ராத்திரி ரெண்டாம் சாமத்தில் என் அறையில் ஈஸிசேரில் உட்கார்ந்துகொண்டு இருக்கும்போது—எதிரே மேசைமேல் மின்சார விளக்கும் சுவரில் கண்ணாடியும் இருக்கிறது—அந்தக் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக்கொண்டு என்ன சொல்வேன் தெரியுமா? "இந்த அழகிய முகம். இந்தத் தாமரை இதழ்போன்ற கண்கள். இந்த அரும்பும் இளமீசை. இதெல்லாம் வீண்தானே? யார் கண்டு ஆனந்தமுறவோ? என் புச்சம்மா என்னைக் கல்யாணம் செய்யாத பிறகு எனக்கு வாழ்வு எதற்கு? என்று நினைவு வந்து படீரென மேசைச் சொருகைத் திறந்து அதிலுள்ள இரட்டைக் குழாய் ரிவால்வரால் நெஞ்சில் வைத்து இதயம் ஊடுருவும்படியாக சுட்டுக் கொள்வேன்.

**புச்ச :** சுட்டுக் கொள்ளாதீர்கள். நீங்கள் இப்படிச் சொன்னால் எனக்கு அழுகை வருகிறது.

**கிரீ :** உடனே தேவர்கள் புஷ்பக விமானத்தை அனுப்பி என்னை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார்கள். சுவர்க்கத்திற்குப் போனேன் என்று அங்கு மட்டிலும் எனக்கு சுகம் கிடைக்குமென்று நினைக்கிருயா? சர்வாலங்காரமுடன் ரம்பை அன்னம்போல அருகே, "ஹா! காதலா! கிரீசம்! உன்னைப்போன்ற அழகுள்ளவனை என்றும் நான் கண்டதில்லை, வா. என்னை ஏற்றுக்கொள்" என்று கையை பிடித்திழுப்பாள். நான் என்ன சொல்வேன் தெரியுமா? 'சீ! அப்புறம் போ. நான் பிரம்மச்சாரி. வேசி தொட்டால் புனிதத் தன்மை கெட்டுவிடும். லைப்பாய் சோப்புப் போட்டுக் கழுவினாலன்றி இந்தக் கைக்கு மலினம் போகாது. நீயா ரம்பை? என் புச்சம்மாவின் அழகுக்குக் கால்தூசி பெறமாட்டாய். தூரப் போ! டர்ட்டீகூஸ், என்று சொல்வேன். அப்படியே மேனகா, ஊர்வசி, திலோத்தமை முதலிய எல்லா அப்ஸரஸ்திரீகளையும் ஏறிட்டும் பார்க்க மாட்டேன். பின்பு காவியுடை தரித்து கற்பக விருட்சத்தின் நிழலிலே, "ஹா! புச்சம்மா! புச்சம்மா!" என்று உன் பெயரை ஜபித்துக்கொண்டு அநேக வருஷங்கள் பத்மாசனத்திலே இருப்பேன். பிறகு சில காலம் கழித்து என் தவம் பலித்து, நீ நந்தவனத்திலே சந்திரோதயம்போலப் புறப்பட்டு வருவாய். நான்

"ஹா. காதலி! எத்தனை காலத்திற்கு பிறகு இன்று வந்தாய்?" என்று சரேலெனப் பாய்ந்து உன்னைத் தழுவிக் கொள்வேன். அப்போது உன் முதற் புருஷன் கிழட்டுப் பயல் வேட்டி கட்டிக்கொண்டு பொடி மூக்குடனே, 'புச்சம்மா என் மனைவி' என்று எதிரே வரப் போகிறான். "கிழட்டுப்பயலே! நீ புச்சம்மாவுக்குத் தகுதியில்லை. உன் பணத்தை நீ எடுத்துக்கொண்டு போ" என்று விரட்டியடித்து விடுவேன். நாம் இருவரும் ஆனந்தமுடன் சாஸ்வதமாக இருப்போம்.

**புச்ச :** அழுது கொண்டிருந்தவளைச் சிரிக்கவைத்து விடுகிறீர்கள்.

**கிரீ :** நீ என்னைக் கல்யாணம் செய்துகொண்டால், நாம் வாழ்நாள் முழுவதும் சிரித்துக்கொண்டே ஆனந்தமாக வாழலாம். அப்போது உன்னை இப்படி பருப்பாட்டிக் கொண்டிருக்க விடுவேனா? நமக்கெத்தனை வேலைக்காரர்கள் இருப்பார்கள்? எத்தனை பணியாட்கள் இருப்பார்கள்? தோட்டந்துரவுகள்! குதிரை வண்டிகள்! உன்னை நடக்க விடுவேனா? பூவைப்போலத் தலைமேல் வைத்துக் கொள்வேன். அப்போது உனக்கு உண்டாகும் இன்பத்தை நினைத்துக்கொள்.

**புச்ச :** என் ஜன்மத்துக்கு இன்பம் வேறுண்டா?

**கிரீ :** நான் உனக்குத் தாசனாகி, "இதோ என்னை ஏற்றுக் கொள். என்னை மணந்து இந்த ஜன்மத்தில் இன்புற்று என்னையும் இன்பத்திலாழ்த்து" என்று கெஞ்சிக் கேட்கிறேன். நீயோ இப்படிப்பட்ட சுலபமாக வரும் சுகத்தைக் காலால் எற்றிவிட்டுப் போய் என் வாழ்க்கையையும் பாழாக்குகின்றாய். நான் என்ன செய்வது?

**புச்ச :** உங்கள் வாழ்விற்கென்ன குறை? நீங்கள் மகாராஜாக்கள்!

**கிரீ :** நீ என்னை மணந்தால் நான் மகாராஜாத்தான் ஆவேன். உன் வாயால் வந்த சொல் வீணாகக் கூடாது. ஆகையால் என்னோடுகூட வந்துவிடு.

**புச்ச :** ஐயையோ! அப்பா! நான் உங்களோடு வர மாட்டேன்.

**கிரீ :** சரி. வராவிட்டால் நான்தானே உயிர் விடுவேன்? பீடை தொலைந்தது.

**புச்ச :** அப்படி எல்லாம் சொல்லாதீர்கள்.

கிரீ : நடப்பதைச் சொன்னுலென்ன? நான் எப்படிப் போனுலென்ன? உன் தங்கச்சிமீதுகூட உனக்கிரக்கம் இல்லையே?

புச்ச : அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?

கிரீ : நிஜமாகவே இரக்கம் இருக்கிறதா?

புச்ச : இல்லாமல் இருக்குமா?

கிரீ : இருந்தால் இந்தக் கல்யாணத்தை நிறுத்தும் உபாயம் உன் கையில்தான் இருக்கிறது.

புச்ச : என் கையிலா?

கிரீ : நிச்சயமாக.

புச்ச : என்ன புதுமையாகப் பேசுகிறீர்கள்?

கிரீ : இந்தப் பூவுலகத்தில் உள்ள எல்லாப் பெண்களிலும் உன்னை ஒருத்தியை மட்டும் காதலித்து நான் உனக்குக் கீழ்ப்படிவதாலல்லவா என் பிழைப்பு சிரிப்புக்கிடமாகி விட்டது.

புச்ச : உங்கள் மேலாணை! அப்படிச் சொல்லாதீர்கள்.

கிரீ : போகட்டும்; இதோடு விட்டாயே. ஒரு சொல் எனக்கு பிரமாணம் செய்து சொல். உன் தங்கை கல்யாணத்தை நிறுத்த உன்னுல் ஆகுமானுல் செய் வாயா ?

புச்ச : செய்யமாட்டேனு?

கிரீ : என்னமோ! செய்வாயோ, செய்யமாட்டாயோ? செய்வேன் என்று பிரமாணம் செய்தால்தான் நான் அதைச் சொல்வேன்.

புச்ச : என்னவென்று பிரமாணம் செய்யச் சொல்கிறீர் கள்?

கிரீ : என்மீது பிரமாணம் செய்.

புச்ச : உங்கள்மீது பிரமாணம்தான். சொல்லுங்கள்.

கிரீ : அப்படியானுல் கேள். தனிமையாகப் பார்த்து இந்தச் சங்கதியைத்தான் ரகசியமாகச் சொல்லலாமென்று காத்துக் கிடந்தேன். இப்போது உங்கப்பா ஊருக்குப் போனதாலும் உங்கம்மா வாசலிலிருப்பதாலும் சமயம் கிட்டியது. காது கொடுத்துக் கேள். உன் தங்கச்சி கல்யாணத்தை நிறுத்துவதற்கு இந்த ஒரு சாதனம்தான் இருக்கிறது. அதென்னவென்ருல் நீ முன்பின் யோசிக் காமல் என்னேடுகூட வந்து என்னை மணந்து கொள்

வதுதான். இல்லை என்றால் உன் தங்கச்சியின் கல்யாணம் நிற்காது.

**புச்ச :** (புன்சிரிப்புடன்) நான் உங்களோடு வந்துவிட்டால் என் தங்கச்சி கல்யாணம் நின்றுவிடுவதெப்படி? என்ன விதித்திரங்கள்?

**கிரீ :** இதை நீயே ஒப்புமாறு செய்கிறேன் பார். கேள். கல்யாணத்திற்கு நாம் போகும்போது இரண்டாம் நாள் ராத்திரியில் வண்டிக்காரன் கையில் அஞ்சு ரூபாய் தந்து உன் வண்டியைப் பாதையிலிருந்து விலக்கி அனகாபல்லி ரோடு வழியாக வேறு வழியே விட ஏற்பாடு செய்கிறேன். நீ பிரிந்து அங்கேயிருந்து ராம வரம் வரைக்கும் என் சிநேகிதர்களுடன் வண்டியில் போய் ஊர் சேர்வாய். ராமவரத்தில் திருமணம் செய்துகொண்டு நாம் ஆடிப்பாடி ஆனந்தமாக இருப்போம். இனி உங்களவர்கள் சங்கதி என்னவாகும்? நாம் தப்பிவிட்ட மறுநாள் விடியற்காலையில் உன் வண்டியைக் காணுமல் கலவரப்பட்டு அவர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்வார்கள். உன் தங்கையின் திருமணம் நின்றுவிடும். பிறகு ரெண்டு நாளைக்குள் நாம் கல்யாணம் செய்துகொண்ட செய்தி தெரியும். உன்னைக் கிழவனுக்குக் கட்டிக் கொடுத்ததனுல் வந்த சிக்கல்களைப் பார்த்து உங்கப்பா உன் தங்கைக்கு மறுபடியும் கிழவனுக்குக் கொடுத்து சம்பந்தம் செய்ய மாட்டார். உங்கப்பா ஒருவேளை பிடிவாதமாகக் கல் யாணம் நடத்த வேண்டும் என்றுலும்கூட, நம் கதையைக் கேட்ட பிறகு எங்களண்ணு உன் தங்கையைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டான். இது என் சித்தாந்தம். உண்டா, இல்லையா?

**புச்ச :** இருக்கலாம்.

**கிரீ :** அப்படியானுல் அதற்குச் சம்மதந்தானு?

**புச்ச :** எதற்கு?

**கிரீ :** என்னேடு கூட வருவதற்கு?

**புச்ச :** ஐயோ! அம்மா! என் உயிர் போனுலும் நான் உங்களுடன் கூட வரமாட்டேன்.

**கிரீ :** வராவிட்டால் உன் தங்கை திருமணமும் தப்பாது; என் சாவும் தப்பாது.

**புச்ச :** அப்படிச் சொல்லாதீர்கள்.

**கிரீ :** சொல்லாமலிருந்தால் சாவு நின்றுவிடுமா? நீயில்லாமல் நான் வாழ முடியாது. அது ஒரு சாவு. நீ என்மேல் பிரமாணம் செய்து அதில் தவறுவதால் பகவானே என்னைக் கொன்றுவிடுவார். அது இரண்டாம் சாவு. ஆகையால் எனக்கு எப்படியும் நிச்சயமாகச் சாவுதான்.

**புச்ச :** என்றால் நீங்கள் செத்துவிட்டால் நானும் செத்துவிடுவேன். நீங்கள் சாகக்கூடாது.

**கிரீ :** அது என் கையிலிருக்கிறதா? அதோ உன் தம்பி வருகிறான். பிறகு நாம் இந்தச் சுக துக்கங்களைப்பற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காது. ஒரே பேச்சாகச் சொல். வாழச் சொல்கிறாயா? சாகச் சொல்கிறாயா?

**புச்ச :** ஆயிரமாண்டு வாழுங்கள்!

**கிரீ :** அப்படியானால் என்னோடு வருவது உறுதிதானா?

**புச்ச :** என்ன செய்யச் சொல்கிறீர்களோ அதைச் செய்கிறேன். (வெங்கடேசம் வெட்டுக்கிளியைப் பிடித்துக் கொண்டு வருகிறான்.)

**வெங் :** இதோ பாருங்கள்! கிளியைப் பிடித்துவிட்டேன்.

**கிரீ :** பார்த்தாயா அண்ணி! உன் தம்பி சிறு பயலானாலும் இப்போதே 'கிளி'களைப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

**புச்ச :** (புன்சிரிப்புடன்) வெட்டுக்கிளி.

**கிரீ :** (புச்சம்மாவிடம்) இத்தனை நாளைக்கு இந்தக் 'கிளி' கையில் கிடைத்தது. (வெங்கடேசத்தைப் பார்த்து) இப்படித் தா. வெட்டுக்கிளிகளைப் பிடிப்பது நல்ல எஜுகேஷன். இதைத்தான் நேச்சரல் ஹிஸ்டரி (இயற்கை பாடம்) என்கிறார்கள்.

**வெங் :** அக்கா! கொஞ்சம் துவையல்.

**புச்ச :** அம்மா பார்த்தால் அடிப்பாள்.

**வெங் :** அம்மா பார்க்க மாட்டாள். (துவையல் வாங்கிக் கொண்டு நாக்கால் நக்கிக்கொண்டே குதித்தோடுகிறான்.)

(திரை விழுகிறது).

# ஐந்தாம் அங்கம்

## காட்சி 1

*இடம்: லுப்தாவதானியார் வீடு.*

*[லுப்தாவதானி கட்டிலில் படுத்துக் கொண்டிருக்கிறார். தூக்கத்தில் கூச்சல் போட்டுக்கொண்டு கைகாலையுதறிக்கொண்டு எழுந்து உட்கார்ந்து நடுங்கத் தொடங்குகிறான்.]*

**லுப்தா:** *அசிரிகா! அசிரிகா! அம்மா! கொன்றுவிட்டான். ராமநாமதாரகம். ராமநாமதாரகம். ராமநாமதாரகம், ராமநாமதாரகம். இவள் என்னை இரண்டாவதாகக் கல்யாணம் செய்துகொண்ட விதவைச் சிறுக்கிதான். இவளது முதற்புருஷன்தான் பிசாசாகி விட்டான். என் கழுத்தைத் திருகிக் கொல்கிறானே. என்ன செய்வேன்? ராமநாமதாரகம். ராமநாமதாரகம்.*

**அசிரி:** *(கதவுக்கப்பாலிருந்து கொண்டு) என்ன சாமி? என்ன சாமி? (கதவைத் தட்டுகிறான்.)*

**மீனாட்சி:** *என்ன அப்பா! கதவைத் திற.*

**லுப்தா:** *(தனக்குள்) கைகால் ஆடவில்லை. நடுங்குகிறது. (கதவைத் திறக்கிறான்) (அசிரிகனோடு) பயலே, நீ உள்ளே வராதே.*

**அசிரி:** *நீங்க கூப்பிடப் போயி வந்தேன். (போகிறான்).*

*[மீனாட்சி, பெண் வேஷத்திலுள்ள சிஷ்யனுடன் வருகிறாள்.]*

**லுப்தா:** *(மீனாட்சியிடம்) அந்தச் சிறுக்கியை அந்தப் பக்கமே இருக்கச் சொல்லு.*

**மீனா:** *நீ நம் அறைக்குப் போ அம்மா! (சிஷ்யன் அறைக்கப்பால் போகிறான்) என்ன அப்பா!*

**லுப்தா:** *இனி நான் பிழைக்க மாட்டேன்.*

**மீனா:** *என்ன வந்ததப்பா! வயிற்றுவலியா? வாதமா?*

**லுப்தா:** *வயிற்று வலியுமில்லை. வாதமுமில்லை. விதவைச் சிறுக்கியைக் கல்யாணம் செய்துகொண்ட நடைப்பிணம் பிழைப்பதெப்படி?*

**மீனு:** ஏனிந்த அசம்பாவிதமான பேச்சுகள், அப்பா? உங்களுக்கு இந்த இல்லாத பொல்லாத சந்தேகங்களை யார் கற்பித்தார்கள்?

**லுப்தா:** சந்தேகமா? உண்மை! உண்மை! உண்மை! ஊரெல்லாம் இதே பேச்சுத்தான்.

**மீனு:** இந்த ராமப்பந்துலுதான் இப்படிப்பட்ட அபவாதங்களை எல்லாம் பரப்புகிறுன். பார்த்தவனிடமெல்லாம் ஊதிவைத்தால் ஊரெல்லாம் சொல்ல மாட்டார்களா? தங்கம் மாதிரி இருக்கிற பெண்ணை இப்படிப்பட்ட பேச்சுகளால் கலவரப்படுத்தாதீர்கள். ஏற்கெனவே தகப்பனுர் போனதிலிருந்து அவள் ராத்திரி பகலாக அழுதுகொண்டிருக்கிறுள்.

**லுப்தா:** சிறுக்கிக்கு அப்பன் வேறு? கழுதைப்பயல்! விதவைச் சிறுக்கியை என் கழுத்தில் கட்டி என் குடியைக் கெடுத்துவிட்டான். இனிப் பிழைக்கமாட்டேன்; இனிப் பிழைக்க மாட்டேன்.

**மீனு:** விதவைச் சிறுக்கி, விதவைச் சிறுக்கி என்று அமங்கலமாகச் சொல்லாதீர்கள். நீங்களே இப்படிச் சொல்லும் போது ஊரெல்லாம் சொல்வதொரு அதிசயமா? பேசாமல் சும்மா இருங்கள்.

**லுப்தா:** சும்மா இருப்பதெப்படி? நம்ம ஊரா? உறவா? விதவைச் சிறுக்கியாக இல்லாவிட்டால் அவள் தகப்பன் பேர் கூடச் சொல்லாமல் ஓடிப் போவானேன்?

**மீனு:** சித்தாந்தியிடம் பேரைச் சொன்னுனுமே?

**லுப்தா:** அவன் தலையைச் சொன்னுன். சித்தாந்தி நாழிகைக்கொரு பெயர் சொல்கிறுன்.

**மீனு:** அவனுக்குமட்டும் புதியவன் பெயர் ஞாபகத்தில் இருக்குமா? நம்ம பெண் நம்ம வீட்டிலே இருக்கும் போது அவன் பேசினுல் உங்களுக்கென்ன பிரயோஜனம்?

**லுப்தா:** இந்தச் சிறுக்கி என் வீட்டில் இருந்தால் நான் செத்துவிடுவேன். இனிப் பிழைக்கமாட்டேன்.

**மீனு:** பைத்தியக்காரக் கூச்சல் போடாமல் சும்மா வாயை மூடிக்கொண்டிருங்கள். பக்கத்திலுள்ளவர்கள் சிரிப்பார்கள். உங்க மாமா எப்படிப்பட்ட பண்டிதர் தெரியுமா? பெரிய மனுஷர். இல்லாத பொல்லாத சந்தேகங்களெல்லாம் கொள்ள வேண்டாம். பாவம்! சிறுகுழந்தை ஏங்கித் தவிப்பாள்.

லுப்தா: அடி சிறுக்கி! அவன் ஏதாவது உனக்குக் கொடுத்தானு என்ன? அவனுக்குப் பரிந்துகொண்டு பேசுகிருயே! உனக்கும் நான் செத்துப் போகணும் போலிருக்கிறது.

மீனு: என்ன அறிவில்லாமல் பேசுகிறீர்கள்? அவர் இன்றைக்கோ நாளைக்கோ நிச்சயமாக வந்து நாம் இப்படியெல்லாம் பேசியதற்கு திட்டத்தான் போகிருர்.

லுப்தா: அவன் யார்? இனி எங்கே வரப்போகிருன்? இனி எனக்குச் சாவு நிச்சயம்தான்.

மீனு: உங்களுக்கெதற்கிப்போது சாவு வருகிறது? ஒருவேளை இரண்டாங் கல்யாணச் சிறுக்கியே யானுலும்கூட கப்சிப் என்று பேசாமல் இருக்க வேண்டுமே தவிர, இப்படிக் கூச்சல் போடலாமா? இந்தக் காலத்துப் பெண்களில் எத்தனை பேர் இரண்டங்கல்யாணம் செய்துகொண்டு சுகமாக இருக்கிருர்கள் தெரியுமா? பெண் நல்லபுத்தி சாலி. உங்க அதிர்ஷ்டத்திற்குக் கிடைத்தது. பேசாமல் இருங்கள்.

லுப்தா: என் அதிர்ஷ்டத்தில் கொள்ளி வைத்தாற்போலத் தானிருக்கிறது. உனக்கும் போதாத காலம் வந்து விட்டதா? நீ கூடச்சேர்ந்து உங்கப்பன் கண்ணைக் கட்டி இந்தச் சதி செய்து விதவைக் கல்யாணம் செய்து வைத்தாயா? ஐயோ! விதவையைக் கட்டிக் கொண்ட அற்பனே! உன் புத்தி எங்கே போச்சுடா? உன் படிப்பு எங்கே போச்சுடா? உன் வேதத்தைக் கொளுத்தணும்டா! இனிப் பிழைக்கமாட்டேன். (மீனுட்சி சிரிக்கிருள்) சிரிக்கிருயா விதவைச் சிறுக்கி? நீயும் உன் சித்தியும் சேர்ந்து என்னைக் கொன்று போட்டுவிட்டு ராஜமஹேந்திரத்துக்குப் போய் இரண்டாம் கல்யாணம் செய்து கொள்வீர்கள். எனக்குத் தெரியும். கிரீசம் சொன்னதெல்லாம் நிஜம்தான். முட்டாள்தனத்தால் காதில் விழவில்லை. என் சொத்தெல்லாம் விதவைச் சிறுக்கிகளுக்குப் போய்ச் சேருகிறது. நீ போ. நான் படுத்துக் கொள்கிறேன். (ஒருக்கணித்துப் படுத்தவாறு) மறுபடியும் வருவான் போலிருக்குதே கடவுளே!

மீனு: யாரப்பா?

லுப்தா: நீ போ! உனக்கெதற்கு? அந்தப்பயல் என் கழுத்தை நெரித்துவிடுவான். உன் ஆசையும் தீர்ந்துவிடும.

**மீனு:** நீங்களப்படிச் சொன்னுல் எனக்கு அழுகை வருகிறது. நான் இங்கேயிருந்து போகமாட்டேன். கழுத்தை நெரிக்கிறவன் யார்?

**லுப்தா:** அப்படியானுல் பக்கத்தில் இங்கேயே படுத்துக் கொள்.

**மீனு:** படுத்துக் கொள்கிறேன். எவன் உங்கள் கழுத்தை நெரிப்பவன்?

**லுப்தா:** அந்தச் சிறுக்கியின் முதல் புருஷன்தான். இது வரைக்கும் நீ வருவதற்குமுன் என் நெஞ்சுக்கு மேலே ஏறிக் கழுத்தை நெரிக்கும்போது உயிர் போய்விட்ட தென்றே நினைத்தேன்.

**மீனு:** உண்மையாகவா? கனவு கண்டிருப்பீர்கள் போலிருக் கிறதப்பா!

**லுப்தா:** கனவெங்கே கனவு! கழுத்தை நெரிக்கும் போதா கனவு?

**மீனு:** முதற் புருஷன் என்று உங்களுக்கெப்படித் தெரியும்?

**லுப்தா:** அவனே சொன்னுனே. "பயலே! என் பெண் டாட்டியைக் கட்டிக் கொண்டாய். உன்னைக் கொன்று விடுகிறேன் பார்" என்ருனே.

**மீனு:** எப்படி இருப்பான்?

**லுப்தா:** கிரீசத்தைப் போலத்தான்.

**மீனு:** கனவுதான் போலிருக்கிறதப்பா! அதையே நினைத்துக் கொண்டு படுத்ததாலே கனவிலே நம்ம கிரீசம் வந்தான் போலிருக்கிறது.

**லுப்தா:** நான் செத்தால் யாருக்குக் கவலை?

**மீனு:** அந்த பெண்ணைக் கேட்கட்டுமா?

**லுப்தா:** வேண்டாம்! வேண்டாம்! அவசரப்படாதே!

**மீனு:** என்னையும் வைகிறீர்கள். அவளுடைய செத்த புருஷன் உங்களைக் கொன்று விடுவானென்றும் பயப்படு கிறீர்கள். ஏன் இவ்வளவு சந்தேகம்? ஒரு தடவை அவளிடம் கேட்டுவிட்டால் உண்மை தெரிந்துவிடு மல்லவா?

**லுப்தா:** உண்மையை உன்னிடம் சொல்வாளா?

**மீனு:** என்னிடம் உண்மையைச் சொல்வாள். அவள் பத்தாம் பசலிப் பெண். எனக்கு எவ்வளவோ மரியாதை செய்கிருள்,

**லூப்தா:** அவளைக் கெடுத்துவிடுகிருயா?

**மீனு:** இப்படிப்பட்ட பேச்சுகளென்ருல் எனக்குப் பிடிக்காது. நீங்கள் எங்கேயோ பயந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. அதனுல்தான் கெட்ட கனவு வந்தது. அவ்வளவே தவிர, இரண்டாங் கல்யாணம் மூனும் கல்யாணம் என்று உளருகிறீர்கள். பூசாரி கவரய்யாவைக் கூப்பிடுகிறேன். அவன் மந்திரித்து விபூதி கொடுப்பான்; பூசிக்கொண்டு படுத்துக் கொள்ளுங்கள்.

**லூப்தா:** குடியைக் கெடுக்கப் பார்க்கிருயா என்ன? அவன் வந்தால் அவனிடம் என்னவென்று சொல்வது? அவளிடமே உண்மையைக் கேள்,

**மீனு:** நான் கேட்க மாட்டேனப்பா. என்மேலே சந்தேகமாகப் பேசும்போது நான் எதற்குக் கேட்கப் போகிறேன்? நான் இனி அவளோடு பேசக்கூட மாட்டேன்.

**லூப்தா:** என் கண்ணல்லவா? கேளம்மா. (மீனுட்சி போகிருள்) என்ன ஜபிக்கலாம்? காயத்திரி ஸ்மரணை செய்யட்டுமா? வேதங்கள், மகாமந்திரங்கள் எல்லாம் இந்தப் பேய்களுக்கு வெல்லக்கட்டி மாதிரிதான். சாபர மந்திரங்கள் உபதேசம் செய்வோமென்ருல், கோபித்து அடித்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. என்ன செய்வது? ராமநாமதாரக மந்திரம் ஜபிக்கிறேன். 'ராம நாமதாரகம் பக்தி முக்தி தாயகம். ஜானகீ மனேகரம் ஸர்வலோக நாயகம். ராமநாம தாரகம். ராம நாம தாரகம்.' இந்தச் சிறுக்கி வீட்டில் இருந்தால் நான் பிழைக்க மாட்டேன். ராம நாம தாரகம். ராம நாம தாரகம். ருத்திராட்சமாலை எங்கே?

[கட்டில் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு படுக்கை விரிப்பின் கீழே தடவிப் பார்த்து ருத்திராட்ச மாலையை எடுக்கும்போது மீனுட்சி வந்து.]

**மீனு:** நீங்க சொன்னது நிஜந்தானப்பா!

**லூப்தா:** நிஜமா? (கட்டிலிலிருந்து கீழே விழுகிருன்.)

**மீனு:** (எழுப்பி) அப்பா! அப்பா! விழுந்து விட்டீர்களே! என்ன?

**லூப்தா.** ஒன்றுமில்லை. நிஜந்தானு? நிஜந்தானு?

**மீனு:** நிஜந்தான். அந்தப் புருஷன் இப்போதுதான் அவளுக்கும் தென்பட்டு, "சிறுக்கி! மறுபடியும் கல்யாணமா

செய்து கொண்டாய்? உன் புதுப் புருஷன் கழுத்தை நெரித்துவிடுகிறேன் பார்" என்றாளும்.

**லுப்தா:** அய்யோ! அய்யோ! ராமப்பந்துலு வீடு சுடுகாடாக! எங்கிருந்து செய்தாண்டா எனக்காக இந்த எழவு சம்பந்தம்? இவன் பிண்டத்தைப் பூனைகளுக்குப் போடணும். அய்யோ! அய்யோ! அந்தப் புருஷப்பயல் எப்படி இருந்தானும்?

**மீனு:** அவன் தினந்தோறும் தென்படுகிறானும் அப்பா! அவனுக்கு மீசை கீசை இருக்குதாம். புதுநிறமாம்.

**லுப்தா:** அவன்தான், அவன்தான். என்ன செய்வது? இனி நான் தப்ப முடியாது.

**மீனு:** பூசாரி கவரய்யாவுக்குச் சொல்லி அனுப்புகிறேன்.

**லுப்தா:** வேண்டாம். வேண்டாம். என் பேச்சைக் கேள். அவன் வந்தால் வீட்டைப் பிடுங்கித் தின்றுவிடுவான்.

**மீனு:** தின்றால் தின்றுவிட்டுப் போகட்டும். உயிரைவிடவா பெரிசு?

**லுப்தா:** எனக்கு வேண்டாமென்றால் கேட்கமாட்டாயா? நீ என் கட்டிலின் அருகே படுக்கை விரித்துப் படுத்துக் கொள். நீ படிக்கிற பாகவத புஸ்தகத்தைக் கொண்டு வா. தலையின் கீழ் வைத்துக்கொண்டு படுத்துக் கொள்கிறேன். (மீனாட்சி போகிறாள்) (தனக்குள்) இந்தச் சிறுக்கி என்வீட்டிலிருந்துபோனாலொழிய இந்தப் பிசாசும் விலகாது. வேதம் படித்த பயல் என்மேல் விழுந்த பிறகு இவன் பிரம்மராக்ஷசாகத்தான் இருப்பானே தவிர, வெறும் பேய் அல்ல. போகட்டும். இவனுக்கே பிரார்த்தனை செய்கிறேன். "என் பெண்டாட்டியின் முதல் புருஷனே" ஆ! என் பெண்டாட்டியில்லை. தெரியாமல் சொல்லிவிட்டேன். இந்தப் பெண்ணின் புருஷனே, நீதான் உண்மையான புருஷன். நானில்லை. அவளைத் தொடமாட்டேன். நெருங்கமாட்டேன். அவளைக் கொண்டு வேலைகூட வாங்கமாட்டேன். என்னைக் காப்பாற்று. கழுத்தை நெரித்துவிடாதே. கழுத்தை நெரித்துவிடாதே. என்ன பாவம் செய்தாயோ? பேயாக இருக்கிறாய். என்னைக் கொன்றால் பிரம்மஹத்தி வந்து சேரும். பிறகு பிறப்பே இருக்காதப்பா! அய்யனே! அப்பனே! என் ஜோலிக்கு வராதே. உன் மாமாவின் கழுத்தைத் திருகு. அந்த ராமப்பந்துலுவின் கழுத்தை நெரித்துவிடு. இல்லையென்றால்...,

(கூச்சலும் அழுகையும் கேட்கிறது) அட கடவுளே! மறுபடியும் வந்துவிட்டான் போலிருக்கிறதே.

[சிஷ்யன் அழுதுகொண்டே ஓடி வந்து லுப்தாவதானியைப் பலமாகத் தழுவிக்கொள்கிறுன். மீனுட்சி சிஷ்யனை விளக்குமாற்றல் அடிக்கப் போகிறுள். சிஷ்யன் தப்பித்துக் கொள்ளவே அடிகளெல்லாம் லுப்தாவதானிக்கே கிடைக்கிறது.]

**மீனு:** சிறுக்கி! என் பவுன் எங்கே? அங்கே வைக்கிருயா, இல்லையா? என் சாவி எங்கே தாசிச் சிறுக்கி?

**லுப்தா:** என்னை அடித்துவிட்டாயே, எதற்கு? (சிஷ்யனிடம்) விடுவிடு! என்னைத் தொடாதே அம்மா! (மீனுட்சியிடம்) இவளுடைய அழுக்குடல் பட்டுவிட்டால் செத்துவிடுவேன். என்னை விடுவித்துவிடு.

[மீனுட்சி சிஷ்யனின் கையைப் பிடித்து இழுத்துக் கன்னத்தைக் கிள்ளுகிறுள். சிஷ்யன் மீனுட்சியின் கையைக் கடித்துவிட்டு ஓடிவிடுகிறுன்.]

**மீனு:** அவளப்பன் தலையிலே இடிவிழ! கையைக் கடிச்சுட்டாளப்பா! ரத்தம் சொட்டுச் சொட்டாக வடிகிறது. இவளைக் கொன்றுவிட்டு வருகிறேன்.

**லுப்தா:** எவ்வளவு கொடுமையாகச் செய்தாள் சிறுக்கி? எங்கே அம்மா கை! (துணியால் ரத்தத்தைத் துடைத்து) பவுன் கேட்டாயே யாருடையது, என்ன?

**மீனு:** இவளப்பன் எனக்குக் கொடுக்கும்படி இந்தச் சிறுக்கி கையில் கொடுத்தான். இவளது நரிவேஷத்தை நம்பி என் பெட்டிகிட்டி யெல்லாம் இவளிடமே ஒப்படைத்து அந்த பவுனையும் அவளிடமே வைத்திருக்கச் சொன்னேன். இன்று சந்தேகப்பட்டுக் கேட்டால், துணிப் பெட்டியில் வைத்தேன், சாவி தொலைந்துவிட்டது என்கிறுள். சாவியை மட்டும் கொடுக்காவிட்டால் உலக்கையால் அவள் மண்டையை உடைத்துவிடுகிறேன்.

**லுப்தா:** கை கலக்காதே. உனக்குக் கோபம் ஜாஸ்தி. கொன்றுலும் கொன்றுவிடுவாய்.

**மீனு:** செத்தால் இழுத்தெறிந்து விடுகிறேன். சிறுக்கி எப்படிக் கடித்தாள் என்று பாருங்கள். இன்னும் ரத்தம் வடிகிறது. மனுஷர் கடிக்கு மருந்தில்லையாம்.

**லுப்தா:** குங்குமத்தை வையம்மா.

**மீனு:** அவள் தலையை நசுக்கிவிட்டு வந்து பிறகு வைக்கிறேன். (மீனாட்சி போகிறாள்)

**லுப்தா:** மனசில் ஊசலாடிய சந்தேகம் தீர்ந்துவிட்டது. ஒன்று அவன் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும். அல்லது இவளாவது என்னைக் கடித்துக் கொல்லவேண்டும். எப்படியும் அவனாலோ இவளாலோ சாவு நிச்சயம். எவ்வளவு பணத்தைச் செலவழித்து வாங்கினேன்டா, இந்தச் சாவுக் கல்யாணத்தை? அய்யோ! அய்யோ! இவளை எங்கேயாவது கடத்திவிட்டால் அவன்கூட நம்மை விட்டுவிடுவான். அதுதான் சரி. எங்கே துரத்துவது. வண்டியில் ஏற்றி பட்டணத்துக்கு அனுப்பிவிடுவோம். அங்கேயும் தகப்பன்காரன் அகப்படாவிட்டால், மறுபடியும் பேயைத் தலையிலே கட்டிக் கொண்டாற்போல பிரத்யட்சமாகும். வண்டி வாடகை கொடுத்ததுதான் மிச்சம். என்ன செய்வது? என்ன செய்வதென்று ராமப்பந்துலுவிடம் யோசனை கேட்போமா? ஆகா...நல்ல யோசனை தோன்றியது. ராமப்பந்துலு எனக்குக் கட்டிவைத்த இந்தச் சிறுக்கியை அவனிடமே அனுப்பிவிடுகிறேன். தாசியோடு இவளைக் கூட வைத்துக்கொள்வான். வேண்டுமானால் பத்து ரூபாய் தக்ஷிணைகூடத் தருகிறேன். (மீனாட்சி வருகிறாள்)

**மீனு:** அந்தச் சிறுக்கியை எங்கேயும் காணவில்லையப்பா!

**லுப்தா:** கிணற்றிலே விழவில்லையே?

**மீனு:** என்னமோ!

**லுப்தா:** ஓடிப்போய்க் கவரய்யாவைக் கூப்பிட்டு அனுப்பு. அவளை நீ கொன்று விடவில்லையே?

**மீனு:** பார்த்தால்தானே?

**லுப்தா:** என்னடா இது புதுத்தொந்தரவு? (செல்கின்றனர்)

## காட்சி—2

**இடம்:** ராமப்பந்துலு வீட்டில் உள் வராண்டா.

[புக்தா, போலிசெட்டி, சித்தாந்தி, மதுரவாணி—சீட்டாடிக் கொண்டிருக்கின்றனர். பூசாரி கவரய்யா ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.]

**போலி:** என்ன மோசமான சீட்டுகளைப் போட்டாயப்பா. நீ எப்போதும் இப்படித்தான்.

**புக்:** பார்த்துப் போட்டனே என்ன. உன் தரித்திர தேவதையைத் திட்டு.

**போலி:** கவரய்யா! உன் கைவரிசையை என்னிடம் காட்டாதே. எழுந்து போ. உனக்குக் கோடிப் புண்ணியம்.

**கவ:** நான் எங்க மதுரவாணிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறேன்.

**புக்:** பார். சீட்டு தவறி விழுந்தாற்போலிருக்கிறது.

**போலி:** ஆ! பிராமணன் வேண்டுமென்றே தப்பாகப் பங்கிடுகிறுனு? தப்பாகப் பங்கிட்டால் மதியத்தைக் கூட்டி விடுகிறேன்.

**புக்:** சீட்டு மோசமாக விழுந்ததாகச் சொன்னுயே.

**போலி:** இரண்டாஞ் சுற்றிலே நாலு ஆஸ் விழுந்திருக்கக் கூடாதா?

**புக்:** போலி செட்டிக்கு சீட்டுகள் போட்டுக்கொண்டே நாலு ஆஸ் போடுகிறேன். விழுங்கட்டும்.

**போலி:** உன் விஷக் கையாலே போட்டால் உதவாக்கரைச் சீட்டுகள்தான் விழுகிறது. நல்ல சீட்டுகள் விழுமா?

**புக்:** ததாஸ்து.

**போலி:** அப்படிச் சொல்லாதே. எவ்வளவு கெட்டாலும் பிராமணன் சாபம் ரொம்பப் பொல்லாதது. (பார்த்துக் கொண்டு) சீ, மோசமான சீட்டுகள்.

**சித்தாந்தி:** ஒண்ணு, ரெண்டு.

**போலி:** இதோ பார். இப்படிச் சொன்னுல் நான் ஒப்ப மாட்டேன். ஒவ்வொன்ருகச் சொல்லணும்.

**சித்:** அப்படியானுல், சரி; ஒன்று.

**போலி:** ஒன்னு.

**மதுர:** ஒன்னு.

**புக்தா:** ஒன்னு. (சித்தாந்தி ஆலோசிக்கிருன்.)

**போலி:** என்ன யோசிக்கிருய்? கையை எடய்யா!

**சித்:** உனக்கென்ன நஷ்டம்? ரெண்டு.

**போலி:** நாசமாய்ச் போச்சு ரெண்டு.

**மது:** ரெண்டு.

**புக்:** ரண்டு (சித்தாந்தி ஆலோசிக்கிருன்.)

**போலி:** என்ன யோசிக்கிறுய்? கையை எடுத்து மதியத்தில் ஜயித்துக்கொள்.

**சித்:** நீ சொன்னதற்காக எடுக்கிறேன்.

**போலி:** ஆ! காசை வைச்சுட்டுப் பிறகு எடு. மூணுவது எடுப்பு மதியம் ஞாபகமிருக்கிறதா?

**சித்:** (தன் சீட்டைக் கீழே இருக்கும் சீட்டுடன் வைத்து) செட்டியார் தலை போயிடும்.

**போலி:** அடிக்கப் போகிறுயா?

**சித்:** அடிக்கிறதென்றுல் ஒரு விதத்திலா?

**போலி:** என் ஆட்டத்தைக் கெடுத்துவிட்டாய் ஐயரே!

**புக்:** நல்ல சீட்டு விழவில்லை என்று அழுதுவிட்டு, மறுபடியும் ஆட்டத்தைத் கெடுத்துவிட்டதாக அழுகிறுயே எதற்கு?

**போலி:** இந்த ஆட்டத்தில் மதியம் செயிக்காவிட்டால் என் பேர்...

**சித்:** செட்டியாரே வாயை மூடுகிறுயா இல்லையா?

**போலி:** வெள்ளைக்காரன் கொடி பறக்கும்போது நீ பயமுறுத்துகிறுயா? சீட்டுக் கட்டு எடுக்கவே இவ்வளவு நேரமாளுல் எப்போது ஆடுவது?

**சித்:** நீ மட்டும் மறுபடியும் பேசிணுயாளுல் சீட்டை உலைத்து விடுவேன்.

[போலி செட்டி "நான் பேசமாட்டேன் நீ விளையாடு" என்று சைகை செய்கிறுன். சித்தாந்தி ஆடுகிறுன்.]

**போலி:** மூணே மூணு துருப்புத்தான் விழுந்த தய்யரே! 'த மா ஷா தேக் கோ லங்கா கே ராஜா'

**சித்:** ஆட்டத்தைக் கலைக்கணுமா?

**போலி:** புத்தி வந்தது. புத்தி வந்தது. தோப்புகரணம் போடுறேன். இனிப் பேச மாட்டேன்; சத்தியம்.

**கவ:** எங்க மதுரவாணிமீது ஆசு கவிதை பாடுகிறேன்.

ராணியா டைமன் ராணி?
ராணியா இஸ்பேட் ராணி?
ராணியா கிளாவர் ராணி?
ராணியா ஆட்டீன் ராணி?
ராணி என்றுல் மதுர
வாணிதான் ராஜா ராணி!

**சித்:** கவரய்யா! எத்தகைய விலையுயர்ந்த பாட்டைப் பாடினாயப்பா! நான் உன்மீது ஒரு பாட்டுப் பாடுகிறேன். கேள்.

''கவரய்யா! உனக்கிணை இனி
எவரய்யா?''

**கவ:** 'எவருமில்லை யிங்கே அய்யா!'

**சித்:** இதோ ராஜா!

**போலி:** இதோ பாலத்து. [மதுரவாணி துருப்புராணியைப் போடுகிறாள்.]

**போலி:** அதோ! இந்தப் பிராமணன் கவித்வம் சொல்லி மதுரவாணியிடம் ராணி இருக்கிறதென்று சொல்லிவிட்டான். கோரம் கோரம். கவரய்யா பேசினால் நான் விளையாடமாட்டேன்.

**கவ:** போலிசெட்டி மேல் பாட்டுப் பாடி ரொம்ப நாளாகிவிட்டது. (பொடியை உறிஞ்சி) ''போலிசெட்டி முகம் பாலு ரொட்டி போலும், போலிசெட்டி மூக்கு பொடிடப்பாவாக்கும்''

**போலி:** வேண்டாம், வேண்டாம், வேண்டாம்! என் பேச்சைக் கேள். ஏதாவது வைச்சுக் கொன்றுவிடாதே. சும்மா இருக்கச் சொன்னால் கேட்கிறாயா? இந்த ஆட்டத்தில் சித்தாந்தி மதியம் வைச்சு நான் ஜெயிச்சால், உனக்குக் காசு தருகிறேன். சும்மா இரு.

**சித்:** உன் குறியிலே இடிவிழ! துருப்பு மிஞ்சிவிட்டது. மதியம். (சீட்டைக் காண்பித்து எறிகிறான்.)

**போலி:** ஆ! மூணாவது எடுப்பு மதியம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கய்யா. உன் கையாலே நல்ல சீட்டாய்ப் போடு அய்யரே! இவ்வளவு நேரமா கலைக்கிறதுக்கு? கோரம் கோரம்.

**சித்:** மொத்த மொத்தமாகக் கலந்து மதியம் உனக்குத் தருவேன் என்று நினைத்தாயா?

**போலி:** தோல் கையாலே சீட்டைப் போட்டாய். 'நரசிம்ம உன்திவ்ய நாமமந்திரத்தாலே... நரசிம்ம உன் திவ்ய...'

**சித்:** திவ்யமுமில்லை, தீபமுமில்லை. சீட்டை எடு.

**போலி:** கவரய்யா சீட்டுகள்மீது கண் திருஷ்டி போடுகிறான். நரசிம்ம உன் திவ்ய...(சீட்டை எடுத்துப் பார்த்து) சீ, மோசமான சீட்டுகளைப் போட்டாயப்பா!

**சித்:** (பங்கிடுதல் முடித்து தன் சீட்டுகளைப் பார்த்துக் கொண்டு) ம்ருத்திகாசமே.

**கவ:** போலிசெட்டிக்கு அவ்வளவு கோபமானால் நான் வீட்டுக்குப் போய் படுக்கிறேன். (கவ்ரய்யா போகிறான். மதுரவாணி பின்தொடர்ந்து போய்விட்டு மீண்டும் வருகிறாள்.)

**போலி:** சனியன் தொலைந்தது. கடவுளே! ரொம்ப மோசமான சீட்டுகள் ஒன்று.

**மது:** ஒன்னு.

**புக்:** ஒன்னு.

**சித்தா:** ஒன்னு.

**போலி:** ரெண்டு.

**மது:** ரெண்டு.

**புக்:** ரெண்டு.

[சித்தாந்தி ஆலோசிக்கிறான்.]

**போலி:** ஏன் பைத்தியக்கார யோசனைகள்? என் பேச்சைக் கேள். மூணும் மதியம் வைக்காதே. (வீதிக்கதவு தட்டும் சப்தம் கேட்கிறது)

**மது:** ராமப்பந்துலு!

**போலி:** இன்னேரம் வரமாட்டானென்று சொன்னாயே?

**மது:** வரமாட்டார் என்று நினைத்தேன். வந்துவிட்டார். என்ன செய்வது?

**சித்தா:** ஆட்டத்தைக் கலைத்துவிடு. (சீட்டைக் கீழே போடுகிறான்.)

**போலி:** மதியத்தைக் கெடுக்கவா? நான் ஒப்ப மாட்டேன். மதுரவாணி ஆட்டம் முடிந்த பிறகு கதவைத் திற.

**மது:** (சீட்டைக் கீழே வைத்துவிட்டு, எழுந்து மெதுவான குரலில்) சுவரைத் தாண்டி ஓடிவிடுங்கள்.

**புக்:** கொல்லைப்புற வழியே ஓடிவிடுவோம்.

**போலி** என்னால் முடியாதே, என்ன செய்வது?

**புக்:** நாங்கள் கொல்லைப்புற வழியே போகிறோம். நீ அட்டளையிலே ஏறு.

**போலி:** என்னை ஏற்றிவிட்டுப் போங்கள். கால் தவறி விட்டால் என்ன செய்வது?

**புக்:** உன் மகனுக்கு அதிர்ஷ்டந்தான். (பின்பக்கம் போகிருன்)

**போலி:** கோரம், கோரம், கோரம்! அவனவன் சீட்டு அவனிடமே இருக்கவேண்டும். ஆட்டத்தைக் கலைச்சிடா தீங்க!

[கதவு மறுபடியம் தட்டப்படுகிறது.]

**போலி:** நரசிம்மா உன் திவ்ய......

[மதுரவாணி சும்மா இருக்கும்படி கோபக்குறியுடன் சைகை செய்கிருள். சித்தாந்தி திரும்பி வந்து]

**சித்:** கொல்லைப்புறக் கதவு அந்தப் பக்கம் பூட்டியிருக்கிறது. நம்மைப் பிடிக்கிறதுக்காகத்தான் கொல்லைப் புறக் கதவைப் பந்துலு பூட்டிவிட்டு வருகிருன்.

**போலி:** நரசிம்ம உன் திவ்ய......

**மதுர:** (போலி செட்டியைப் பார்த்து) உஷ்! (மெதுவான குரலில்) ஆடாமல் அசையாமல் மூச்சு விடாமல் இந்த அறைக்குள் உட்காருங்கள். அவர் படுத்துக்கொண்ட பிறகு வந்து கதவைத் திறந்து விடுகிறேன்.

[மதுரவாணி விளக்கை அணைத்து வெளியே போய் அறைக் கதவை மூடிவிட்டு வருகிருள். கதவு மீண்டும் தட்டப்படுகிறது.]

**மதுர:** என்ன! கவ்ரய்யாவின் கைவரிசை மறுபடியும் தட்டுவதா? (கதவுக்கருகே போய்) யாரது?

**கதவுக்கப்பாலுள்ள ஆள்:** இவ்வளவு நேரமென்ன?

**மதுர:** தூங்கிக்கொண்டிருக்கிறேன்.

**ஆள்:** சீட்டு! சீட்டு! சீட்டு! உன்னை விலக்கி விடுகிறேன். உன் சங்கதியெல்லாம் எனக்குத் தெரியும்.

**மதுர:** நீங்கள் உங்கள் பாட்டிற்குப் போய் விடுகிறீர்கள். நடுநிசியிலே தனியாக விட்டுப் போய்விட்டால் எனக்குப் பயம் வராதா? அதுவும் காட்டுப் பக்கத்திலுள்ள இந்த ஊரில்? அதற்காகத்தான் பப்ளிக்காக நாலு பேரைக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு சீட்டாடுகிறேன். இதில் தப்பென்ன இருக்கிறது? பனி விழுகிறது. உள்ளே வாருங்கள். (கதவு தாழ்ப்பாள் திறந்து) வாருங்கள். என் ஆட்டத்தை நீங்கள் ஆடுங்கள். நான் படுக்கிறேன்.

**ஆள்:** தாசியை எவன் நம்பச் சொன்ஞன்? உனக்குத் தரலாமென்று சந்தோஷத்தோடு ஒரு நகையைக்

கொண்டுவந்தேன். உன் செயலைப் பார்த்ததுமே மனசு விட்டுப்போச்சு!

**மதுர:** எவ்வளவு நியாயமாக நடந்தாலும் உங்கள் மனசிலே கொஞ்சங்கூட இரக்கமில்லையல்லவா? இன்றிலிருந்து நீங்கள் எங்கே கேம்ப் போனாலும் நானும்கூட அங்கே வருகிறேன்.

**ஆள்:** கழுத்தை மேலே தூக்கு.

[மதுரவாணி அப்படியே செய்கிறாள். அந்த ஆள் மதுரவாணி கழுத்தில் நகையை மாட்டுகிறான்.]

**மதுர:** (சிஷ்யனைப் பார்த்து) அடேடே! மந்திரக்காரா! பந்துலுவின் குரலை எப்படிப் படித்தாய்? என்னையே மோசம் செய்துவிட்டாயே. (கையைப் பிடித்து) அறைக்குள் வா. (அறைக்குள் அழைத்துக்கொண்டு போய்) இந்தத் தாமரைக் கண்களை உனக்குத்தான் பகவான் தந்தான். (முத்தமிடுகிறாள்) அவர்கள் வீட்டில் என்னென்ன அற்புதங்கள் செய்தாயோ? சொல்லு.

**சிஷ்:** முத்தமிட மாட்டேனென்றால் சொல்கிறேன்.

**மதுர:** உனக்கு நான் தகமாட்டேனோ?

**சிஷ்:** முத்தமிட்டால் எச்சில் படும்.

**மதுர:** உண்மைதான். உனக்கிருக்கிற புத்தி உங்க பெரியவர்களுக்கு இல்லை. என்னைக் காரணமில்லாமல் பயமுறுத்தி விட்டாயே, அதற்கு என்ன தண்டனை? கன்னத்தைக் கடித்துவிடட்டுமா?

**சிஷ்:** பாலும் சர்க்கரையும் இருந்தால் தா.

**மதுர:** பிறகு எல்லாம் தருகிறேன். முதலில் உனக்குச் சாமியார் வேஷம் போடுகிறேன். புது அக்கிரகாரத்திற்குப் போய் உன் குருவிடம் சேர்ந்துகொள்.

[திரை விழவேண்டும். இருட்டறையில் போலிச் செட்டி, புக்தா, சித்தாந்தி இருக்கின்றனர். திரைக்கப்பாலிருந்து - ராமப்பந்துலுவின் குரலில் சிஷ்யன்-]

**சிஷ்ய:** இந்த அறையில் யாரையோ ஒளித்து வைத்திருக்கிறாய்?

**மதுர:** ராம...ராம! யாரும் இல்லை.

[போலி செட்டி ஏணியில் ஏறுகிறுன். புத்தாவும் ஏறுகிறுன். நாலு படிக்கட்டுகள் ஏறி இரு வரும் கீழே விழுகின்றனர்.]

**போலி:** கொன்னிட்டியே அய்யரே!

**புத்தா:** என்மேலே நீ விழுந்துகொண்டு, நான் மூச்சு விட முடியாமல் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். நீ செத்தேன் என்கிருயே. எழுந்திருக்கிருயா? கடிக் கட்டுமா?

**சிஷ்ய:** (ராமப்பந்துலு குரலில்) அதோ, உள்ளே யாரோ பேசுகிற சத்தம் கேட்கிறது. தாசிச் சிறுக்கி! அது செட்டியார் சத்தம் போலிருக்கிறது. வெளியே பூட்டி விட்டு, ஊராரை எல்லாம் எழுப்பிக்கொண்டு வருகிறேன்.

**மதுர:** வெளிப் பூட்டெதற்கு? உள்ளே யாரும் இல்லே. பேய்கள் குடியிருக்கிறது. பேய்கள் சண்டை போடு கிறது.

[மதுரவாணி கதவைத் திறந்து அறைக்குள் போய் தீக்குச்சியைப் பொறுத்துகிருள். சிஷ்யன் ஓரமாக ஒதுங்கிக்கொள்கிறுன்.]

**மதுர:** என்ன போலி செட்டி! படுத்துக்கொண்டு எழுந் திருக்க மாட்டீரா? திருப்பள்ளி எழுச்சி பாடட்டுமா?

**புத்தா:** ராமப்பந்துலு எங்கே?

**மதுர:** ராமப்பந்துலுவுமில்லே, கிமப்பந்துலுவுமில்லே. வீட்டில் வேலே செய்கிறவன் கதவைத் தட்டினுன். பதறி விடாதீர்கள்.

**புத்தா:** அவர் பேசும் சத்தம் கேட்டதே!

**மதுர:** நான்தான் அவர்மாதிரி குரலில் பேசினேன். என்ன தைரியம்! என்ன ஆண்மை!

**போலி:** நரசிம்ம உன் திவ்ய...(எழுந்து) நாம மந்திரத் தாலே...அவனவன் சீட்டு அவனவனிடமே இருக்கிறதா?

[எல்லோரும் மீண்டும் ஆட உட்காருகிறுர்கள்.]

**சித்தா:** ஆட்டம் கலேத்துவிட்டேனே.

**போலி:** கோரம், கோரம்! எனக்கு இஸ்பேட் ஆஸ் வந்திருந்ததே. மதியத்தில் ஜெயிச்சிருப்பேனே! கோரம், கோரம்! மதுரவாணி அம்மாவே பயமுறுத்தி

விட்டாள். ஏணியிலிருந்து விழுந்து இடுப்பு ஒடிந்து விட்டது கடவுளே!

**புக்தா:** உனக்குக் கீழே நான் விழுந்து நசுங்கிவிட்டேனே. உனக்கென்ன போச்சு!

**போலி:** கலைச்சுப்போட்டு சீட்டை.

**சித்தா:** நான் மாட்டேன். என் முறை ஆய்விட்டது. நீ போடு.

**போலி:** என்ன ஆகிவிட்டது?

[ராமப்பந்துலு தெருக்கதவைத் தட்டுகிறான்.]

**ராம:** மதுரம், மதுரம்! கதவைத் திற.

**மதுர:** இந்தத் தடவை பந்துலுதான்.

**போலி:** என்ன செய்வது?

**மதுர:** சுவரைத் தாண்டிப் போய்விடுங்கள்!

**போலி:** நான் தாண்ட முடியாதே.

**மதுர:** உன்னை இந்த அறையிலே மூடித் தாழ்ப்பாள் போட்டு விடுகிறேன்.

**போலி:** விளக்கை அணைத்துவிடு. எனக்குப் பயமாக இருக்கிறது.

**சித்தா:** பீங்கான் குத்திவிடுமே. சுவரை எப்படித் தாண்டுவது?

**புக்தா:** எனக்குக் காலில் வாதம். நானும் தாண்ட முடியாதே!

**மதுர:** (விளக்கை அணைத்து) இப்படியே இருங்கள்.

**போலி:** நரசிம்ம உன் திவ்ய...

**மதுர:** உஷ்!

**போலி:** செத்தேன்!

**மதுர:** (அறைக் கதவு பூட்டிவிட்டு, தெருக்கதவு தாழ்ப்பாள் எடுத்து, கதவைச் சாய்த்து) மாயக்காரியை எங்கே ஒளித்து வைத்தீர்கள்?

**ராம:** மாயக்காரியா? அதென்ன?

**மதுர:** ஐயோ! ஒன்றும் தெரியாத அப்பாவியல்லவா? லுப்தாவதானியின் பெண்டாட்டியை மயக்கி அவர்கள் வீட்டிலிருந்து கடத்திக்கொண்டு போய் எங்கே ஒளித்து வைத்தீர்கள்? இதுதானே நீங்கள் ராத்திரி முழுவதும் செய்கிற லௌகிக விவகாரங்கள்.

ராம: நீ சொல்வதொன்றும் புரியவில்லையே! வீட்டிலிருந்து கடத்திச் செல்வதா? நான் ஒளித்து வைக்கிறதென்ன?

மதுர: நீங்கள் ஒளித்து வைத்தாலென்ன? வைக்காவிட்டாலென்ன? என் நகை எங்கே?

ராம: உன் நகையா? மறந்துவிட்டேன்.

மதுர: என்ன அற்புதம்! என்னையும் மறந்துவிட்டீர்கள். என் பொருளையும் மறந்துவிட்டீர்கள். மறந்து அந்த மாயக்காரிக்குத் தந்துவிட்டீர்கள். அவளைக் கடத்திக் கொண்டுபோய் எங்கேயோ ஒளித்து வைத்துவிட்டு நடு நிசியிலே வந்து பெரிய மனுஷன்மாதிரி வீட்டுக்குள் நுழைகிறீர்கள்!

ராம: அந்தப் பெண் காணவில்லையா? என்ன?

மதுர: என்ன நாடகம்! உங்களுக்குமா காணவில்லை. நீங்கள் விட்ட இடத்திலேதான் இருப்பாள்.

ராம: மீனாட்சி ஏதாவது உதைச்சு விரட்டிவிட்டாளோ என்னமோ? நகையோடு விரட்டினால் நான் செத்தேன்.

மதுர: என்ன நாடகம்! நீங்கள் செத்தாலும் சரி, பிழைத்தாலும் சரி. அந்த நகை இல்லாமல் படியில் கால் வைக்க விடமாட்டேன்.

[கதவை மூடுகிறாள்.]

ராம: ஏழெட்டு மைல் தூரம் குதிரைச் சவாரி செய்துவிட்டு ஈஸ்வரா என்று வீட்டை அடைந்து வாசற்படியை மிதிக்கும்போது மேகமில்லாத இடி விழுந்தது. மீனாட்சி அந்தப் பெண்ணை விரட்டித் தொலைப்பாள் என்று நான் என்றாவது கனாக் கண்டேனா? அந்தப் பெண் போனால் போகிறாள். இருந்தா இருக்கிறாள். என் நகை போகாமலிருந்தால் அதிர்ஷ்டசாலிதான். நகையைக் கேட்கப் போனால், 'நீதான் இந்தக் கல்யாணத்தை அமர்த்தினாய்' என்று தடி எடுத்துக் கொள்வானோ என்னமோ?

[போகிறான்.]

## காட்சி—3

**இடம்: லுப்தாவதானியார் வீட்டு முற்றம்.**

**லுப்தா:** (உலாவிக்கொண்டே) காணப்படவில்லை என்றால் என்னவானாள்? கிணற்றிலே விழுந்துவிட்டாளா? போலீஸ்கார்ரர்கள் வீட்டையே பிடுங்கி விடுவார்கள். கிணற்றிலே விழவில்லையோ? விழவில்லையானால் என்ன ஆனாள்? ராமப்பந்துலு வீட்டுக்குப் போயிருப்பாள். அப்படித்தானிருக்கும்! எவ்வளவு அழகான பெண்!— என் துரதிர்ஷ்டம். இதற்குள்ளாகவா வெண்ணிலா இருளாகிவிட்டது. நாளைக்கோ மறுநாளோ வளருகிற குழந்தையல்லவா என்று ஆத்திரப்பட்டேன். ஒருவேளை— முன்பே பெரிய மனுஷி ஆயிருப்பாளோ? இதில் சந்தேகமெதற்கு? இல்லையென்றால் இத்தகைய வாட்டசாட்டமான குழந்தை பெரிய மனுஷியாகாமலிருப்பாளா? இப்படிப்பட்ட எத்தனை கல்யாணங்களைச் செய்து கொண்டு எத்தனை புருஷர்களைச் சீரழித்தாளோ? ஏ! நடைப்பிணமே! உன் கண்கள் என்னவாச்சுதுடா! புஷ்பவதியான பெண்ணை, பார்த்தும் பார்த்தும் எப்படி கல்யாணம் செய்துகொண்டாய்? இனி உனக்குக் கதி மோட்சமில்லை. ராஜமஹேந்திரபுரத்தில் விதவைச் சிறுக்கிகளைக் கல்யாணம் செய்து கொண்டவர்களின் கூட்டத்தில் சேர்ந்துவிட்டாயோடா? ஐயோ! இதற்கு இனி பிராயச்சித்தமும் இருக்கிறதா? ஒருவேளை பிராயச்சித்தம் செய்வோமென்றாலும் சங்கராச்சாரியார் பாத கட்டணம் வைக்கச் சொல்லுவார். பிராமணர்கள் வீட்டையே தின்று காலி செய்துவிடுவார்கள். இவர்களை விட போலீஸ்காரர்களே மேல். கலாட்டா நடக்காமல் ஏட்டையாவிடம் பத்து இருபது சொருகினால் போதும். நாளை ராத்திரியே புறப்பட்டுக் காசிக்குப் போய் கங்கையில் முழுகிவிட்டால் எல்லா பாவங்களும் போய் விடும். காசி வாசமே செய்துவிடுகிறேன். பகவான் புத்தி வரும்படி செய்தார். இல்லையென்றால் கிழட்டுக் கழுதைக்குக் கல்யாணம் செய்துகொள்ளும் போதாத காலமெதற்கு வருகிறது? எல்லாவிதத்திலும் இந்த ராமப்பந்துலு என் குடியைக் கெடுத்துவிட்டான்.

[ராமப்பந்துலு வருகிறான்.]

**ராம:** என்ன மாமா, ராமப்பந்துலு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்?

லுப்தா: ஒன்றுமில்லே.

ராம: என்ன இந்த ராத்திரியிலே உலாவிக்கொண்டிருக்கிறீர்கள்?

லுப்தா: ஒன்றுமில்லே; உறக்கம் பிடிக்காமல்தான்.

ராம: மாமா, அந்த நகை இப்போதே வேணுமென்று மதுரவாணி அடம் பிடித்து, கொண்டு வரும்படி சொல்லி விரட்டிவிட்டாள். சிரமத்தைப் பார்க்காமல் கொடுங்கள்.

லுப்தா: நகையா! அதென்ன?

ராம: உங்கள் மனேவிக்கு வைத்த நகைங்க!

லுப்தா: என் மனேவிக்கு நான் வைக்கவில்லே.

ராம: நீங்கள் வைக்கச் சொல்லவே நான் கடன் வாங்கி வைக்கவில்லேயா?

லுப்தா: நான் வைக்கச் சொல்லவில்லே.

ராம: அப்படியானுல் கடத்தலாமென்று பார்க்கிருயா? உங்கள் மனேவியின் கழுத்தில் அந்த நகை இல்லேயா?

லுப்தா: என் மனேவி யார்? என் மனேவி என்ருே செத்துவிட்டாள்.

ராம: முந்தாநாள் நீங்கள் கல்யாணம் செய்துகொண்ட பெண் உங்கள் மனேவியில்லேயா?

லுப்தா: விதவைச் சிறுக்கியா எனக்கு மனேவி?

ராம: அதென்ன விதவைச் சிறுக்கி?

லுப்தா: நீதானே சொன்னுய், ரெண்டாங் கல்யாணக்காரி என்று.

ராம: பேச்சுக்குமேல் பேச்சு வந்து சும்மா சொன்னுல் அது ஒரு குற்றமா?

லுப்தா: சும்மா சொல்லவில்லே; உள்ளதைத்தான் சொன்னுய். எல்லாம் அந்தக் குண்டூர் சாஸ்திரியும் நீயும் சேர்ந்துகொண்டு செய்த சதிதான். எனக்கு உண்மை தெரிந்துவிட்டது. அந்தச் சிறுக்கி உன் வீட்டிற்குத்தான் போனுள். மதுரவாணியை வைத்திருப்பது போல் இவளேயும் நீயே சேர்த்துக்கொள். என் ஜோலிக்கு வராதே. உனக்குக் கோடி கும்பிடு.

ராம: என் நகையை என்னிடம் கொடுக்கும்படி கேட்டால் இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனமான பேச்சுகளெல்லாம் எதற்கய்யா?

**லுப்தா:** அந்த மாயக்காரியும் நகையும் உன வடடில்தான் இருக்கிறார்கள்.

**ராம:** இந்த வேஷமெல்லாம் என்னிடம் பலிக்காது. நிறுத்தி வைச்சு என் நகையை நான் வாங்கிக்கொள்கிறேன்.

[நனைந்த பாகவத புஸ்தகத்துடன் மீனாட்சியும், கையில் கம்பும் தலையில் மஞ்சள் பூசிய குடமும் அதன்மேல் செம்பும் கொண்டு அசிரிகனும், கையில் சீசாவைப் பிடித்துக்கொண்டு நனைந்த உடுப்புக்களுடனே பூசாரி கவரய்யாவும் வருகின்றனர்.]

**கவரய்யா:** ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம். ஓங்கார பைரவி; காளி...சாமுண்டீ!

[ராமப்பந்துலு அச்சமுறுகிறான்.]

**மீனு:** எங்கேயும் காணவில்லையப்பா. இந்த புஸ்தகத்தை கிணற்றில் போட்டுவிட்டாள்.

[லுப்தாவதானியும் பயமுறுகிறான்.]

**ராம:** காணமற் போனது யார்?

**மீனு:** என் சித்தி. கவரய்யா கிணற்றில் இறங்கி எல்லா இடத்திலும் துளாவினான். கிணற்றில் வேறெதுவும் தென்படவில்லை. (லுப்தாவதானியின் பயம் குறைகிறது) பிரம்ம ராக்ஷசியைக் கவரய்யா பிடித்து இந்தச் சீசாவில் மூடிவிட்டானப்பா!

[ராமப்பந்துலு சீசாவிற்கு இடதுபுறம் நிற்கிறான்.]

**ராம:** பிரம்ம ராக்ஷசியா? அதென்னது?

**லுப்தா:** அது வேறே. ஒரு பிரம்ம ராக்ஷசி வந்து—நம்ம பெண்ணைப் பயமுறுத்திவிட்டது.

**மீனு:** என்னை இல்லை. எங்கப்பா கழுத்தைத்தான் நெரித்தது.

**ராம:** கவரய்யா! பெண் என்ன ஆனாள்?

**கவ:** அவள் புருஷன் தட்டிக்கொண்டு போய்விட்டான்.

**மீனு:** எங்கே தட்டிக்கொண்டு போனான்? அவன் இந்தச் சீசாவில்தான் இருப்பதாகச் சொன்னீர்களே.

**கவ:** (சிறிது யோசித்து புன்சிரிப்புடன்) அவளும் இந்தச் சீசாவுக்குள்தான் இருக்கிறாள்.

**மீனு:** மனுஷி சீசாவுக்குள் எப்படி வந்தாள்?

**கவ:** அட பத்தாம்பசலி! அவளை மனுஷி என்று நினைத்தாய்? அது மோகினிப் பிசாசு. அதனால்தான் நான் உங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் தூரமாக விலகிப் போய் விடுவாள். நான் என்னவோ என்றிருந்தேன்.

**மீன:** இரண்டு பேரையும் ஒரே சீசாவில் வைத்தால் பிசாசுக் குட்டிகள் பிறந்துவிடுமோ என்னவோ?

**கவ:** பந்துலுவய்யா, தயவுசெய்யுங்கள். சீசா இரண்டாள் கனம் இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள்.

**ராம:** ஐயோ! என் பக்கத்தில் கொண்டு வராதீர்கள்!

**கவ:** அசிரிகா! நீ பிடித்துக்கொள்.

**அசிரிகன்:** எனக்கென்ன பயம்? (சீசாவைப் பிடித்து) அடேயப்பா! எவ்வளவு கனமாக இருக்கிறது!

**கவ:** சீசாவையும் செம்பையும் துளசிமாடத்துக் கருகிலே வை.

**லுப்தா:** அப்பா! சீசாவை என் வீட்டிலே வைக்காதே. உங்கள் வீட்டிலேயே வைத்துக்கொள்.

**கவ:** எங்க குழந்தைகள் தேன் சீசாவாக்கும் என்று மூடியைத் திறந்துவிட்டால் இரண்டு பேயும் வந்து மறுபடியும் உங்கள் வீட்டிலேதான் குடியிருக்கும்.

**லுப்தா:** அப்படியானால் சீசாவைப் பூமியிலே புதைத்து விடுங்கள்.

**கவ:** பூமிக்குள் புதைப்பதென்றால் கிள்ளுக்கீரை என்று நினைத்தீர்களா? பூமியிலே புதைக்க எத்தனை மந்திரங்கள் செய்யணும். மறுபடியும் ஜபம் செய்யணும். ஹோமம் செய்யணும். தர்ப்பணம் செய்யணும்.

**லுப்தா:** என் வீட்டைக் காலி செய்யணும்.

**கவ:** உங்களுக்கப்படித் தோன்றினால் எனக்கென்ன நஷ்டம்? இந்த மூடியைத் திறந்துவிட்டு என் ஜோலியைப் பார்த்துக்கொண்டு நான் போகிறேன்.

**லுப்தா:** மூடியை எதற்காகத் திறக்கணும்? என்னிடம் இருக்கிற காசு கீசு ஏதாவது தருகிறேன். அந்த மூடியைத் திறக்காமல் அந்தச் சீசாவை அப்படி வைத்துவிட்டுப் போங்கள்.

**கவ:** என்ன அவதானியின் கஞ்சத்தனம்? பார்த்தாய ா நான் போனதும் நீங்களாகப் புதைக்கலாமென்று பார்கிறீர்கள்? அந்தச் சீசாவைத் தகுந்த சாந்தி செய்யாம

புதைத்தால் நானல்லவா நரகத்துக்குப் போக வேண்டும்? இப்போதே மூடியைத் திறக்கிறேன்.

லுப்தா: திறக்காதே! திறக்காதே! நாளைக்கு அந்தச் சாந்தி என்னமோ செய்து தொலை.

கவ: அப்படியானால் இன்று ராத்திரி முழுதும் இந்தச் சீசாவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு முற்றத்திலே படுத்துக்கொள்கிறேன். நீங்கள் போய் நிம்மதியாகப் படுத்துறங்குங்கள்.

[போகிறான்.]

ராம: மாமா! ஒரு சங்கதி. (ராமப்பந்துலுவும் லுப்தாவதானியும் ஒருபக்கமாகப் போய்ப் பேசுகிறார்கள்) என் நகை விஷயம் என்ன மாமா?

லுப்தா: உங்கள் நகை உங்கள் வீட்டில்தானிருக்கிறது.

ராம: உங்கள் மனைவி என் வீட்டுக்குப் போனதாக நீங்கள் சொல்கிறீர்களே தவிர, அவள் அங்கே வரவுமில்லை; நகையைத் தரவுமில்லை.

லுப்தா: அப்படியானால் என்ன ஆனாளோ? எனக்கென்ன தெரியும்?

ராம: வேண்டாமுங்க. என் நகையை என்னிடம் கொடுத்திடுங்கள். நான் பொல்லாதவன்.

லுப்தா: நகை கிகை எனக்குத் தெரியாது.

ராம: உனக்குத் தெரியாவிட்டால் பிறகு யாருக்குத் தெரியும்? கவரய்யா உன் மனைவி பேயாகிவிட்டதாகச் சொன்னானல்லவா? நீயும் உன் மகளும் சேர்ந்து அவளைக் கொன்று விட்டீர்கள் போலிருக்குது.

லுப்தா: அடே கழுதைப் பயலே!

[கம்பால் அடிக்கப் போகிறான்.]

ராம: என் நகையை அபகரிக்கவா பார்க்கிறாய்? இரு; இரு உன் வேலையைக் காட்டிக் கொடுக்கிறேன்.

[போகிறான்.]

லுப்தா: (தனக்குள்) நகை என்ன ஆச்சு? (வெளிப்படையாக) அம்மா!

மீனு: என்னப்பா?

லுப்தா: நகையை என்ன செய்தாள்?

**மீனு:** என்ன செய்தாளோ? பெட்டியில்தான் வைத்தாளோ? அவளே போட்டிருக்கிருளோ?

**லுப்தா:** தனியாக இருந்தால்—பேய்க்கு நகை எதற்கு?

**மீனு:** என்ன? அதற்கும் ஆசையிராதா என்ன? வைத்திருப்பாள்.

**லுப்தா:** கிணற்றிலிறங்கிக் கவரய்யா கிணறு முழுதும் துளாவிப் பார்த்தாஞ?

**மீனு:** ஒரு நாழிகை நேரம் துளாவிஞன்.

**லுப்தா:** நீ பார்த்தாயா?

**மீனு:** பார்த்தேன்.

**லுப்தா:** அவள் ராமப்பந்துலு வீட்டுக்குத்தான் போயிருப்பாளோ?

**மீனு:** கவரய்யா சீசாவில் அடைத்தானே, எப்படிப் போவாள்?

**லுப்தா:** எனக்கென்னவோ ஒன்றும் ஓடவில்லே. வா. படுத்துக்கொள்வோம். நம் தலேவிதி இப்படி இருக்கிறது.

## காட்சி—4

இடம்: ராமச்சத்திரபுர அக்கிரஹாரத்தில் சாராயக் கடைக்குப் பின்புறத் தோட்டம்.

[அந்தத் தோட்டத்தில் காளி கோயிலின் எதிர் மண்டபம். மண்டபத்தில் காளியின் சிலேக்கெதிரே ஒரு பெரிய பீடத்தின்மேல் மூன்று சீசாக்களில் சாராயம் இருக்கிறது. சுற்றிலும் கிளாஸ்கள். பீடம் நிறையப் பூமாலேகள் உள்ளன. மண்டபத்தின் ஒரு பக்கத்தில் புலித்தோலின் மேல் யோகதண்டத்தை ஊன்றிக் கொண்டு சமாதியில் ஒரு பைராகி இருக்கிறுர். யோகினி ஒருத்தி சாராயத்தை எல்லோருக்கும் வார்க்கிருள். கிராம முனிசீப் சாமிநாயுடு, சாத்தானி மணவாளய்யா, ஜங்கமவீரேசம், கடைக்காரன் ராமதாஸ் ஆகியோர் அங்குமிங்குமாக உட்கார்ந்திருக்கின்றனர்.]

**முனிசீப்:** ஆகாசம் முதலில் பிறந்ததா? பூமி முதலில் பிறந்ததா?

**மணா:** வித்து முதலா? செடி முதலா?

**முனிசீப்:** முட்டை முதலா? பறவை முதலா? நாமம் போட்டவனே, என் கேள்வி என்ன? உன் பதில் என்ன? ஆகாசத்துக்குப் பூமி ஆதாரமா? பூமிக்குப் பந்தல் ஆகாசமா? படிச்சவனெவனே பதில் சொல்லுங்கள்.

**மணா:** ஆகாசம் சூன்யம். அதாவது ஒன்றுமே இல்லேன்னு அர்த்தம்.

**முனி:** ஒன்றுமே இல்லையா? குருடனுக்கு ஒன்றுமே இல்லே தான். வெள்ளைக்காரன் பைத்தியக்காரனு? பட்டணத் திலே குழாய் வைத்துக் கொண்டு ஆகாசத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறுனே!

**மணா:** சாஸ்திரத்திலே இருக்கிற ரகஸ்யங்கள் மிலேச்சர் களுக்கு எப்படித் தெரியும்?

**முனி:** பல்லாண்டு பாடி சர்க்கரைப் பொங்கல் தின்பதென்று நினைத்தாயா? நாமக்காரா! வெள்ளைக்காரன் மகிமை உனக்கெப்படித் தெரியும்? வெள்ளைக்காரன் சாராயத்துக்கும் நாட்டுச் சாராயத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் வெள்ளைக் காரனுக்கும் உனக்கும் இருக்கிறது.

**மணா:** கணித சாஸ்திரத்தில் ஆகாயமென்பது பூஜ்யம். பூஜ்யம் என்றுல் சூன்யம். ஒன்றுமில்லே என்றர்த்தம்.

**வீரே:** சாத்திரத்தில் மண் விண் என்று சொல்லி இருக் கிறதே. மண்ணும் இல்லேயா? மண் இருந்தால் விண் இருக்காதா?

**முனி:** வீரேசம் மிகச் சிறந்த பேச்சைப் பேசினுன்.

**வீரே:** வானம் பொழியுது என்கிறுர்களே. ஆகாயம் இல்லாவிட்டால் எப்படிப் பொழியும்?

**முனி:** சபாஷ். வீரேசம்! நாமக்காரன் பேசவில்லேயே, ஏன்? வாய்ப் பூட்டுப் போட்டாகிவிட்டது.

**வீரே:** (சங்கெடுத்து ஊதுகிறுன்.)

**ஹெட்கான்ஸ்டபிள்:** (கடைக்காரனிடம்) என்னப்பா கலாட்டா?

**முனி:** வீரேசம் ஜெயித்து விட்டானல்லவா? சங்கு முழக்க மாட்டானு?

**கடைக்காரன்:** குருஜீயின் சமாதிக்குப் பங்கம் வந்தால் சபித்து விடுவாரே.

**பைராகி:** (கண் திறந்து) சிவப்பிரம்மம். சிவப்பிரம்மம். சிவோஹம்.

**வீரே:** பார்த்தீர்களாப்பா! சிவப்பிரம்மம் என்கிறார்.

**பைரா:** ராமப்பிரம்மம். ராமப்பிரம்மம் ராமோஹம்.

**மண:** முதல் பேச்சை இரண்டாவது பேச்சு ரத்துச் செய்யும். ராமானுஜ, ராமனுஜ!

**வீரே:** சிவ சிவா! சிவ சிவா!

**கடைக்:** ஏன் சண்டை போடுகிறீர்கள்? உன் சிவனும் உண்மைதான். அதோ அந்தச் சீசாவிலே ஒளிர்கிறான். உன் ராமனும் உண்மைதான். அதோ அந்தச் சீசாவிலே ஒளிர்கிறான். தத்துவம் கேட்டதில்லையா?

> " விளக்கில் தீபம் விளங்குவ தொப்ப
> ஞான மதுவும் நன்கு விளங்கும்
> தெரிந்தோர்களுடைத் தேகங்களிலும்
> விஸ்வ தாபி ராமா வினுர வேமா!"

**பைராகி:** உண்மை. உண்மை.

**கடைக்:** குருஜீ! தங்களுக்கு எல்லாம் தெரிந்ததுதான். தேகம் கண்ணாடிக் குப்பி. தேகத்திலிருப்பது பரமாத்மா. குப்பியிலிருப்பது அன்னசாரம். இந்த அன்னசாரம் தேகத்தில் விழுந்தாலன்றி பரமாத்மா ஒளிராது. என்ன ஆக்ஞை!

**பைராகி:** இந்தப் பரம ரகசியம் உனக்கெப்படித் தெரிந்தது தம்பி?

**கடை:** எல்லாம் தங்களைப் போன்றவர்களின் தயையினாலே தான் குருஜீ. (நாலுபேரையும் பார்த்து) பார்த்தீங்களாப்பா! நான் எப்போதும் இதைத்தானே சொல்லிக் கொண்டிருக்கிறேன்? இங்கே வராவிட்டால் பரப்பிரமம் புரிவதெப்படி?

**பைரா:** அமிர்தம் என்பது என்ன? சாராயந்தான். அன்று இதைக் குடிப்பதற்காகத்தானே தேவாசுர யுத்தம் நடந்தது!

**வீரே:** சிவசிவா! சிவசிவா!

**மண:** ராமானுஜ! ராமானுஜ!

**முனி:** சண்டை போடுவதை விட்டுவிட்டு ஞானத்தைக் கேளுங்களப்பா!

**ஹெட்:** குருவே! இன்னும் ஒரு ரசலிங்கம் செய்து சிஷ்ய னுக்குத் தயவு செய்யணும்.

**பைரா:** அப்படியே.

**முனி:** குருவே! தங்கம் செய்வீர்களல்லவா? அதை வைத்துக் கொண்டு ஹரித்துவாரத்தில் மடம் கட்டாமல் எங்களைப் போன்றவர்களிடம் பணம் எதற்குக் கேட்கிறீர்கள்?

**பைரா:** நாங்கள் செய்யும் தங்கத்தை நாங்களே செல வழித்தால் தலை வெடித்து விடும்.

**ஹெட்:** அது வேறே ரகசியங்கள். சும்மா இருங்கள் மாமா. குருவே! ஹரித்துவாரத்தில் பனி அதிகம் போலிருக்கிறது.

**பைரா:** மனிதர்களுக்கு உண்டு. எங்களைப் போன்ற சித்தர் களுக்குப் பனி, வெயில், சுகதுக்கங்கள் எதுவுமில்லை.

**ஹெட்:** ஆகா! அதிர்ஷ்டம் என்றால் சித்தர்களுக்குத்தான் அதிர்ஷ்டம்.

**முனி:** குருவே, ஹரித்துவாரத்திலிருந்து எப்போது புறப் பட்டீர்கள்?

**பைரா:** ரெண்டு நாளாயிற்று. முந்தாநாள் காலையில் பிரயாகை, நேற்றுக் காலையில் பூரிஜகந்நாதம் தரிசித் தேன். ஆகாச கமனத்தால் ஆகாய மார்க்கத்திலே போய்க்கொண்டிருக்கும்போது உங்கள் ஊர் அம்பாள் வனத்துக்கருகே கமனம் நின்றுவிட்டது. என்னடா என்று யோக திருஷ்டியிலே பார்க்கும் போது அம்பாளின் சிலைக்குக் கீழே இரண்டு பனையாழத்திலே ஒரு மகாயந்திரம் ஸ்தாபிதமாகி இருப்பது தென் பட்டது. உடனே பூமியிலே இறங்கி அம்பாளை சேவித்துக் கொண்டு மறைவாகப் போவோம் என்றிருக்கும்போது, இந்தப் பக்தன் நம்மைக் கண்டு நிறுத்திவிட்டான்.

**கடை:** பார்த்ததுமே நான் சித்தர்களை அடையாளம் கண்டு கொள்வேன் குருவே!

**முனி:** பெரியவர்களை நன்றாகக் கண்டு பிடித்து விடுகிறாய். எங்களூர் அம்பாள் ஜகஜ்ஜனனி! உலக மாதா! எங்கள் கண்கண்ட தெய்வம்.

**பைரா:** பிரம்மோஹம். பிரம்மோஹம்.

**ஹெட்:** ஆகா! யோகமகிமை. ஸ்னானம் செய்து மூச்சை யடைக்கும் பிராமணர்களுக்கு இல்லையல்லவா இப்படிப் பட்ட சித்திகள்?

**பைரா:** வேஷத்துக்கும் ஞானத்துக்கும் தூரமல்லவா தம்பி? எங்கள் தாத்தா சொல்லவில்லையா, "ஆத்மசுத்தி இல்லாத ஆசாரம் எதற்கு" என்று?

**ஹெட்:** வேமனு தங்கள் தாத்தாவா குருவே?

**பைரா:** ஆமாம். அவர் பரமபதம் அடைந்து ஆறு நூற்றாண்டுகள் ஆகின்றன.

**ஹெட்:** தங்கள் வயசென்ன குருவே?

**பைரா:** முடிவில்லாததற்குக் கணக்கென்ன தம்பி? பரமாத்மாவுக்கு எத்தனை வயசோ அத்தனை வயசு.

**முனி:** எத்தகைய உயர்ந்த கருத்துக்கள்!

[வீரேசம் சங்கை ஊதுகிறான்.]

**ஹெட்:** (சங்கைப் பிடுங்கிப் பக்கத்தில் வைத்து) சும்மா குடிக்காதே தம்பி.

**கடை:** சும்மா எங்கே தம்பி, பரவசமாகும் வரை குடிக்கா விட்டால் குடிப்பதெதற்கு? வேமனு சொல்ல வில்லையா?

"குடித்துக் குடித்துப் பூமியில் புரளும்வரை
குடித்தாலே தன்னைத்தான் அறிவான்
குடிக்காதவனே குடிகாரனாவான்டா!
விஸ்வ தாபி ராம வினர வேமா!"

**பைரா:** காசியிலே இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு ஆலங்கீர் பாதுஷாவின் ஆட்சியிலே ஒரு சேட் எங்களைப் போன்ற சித்தர்களைத் தன் ஆஸ்தானத்துக்கு அழைத்தான். கங்கா நதியின் நடுவிலே படகின்மேலே பீப்பாய்களிலே சாராயம் நிறைத்து, தங்கக் கிண்ணத்திலே கொடுத்தான். ராத்திரி ரெண்டாஞ்சாமத்துக்கெல்லாம் பீப்பாய்கள் காலி ஆகிவிட்டன. எல்லோரும் விழுந்து கிடந்தார்கள்.

**ஹெட்:** என்ன ஆச்சரியம்!

**பைரா:** நாமும் ஒரு நேபாள பிராமணனும்தான் மிஞ்சி நின்றோம். அந்தப் பிராமணன் இன்னும் கொண்டுவா, கொண்டுவா என்று கேட்டான். கொடுக்கிறாயா, சபிக்கட்டுமா என்று கேட்டான். சேட் எங்கே இருந்து கொண்டு வருவான்? அவன் நம் காலைப் பிடித்துக் கெஞ்சவே, 'பரவா இல்லை, எழுந்திரு' என்று சொல்லியாம் ஒரு பிடி மந்திரித்து, கங்கை நீரை நிறைத்தவுடனே அந்தக் கங்கையும் சாராயமாய்விட்டது.

அந்தப் பிராம்மணனும் ஆயிரம் குடுக்கையும் குடித்து ஏப்பம் விட்டான். பிராமணர்களிலும் மகாத்மாக்கள் இருக்கிறார்கள். கண்டுகொள்கிறவனுக்குக் கங்கையும் சாராயந்தான்.

**முனி :** அதில் ராமதாஸ் ஒருவன். கங்கா நதியை நிறைப்பதற்கு ஒரு குடுக்கைக்குப் பத்துக் குடுக்கை நீரைச் சேர்க்கிறான்.

[ஹவல்தார் அச்சன்னா வருகிறான்.]

**கடை :** குருவே, ஹவல்தார் அச்சன்னா அவர்கள் நல்ல அறிவாளி. முன்சீப்பிற்கு மருமகன்.

**ஹவல் :** ராம் ராம்.

**பைராகி :** ராம் ராம்.

**ஹவல் :** (மோகினியிடம்) ஏ, பெண்ணு! ஹுக்கா லாவ். (ஹெட்கான்ஸ்டபிளிடம்) அண்ணா! குண்டூர் சாஸ்திரியின் விலாசம் ஏதாவது தெரிந்ததா?

**ஹெட்:** இல்லையண்ணே!

**கடை:** ராமப்பந்துலு சொல்கிறான். கல்யாணப் பெண் விதவைப் பெண்ணாம். அவளை விற்றுப் பணத்தைக் கையில் வாங்கிக்கொண்டு......

**ஹெட்:** அந்தப் பேச்செல்லாம் நமக்கெதற்கண்ணே?

**முனி:** போலீஸ்காரர்களுக்கும் அக்கறையில்லை. பிராமணர்களுக்கும் அக்கறை இல்லை. அப்படியானால் விதவைச் சிறுக்கியைப் பிராமணன் கல்யாணம் செய்துகொண்டால் உலகமெல்லாம் சும்மா கிடக்க வேண்டியதுதானா?

**ஹெட்:** பணம் கொடுத்தவனுக்கும் கல்யாணம் செய்துகொண்டவனுக்கும் இல்லாத கவலை நமக்கெதற்குமாமா? அதுமட்டுமன்றி, இந்தக் காலத்தில் பிராமணத்துவம் எங்கே இருக்கிறது? எங்கே பார்த்தாலும் குழந்தைகளைக் கிழடர்களுக்கு விற்பதுவும் திருட்டுக் கர்ப்பங்களும்தானே நடக்கின்றன. இல்லையா?

**ஹவல்:** கலிகாலமல்லவா அண்ணே! எவ்வளவு கெட்டாலும் பிராமணர்களுக்கு நாம் மரியாதை காட்ட வேண்டும் அல்லவா?

**ஹெட்:** அண்ணே! யாரானாலும் அவர்களுடைய ஞானம், நீதி பிரதானமேயல்லாமல், ஜாதியிலே என்ன இருக்கிறது? வேமனா என்ன சொன்னான் தெரியுமா?

**முனி:** என்ன சொன்னுஞ! நீதிக்குப் போலீஸ்காரனேயும் ஞானத்துக்கு நாயுடுவையும் கேட்கச் சொன்னுன்.

**ஹெட்:** மாமா! கேலி செய்யுங்கள். ஆனுலும் நான் எத்தனே இடங்களில் வேலே பார்த்திருக்கிறேனே அத்தனே இடங்களிலும் கள்ளப் பிரசவங்கள்தான் எத்தனே என்று சொல்வது? என்னேக் கேட்டால் விதவைகள் கல்யாணம் செய்துகொள்வதுதான் நல்லது என்பேன். எங்கள் சூப்பிரண்டெண்டு குழந்தைகள் உள்ள இரண்டாம் கல்யாண துரைச்சாணியைக் கல்யாணம் செய்துகொண்டு சுகமாக வாழவில்லேயா?

**முனி:** மாமாவின் அபிப்பிராயம், கன்றுக் குட்டியோடு வருகிற பசு மேலல்லவா என்கிற மாதிரிதான். அப்படியானுல் கிழட்டுப் பிராமணன் விதவைக் குட்டியைக் கட்டிக்கொண்டது போல, உங்கள் சிநேகிதன் கர்ணத்தையும் அந்த கிழடன் மகள் விதவையைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி நீங்கள் உபதேசம் செய்யக் கூடாதா?

**ஹவல்:** நமக்கெதற்கு மாமா, இந்த வம்பெல்லாம்? கவர்மெண்ட், தெய்வம், பிராமணன், இந்த மூவரின் குற்றங் குறைகளே விமர்சிக்கக்கூடாது. அவர்களோடு நமக்கென்ன வேலே? நம்ம பக்தி நமக்கு இருக்க வேண்டும். (ஹெட்டிடம்) அண்ணே! வெள்ளேயும் கருப்பும் ஒண்ணுகுமா? வெள்ளேக்காரனுக்கு ஏசுகிறிஸ்து ஒரு முறையை வகுத்தார். முஸ்லீம்களுக்கு முகமதுநபி ஒரு முறையை வகுத்தார். கருப்பர்களுக்கு ராமன் ஒரு முறையை வகுத்தான். பகவான் வெள்ளேக்காரனிடம், 'விதவையைக் கல்யாணம் செய்' என்று சொன்னுர். ராமன் நம் நாட்டானிடம், 'விதவையைக் கல்யாணம் செய்யாதே' என்ருன். எத்தனேயோ தேசங்களேப் பார்த்திருக்கிறேன் அண்ணே! எத்தனேயோ விதமான பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள் இருக்கின்றதானுலும் நீதியும் கடவுளும் மட்டும் எங்கேயும் ஒன்றுதான்.

**முனி:** ராமன் விதவைச் சிறுக்கிகளேக் கெட்டுப்போகச் சொன்னுஞ? நம்மிடம் சீர்கேடுகளில்லேயா?

**ஹவல்:** குழந்தை! கஞ்சா நிறைத்துக்கொண்டு வா.

**முனி:** நாமக்காரன் மூலேக்கிழுத்துச் சென்று குழந்தையைக் கொஞ்சுகிருன்.

**யோகினி:** (கையை விடுவித்துக்கொண்டு) ஏகாந்த உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்.

**முனி:** என்ன! உபதேசமா? தன்னோடு வாயுவேகத்தில் வரச் சொல்லியா?

**கடை:** என்ன அண்ணே, தகாத சொற்களெல்லாம் சொல்கிறீர்கள்? நம்ம யோகினி பரம பக்தியுடையவள்.

**முனி:** தப்பு! தப்பு! ஏ பெண்ணு, அந்த நாமக்காரன் சொன்ன உபதேசம் எதுவோ, என் காதில் கொஞ்சம் சொல்லக்கூடாதா?

[யோகினி சாராயச் சீசாவை ஹவல்தார் எதிரே வைக்கிறாள்.]

**முனி:** நாமக்காரன் உபதேசத்தால் பெண்ணுக்குப் புத்தி வந்தது.

**பைராகி:** ஹவல்தார் அவர்கள் அமிர்தம் உட்கொள்ள மாட்டாரா?

**ஹவல்:** (புன்சிரிப்புச் சிரித்து) குடிக்காமல் சோல்ஜர் கெட்டான். குடித்துச் சிப்பாய் கெட்டான். ஞானிக்கு ஞானப்பத்ரி! குடிகாரனுக்குச் சாராயம்!

**முனி:** பென்சன் வாங்கி விட்டாயல்லவா? இன்னும் சிப்பாய் வேலையிலிருக்கணுமா மருமகனே?

**ஹவல்:** கும்பினியார் உப்பைத் தின்ற பிறகு உயிர் உள்ள வரைக்கும் கும்பினிக் கொடிக்கு ஊழியம் செய்ய வேண்டும். நாளை ருஷ்யாவோடு யுத்தம் வந்தால் பென்சனை உதறிவிட்டுத் தோளில் துப்பாக்கியைத் தூக்கமாட்டோமா?

**முனி:** ருஷ்யாக்காரன் கப்பல் நீர்மூழ்கிப் போகிறதல்லவா? நீ யாரைச் சுடுவாய்?

**ஹவல்:** கொஞ்ச நாளுக்கு முன்பாக இங்கிலீஷ்காரன் ருஷியா தேசத்துக்குப் படையெடுத்துப் போய் ருஷியாவை உதைக்கவில்லையா? அப்போது என்ன ஆச்சோ, அதுதான் இப்போதுமாகப்போகிறது. எங்கள் ராணி நல்லா இருக்கணும்.

**கடை:** சீமைராணி அந்தக் காளியின் அவதாரம்தானே?

**ஹவல்:** காளி கீளி ஜான்தே நை. அந்த ராமனின் அவதாரம்.

**கடை:** குருவே, ஹவல்தார் நல்ல கீர்த்தனைகள் ரொம்ப இனிமையாகப் பாடுவார். (யோகினியிடம்) அம்மா! என் தம்புராவைக் கொண்டு வந்து ஐயா கையிலே கொடு.

**முனி:** இந்தத் தடவை வீரேசம் உபதேசம் செய்துகொண்டிருக்கிறான்.

**கடை:** பெரியவர்கள் இருக்கும்போது ஹாசியம் செய்யலாமா அண்ணே?

**முனி:** உள்ளதைச் சொன்னாலும் ஹாசியந்தானா? எனக்கொருத்தரும் உபதேசம் செய்யமாட்டேனென்கிறார்களே, எதற்கு? வீரேசம் உபதேசம் ரொம்ப கட்டியாக பிணைந்திருக்கிறது. இனி, கையை விடமாட்டான்.

[யோகினி கஷ்டப்பட்டுக் கையை விடுவித்துக் கொண்டு தம்புராவைக் கொண்டு வந்து தருகிறாள்.]

**கடை:** இதெல்லாம் ஞான ரகசியங்கள். பிரம்மானந்தம் என்றால் என்ன? வயிறு நிறையச் சாராயம், மூக்கு நிறையப் புகை, பக்கத்திலே ஒரு கன்னிப் பெண்ணுந் தானே!

**முனி:** ஞானத்தைக் கேளுங்கப்பா!

**ஹவல்:** பாமரம், பாமரம்! ராமன் படத்தைக் காளியின் தலைமேலே வைக்காவிட்டால் கும்பினி சிப்பாய் என்கிறவன் இங்கே வருவானா?

**ஹெட்:** அண்ணே! ஒரு கீர்த்தனை பாடுங்கள்.

[ஹவல்தார் பாடுகிறான்]

**ஹவல்:** "பஞ்சர்மே ரஹ்கர் சுப்னை ரஹ்னா
க்யாரே புல்புல் கஹோ முல்கி சுனா"

[வீரேசம் சங்கை மணவாளய்யர் வாங்கி ஊதுகிறான்.]

**ஹவல்:** (பாட்டை நிறுத்தித் தம்புராவைக் கீழே வைத்து) கருடா!

**ஹெட்:** (சங்கைப் பிடுங்கிக்கொண்டு) சங்கைத் தீயில் போட்டு விடுகிறேன். ஏன் கொண்டு வருகிறான் அண்ணே?

**கடை:** வேண்டாமென்றால் கேட்டால்தானே?

ஹெட்: கேட்கவில்லையானல் கடைக்குள் வரவிடாதே! கலாட்டா நடந்தால் எங்களுக்குத்தானே பேச்சு வரும்?

கடை: பத்துச் சங்குகள் வரைக்கும் ஒளித்துவிட்டேன். மறுபடியும் மறுபடியும் கொண்டு வருகிருன். என்ன செய்வது? வியாபாரம் அல்லவா அண்ணே?

முனி: கண்டிப்பாக விடாதே. அவனவனுக்குப் புத்தியிருக்கணும்.

கடை: (தம்புராவை வாங்கிப் பாடுகிருன்.)

நாகா இறங்கு எந்தையே இறங்கு
இறங்கிறங்கு நாகா எழிலார்ந்த நாகா
சந்தோஷத் தோடே சந்தன நாகா
ஊருக்கு வடக்கே ஆலமரத் தடியே
சீரான புற்றிலே ஊருகின்ற நாகா.

[பாடிக் கொண்டிருக்கும் போது ராமப்பந்துலு வந்து இடப்பக்கத்தில் நின்று யோகினிக்குச் சைகை காட்டுகிருன். யோகினி ராமப்பந்துலுவிடம் பேசிவிட்டு வந்து ஹெட்` காதில் ரகசியம் பேசுகிருள்.]

முனி: குட்டி ஏட்டையா காதிலே உபதேசம் செய்கிருள். கிழடனென்ரு? என்......?

[யோகினி முன்சீப் காதருகே வாய்வைத்துக் காதைக் கிள்ளுகிருள்.]

முனி: குழந்தை! முனிசீப் நாயுடுவுக்கு இந்த அளவு உபதேசம் கிடைத்து ரொம்ப நாளாகிவிட்டது.

[ஹெட்கான்ஸ்டபிள் ராமப்பந்துலு பக்கத்தில் வந்து இருவருமாகப் பேசுகின்றனர்.]

ஹெட்: புதிய ஆள் யாருமில்லையே? மாமா இருந்தால் உங்களுக்கெதற்குப் பயம்?

ராம: புதிய ஆள், பழைய ஆள் என்று பார்க்கவில்லை. குடி முழுகிவிட்டது. உங்கள் உதவி தேவை.

ஹெட்: பணம் ஏதாவது கிளம்புமா?

ராம: உங்களால் முடிந்தால் கிளம்பும்.

ஹெட்: என்ன வந்தது?

ராம: லுப்தாவதானி கல்யாணம் செய்த பெண் மதுர வாணியின் நகையை எடுத்துக் கொண்டு எங்கேயோ ஓடிவிட்டாள்.

ஹெட்: ஏன் ஓடிவிட்டாள்?

ராம: மீனுட்சி சாகும்படியாக அடித்துவிடவே ஓடி விட்டாள். எங்குத் தேடினுலும் அகப்படவில்லை. முதலில் உங்கள் ஜவான்களை அனுப்புங்கள்.

ஹெட்: இந்த ராத்திரி வேளையிலே எங்கள் ஜவான்களால் மட்டும் பிடித்துக் கொள்ள முடியுமா? போலீஸ் ஜவான் என்றால் பத்துக் கண்ணும் பத்துக் காலும் இருக்கிற தென்று நினைத்தாயா?

ராம: அவளைப் பிடிச்சது போதும். என் நகையை எனக்குத் தாருங்கள்.

ஹெட்: நீ என்ன பேசுகிறுய்? அந்த நகையை அந்தப் பெண் கொண்டுபோய் விட்டாள் என்கிறுய். நான் எப்படி நகையைத் தரமுடியும்?

ராம: கிழடனைக் கேட்டால் அவள் கொண்டுபோனதாகச் சொல்கிறுன். ஆனுல், உண்மையில் அவன் பெட்டியில் ஒளித்துவைத்துக்கொண்டுதான் பேசாமல் இருக்கிறுன்.

ஹெட்: என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்?

ராம: கொலைக் கேஸ் என்று கிழடனைப் பயமுறுத்தினுல், என் நகை எனக்கும் கிடைக்கும். உங்கள் கைக்கும் ஏதாவது கிடைக்கும்.

ஹெட்: அப்படியா! ஆனுல், நீ சொன்னதுபோல அந்தப் பெண்ணை நகையோடு ஓடியிருந்தால் என்ன செய்வது?

ராம: போகட்டும். அதன் விலையைக் கொடுக்கும்படி ஏற் பாடு செய்யுங்கள்.

ஹெட்: அவன் தருவானு?

ராம: பின் எதற்காக உங்கள் உதவியைத் தேடுகிறேன்?

ஹெட்: கொடுப்பானென்று தோன்றவில்லை. ஆனுலும் பார்க்கிறேன். கேஸ் என்று சொல்ல இரண்டு மூன்று சாட்சிகளாவது இருக்க வேண்டும்.

ராம: மண்டபத்தில் இருக்கிறவர்கள்?

ஹெட்: வீரேசமும் மணவாளய்யாவும் எதிரும் புதிருமாய் இருக்கிறுர்கள். ஹவல்தார் பொய் சொல்லச் சொன் னுல் உதைப்பான். முன்சீப் நாயுடு ராத்திரி வேளையில்

அவ்வளவு தூரம் நடந்துவர மாட்டான். இனி ஆடவும் பாடவும் ராமதாஸ் ஒருவன்தானே இருக்கிறுன்?

**ராம:** அந்தப் பைராகி சாட்சியம் சொல்லமாட்டாறு?

**ஹெட் :** வேஷம்போட்டுப் பிச்சை எடுக்கிற பைராகி என்று நினைத்தாயா? அவர் பெரிய சித்த புருஷராக்கும்! ஆளு யரம் தங்கம் குவித்தாலும் பொய் சொல்லமாட்டார்.

**ராம:** சாட்சியம் சொல்ல வேண்டாம். பக்கத்தில் சும்மா நின்று கொண்டிருந்தால் போதும். அழைத்துக்கொண்டு வாருங்கள்.

[ஹெட் போய்க் கடைக்காரனையும் பைராகியை யும் அழைத்துக் கொண்டு வருகிறுன்.]

**பைராகி:** சாக்ஷியம் என்றல் எங்களைப் போன்றவர்கள் தான் சொல்ல வேண்டும். யோக திருஷ்டி மூலம் பார்த்தோம் என்றல், எங்கே நடந்தது, எப்போது நடந்தது என்று கண்டு கண்ணிற் கட்டினுற்போல அப்போதே தென்படச் செய்வோம். ஆகையால் நாம் கூட வருகிறோம். ஏதாவது கிடைத்தால் ஹரித்துவார மடத்துக்கு உதவும்.

**ராம:** நடந்ததை விடுங்கள். கொஞ்சம் கற்பனை இருந்தா லன்றிக் கதை நடக்காது. ஆகையால் ஏட்டையா கிழடனிடம் சொல்கிற பேச்செல்லாம் உண்மை என்று சொல்ல வேண்டும்.

**பைராகி:** பைத்தியம்! பைத்தியம்! உண்மையாவது பொய் யாவது! நாங்கள் சித்தர்கள். உண்மையைப் பொய் யாக்குவோம். பொய்யை உண்மையாக்குவோம். உலகமே ஒரு பெரிய பொய்தானே. வாருங்கள் போகலாம்.

[செல்கின்றனர்.]

## காட்சி—5

**இடம்:** தேவாலயத்தின் வாசலுக்கருகில்.

[ஹெட்கான்ஸ்டபிள் ராமப்பந்துலு பேசிக்கொண் டிருக்கின்றனர். மற்றொரு போலீஸ், பைராகி, கடைக்காரன் ராமதாஸ் கொஞ்சம் தள்ளி இருக்கின்றனர்.]

**ஹெட்:** ஏன் வேலையைத் தொலைக்கவா அண்ணே?

ராம: கொஞ்சம் பயமுறுத்தினுல் வேலை போய்விடுமா அண்ணே? போலீஸ் ட்யூட்டி என்றுல் பயமுறுத்தல்தானே நீங்களே இப்படிச் சொன்னுல் நான் என்ன சொல்வது?

ஹெட்: (கையில் பிசைந்து கொண்டிருக்கிற காகிதத்துண்டு களை வீசி எறிந்து) அண்ணே! லுப்தாவதானி கைப் பிள்ளையார், உழவுமாடா, பயமுறுத்த? கொலைக் கேஸ் என்று எனக்கேதாவது கொஞ்சம் நம்பிக்கை யிருந்தால் போலீஸ்காரன் நான் சும்மா இருப்பேனு? விஷயம் தெரிந்தால் எனக்கு எவ்வளவு காரெக்ட் குறைவாகும்? இந்த ஜவானை இந்த நடுநிசியிலே கிணற்றிலே இறக்க வில்லையா? கொலை கிலை என்றுல் யாராவது சிரிக்கப் போகிறுர்கள். மீனுட்சிக்குப் பயந்து அந்தப் பெண் அக்கம் பக்கத்து வீட்டிலே படுத்திருப்பாள். ஒரு வேளை கிழவன் சொன்னுற்போல உங்கள் வீட்டில்தான் இருக்கிருளோ என்னவோ?

ராம: கடவுள் சத்தியமாக எங்கள் வீட்டுக்கு வரவில்லை. அக்கம் பக்கத்து வீட்டிலிருப்பாள் என்று நீங்கள் சும்மா இருந்தால் எப்படி? உங்கள் தைரியமென்னவென்றே எனக்குப் புரிபடவில்லை. தேடச் சொல்லுங்கள் என்றுல் தேடவும் இல்லை. அந்த அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் கள் அந்தப் பெண் தூங்கும்போது நகையை எடுத்து ஒளித்துக் கொண்டால் என் கதி என்னுவது? நகை யில்லாமல் வீட்டுக்குப் போனுல் மதுரவாணி துரத்தி விடுவாள். அதாவது துரத்திவிடுவாள் என்பதில்லை. அழுவாள். உயிரைப் பிடுங்கிவிடுவாள். கேட்டீர்களா?

ஹெட்: என் யோசனையைக் கேட்கிறீர்களா?

ராம: என்னவோ சொல்லுங்களேன்.

ஹெட்: அந்த நகையைக் கொடுக்கும் வரைக்கும் பேசாமல் லுப்தாவதானி வீட்டிலேயே உட்கார்ந்திருங்கள்.

ராம: இதுதானு யோசனை? அவ்வளவு தூரம் உட்காரணு மென்று எனக்கென்ன ஆத்திரம்? வீட்டில் போய் சுகமாகப் படுத்துக் கொள்கிறேன்.

ஹெட்: மதுரவாணி தொந்தரவு செய்வாள் என்றுயே.

ராம: அதற்காக உங்களுக்கு என்மேல் இரக்கம் போலிருக் கிறது. நாளைக்கும் நகையைத் தராவிட்டால் அவதானி மீது சிவில் தாவா போடுகிறேன். உங்களிடம் நகை சமாச்

சாரத்தை ஒப்புக் கொண்டானல்லவா? உங்களையே சாட்சியாகப் போடுகிறேன்.

ஹெட்: ஓகோ, இதா உன் நாடகம்? போலீஸ் உத்யோகஸ்தன் நான் சாட்சியங்களுக்கும் சம்மன்களுக்கும் அலைந்து கொண்டிருந்தால் என் வேலை நிலைக்குமா? வேண்டுமானால் லுப்தாவதானிமீது நகையை அபகரித்து கொண்டான் என்று என்னிடம் பிராது கொடுங்கள். கேஸ் போட்டு என் கை வரிசையைக் காட்டுகிறேன்.

ராம: நகை விஷயம் உங்களிடம் அவன் ஒப்புக் கொண்ட பிறகு, நீங்கள் எப்படிக் கூண்டிலேறி, பொய் சொல்கிறீர்களோப் பார்க்கிறேன்.

ஹெட்: பந்துலு! அனாவசியமான விவகாரங்களைக் கிளப்பாதே. அவன் நகைச் சங்கதி எனக்கொன்றும் தெரியாது என்றான். வேண்டுமானால் அவனப்படிச் சொன்னதற்குச் சாட்சி சொல்கிறேன்.

ராம: இதுதானா நீங்கள் எனக்குச் செய்யும் உபகாரம்?

ஹெட்: ஏன் அனாவசியமாகக் கலவரப்படுகிறாய்? நாளை உன் நகை உன் வீட்டிலில்லாவிட்டால் பிறகு என்னைச் சொல்.

ராம: மதுரவாணியிடம் இப்போது என்ன சொல்வது?

ஹெட்: அதற்காக என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?

ராம: மறுபடியும் லுப்தாவதானி வீட்டுக்கு வாருங்கள். இந்தத் தடவை நாம் இரண்டு பேர் மட்டும் போய்ப் பார்ப்போம்.

ஹெட்: இன்னும் பழைய கதைதானா? அர்த்தமில்லாமல், ராத்திரி முழுதும் உறக்க மில்லாமல் வாட்டி வதைத்தாய். இனி நான் வர முடியாது. நான் சொன்னது போல நீ போய் அவன் வீட்டில் காத்திரு. அதுதான் நல்ல யோசனை. கஞ்சப்பயல் நாலு பேருக்கும் நாமூணு பன்னிரண்டு ரூபாய்தான் தந்தான். அதுவும் என் கைக்கு வருவதற்கு முன் பாதி உயிர் போய்விட்டது. என் பங்கு மூணு ரூபாயும் உங்களுக்கே தருகிறேன்.

ராம: நகை போய் விட்டதென்று அழுதுகொண்டிருந்தால் இந்தப் பாழான மூணு ரூபாய் எனக்கெதற்கு?

ஹெட்: உங்களுக்கு வேண்டாமென்றால் குருஜீக்குக் கொடுப்போம்,

**ராம:** கொஞ்சம் சில்லறைச் செலவு இருக்கிறது. என் செய்வது? இப்படிக் கொடுங்கள். (வாங்கிக் கொள்கிறான்.)

**ஹெட்:** குருஜீ! தங்களுக்கு ஒரு துளசிதளம்!

**பைராகி:** எது வந்தாலும் மடத்துக்கே அர்ப்பணம்.

**ஹெட்:** (கடைக்காரனிடமும் போலீஸ் ஜவானிடமும்) உங்களுக்கொரு மூணு. உனக்கொரு மூணு (கையை உதறி) எனக்கு அலைந்ததுதான் மிச்சம்.

**கடை:** (பைராகி பக்கத்தில் நின்று) இன்று சென்னைப் பட்டணத்திலிருந்து முதல் ரக பிராந்தி வந்திருக்கிறது. தயவு செய்து ஏற்றுக்கொண்ட பிறகு காசிக்குப் போக வேண்டியது.

**ஹெட்:** குருஜீ! நமஸ்காரம், ராமப்பந்துலு! கிழவனைப் போய்ப் பிடி அண்ணே! ஸ்டேஷனுக்குப் போயாகணும். (ஜவானிடம்) வாப்பா காமய்யா!

[ஹெட்டும் போலீசும் ஒரு பக்கமும், கடைக்காரனும் பைராகியும் மற்றொரு பக்கமுமாகப் போகிறார்கள்.]

**ராம:** நகை போய் விட்டதே என்றால் மூணு ரூபாய் கையிலே வைக்கிறான். (விரசமாகச் சிரித்து) இவனைத் தொலைக்கிறேன். (ஹெட் எறிந்த காகிதத் துண்டுகளைப் பொறுக்கி) இன்ஸ்பெக்டருக்கு ஒன்று, தாசில்தாருக்கு ஒன்றுமாக மொட்டை மனு போடுகிறேன். பயல் மதுரவாணியிடம் போவானோ என்னமோ? நான் வீட்டுக்குப் போனால் வெளியே படுக்க வேண்டியதுதானன்றித் தாசிச் சிறுக்கி உள்ளே விடமாட்டாள். கதவு திறக்க மாட்டாள். லுப்தாவதானி வீட்டுக்குப் போனால் அவன் கம்பெடுத்துக் கொண்டு வருவான். இந்தக் கோயிலிலேயே படுத்துக் கொள்ளட்டுமா? பூச்சி கீச்சி ஏதாவது கடித்துவிட்டால்...கடித்தால்...சீ! இந்தத் தாசியை விலக்கி விடுகிறேன். அந்தக் குட்டி என்ன வானாள்? என் அதிர்ஷ்டவசத்தால் யார் வீட்டிலாவது ஒளிந்திருந்து நாளைக்குத்தென்பட்டால்...நகை தொலைந்திருக்கக்கூடாது. ஒரு வேளை செத்திருந்தால்... செத்திருக்கமாட்டாள். கிணற்றிலே விழவில்லை. கவரய்யா, காமய்யா இருவருமே தேடினார்கள். ஒரு வேளை அவள் விதவையாயிருந்து அவள் தகப்பன் தலைமறைவாக வந்து வுண்டியிலேற்றிக் கொண்டு போய் விட்டானோ

என்னமோ? அப்படியானல் நகையைக்கூடக் கொண்டு போயிருப்பாளு? மீனுட்சியைப் பிடித்தால் கொஞ்சம் உண்மை தெரியும். அவளைப் பார்ப்பதெப்படி? கதவைத் தட்டினல் கிழடன்தான் வருவானே என்னவோ? (தெருவைக் கடந்து ஞப்தாவதானி வீட்டுக்கு முன்பாக நின்றுகொண்டு) பசி வயிற்றைக் கிள்ளுகிறது. மீனுட்சியைப் பார்த்தால் ஏதாவது பலகாரம் கொடுப்பாள். யாரப்பா, அத்திமரத்துக்குக் கீழே சுருட்டு குடிக்கிறது! (நான்கு அடிகள் முன்னே நடந்து) அசிரிகா! நீயா?

**அசிரி:** நான்தான் சாமி.

[சுருட்டை எறிகிறுன்]

**ராம:** சாவகாசமாக இருக்கிறுயேடா!

**அசிரி:** என்ன சாவகாசம் சாமி? தாசியம்மா வந்ததும் இந்த அம்மா பக்கம்கூடப் பார்க்கிறதை விட்டு விட்டீர்கள். எனக்குப் பணங்கொடுக்கிற மகாராசன் யாரிருக்கிறுர்கள்?

**ராம:** கேட்காவிட்டால் யாராவது கொடுப்பார்களாடா?

**அசிரி:** அந்தத் தாசியம்மா ரொம்பப் பொல்லாதவளுங்க.

**ராம:** என்ன! என்ன! சொல்லுடா! உனக்குப் பணம் கொடுத்து ரொம்ப நாளாகிவிட்டது. இந்தா, இந்தப் பணத்தை வைத்துக்கொள்.

**அசிரி:** ஆயிரங் கும்பிடு சாமி.

**ராம:** மதுரவாணி சங்கதி என்னடா சொல்ல வந்தே?

**அசிரி:** ரொம்ப மோசமானவள் சாமி!

**ராம:** யாருடா அவளிடம் போகிறது?

**அசிரி:** எவன் போனுலும் முதுகிலே பூசை விழுகிறது சாமி!

**ராம:** கெட்டவள் என்றுயே?

**அசிரி:** பின்னென்ன? முந்தாநாள் எட்டையா போனல் நாயை உசுக் காட்டினுள்.

**ராம:** உண்மையைச் சொன்னுய். உன்மீது எப்போதாவது கோபப்பட்டாளாடா?

**அசிரி:** எங்களைப் போன்றவர்கள்மீது ஏன் கோபப் படுவாள்? பிராமணர்கள் வந்தால் திட்டுகிறுள்.

**ராம:** நீ எப்போதும் உண்மைதான் பேசுகிறுய் அசிரிகா!

**அசிரி:** பொய் சொன்னால் பகவான் பொறுப்பாரா சாமி?

**ராம:** உங்க கிழடன் என்ன செய்கிறாண்டா?

**அசிரி:** தூங்குகிறார் சாமி!

**ராம:** உனக்கு இன்னொரு ரூபாய் தருகிறேன். மீனாட்சியைப் பின் வாசலுக்குக் கூப்பிடுகிறாயா?

**அசிரி:** என்னால் முடியுமா சாமீ? அந்தம்மா ஐயா அறையிலே படுக்கை விரித்துப் படுத்துத் தூங்குகிறாங்க சாமி!

**ராம:** நீ சொடக்குப் போட்டால் எங்கிருந்தாலும் எழுந்து வந்துவிடுவாள். எனக்குத் தெரியாதாடா?

**அசிரி:** கொடுங்க சாமி! பார்க்கிறேன்.

[ராமப்பந்துலு ரூபாய் தருகிறான். இருவரும் வீட்டுக்குள் போகிறார்கள்.]

## காட்சி—6

**இடம்:** லுப்தாவததானி வீட்டு வராண்டா கதவு சாத்தியிருக்கிறது.

[மீனாட்சி அகல் விளக்கைக் கொண்டுவந்து வைக்கிறாள். ராமப்பந்துலு திரியைக் குறைத்து மீனாட்சியை முத்தமிடுகிறான்.]

**மீனா:** வழி தப்பி வந்தீர்களோ?

**ராம:** புத்தியில்லாமல் கெட்டலைந்து இத்தனை நாளாக வழியை மறந்துவிட்டேன்.

**மீனா:** மதுரவாணி எப்படி வரவிட்டாள்?

**ராம:** அவள் தலையிலே இடிவிழ! அவளை விட்டுவிடுகிறேன். பசி குடலைப் பிடுங்குகிறது. ஏதாவதிருந்தால் தா.

**மீனா:** என்ன இருக்கிறது? பொரிகடலையும் தேங்காயும் வேண்டுமா?

**ராம:** ஏதாவதொன்றைக் கொண்டு வா!

[மீனாட்சி உலை மூடியில் பொரி கடலை, தேங்காய்ப் பருப்பு கொண்டு வருகிறாள். ராமப்பந்துலு தின்று கொண்டிருக்கிறான்.]

**மீனா:** மதுரவாணியை விலக்கி விடுவீர்களா?

**ராம:** விலக்கிவிட நிச்சயமாகிவிட்டது.

மீனு: ஏட்டையா விஷயம் தெரிந்ததா?

ராம: தெரியும்.

மீனு: யார் சொன்னது?

ராம: அசிரிகன்...

மீனு: எங்கள் அசிரிகனு?

ராம: உங்கள் அசிரிகன்தான்!

[அசிரிகன் தெருக்கதவைக் கொஞ்சம் திறந்து, எட்டிப் பார்த்து]

அசிரி: பேய்க்கி வச்சிருந்ததைத் திங்கிறீங்களே சாமி!

ராம: பேய்க்கா வச்சிருந்தீர்கள்?

மீனு: (அசிரிகனிடம்) சும்மா இருடா பயலே.

ராம: உனக்கு நியாயமாக இருக்கிறதா? இழிந்த பண்டத்தைத் தரலாமா?

[வீதிக்குச் சென்று வாந்தி செய்ய முயற்சி செய்து, மீண்டும் வந்து]

வாந்தியாகவில்லை. என்ன செய்யலாம்?

மீனு: பேய்க்கு வைத்ததில்லையென்றால் நம்பமாட்டீர்களா?

ராம: உலை மூடியில் வைத்திருந்தாயே.

மீனு: பேய் தின்று செத்துவிட்டதா என்ன?

ராம: பெண்களுக்குத் துணிச்சலதிகம்.

மீனு: அசிரிகன் மதுரவாணி சங்கதியைப்பற்றி என்ன சொன்னுன்?

அசிரி: (மீண்டும் எட்டிப் பார்த்து) எறிஞ்சதைக் கொண்டு போகட்டுமா சாமி.

ராம: கொண்டு போ.

[அரிசிகன் பொரி கடலையைக் கொண்டு போகிருன்.]

மீனு: அவனுக்கு உங்களைவிடத் தைரியம் இருக்கிறது.

ராம: அசுத்தமான பயல் எதுவானுலும் தின்பான்? பிராமணர்களாகிய நாங்கள் புனிதமானவர்களல்லவா.

மீனு: புனிதமென்ருல் நீங்களும் நானும்தான் புனிதம்.

ராம: அதென்ன அப்படிச் சொல்கிருய்?

மீனு: நான் விதவைச் சிறுக்கி. நீங்களோ பரமரசிகர். நம்மைவிடப் புனிதமானவர்கள் யாரிருப்பார்கள்?

ராம: அந்தக் களங்கத்தைத் துடைக்கத்தானே வந்திருக்கிறேன்.

மீனு: எப்படித் துடைப்பீர்கள்?

ராம: நாமிரண்டு பேரும் கல்யாணம் செய்துகொண்டால் புனிதமாகிவிடமாட்டோமா?

மீனு: என்ன?

ராம: நாம் கல்யாணம் செய்துகொள்வோம்.

மீனு: உண்மையாகவா?

ராம: எதன்மேல் சத்தியம் செய்யவேண்டும்?

மீனு: இந்த விளக்கை அணைத்துச் சத்தியம் செய்யுங்கள்.

ராம: இந்தக் காகிதத்தைப் படித்துவிட்டுப் பிறகு அணைத்து விடுகிறேன். (துண்டுக் காகிதத்தை ஜேபியிலிருந்து எடுத்துப் பார்த்து) கழுதைப் பயல் என்னையே பதம் பார்க்கிறான்! இவனைத் தொலைத்துவிடுகிறேன்.

மீனு: யார்?

ராம: அது வேறு சங்கதி.

மீனு: அசிரிகன் ஏட்டையா சங்கதி என்னவென்று சொன்னான்?

ராம: மதுரவாணி ஏட்டுமேலே நாயை உசுக்காட்டினாளாம்.

மீனு: எதற்கு?

ராம: நானில்லாதபோது அவன் வீட்டிற்கு வந்ததற்காக.

மீனு: அய்யோ! என்ன ஞானம் அசிரிகா!

அசிரி: (வந்து) என்னம்மா?

மீனு: முட்டாள்! உண்மையைச் சொல். பந்துலு வீட்டிலில்லாதபோது ஏட்டையா மதுரவாணியோடு இருக்கிறான் என்று நீ என்னிடம் சொல்லவில்லையா?

அசிரி: (தலையைச் சொரிந்துகொண்டு) சொன்னேன்.

ராம: திருட்டுப்பயலே. நாயை உசுக்காட்டினாள் என்றாயே.

அசிரி: சாமி! வேலைக்காரன் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டாமா சாமி? தாசியம்மா கேட்டால் உங்க சங்கதியைச் சொல்வேனா?

மீனு: அடே, நீ சொன்னால் எனக்கென்ன பயம்?

ராம: அடே பொய்க்காரப் பயலே! யாரிடமும் எங்கள் பேச்சைமட்டும் சொல்லிவிடாதே. ரூபாய் தந்தேன் இல்லையா?

மீனு: ருபாய் எதற்குக் கொடுத்தீர்கள்?

அசிரி: குழந்தை குட்டிக்காரனல்லவா? (போகிருன்)

ராம: திருட்டுச்சிறுக்கி! துரோகம் செய்கிருளே ஏன்?

மீனு: தெரியும் என்றீர்களே?

ராம: இவ்வளவென்று தெரியாது.

மீனு: பெண் நீதி தவறிவிட்டால் இவ்வளவு என்ன, அவ்வளவென்ன? துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால்தான். அதுவும் தாசி நீதியோடு இருக்க வேண்டும் என்று நினைப்பது உங்கள் அறிவீனம்தான்.

ராம: அறிவீனம் கொஞ்சநஞ்சமா? சிறுக்கி தலையை உடைக்கணும் என்றிருக்கிறது. இவளுக்காக எவ்வளவு பணம் செலவழித்தேன்.

மீனு: எப்போது விரட்டுவீர்கள்?

ராம: எப்போதா? நாளைக்கேதான். தாசி எத்தகைய பதிவிரதை வேஷம் போட்டாள்?

மீனு: நாம் எப்போ போவது?

ராம: எங்கே?

மீனு: புத்தி மங்கிவிட்டதா என்ன? ராஜமஹேந்திரம்.

ராம: ஆமாம். நாளைக்கு அவளை விரட்டிவிடுவேனு? நாளை கழித்து நாம் புறப்பட்டுவிடுவோம். ஆமாம். உன் நகைகளை நீ கொண்டு வருவாயா ? கிழவனுக்கு விட்டு விடுவாயா?

மீனு: எனக்கிருப்பதெல்லாம் என் நகைகள்தான். எப்படி விடுவேன்? என் நகைப்பெட்டியின் சாவி அப்பாவிடம் இருக்கிறதே என்ன செய்யலாம்?

ராம: என் மூளையைப்பற்றி உனக்கென்ன தெரியும்? இந்த வளையத்தில் இருக்கும் இரும்புக் கம்பியாலே உன்னுடைய பெட்டிப் பூட்டைத் திறந்துவிடுவேன். சரி. என் நகை எங்கே இருக்கிறது?

மீனு : பெண்ணுக்குக் கொடுத்ததா? ராத்திரி வேளையில் என் துணிப் பெட்டியில்தான் வைப்பாள்.

ராம: உனக்கு கோடிப் புண்ணியம் உண்டு. அந்த துணிப் பெட்டியை ஒரு தடவை கொண்டுவா பார்ப்போம். நாளை அவள் நகையை அவளிடம் கொடுத்துவிட்டு சிறுக்கியை விரட்டிவிடுகிறேன்.

**மீனு:** அந்தப் பெண் துணிப்பெட்டி சாவியை எறிந்து தொலைத்து விட்டாளே.

**ராம:** கம்பியாலே திறந்து விடலாம்.

**மீனு:** என் நகைப் பெட்டியின் பூட்டைக்கூடத் திறந்திடுவீர்களா?

**ராம:** ஆகட்டும்.

**மீனு:** என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சத்தியம் செய்யவில்லையே.

**ராம:** விளக்கை அணைத்து விட்டால் பெட்டியை எப்படித் திறப்பது?

**மீனு:** தீக்குச்சி இருக்கிறது.

**ராம:** அப்படியானால் உன்னைக் கட்டாயம் கல்யாணம் செய்துகொள்கிறேன் என்று இந்த விளக்கை அணைத்துச் சத்தியம் செய்கிறேன்.

[ராமப்பந்துலு விளக்கை அணைத்து மீனாட்சியை ஆலிங்கனம் செய்து இப்படி அழைத்துக் கொண்டு போகிறேன்.]

[லுப்தாவதானி இருட்டில் வந்து கம்பெடுத்து ராமப்பந்துலு காலின் மேல் அடிக்கிறார். மீனாட்சி கீழே விழுகிறாள்.]

**லுப்தா:** திருட்டுக் கழுதைப் பயலே.

**ராம:** செத்தேன்டா! (வீதியில் நொண்டிக்கொண்டே போகிறான்.)

**லுப்தா:** போ சிறுக்கி. நீகூட என் வீட்டைவிட்டுப் போ.

[மீனாட்சியை வெளியே விரட்டிக் கதவைத் தாளிடுகிறான்.]

**ராம:** அசிரிகா கொன்றுவிட்டாண்டா! கால் எலும்பு முறிந்திட்டதடா.

**அசிரி:** (மெதுவாக) பேய்க்கு வைத்ததைத் தின்றால் என்னவாகும்? (உரக்க) அகாலத்திலே வீட்டுக்குள்ளே போனா மண்டையை உடைக்க மாட்டானோ?

**ராம:** (மீனாட்சியிடம்) நீ வீட்டுக்குள்ளே போ.

**மீனு:** இனி நான் வீட்டுக்குள் காலெடுத்து வைக்க மாட்டேன். என் நகை போனால் போகிறது. வாருங்கள் ராஜமஹேந்திரம் போவோம்.

**ராம:** நினைச்சதுமே கல்யாணம்தானா?

**மீனு:** உங்கள் இஷ்டம் வந்தபோது கல்யாணம் செய்யுங்கள். வீட்டிலிருந்து கூட்டிக் கொண்டு வந்தீர்களல்லவா? இனி நான் உங்களோடு வாழ வேண்டியவள்தான். வாருங்கள் போகலாம்.

**ராம:** பழைய குருடி கதவைத் திறடி என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இப்போதைக்கு வீட்டுக்குப் போ.

**மீனு:** இனி இந்த ஜன்மத்தில் இந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்க மாட்டேன்.

**ராம:** அசிரிகா! மீனுட்சி தனியாக இருக்கிருள். பத்திரமாகப் பார்த்துக் கொண்டு கிழவன் கதவைத் திறந்ததும் உள்ளே அழைத்துச் செல்.

[ராமப்பந்துலு ஓடுகிருன். மீனுட்சி பின் தொடர்கிருள்.]

[ராமப்பந்துலு வீட்டுக்கு முன்]

**ராம:** (கதவைத்தட்டி) சீக்கிரம். கதவைத் திற.

**மதுரவாணி:** (கதவுக்கப்பாலிருந்து) என்ன அவ்வளவு அவசரம்?

**ராம:** பூச்சி விரட்டுகிறது.

**மதுர:** பூச்சியைப் பார்த்ததும் திறக்கிறேன்.

**ராம:** கதவை மூடிக்கொண்டு காத்திருந்தால் பூச்சி எப்படித் தெரியும்? நீ கதவைத் திறக்கிறதுக்குள்ளே என் மேலே விழுந்துவிடும்.

**மதுர:** என் நகை எங்கே?

**ராம:** நகை நகை என்று பரிதவிக்கிருயே, ஏன்? நின்ற நிலையில் நூறு நகைகள் செய்து போடுகிறேன்.

**மதுர:** உங்கள் நூறு நகையை நீங்களே வைத்துக் கொண்டு என்னுடைய ஒரு நகையை மட்டும் எனக்குக் கொடுத்துவிட்டு உள்ளே வாருங்கள்.

**ராம:** நாளைப் பகலில்தான் தரமுடியுமென்று லுப்தாவதானி சொல்லி விட்டான்.

**மதுர:** நாளைக்கு வீட்டுக்கு வந்தால் போதும். இப்போதொன்றும் குடி முழுகிப் போகவில்லை.

**ராம:** அதற்குள் பூச்சி விழுந்தால்...?

**மதுர:** அதென்ன பூச்சி?

**ராம:** எலிக்குத் திண்டாட்டம்; பூனைக்குக் கொண்டாட்டம்!

[மீனாட்சி வந்து ராமபந்துலு கையைப் பிடித்துக் கொள்கிறாள்.]

**மீனு:** விளக்கை அணைத்துச் சத்தியம் செய்தீர்கள். தப்பினால் தலை வெடித்துவிடும்.

**ராம:** போடி சிறுக்கி!

**மீனு:** உங்களுடைய எதிர்கால மனைவி நான் எங்கே போவேன்?

**மதுர:** எதிர்கால மனைவியா? அதென்ன?

**மீனு:** உன்னை விலக்கிவிட்டு என்னை ராஜமஹேந்திரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் கல்யாணம் செய்து கொள்வதாக விளக்கை அணைத்துச் சத்தியம் செய்தார். பிறகெப்படித் தப்ப முடியும்?

**மதுர:** இவள்தானா பூச்சி?

**ராம:** சிறுக்கி! என் கையை விடு. உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேனென்று சொன்னேனா? கனவு கண்டாயா என்ன?

[மீனாட்சியின் கையை விடுவிக்கவே மீனாட்சி கீழே விழுகிறாள்.]

**மதுர:** பெண்பிள்ளை மீதா கைவைக்கிறீர்கள்! என்ன தைரியம்! பொய் சொல்லாமல் சொன்ன பேச்சிலே நில்லுங்கள். குலத்தில் குறைவா? அழகில் குறைவா? அவள் வாழ்க்கையைப் பாழாக்கவே செய்தீர்கள். இனிமேலாவது தவறைத் திருத்திக்கொண்டு கல்யாணம் செய்துகொண்டு வந்தால்தான் கதவைத் திறப்பேன்.

**மீனு:** பந்துலு என்னை ஆலிங்கனம் செய்துகொண்டபோது எங்கள் அப்பா பார்த்து உதைத்து இரண்டு பேரையும் வீட்டைவிட்டு விரட்டிவிட்டார். நீ ஏட்டையாவோடு போகிறாய் என்று உன்னை விலக்கி விட்டு என்னைக் கல்யாணம் செய்துகொள்வதாகச் சத்தியம் செய்துகொடுத்தார். என்னைக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டு கல்யாணம் செய்யாமல் இருக்க முடியுமா?

**மதுர:** கட்டாயம் கல்யாணம் செய்ய வேண்டியதுதான். கல்யாணம் செய்யாவிட்டால் நீ மட்டும் சும்மா

இருப்பாயா? வழக்குப் போர்டுவாய். பந்துலுவுக்கு தாவாக்கள் என்றால் ரொம்ப இஷ்டம்.

**ராம:** மதுரவாணி! உனக்கு மூளை கெட்டுவிட்டதா? என் வீட்டுக்கு நீயா எஜமானி? கதவைத் திற.

**மதுர:** நில்லுங்கள். கற்பூரம் கொளுத்தி மங்கள ஆரத்தி எடுக்கிறேன்.

[கதவருகிலிருந்தவள் உள்ளே போகிறாள்.]

**ராம:** (கதவு இடுக்கு வழியே பார்த்து மீனாட்சியை முத்த மிட்டு) எத்தகைய வேலை செய்தாய்? அவளிடம் சொல்லிவிட்டாயே. ரகசியமாக எழுந்து போய்க் கல் யாணம் செய்து கொள்ளவேண்டுமே தவிர கலகம் செய்து கொண்டால் எப்படி?

**மீனா:** எப்போதாயினும் எல்லோருக்கும் தெரிவதுதானே.

**ராம:** என் பேச்சைக் கேட்டு இப்போது வீட்டுக்குப் போ.

**மீனா:** இனி எங்கள் வீட்டுக்குப் போகமாட்டேன். இதுதான் எங்கள் வீடு. மதுரவாணி கதவைத் திறப்பாள். உள்ளே போவோம்.

**ராம:** அப்படியானால் இங்கேயே இரு. இப்போது வந்து விடுகிறேன். (சில அடிகள் தெருவில் நடந்து, நின்று) உண்மையாகவே மங்கள ஆரத்தி எடுக்கப் போனாள் போலிருக்கிறது. கள்ளத் தாசி அவள் கதவைத் திறக்காவிட்டால் மீனாட்சி என்னைத் தேடப் புறப்பட்டு விடுவாள். விடியும் நேரம் வந்துவிட்டது. குளத்துப் பக்கம் போய்க் காலைக் கடனைக் கழித்துவிட்டு அதன் பிறகு மேல் நடவடிக்கைகளை ஆலோசிப்போம். இரண்டு நாட்கள் வெளியே கழித்துவிட்டால், திரும்பிப் போகும்போது கொஞ்சம் குழப்பம் தீர்ந்து எல்லாம் சரிப்பட்டுவிடும். கதவைத் திறந்தாற்போல் தென்படவில்லை. எவன் வீடு? இவள் யார் என்னைத் தடுப்பதற்கு? ஆச்சரியம்.

[கொஞ்சதூரத்தில் தெருவில் நின்று சாமியார் வேஷத்தில் சிஷ்யன் தம்புரா மீட்டிப் பாடு கிறான்.]

**சிஷ்:** ''வீடு வீடெனகிறாய் வீடென தென்கிறாய்
உன் வீடு எங்கே கிளியே?''

**ராம:** இது என் வீடில்லையா?

சிஷ்: "ஊருக்குத் தெற்கே சமாதி புரத்திலே
கட்டைகள் வீடுளதே கிளியே"

ராம: சுடுகாட்டிலேயா?

சிஷ்: "எத்தனைநாள் வாழ்ந்தாலும் என்ன சாம்ராஜ்யமே
கொஞ்சநாள் தானே கிளியே!
மூன்றுநாள் வாழ்விலே மோகமுடன் துள்ளுகிறாய்
முன்னேற்றம் காணுயே கிளியே!"

ராம: என்ன அபசகுனப் பாட்டு?

சிஷ்: "கட்டைகளே சுற்றமாம் கம்புகளே பந்துக்கள்
பெற்றதாய் யாரோ கிளியே?"

ராம: சுற்றமா? ஒரு அக்கா இருக்கிறாள். அவள் என்றும் என் வீட்டு வாசலில் அடியெடுத்து வைக்கவில்லை. இப்போது வீட்டுக்கு எஜமானி யார்? கதவுக்குள்ளே வேசிச் சிறுக்கியும் கதவுக்கு வெளியே விதவைச் சிறுக்கியும் இருக்கிறார்கள். இருவரும் சேர்ந்து வீட்டுக்குப் போக முடியாமல் என்னை விரட்டுகிறார்கள்.

சிஷ்: "உன்னை நால்வர் சுமக்கிறார்கள்
பின்னே பத்துப் பேர்களோடே"

ராம: நீசப்பயல் பாட்டு. போவோம்.
[வேகமாகக் கொஞ்ச தூரம் வரை போய் நின்று]
இந்தப் பக்கம்தான் வருகிறான் போலிருக்கிறது. அதோ பாட்டுக் கேட்கிறது.

சிஷ்: "நீயெரிந்து போகும்வரை
காவலிருப் பார்களன்றி
கடைசியில் விட்டுவிடுவார்
பின்பெவரும் வரமாட்டார்—கிளியே!"

ராம: நீசப்பயல் பாட்டு.

சிஷ்யன்: பந்துலு! என்னஇங்கே இருக்கிறீர்?

ராம: அந்த வழியே போனால் பிடித்துக்கொள்வாள்.
[ஓடுகிறான்.]

# ஆரும் அங்கம்

## காட்சி—1

இடம்:–ராமச்சந்திரபுர அக்கிரகாரம்

[குளத்தின் கரையில் உள்ளதோட்டத்தில் கல்யாண வீட்டார் வண்டிகள் வருகின்றன. கரையின் மேல் ஒரு பக்கம் அக்கினி ஹோத்திராவ தானி யும் மற்ருெருபக்கம் பல் துலக்கிக்கொண்டு ராமப்பந்தலுவும் வந்து சந்திக்கின்றனர்.]

**அக்னி:** வண்டியை நிறுத்துங்கள், வண்டியை நிறுத்துங்கள்' சாயபு! யானைக்கு வேண்டிய குழைகள் இருக்கின்றன. குளத்தில் குளிக்க ரொம்ப சௌகரியமாக இருக்கிறது. யாரப்பா அது குளத்தங்கரையிலே?

**ராம:** (தனக்குள்) அடடே! மறந்துவிட்டேனே. இன்று தானே கல்யாண வீட்டார் வரவேண்டிய நாள் (வெளிப் படையாக) நான் ராமப்பந்துலுங்க.

**அக்னி:** லுப்தாவதானி உங்களை அனுப்பினுரா என்ன?

**ராம:** எதற்காக?

**அக்:** நாங்கள் வருகிருேம் என்று எதிரே யாரையும் அனுப்பவில்லையா? நான்தான் அக்னி ஹோத்ராவ தானி.

**ராம:** நீங்கள்தாமா அக்னிஹோத்ரரவதானிகள்? ஏன் வந்தீர்கள்? என்ன விசேஷம்?

**அக்:** கல்யாணச் சங்கதி உங்களுக்குத் தெரியாதா என்ன?

**ராம:** கல்யாணம் யாருக்குங்க?

**அக்:** நீங்கள் இந்த ஊரில்லையா? என் மகளைத்தான் லுப் தாவதானிக்குத் தருகிறேன்.

**ராம:** லுப்தாவதானிக்குக் கல்யாணமாகி விட்டதே.

**அக்:** நீங்கள் தமாசுக்குச் சொல்கிறீர்கள் போலிருக்கிறது. அதிருக்கட்டும். கல்யாண வேலைகள் எப்படி நடக் கின்றன?

**ராம:** நீங்கள்தான் தமாசு செய்கிறீர்கள் போலத் தோன்று கிறது. கல்யாணமாகி பத்து நாளாகிவிட்டது. லுப் தாவதானி சம்பந்தம் வேண்டாமென்று நீங்கள் எழுதி

னீர்களாம். அதன் பிறகு யாரோ குண்டூரிலிருந்து வந்த ஒரு சாஸ்திரியின் மகளை இரண்டாயிரம் கொடுத்துக் கல்யாணம் செய்து கொண்டான்.

**அக்:** அண்ணு! ஹாசியத்துக்குச் சொல்கிறீர்கள்! நியாய மில்லை. நீங்கள் நமக்கு மச்சான் முறையா?

**ராம:** என்ன பேசுகிறீர்கள்? நான் என்றும் பொய் சொன்னது கிடையாது. என் பேச்சை நம்ப மாட்டே னென்கிறீர்களே? தர்மமா?

**அக்:** சத்தியம் செய்து சொல்லுங்கள்.

**ராம:** காயத்திரி சாட்சியாக.

**அக்:** அய்யோ! அய்யோ! என்ன கொடுமை! வாருங்கள். கல்யாண மாப்பிள்ளையின் கழுத்தெலும்பை முறித்து விடுகிறேன்.

**ராம:** நான் வர மாட்டேன். அந்தக் குண்டூர் சாஸ்திரி சம்பந்தம் வேண்டாமென்று சொன்னேனென்று என்னோடு பேசுவதை நிறுத்தி விட்டான். நீங்கள் போய் வாருங்கள். நீங்கள் திரும்பி வரும் வரைக்கும் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்.

**அக்:** அந்தக் கழுதைப் பயல் வீட்டுக்கு வழிதெரியாதே.

[சிஷ்யன் குளத்தின் கரையில் ஏறிக் கொண்டு பாடுகிறுன்.]

**சிஷ்ய:** "தான் யாரோ? சுற்றம் யாரோ?
உயிருக்கும்மாய உடலுக்கும்
உறவான தெப்படியோ?"

[ராமப்பந்துலு நின்றுகொண்டு பயப்படுவதாக நடிக்கிறுன்.]

**அக்:** என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?

**ராம:** சவத்தைச் சுமந்து செல்லும்போது பாடும் பாட்டு.

**சிஷ்ய:** "தினமும் மரணமென்று தெரிவீரே"

**ராம:** (சிஷ்யனிடம்) சும்மா இரு, (அக்னிஹோத்ராவதானி யிடம்) அண்ணு ஒரு அணு இருக்கிறதா?

**சிஷ்:** உங்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னுள்.

**ராம:** செத்தேன். வருகிறுளா என்ன?

**சிஷ்:** நகை போனது போச்சு. கூட்டிக்கொண்டு வரச் சொன்னுள்.

ராம: பிழைத்தேன்.

அக்: செத்ததெதற்கு? பிழைத்ததெதற்கு?

ராம: அது வேறு கதை. (சிஷ்யனிடம்) இந்தா பணம். (சிஷ்யன் வாங்கிக் கொள்கிருன்.)

சிஷ்: (பாடுகிருன்)

"சித்திரைச் சோதி மழை சேர்ந்து பொழியவே!"

அக்: என்ன பயல் பாட்டு. சும்மா இருப்பாயா மாட்டாயா? உனக்குப் பணம் போதாதா பயலே?

சிஷ்: தாங்கள் தயவு செய்யணும்.

அக்: நான் தரமாட்டேன், அண்ணே! வழி யார் காட்டுவார்கள்?

ராம: (சிஷ்யனிடம்) உனக்கு லுப்தாவதானி வீடு தெரியுமா?

சிஷ்: தெரியும் ஐயா!

ராம: அவதானியார் ஒரு அணு தருவார். வீட்டைக் காட்டு.

சிஷ்: முதலில் தரவேண்டும். இல்லாவிட்டால் காட்ட மாட்டேன்.

அக்: இந்தா அழுது தொலை.

[சிஷ்யன் முன்னும் அவதானியார் பின்னுமாகச் சில அடிகள் நடந்து சென்றதும் சிஷ்யன் பாடுகிருன்.]

சிஷ்: "கருங்கூந்தலாளே கடைக்கண் சிவப்பதேனே?"

அக்: தேனு? அதென்ன உன் தலை!

சிஷ்: தேனில்லை. பூனை! (பாடுகிருன்.)

"பூனைக்குட்டி நாட்டியமாட எலிக்குஞ்சு ஏர்கட்டி உழவே"

அக்: என்ன?

சிஷ்: "ஆட்டுக்குட்டிகள் மேளமடிக்க அழகான கோயிலுக்குப் போகிறதுவே"

அக்: அழுதாற் போலிருக்கிறது உன் பாட்டு.

சிஷ்: "துரட்டிக் கம்பாலே ஒணுன் தோட்டப் பூ பறிக்கவே"

அக்: பாடினுயானல் உதைப்பேன்.

சிஷ்: அப்படியானுல் உனக்கினிமேல் வீட்டைக் காண்பிக்க மாட்டேன்.

அக்: அப்படிப் பாடாதே! (அடிக்கப் போகிருன்.)

சிஷ்: (தப்பித்துக் கொண்டு ஓடிப் போய்) "கரைக்கு கீழே உள்ள கள்ளக் கூட்டாளியைக் கணக்கிலே சேர்க்காதே!" (போகிருன்.)

அக்: இவன் தலையிலே இடிவிழ! வழி இப்படியா? அப்படியா?

(திரை விழுகிறது)

## காட்சி—2

இடம்: குளக்கரைத் தோட்டம்

*[அக்னி ஹோத்ராவதானி, ராமப் பந்துலு. வெங்கம்மா, மற்றவர்கள்]*

அக்: கழுதைப் பயலை ரொம்ப மோசமாக அடித்து விட்டேன். இவன் சிரார்த்தத்துக்கு யானைகள் குதிரைகள் வேறு கூட்டிக் கொண்டு வந்தேன். வழிச் செலவுக்கு ஒரு தம்பிடிகூடக் கொடுக்கவில்லை.

வெங்: நம் தலைவிதி. என் தலையில் இப்படி எழுதியிருக்கும் போது வேறெப்படி நடக்கும்? இந்தச் சம்பந்தம் வேண்டாமென்று போராடினேன். கேட்டீர்களா? நான் பயந்துகொண்டே இருந்தேன். புறப்படும் போது பூனை எதிரே வந்தது.

அக்: சும்மா இருடி! பெண்களுக்கு என்ன தெரியும்? அண்ணே! கிரிமினல் கேஸ் போடலாமா? சாதகமிருக்கிறதா? எங்களிடம் ஒரு அய்யர் இருக்கிருர். அவருக்கு இந்த விவகாரமெல்லாம் நன்ருகத் தெரியும். அவரையும் கலந்து கொள்வோம்.

ராம: கோர்ட்டு விவகாரங்களில் கடைந்தெடுத்த உங்களுக்கு ஒருத்தன் ஆலோசனை சொல்லணுமா என்ன? உள்ளூர்க்காரனுகையால் சாட்சி கீட்சி வேண்டுமானுல் கொண்டுவர உதவி செய்கிறேன். ஆனுலும் உங்களுக்கும் எனக்கும் அய்யர்கிய்யரெல்லாம் ஆலோசனை சொல்லத் தகுதி யிருக்கிறதா? குள்ள நரிப் பயல்கள் ரெண்டு இங்கிலீஸ் வார்த்தைகள் படித்திருக்கிருர்கள். ஆகையால் ஏம்தா ரெண்டு மொழி பெயர்ப்புகள் செய்கிருர்கள். ஆனுல் ஏதாவதொரு முயற்சி எடுக்க

வேண்டுமானல் தங்களைப் போன்றவர்கள் எடுக்க வேண்டும். என்னைப் போன்றவர்கள் நடத்தவேண்டும். கிரிமினலுக்குப் போகலாமா என்று கேட்கிறீர்களே, என்ன? உங்களுக்குத் தெரியாதா என்ன? அதன் பிறகு சுலபமாக மூன்று நாலாயிரம் ரூபாய் டாமேஜ் கூட சிவிலிலே கிடைக்கும்.

அக்: அதுதான் நானும் யோசிக்கிறேன்.

ராம: தீர்ந்தது. இன்னும் யோசனை எதற்கு? உடனே போய் வக்காலத்துக் கொடுப்போம். செலவுக்கு ரூபாய் கொண்டு வாருங்கள். போவோம்.

அக்: என்னிடம் ஒரு தம்பிடிகூட இல்லை. என்ன செய்வது? இந்தக் கழுதைப் பயல் ரூபாய் தருவான் என்று நம்பி நான் ஒன்றும் கொண்டுவரவில்லை.

ராம: ஊருக்குப் போய் வீட்டிலிருந்து ரூபாய் கொண்டு வர்ரதுக்குள்ளே நல்ல சமயம் தவறிவிடும். நல்ல காரியத்தை உடனே ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள்?

அக்: இதில் ஏதாவது முடிவாகாமல் வீட்டின் பக்கம் போவதாக இல்லை. என் மகள் நகை ஏதாவது இந்த ஊரிலே அடகு வைப்போம்.

ராம: அப்படியானல் கொண்டு வாருங்கள். போலி செட்டியிடம் அடகு வைப்போம். போலி செட்டியைக் கொஞ்சம் நம் பக்கமே வசியம் செய்யவேண்டியது அவசியம். நீங்கள் லுப்தாவதானியை அடிக்கும்போது அவன் இருந்தானுகையால் லுப்தாவதானி உங்கள் மீது போலீஸ் ரிப்போர்ட் செய்யும்போது போலி செட்டியைத் தவருமல் சாட்சியாகப் போடுவான். செட்டியை நாம் பிரிக்கவேண்டியது அவசியம். என்ன சொல்கிறீர்கள்?

அக்: உங்கள் யோசனை ரொம்ப நன்ருக இருக்கிறது. எனக்கும் அதுதான் பயமாக இருக்கிறது.

ராம: பார்த்தீர்களா? எல்லோராலும் யோசனை சொல்ல முடியுமா? அதுவும் இந்த இங்கிலீஸ் படித்தவர்களைக் கேட்டால் வழக்குகளே கொண்டுவர வேண்டாம் என்பார்கள். பொய்ச் சாட்சிகளைக் கொண்டு வரக்கூடாதென்பார்கள். அவர்களுக்கென்ன நஷ்டம்? எந்த வகையிலாவது முயற்சி செய்யாவிட்டால் கேஸ் எப்படி ஜெயிக்கும்?

**அக்:** எங்கள் அய்யரைப் பொறுத்தவரையும் நல்ல புத்தி சாலி. அறிவாளி. கோர்ட்டு விவகாரங்களில் அவருக்குத் தெரியாததொன்றும் இல்லே. அத்தகைய புத்திசாலியை நான் எங்கும் பார்த்ததில்லே. அவரைப் பார்த்தால் நீங்களும் அப்படித்தான் நினைப்பீர்கள்.

**ராம:** எவ்வளவு புத்திசாலியாக இருந்தாலும் உங்களுக்கு யோசனை சொல்லக்கூடிய ஒருத்தன் இருக்கிருனு? காதோடு ஒரு ரகசியம். உங்கள் அய்யர் கிரீசம்தானே! அவன் லுப்தாவதானியின் சித்தி மகன் அல்லவா? உங்களுக்கா அவன் இந்தக் கேசிலே சரியான யோசனை சொல்லப் போகிருன்?

**அக்:** ஆமாமப்பா!

**ராம:** கர்ணம் நான். என் பேச்சைக் கொஞ்சம் கேளுங்கள். அந்த அய்யரோடு உங்கள் குழந்தைகளை வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். தனித்து நாம் இந்த நிமிஷமே போய் லுப்தாவ்தானிக்கு முன்னேயே மனுச் செய் வோம். ஏதாவதொரு நகையைக் கொண்டுவாருங்கள்.

**அக்:** எங்கே, புச்சம்மாவை இப்படிக் கூப்பிடு.

**வெங்கம்மா:** புச்சம்மா எங்கே? அலுத்து வண்டியில் படுத் திருக்கிருள் போலிருக்கிறது. கூப்பிடுங்கள்.

**அக்:** நமக்கு மானநஷ்டம் நிச்சயம் கிடைக்குமா?

**ராம:** கிடைக்குமா என்று கேட்கிறீர்கள்? கொஞ்சநஞ்சமா?

**ஒருவன்:** அம்மன்னுவின் வண்டி எங்கேயும் தென்பட வில்லே. வண்டி பின்தங்கி விட்டது போலிருக்கிறது.

**வெங்கம்மா:** அதோ வெங்கடேசம் இருக்கிருனே. இவன் எப்படி வந்தான்? ஏம்ப்பா! நீ அக்கா வண்டியிலே ஏறிக் கொண்டு வரவில்லேயா?

**வெங்:** இல்லே. நான் யானேமேல் ஏறி வந்தேன்.

**அக்:** திருட்டுக்கழுதைப்பயலே! வாத்தியார் எங்கேடா?

**வெங்:** எங்கேயும் தென்படவில்லே.

**அக்:** குதிரை வந்ததா? குதிரைக்காரன் எங்கே?

**வெங்:** குதிரைக்காரன் சொன்னுன்.

**அக்:** என்னடா பயலே சொன்னுன்?

**வெங்:** வாத்தியார்—ராத்திரி—

**அக்:** வாயிலிருந்து வார்த்தை கிளம்பமாட்டேனென் கிறதே, ஏன்?

**வெங்:** குதிரையிலிருந்து இறங்கி...வண்டியிலேறிஞராம்.

**அக்:** ஐயோ! அவனைக் கூட்டிக்கொண்டு போகவில்லையே.

**பக்கத்திலுள்ளவர்கள்:** ஆ! ஆ!

**வெங்கம்மா:** குடிமுழுகி விட்டது. பின்னென்ன? (கீழே விழுகிருள்.)

**அக்:** (கோபத்தால் நடுங்கிக் கொண்டு) வாத்தியார் விதவைச் சிறுக்கியைக் கூட்டிக் கொண்டு போனுனு? நகைப்பெட்டி, என் கோர்ட்டு காகிதங்கள்...

**வெங்:** என் புஸ்தகங்கள் கூட அக்கா பெட்டியில்தான் வைத்தேன்.

**அக்:** திருட்டுக் கழுதைப் பயலே. நீதான் அவனை வீட்டுக்கு அழைத்து வந்தாய்! கொஞ்சம் முன்பே தெரிந்திருந்தால் திருட்டுப் பயலைக் கொன்றிருப்பேன். கழுதைப் பயலை அப்படியே புதைத்து விடுவேன்.

**ராம:** (பக்கத்தில் வந்து) அய்யர் ரொம்ப நல்லவர் என்று சொன்னீர்களே, எதைக் கொண்டு போனுன்? என்ன?

**அக்:** என்ன கொண்டு போனுனு? உன் தலையைக் கொண்டு போனுன். விதவைச் சிறுக்கியைக் கொண்டு போனுன். இந்தக் கழுதைப் பயலின் இங்கிலீஸ் படிப்பு குடியைக் கெடுத்தது.

[வெங்கடேசத்தின் சிண்டைப் பிடித்துக்கொண்டு அடிக்கப் போகிருன்.]

**(திரை விழுகிறது)**

## காட்சி—3

**இடம்:** விசாகபட்டினத்தில் மதுரவாணியின் விடுதிக் கெதிர்த்த தெரு.

[ராமப்பந்துலு அக்னிஹோத்ராவதானி இருவரும் வருகின்றனர்.]

**அக்னி:** நாம் போலி செட்டியிடம் அடகு வைத்து வாங்கிய ரூபாய் முழுவதும் தீர்ந்துவிட்டது. இன்னமும் செலவு செலவு என்று நச்சரிக்கிறீர்கள். என்னிடம் ஒரு தம்பிடி கூடக் கிடையாது.

**ராம:** செலவு செய்யாமல் காரியம் நடக்குமா? உங்கள் நகை ஏதாவது எங்காவது அடகு வையுங்கள்.

**அக்னி:** இந்த ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் யாரிருக் கிறுர்கள்.

**ராம:** வாருங்கள், மதுரவாணியிடம் அடகு வைப்போம்.

**அக்னி:** படிக்கிறது ராமாயணம், இடிக்கிறது பெரும்மாள் கோயில் என்கிற மாதிரியல்லவா இருக்கிறது? பரம்பரை சுவாத்தியாய பிராமணன் என்னைத் தாசிச் சிறுக்கிகள் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறுயே அப்பா!

**ராம:** பிறகு எங்கும் போய் அலையாமல் கேஸ் ஜெயிப்பது எப்படி? அவள் எல்லாத் தாசிகளைப்போல நினைத் தீர்களா? குடும்பப் பெண்ணைப்போன்றவள். ஆனுலும் உங்களுக்கு வர இஷ்டமில்லா விட்டால் என் கையில் கொடுங்கள். நானே அடகு வைத்துப் பணம் வாங்கிக் கொண்டு வருகிறேன்.

**அக்னி:** அப்படியில்லை. நானும் வருகிறேன்.

**ராம:** எங்கே, நகையை இப்படித் தாருங்கள்.

**அக்னி:** இது எங்கள் தாத்தா காலத்தியதாக்கும். இதைக் கொடுக்க எனக்கொன்றும் இஷ்டமில்லை. சும்மா பணம் செலவழிக்கச் செய்கிறீர்கள். நீங்கள் அமர்த்திய வக்கீல் சரியானவன் இல்லையாம். இங்கிலீஷும் தெரியாதாம்.

**ராம:** அவரைப் போன்ற கை இந்த ஜில்லாவிலேயே இல்லை. அவர் மேலே டிப்டி கலெக்டருக்கு உயிர். இவ்வளவுக்கும் நீங்கள் என்னமோ முயற்சியுடைய மனிதர் என்று நினைத்தேன். ஆனுலும் முதலிலிருந்த உற்சாகம் இப் போது உங்களுக்கு இல்லை. உங்களுக்குப் பணம் செல வழிக்க இஷ்டம் இல்லாவிட்டால் நிறுத்திவிடுவோம். எண்ணெயுள்ளவரைக்கும் தான் விளக்கெரியும். சரி; எனக்கு விடை கொடுங்கள்.

**அக்னி:** அப்படியானுல் அடகு வையுங்கள். (என்று மெது வாக நகையைக் கழிற்றித் தருகிருன்.)

**ராம:** (தன் கையில் வாங்கிக்கொண்டு) இந்தக் கேசிலே எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறேன். எனக்கொரு தம்பிடியாவது கொடுத்தீர்களா?

**அக்னி:** அற்காக என் நகையைத் தட்டிக்கொள்ளப் பார்க் கிறுயா?

**ராம:** நான் உங்களுக்கு எப்படிப்பட்ட வக்கீலை அமர்த்தினேன். அவர் உங்கள் விஷயமாக எவ்வளவு சிரமப்படுகிருர். இதோ அவரே வருகிருர்.

[வக்கீல் நாயுடு வருகிருர்.]

**ராம:** (தனக்குள்) என்னடா இது? இவன் மதுரவாணி வீட்டுக் கொல்லைப் புறத்திலிருந்து வருகிருன். இவன் கூட மதுரவாணியைக் கொஞ்சுகிருனு என்ன? இவனை இந்தக் கேசிலிருந்து விலக்கவேண்டும்.

**நாயுடு:** என்னங்க ராமப்பந்துலு, மீதி பீஸ் கொடுக்கவில்லையே?

**அக்னி:** நீங்கள் எழுதிய டிபென்ஸ் நன்ருக இல்லை என்று புக்தா அவர்கள் சொன்னுர்களாம்.

**நாயுடு:** எவன் சொன்னது? கண் விழியைத் தோண்டி விடுகிறேன். ராமப்பந்துலு அண்ணே! டிபென்ஸ் எவ்வளவு ஜாக்கிரதையாகத் தயார் செய்தேன் என்று பார்த்தீர்களா? என்னிடம் வந்து ஹைகோர்ட்டுக்கு கூட பாயிண்ட்ஸ் எழுதிக்கொண்டு போகிருர்கள். இந்தத் தூசி போன்ற கேஸ் எனக்கொரு பிரமாதமா? நான் சொன்னபடியெல்லாம் பார்ட்டி நடந்தால் நான் எடுத்த கேஸ் தோற்றதென்ற பேச்சே என்றைக்கும் கிடையாது. இந்த டிபென்ஸைக் கேளுங்கள். (கக்கத்திலிருந்து பைல் கட்டை அவிழ்த்து அதிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துப்படிக்கிருன்.) "மனுதார் சொல்லிய சங்கதிகள் எல்லாம் பொய்யேயன்றிக் கொஞ்சங்கூட உண்மையில்லை." பார்த்தீர்களா? இந்த ஒரே பேச்சில் வாதியின் வாதம் எல்லாம் அடிபட்டுவிட்டது. "மனுதார் என்னைப் பிடிக்காததனுல் கெட்ட எண்ணத்துடன் பொய்வூகம் செய்து கேஸ் போட்டாரேயன்றி இதில் கொஞ்சங்கூட உண்மையே இல்லை."

**ராம:** டிபென்சுக்கென்னங்க. அவதானியார் பைசாகூட இல்லை என்கிருர்.

**நாயுடு:** பைசா இல்லாவிட்டால் வேலை எப்படி நடக்கும்.

**ராம:** ஒரு விஷயம். இப்படி வாருங்கள். (ராமப்பந்துலு—நாயுடு தனித்துப் பேசுகிருர்கள்.)

**ராம:** நாயுடுகாரு! உங்கள் வக்காலத்து இவருக்கொன்றும் பிடிக்கவில்லை. நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பீமாராவ் பந்துலுவிடம் வக்காலத்து கொடுத்

திருக்கிருர். உங்களுக்கு இங்கிலீஸ் தெரியாதென்றும் லா தெரியாதென்றும் எவனே கோள் சொல்லியிருக்கிருன்.

**நாயுடு:** ஸ்மாலெட் துரையால் பாராட்டப்பட்ட எனக்கு லா தெரியாமல் இந்தக் குள்ளன்களுக்கா லா தெரியும்? எஸ், நோ என்று ரெண்டு இங்கிலீஷ் வார்த்தைகள் பேசினுல் போதுமா? அதிலும் நம் டிப்டி கலெக்டருக்கு இங்கிலீஷ் வக்கீல் என்ருலே கோபம். அதிலும் பிராமணர்கள் என்ருல் பிடிக்கவே பிடிக்காது. இதை அவர்களெல்லாருக்கும் தெரியப்படுத்துங்கள்.

**ராம:** இனி பிரயோஜனமில்லை. நான் எவ்வளவோ சொன்னேன். கேட்கவில்லை.

**நாயுடு:** அப்படியானுல் என்னை இப்படி அவமரியாதை செய்கிறீர்களா? இந்த பிராமணன் யோக்கியதையை இப்போதே கலெக்டர் பங்களாவுக்குப் போய் அவரிடம் சொல்லுகிறேன்.

**திரை**

## காட்சி—4

**இடம்:** லுப்தாவதானியார் விடுதி.

**லுப்தா:** (வந்து) என்ன கேடுகாலம் வந்தது? என்னைப் போன்ற துரதிருஷ்டசாலி உலகத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். ஏழரை நாட்டுச் சனி வந்ததுமே காசிக்குப் போயிருக்கவேண்டும். முட்டாள்தனம் செய்துவிட்டேன். இப்படித் தலையிலே எழுதியிருக்கும்போது வேறெப்படி நடக்கும்? சௌஜன்யராவ் பந்துலு ஒரு தெய்வம். அவரைப்போன்றவர்கள் இருப்பதால்தான் மழை பெய்கிறது. அவர் சொன்னதுபோலத் தப்பெல்லாம் என்மேலிருக்கும்போது விதியை நொந்துகொள்வது எதற்கு? இவ்வளவு பணமிருந்தும் பண ஆசையால் ஒரே ஒரு மகளைக் கிழவனுக்கு விற்றேன். எனக்கவமானம் வரும்படி விதவையானதும் கெட்ட வழியில் செல்கிருள் என்ருல் அவள்மீது என்ன தப்பிருக்கிறது? புத்தியில்லாத முட்டாளான எனக்குக் கிழடான பிறகு கல்யாணம் எதற்கு? திருட்டுப்பயல் என்று தெரிந்திருந்தும் அந்த ராமப்பந்துலுவை நான் ஏன் நம்பி

னேன்? அந்த மாயக்காரி ஓடிப் போனதென்ன? நகைக்கு இந்தத்தடபுடல் எதற்கு? அந்த இன்ஸ்பெக்டர் கொலே செய்தோம் என்று எங்களைப் பிடிப்பதெதற்கு? எல்லாம் கலிகால கோலம். கலி நிறைந்துவிட்டது. ஒரு சௌஜன்யராவ் பந்துலுமட்டும் சத்திய சந்தனுக எனக்குத் தோன்றுகிருர். வக்கீல்கள், போலீஸ்காரர்கள் —பச்சைத் திருடர்கள். அவர் மட்டும் தன் செல்வாக்கினுல் இந்த ஆபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றியனுல் காசிவாசம் போகிருேம். என்ன அதிசயம்! விதவைகளுக்கு மடம் கட்டியிருக்கிருர்களாம். என்றும் கேட்டதில்லை. மீனுட்சியைப் போய் அந்த மடத்தைப் பார்க்கச் சொல்கிறேன். அவளுக்கிஷ்டம் இருந்தால் அங்கே இருக்கச் சொல்லி வேண்டிய பணம் அவளுக்குத் தருகிறேன். இல்லையென்ருல் என்னேடு காசிவாசம் தான்.

[ராமப்பந்துலு வருகிருன்.]

**லுப்தா:** நகை கிகை என்று என்னிடம் கேட்டுப் பிரயோஜனம் இல்லை.

**ராம:** அந்த நகையைக் கேட்க வரவில்லை மாமா. அந்த நகை மதுரவாணியினுடையது. உங்களுக்குத் தெரியாதா? அவளும் நீங்களும் என்ன செய்து கொள்வீர்களோ, எனக்குத் தெரியாது. உங்கள் பாடு, அவள் பாடு; நகையை விட்டுத் தள்ளுங்கள். உங்களுக்கு ஒரு பெரிய உதவி செய்ய வந்திருக்கிறேன். உங்களுடைய நிலைமையைப் பார்த்தால் என் மனம் நீராக உருகுகின்றது.

**லுப்தா:** மகாப்பிரபுவே! உனக்குப் பத்தாயிரம் நமஸ்காரங்கள். இனி அந்தச் சிறுக்கிக்கும் பத்தாயிரம் நமஸ்காரங்கள். "ராம நாம தாரகம் பக்தி முக்தி தாயகம். ஜானகி மனே...!"

**ராம:** ராம ராம! என்ன சொன்னீர்கள்? நீங்கள் ஆபத்திலிருக்கும்போது வைராக்கியத்தில் என்ன சொன்னுலும் அதைப் பொருட்படுத்தாமல் உதவி செய்வது என் கடமை. சொல்கிறதைக் காதில் வாங்கிக்கொண்டு பேசுங்கள். முன்னே பின்னே பார்க்கிறதுக்கு இனி நேரமில்லை. விவகாரத்தைச் சூட்சுமமாக பைசல் செய்து கொண்டுவந்தேன். இரண்டு பையினுல் கொலைக் கேசெல்லாம் பனிமாதிரி தொலைந்துவிடும். ஒரு இன்ஸ்பெக்டருக்குமட்டும் போதாது. டிப்டி கலெக்டர் கையில்

கூட தரவேண்டும். உங்களிடம் இப்போது பணம் இல்லே என்ருலும் ஒரு புள்ளியிடம் ஏற்பாடு செய்திருக்கிறேன். பிராம்சரி நோட்டின் பேரில் எவ்வளவு வேண்டுமாஞலும் பணம் தருவான்.

**லுப்தா:** நான் ஒரு தம்படிகூட தரமாட்டேன். ராம நாம தாரகம், பக்தி முக்தி தாயகம், ஜானகீ மஞேஹரம், சர்வலோக நாயகம்.

**ராம:** என் பேச்சைக் கேளுங்கள். எவ்வளவோ முயற்சி செய்து இந்த இடத்தை அமர்த்தினேன். தாசில்தார் உங்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு கேசை இழுத்தடிப்பதாக டிப்டி கலெக்டரிடம் இன்ஸ்பெக்டர் பலமாக சொல்லியிருக்கிருர். கலெக்டர் யோசனையின்பேரில் இன்ஸ்பெக்டர் ரொம்ப மும்முரமாக ஈடுபட்டு சாட்சிகளை எல்லாம் ரெடி செய்துகொண்டிருக்கிருன். கேஸ் ருஜுவாஞல் என்ன ஆகுமோ? யோசித்துக் கொள்ளுங்கள்.

**லுப்தா:** என் விவகாரமெல்லாம் உனக்கெதற்கு?

**ராம:** டிப்டி கலெக்டர் பிராமணர்களை வெறுப்பவன். தாசில்தார் தாலியை முதலில் அறுத்து விடுவான். பிறகு உங்களையும் மீஞட்சியையும் உள்ளே தள்ளிவிடுவான். தூக்குத் தண்டனை நிச்சயம். எனக்கும் இன்ஸ்பெக்டருக்கும் இருக்கிற சினேகிதத்தால் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்பவைத்தேன். ஆகையால் என் பேச்சைக் காதில் கேட்டு இந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுங்கள்.

**லுப்தா:** என்னைத் தொந்தரவு செய்யாமல் உன் வேலையைப் பார்த்துக்கொண்டு நீ போ. "ராமநாமதாரகம், பக்தி முக்தி தாயகம், ஜானகீ மஞேஹரம், சர்வலோக நாயகம்!"

**ராம:** உன்னைப்போன்ற கார்க்கோடகனை எங்கும் பார்த்ததில்லை. உனக்கென்ன பெரிய மனுஷன். உன் வயிற்றில் பிறந்த மீஞட்சி, பாவம் சிறு குழந்தை—அவளுக்குத் தூக்குக் கயிறு நிச்சயம் என்ருல், பாழும் பணத்திற்காக முன்னும் பின்னும் பார்க்கிருய். நினைத்தால் என் இருதயம் சுக்குநூருக வெடித்திடும் போலிருக்கிறது.

[சௌஜன்யராவ் பந்துலு வருகிருர்.]

**ராம:** தாங்கள் தருமமே சொரூபமானவர்கள். லுப்தாவதானியிடம் பற்றற்ற கருணையிஞலே இந்தக் கேசில்

முயற்சி செய்கிறீர்கள். கேஸ் ரொம்ப அநியாயம். கொஞ்சங்கூட உண்மை இல்லை. நீங்கள் விரும்பினால் சரியான சாட்சி...

**சௌ:** உன் சங்கதி எனக்குத் தெரியும். வெளியே போ.

**ராம:** தாங்கள் பெரியவர்கள். நல்லவர்கள். ஆனாலும் ஒருமையிலே கூப்பிட...

**சௌ:** நட.

[ராமப்பந்துலு போகிறான்.]

**சௌ:** இந்தத் திருடனைத் திரும்பி ஏன் வரவிட்டீர்கள்?

**லுப்தா:** போகச் சொன்னால் போகமாட்டேனென்கிறானே.

**சௌ:** எதற்காக வந்தான்?

**லுப்தா:** இன்ஸ்பெக்டருக்கும் டிப்டி கலெக்டருக்கும் லஞ்சம் கொடுக்கச் சொன்னான்.

**சௌ:** டிப்டி கலெக்டர் லஞ்சம் வாங்கமாட்டார். அவர் எனக்கு சிநேகிதர். எனக்குத் தெரியும். லஞ்சம்கிஞ்சம் நீங்கள் கொடுத்தால் உங்கள் கேசில் நான் வேலை செய்ய மாட்டேன்.

**லுப்தா:** நீங்கள் சொன்னதற்கு மாறாக நடந்தால் செருப்பாலடியுங்கள். எனக்குக் கடவுள் மாதிரி நீங்கள் கிடைத்தீர்கள். பாலிலே முக்கினாலும் நீரிலே முக்கினாலும் நீங்களே கதி என்று நம்பி இருக்கிறேன்.

**சௌ:** நீங்கள் குற்றம் செய்யவில்லையென்று எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. உண்மையைக் கண்டுபிடிக்க ரொம்ப முயற்சி செய்கிறேன். ஆனாலும் அந்தக் குண்டூர் சாஸ்திரிகள் யாரோ தெரியவில்லை. நீங்கள் ஞாபகப்படுத்திச் சொன்ன முக அடையாளத்தைக் குண்டூருக்கு எழுதி அனுப்பினேன். அங்கே அப்படிப்பட்ட ஆள் யாருமே இல்லை என்று பதில் வந்தது.

**லுப்தா:** அதென்ன மாயமோ அய்யா! உங்கள் உதவியினால் இந்தக் கண்டத்திலிருந்து தப்பி நானும் என் மகளும் இந்த ஆபத்திலிருந்து விடுபட்டால் என் பணம் முழுதும் உங்கள் காலடியில் வைத்துவிட்டுக் காசிக்குப் போகிறேன்.

**சௌ:** உங்கள் பணம் எனக்கு வேண்டாமென்று உங்களிடம் முன்பே சொல்லியிருக்கிறேன். நான் சொன்ன சொல் உங்களுக்குப் பிடித்து, கிழவர்கள் கல்யாணம் செய்யக் கூடாது, கன்யா சுல்கம் தவறு என்று இப்போதாவது

உங்களுக்கு நம்பிக்கை பிறந்தால் இப்படிப்பட்ட கெட்ட ஆசாரங்களைச் சீர்திருத்த ராஜமஹேந்திரவரத்தில் ஒரு சபை இருக்கிறது. அந்தச் சபைக்குக் கொஞ்சமோ கூடவோ உங்களால் இயன்ற அளவு நன்கொடை தாருங்கள். விதவைகள் மடத்துக்கு உங்கள் பெண்ணை அனுப்புவது நல்லதென்பது என் கருத்து.

**லுப்தா:** தங்கள் சித்தம். செய்த தப்புகளை நினைத்து உள்ளம் புண்ணாகிறது. புத்தி வந்ததய்யா!

**சௌ:** அந்தக் குண்டூர் சாஸ்திரிகள் எப்படி இருப்பான்? நன்றாக ஞாபகம் செய்து சொல்லுங்கள்.

**லுப்தா:** (ஆலோசித்து) ஞாபகமில்லை.

**சௌ:** நன்றாக ஞாபகம் செய்துகொண்டு சொல்லுங்கள்.

**லுப்தா:** இல்லைங்க.

திரை

## காட்சி—5

இடம்: விசாகபட்டினம்.

[மதுரவாணி விடுதிக்கு எதிர்த்த தெருக் கோடியில் கரடக சாஸ்திரியும் சிஷ்யனும் வருகின்றனர்.]

**கரட:** நீ அந்த நகையை அவன் தலையிலே போடாமல் கொண்டுவந்ததால்தான் இந்தக் கஷ்டமெல்லாம் வந்ததாகத் தெரிகிறது.

**சிஷ்:** மதுரவாணியின் நகையை மதுரவாணியிடமே தந்ததொரு தப்பா?

**கரட:** தப்பில்லையா? நீ கொடுத்தால் அவள் ஒப்புவாளா? உடனே நகையைக் கொண்டுவருகிறாயா வெளியே போகிறாயா என்று ராமப்பந்துலுவின் கழுத்தை நெரித்திருப்பாள். அவன் அவள் தொந்தரவைச் சகிக்க முடியாமல் லுப்தாவதானியின் மேல் கொலைக் கேஸ் என்று எடுத்துவிட்டான். அந்தக் கிழவனுக்குத் தண்டனை கிடைத்தால் பிரம்மஹத்தி என் கழுத்தைத் தானே சுற்றிக் கொள்ளும். நீ அந்த நகையை அவர்கள் வீட்டிலேயே விட்டுவைத்தால் எனக்கிந்தச் சங்கடமெல்லாம் வராதல்லவா?

**சிஷ்:** விதவைச் சிறுக்கி கழுத்தை நெரிக்கும்போது நகை, கிகை என்று யாருக்கு ஞாபகம் வருகிறது. மீனாட்சியின் கையைக் கடித்துவிட்டுப் பெட்டியைத் திறந்து, பவுனை எடுத்துக்கொண்டு பட்டென்று சுவரைத் தாண்டினேன். இரண்டாயிரம் ரூபாய் நீங்கள் வாங்கினீர்கள் அல்லவா? எனக்குக் கல்யாணத்தில் வைத்த நகையைக் கொண்டு வந்ததற்காக என்மேல் தப்பு சொல்கிறீர்களா? அந்த நகையாவது கிடைத்ததா? பார்த்துக் கொண்டிருக்கும்போதே மதுரவாணி பிடுங்கிக்கொண்டாள்.

**கரட:** நான் ஹாசியக்காரன்தான் ஆனாலும் இந்தக் கேஸ் தடபுடலில் என் ஹாசியமெல்லாம் ஒடுங்கிவிட்டது. ஆகையால் இனிமேல் ஹாசியத்தை விடு. நான் வாங்கிய ரூபாயை இப்போதுகூட லுப்தாவதானிக்கு அனுப்பிவிடவே நினைக்கிறேன். அதைத் தவிர அபகரிக்கலாமென்று நினைக்கவில்லை. மதுரவாணியை எப்படியாவது வசம் செய்து நகையைக் கேட்டு வாங்கிக்கொண்டு, அந்த நகையும் இந்தப் பணமும் அனுப்பிவிட்டால் கொலை உண்மையல்லவென்று புரிந்துகொள்வார்கள். எனக்கிந்த பிரம்மஹத்தியும் விலகிவிடும்.

**சிஷ்:** உங்கள் சினேகிதர் சௌஜன்யராவ் பந்துலுவிடம் உண்மையைச் சொல்லிவிடக் கூடாதா?

**கரட:** எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதைதான். சௌஜன்யராவ் பந்துலு சத்தியசந்தர். நேர்மையானவர். அவரிடம் உள்ளதைச் சொன்னால் அவர் உண்மையைக் கோர்ட்டாரிடம் சொல்லிவிடுவார். அதன் பிறகு லுப்தாவதானியாரின் கழுத்துக்கிருந்த தூக்குக் கயிறு நம் கழுத்திலே விழும்.

**சிஷ்:** 'நம்' என்கிறீர்களே என்ன?

**கரட:** தவறிச் சொல்லிவிட்டேன். ராமப்பந்துலு ஊருக்குப் போன செய்தி நிஜந்தானா?

**சிஷ்:** நிஜந்தான்.

**கரட:** அவன் கண்ணிற்பட்டால்...

**சிஷ்:** பட்டால்...?

**கரட:** ஒன்றுமில்லை. மதுரவாணி நகையை நமக்கு இரவல் கொடுக்க ஒத்துக்கொண்டால் ஆஞ்சநேயஸ்வாமிக்குப் பத்து சேர் நெய் தீபாராதனை செய்கிறேன்.

**சிஷ்:** வயிற்றுக்குப் போகவேண்டிய நெய்யை வத்தியிலே எரிக்கிறது எனக் கொன்றும் பிடிக்கவில்லே. வேறே தாவது நேர்ந்து கொள்ளுங்கள்.

**கரட:** ஹாசியத்தை நிறுத்து. சலித்துவிட்டது.

[போகிருர்கள்.]

## காட்சி—6

இடம்: மதுரவாணி விடுதி அறை.

[மதுரவாணி நாற்காலியில் அமர்ந்திருக்கிருள். கரடக சாஸ்திரி, சிஷ்யன் இருவரும் வருகின்றனர். மதுரவாணி நிற்கிருள்.]

**மதுர:** குருவுக்கு ஆயிரம் நமஸ்காரங்கள். சிஷ்யனுக்கு ஒரு சிறு முத்தம்.

[சிஷ்யனே முத்தமிடுகிருள்.]

**கரட:** உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு. என் மாப் பிள்ளையைக் கெடுக்காதே.

**மதுர:** மாப்பிள்ளே யார்?

**கரட:** ஜெயிலிலிருந்து வந்த பிறகு கல்யாணமா? அல்லது கல்யாணம் செய்து கொண்ட பிறகு ஜெயில் பிரவேசமா?

**சிஷ்:** ஜெயில் என்னங்க?

**கரட:** சும்மா விளையாட்டுக்குச் சொல்கிருள்.

**மதுர:** பாவம். இந்தச் சிறுபிள்ளைக்கு உள்ள நிலைமையைச் சொல்லுங்கள். தன் பந்துக்களையாவது பார்த்து விட்டு வரட்டும்.

**சிஷ்:** (கரடக சாஸ்திரியிடம்) குடி கெடுத்து விட்டீர்களா?

**மதுர:** கெடுப்பதென்ருல் கொஞ்சநஞ்சமா?

**கரட:** உனக்குக் கோடிப் புண்யமுண்டு. விளையாடாதே. இப்படி யெல்லாம் சொன்னுல் சிறுவர்களுக்குப் பெரியோர்களிடம் இருக்கும் பக்தி குறைந்துவிடும்.

**சிஷ்:** நான் என்ன தப்புச் செய்தேன்? குருநாதர் சொன்ன வேலையைச் செய்தேன். அதில் வரும் லாப நஷ்டங்களுக்கு, அவர்தான் பொறுப்பு.

**மதுர:** யார் செய்தீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால், உங்களிருவரையும் ஏட்டையா வலைவீசித் தேடிக் கொண்டிருக்கிறான். கிடைத்ததுமே ஜெயிலில் தள்ளுவான் என்பது மட்டும் நிச்சயமாகத் தெரியும்.

**சிஷ்:** இதுதானா எனக்குச் செய்து வைக்கிற கல்யாணம்?

**கரட:** ஏதாவது விபரீதம் நேர்ந்தால் உன் உயிருக்கு என் உயிரைத் தத்தம் செய்கிறேன்.

**மதுர:** ஏதாவது வந்தால் குரு சிஷ்யர் இருவருக்குமே ஏக காலத்தில் வருமே தவிர, ஒருவருக்கு வந்து ஒருவர் தடுப்பதாக இருக்காது. எப்போதாவது உங்கள் இருவர் உயிருக்கும் இரக்கப்பட்டு நான் தலையிட்டால் தான் உண்டே தவிர மற்ற யாராலும் முடியாதென்றே நினைக்கிறேன்.

**சிஷ்:** எங்கள் குருவுக்கென்ன? அவர் பெரிய மனிதர். எது வந்தாலும் சமாளிக்க முடியும். நான் புண்ணியபாவம் தெரியாத சிறுபிள்ளை. என் உயிருக்கு உன் உயிரை ஈடுகொடுத்தாவது என்னைக் காப்பாற்றினால் சாஸ்வதமான புகழ் கிடைக்கும்.

**மதுர:** உன் குருவை விட்டுவிட்டு என்னிடம் சிஷ்யனாக இருக்கிறாயா?

**சிஷ்:** இதோ இந்த நிமிஷமே விட்டுவிடுகிறேன். (கன்னத்தில் காற்றை நிரப்பிக் கைப்பிடியால் தட்டி ஊதி) உங்கள் உறவு இதோடு சரி; இனி பெண் வேஷம் இந்த ஜன்மத்தில் போட மாட்டேன்.

**மதுர:** நாடகத்தில் கூட போடமாட்டாயா?

**சிஷ்:** இனி நாடகம் கீடகம் எனக்கு வேண்டாம்.

**மதுர:** என்னிடம் சிஷ்யனாக இருக்கவேண்டுமானால் என்னென்ன செய்ய வேண்டும் தெரியுமா?

**சிஷ்:** தண்ணீர் இறைக்கிறேன்; சமையல் செய்கிறேன்; துணிமணிகள் துவைக்கிறேன். ஆனாலும் நான் பிராமணன் அல்லவா? காலைப் பிடித்துவிடச் சொல்ல மாட்டாயே?

**மதுர:** (விழுந்து விழுந்து சிரித்து) இதுதானா உன் குருவிடம் நீ செய்யும் சிஷ்யத்துவம்?

**சிஷ்:** மறந்து விட்டேன். ஊறலெடுத்தால் சொறிந்து விடுவதும் உண்டு.

**மதுர:** (சிரித்து) ஓட்டினுலா?

**சிஷ்:** எந்த வேலை செய்யச் சொன்னுலும் அந்த வேலை செய்கிறேன்.

**மதுர:** என்னை முத்தமிடச் சொல்லும்போதெல்லாம் முத்தமிடவேண்டும்.

**சிஷ்:** சரி.

**கரட:** அவன் சிறு பையன். அவனை ஏன் கெடுக்கிருய்? அந்த சிஷ்யத்துவம் எதுவோ அதை அவன் சார்பிலும் என் சார்பிலுமாக நானே செய்கிறேன். முடிந்தால் எங்களைக் காப்பாற்று.

**மதுர:** குரு சிஷ்யனுனன். சிஷ்யன் குருவானுன். நீங்கள் சிஷ்யனுக வேண்டுமானுல் ஸ்கூல் சம்பளம் கொடுக்க வேண்டும்.

**கரட:** பூனைக்குக் கொண்டாட்டம். எலிக்குத் திண்டாட்டமாம்.

**மதுர:** நீங்களா எலி?

**கரட:** ஆம்.

**மதுர:** நீங்கள் எலியில்லை. பெருச்சாளி. உங்கள் சிஷ்யன் எலி.

**கரட:** போகட்டும். அவனையாவது காப்பாற்று.

**மதுர:** அதுதான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.

**கரட:** புத்தியும் புத்தியும் சேர்ந்தால் காப்பாற்றும். உன் ஆலோசனை எதுவோ கொஞ்சம் என் காதில் போட்டால் என் ஆலோசனையும் கூடச் சொல்கிறேன். கலந்து கொண்டு செய்வோம்.

**மதுர:** உங்கள் யோசனையை முதலில் சொல்லுங்கள்.

**கரட:** வேறென்றும் இல்லை. நான் வாங்கிய இரண்டாயிரம் ரூபாயும் அந்த நகையும் போஸ்ட் மூலம் குண்டூர் சாஸ்திரிகள் பேரில் லுப்தாவதானிக்கு அனுப்பி விடுகிறேன். அதோடு கொலைக்கேஸ் பொய் என்று சௌஜன்யராவ்பந்துலு தெரிந்து கொள்வார். அதன் பிறகு தெய்வாதீனம்.

**மதுர:** நகை உங்களுக்கு எப்படி வரும்?

**கரட:** நீ தயவு செய்தால்!

**மதுர:** (மூக்கில் விரலைவைத்து) ஆச்சரியம். பிராமணர்கள் எது வேண்டுமானுலும் செய்வார்கள்.

கரட: என்ன அப்படிச் சொல்கிறாய்?

மதுர: என் நகையைத் திரும்ப என் கண்ணாரப் பார்ப்பது எப்படி?

கரட: சௌஜன்யராவ் பந்துலு உன் பொருளை உன்னிடமே தந்து விடுவார். அவர் ரொம்ப நியாயமான மனிதர்.

மதுர: அவ்வளவு நல்லவரா?

கரட: அதற்குச் சந்தேகமென்ன?

மதுர: எவ்வளவு நல்லவர்?

கரட: அவ்வளவு நல்லவர் இந்த உலகத்திலேயே வேறொருவர் இல்லை.

மதுர: அவரை நான் பார்க்க வேண்டும் போலிருக்கின்றது. என்னை அழைத்துக் கொண்டு போகிறீர்களா?

கரட: என் மதிப்பென்னவது? அவர் தாசிகளைப் பார்க்க மாட்டார்.

மதுர: பிரம்மச்சாரி போலிருக்கிறது.

கரட: இங்கிலீஷ் படித்த சிலருக்கு இந்தப் பைத்யம் பிடித்திருக்கிறது. ஆனாலும் அவர்களில் இடம்பொருளேவலுக்கு ஏற்பப் பல தினுசுகள் இல்லாமல் போகவில்லை.

மதுர: சௌஜன்யராவ் பந்துலு எந்த ரகம்? கிரீசம் எந்த ரகம்?

கரட: என்ன பொருத்தம் பார்த்தாய்? நாய்க்கும் பசுவுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் அவனுக்கும் இவருக்கும் இருக்கிறது. சௌஜன்யராவ் பந்துலு மனம் வாக்கு காயம் மூன்றாலும் பிரமச்சாரி. தாசி என்று அவர் எதிரே வாய்தவறிச் சொன்னாலும் கண்டிப்பார். அவரைப் போன்ற சுத்தமானவர்களைப் பார்ப்பது அரிது. மற்றவர்கள் எல்லாம் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு பிரம்மச்சாரிகள். சிலர் பகலில் * பிரம்மச்சாரி. ராத்திரியில் † நான்பிரம்மச்சாரி. சிலர் சொந்த ஊரிலே பிரமச்சாரி. அயலூரில் நான்பிரம்மச்சாரி. சிலர் உடற்கட்டு இருக்கும்போது நான்பிரம்மச்சாரி. உடல் கெட்ட பிறகு பிரம்மச்சாரி. சிலர் வாழ்ந்திருக்கும் வரை நான்பிரமச்சாரி. செத்த பிறகு பிரமச்சாரி. சில அதிர்ஷ்டசாலிகள் செத்தபிறகும் நான் பிரம்மச்சாரிகள்தான். அதாவது யக்ஞம் செய்து பரலோகத்தில் போகம் அனுபவிக்க டிக்கெட்டுகள்

* Antinach † Pronach,

வாங்கிக் கொள்கின்றார்கள். என்னைப் போன்ற சொற்ப அறிவுள்ளவர்கள் முடியாதபோதெல்லாம் பிரம்மச் சாரிதான். சிலர் என்னேரமும் பேச்சில் மட்டும் சூரர்கள். அதில் கிரீசம் தலைமையானவன். நான்...

**மதுர:** உங்கள் யோக்கியதையைச் சொல்லவேண்டுமா? ஆனாலும் ஏட்டையா சொல்வதைப் பார்த்தால் சௌஜன்யராவ் பந்துலு லுப்தாவதானியைக் காப் பாற்ற பகீரதப் பிரயத்தனம் செய்வதாகத் தெரிகிறது. என்ன காரணம்?

**கிரட:** மீன் நீந்துவதற்கும் குருவி பறப்பதற்கும் என்ன காரணமோ அதே காரணம்தான்!

**மதுர:** பரோபகாரம் அவருக்கு சகஜமான குணந்தானா?

**கரட:** ஆமாம்.

**மதுர:** நீங்கள் எதற்கும் கொஞ்சம் அந்த நீச்சல் பறத்தல் எல்லாம் கற்றுக்கொள்ளக் கூடாது?

**கரட:** நீ சொல்வது புரியவில்லை.

**மதுர:** இந்தக் கேசில் உண்மை எதுவோ அதை சௌஜன்ய ராவ் பந்துலுவிடம் சொல்லி நீங்கள் கூட கொஞ்சம் பரோபகாரம் செய்யக்கூடாதா?

**கரட:** நல்ல யோசனை சொன்னாய்! தனக்குப் போகத்தானே தானம்! தனக்கு நீந்தத் தெரிந்தால்தானே பிறரையும் கரை ஏற்ற முடியும்? உண்மையைச் சொன்னால் பந்துலு என்ன சொல்வார் என்றுனக்குத் தெரியுமா? 'சாஸ்திரி களே, நீங்கள் குற்றம் செய்தீர்கள். நான் என்ன செய்ய முடியும்? உங்களுக்காக ரொம்ப வருத்தப்படு கிறேன்' என்று சொல்லி வருந்திக் கொண்டே போலீ ஸாரிடம் சொல்லி ஜெயிலுக்கு அனுப்பி வைப்பார். ஜெயிலிலிருந்து திரும்பி வரும்வரை என் மனைவிக்கு மாசம் பத்திருபது ரூபாய் இரக்கப்பட்டுக் கொடுத்து வருவார். இப்படிப்பட்ட ஆபத்தில்லாமல் காரியத்தை முடிக்கத்தான் இந்த ஏற்பாட்டைச் சொன்னேன்.

**மதுர:** சரிதான். சௌஜன்யராவ் பந்துலு நல்லவர். ஆகை யால் அவர் கைக்கு வந்தால் என் நகை எனக்குக் கிடைக் கும். ஆனால் லுப்தாவதானி அந்த ரூபாயையும் நகை யையும் பெட்டியில் வைத்து மூடிக்கொண்டு பேசாமல் ஊமைமாதிரி இருந்து விட்டால் என்ன செய்வது?

**கரட:** அந்த நகையின் விலையை நான் தந்து விடுகிறேன்.

**மதுர:** தாங்கள் ஒருவேளை ஜெயிலுக்குப் போய்விட்டால் எனக்கு பிறகு யார் நகைக்குரிய பணத்தைத் தருவார்கள்? ஆகையால் அந்த நகை திரும்பி வரும்வரைக்கும் உங்கள் சிஷ்யனை என்னிடம் அடகு வையுங்கள்.

**கரட:** அப்படியே.

**சிஷ்:** உங்களுக்கென்ன நஷ்டம்? என் கல்யாணம்...?

**கரட:** வாக்கு தவறுவேனா?

**சிஷ்:** நீங்கள் ஒரு வேளை ஜெயிலுக்குப் போனால்...?

**மதுர:** குருவுக்குத் தகுந்த சிஷ்யனாவாய்.

**கரட:** அவ்வளவு அவசரமானால் உன் கல்யாண விஷயத்தை என் மனைவியிடம் அரேன்ஜ்மெண்ட் செய்துவிட்டுப் பிறகு போகிறேன்.

**சிஷ்:** என்னவோ! பெரிய சத்தியம்தான் செய்தீர்கள்.

**கரட:** மதுரவாணி! கொஞ்சம் சிரமம் பார்க்காமல் நகையைக் கொண்டு வரமாட்டாயா?

**மதுர:** என்ன அவசரம் போகிறது?

**கரட:** ஏட்டாவது ராமப்பந்துலுவாவது வந்துவிட்டால் என் குடி முழுகிவிடும்.

**மதுர:** முழுகிவிட்டால் மிதக்கச் செய்கிறேன்.

**கரட:** உனக்கவ்வளவு திறமை இருக்கத்தான் செய்கிறது.

[மதுரவாணி உள்ளே போகிறாள்.]

**கரட:** அவள் சொன்னதெல்லாம் செய்து கொண்டிருக்காமல், சமாளித்துக் கொண்டிரு. ஏதாவதிருந்தால் என் காதில் சொல்லிக் கொண்டிரு.

**சிஷ்:** யாரிடம் இருக்கிறேனோ அவர் சொல்வதைத்தான் நான் செய்வது வழக்கம். நீங்கள் எதற்காக என்னைப் பெண்வேஷம் போடச் சொல்லிக் கல்யாணம் செய்து வைத்தீர்கள்?

**கரட:** யானைக்கும் அடிசறுக்கும். எப்படிப்பட்டவனுக்கும் ஒருதடவை கால் வழுக்குவது சகஜந்தானே.

[மதுரவாணி நகையுடன் வருகிறாள்.]

**மதுர:** அடகு வைத்த பொருள் தப்பிக்கொண்டு ஓடிவிட்டால்...? நாய் நரிகளா சங்கலி போட்டுக் கட்டி வைத்திருக்க?

**கரட:** உன் வலையில் விழுந்த பிராணி பிறகு தப்பித்துக் கொண்டு போவதெப்படி? அதற்கிருக்கிற வலிமை யானைச் சங்கிலிக்குக்கூட இல்லையே.

**மதுர:** வலையில் முத்துச் சிப்பி விழுந்தால் லாபமே தவிர நத்தைக் கூடுகள் விழுந்தால் சுமைதான் மிச்சம்.

**கரட:** எப்போதும் பணம் பணம்தானா? சினேகம் அன்பு என்பதிருக்காதா?

**மதுர:** சினேகம் உங்களைப் போன்றவர்களிடம்தான். அதனால்தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த நகையை உங்களிடம் தந்திருக்கிறேன். எங்கம்மா பார்த்தால் சும்மா விடுவாளா? இனி அன்பு? வாழ்க்கை என்பது இருந்தால்தான் அன்பு அழகைத் தருகிறது. முடவன் கொம்புத்தேன்மேல் ஆசையும், தாசியின் காதலும் மனதிற்குள்ளேயே புதைய வேண்டும். சில நாட்களுக் கிருக்கும் இளமையை ஜீவனாதாரமாகக் கொண்டுள்ள எங்கள் குலத்திற்கு காதல் ஒரே ஒரு இடத்தில்தான்.

**கரட:** எங்கே?

**மதுர:** தங்கத்தில். சிங்காரத்தால் கெட்ட அழகைத் தங்கந் தானே மீட்டித் தர முடியும்? அந்தத் தங்கத்தை உங்களுக்குத் தாரை வார்த்த பிறகும் என் சினேகத்தைப் பற்றிச் சந்தேகம் எதற்கு?

**கரட:** உன் சினேகத்தைச் சொல்லவேண்டுமா? ஆனாலும் உன் இளமை, சிங்காரம் தெய்வ ஸ்திரீகளுக்கு மாதிரி சாஸ்வதமாக இருக்கும்.

**மதுர:** என் தாயின் புண்ணியத்தால் அன்று அவள் என் காதில் புத்திமதிகள் சொல்லிக் கொண்டே இருந்திரா விட்டால், உங்களைப்போன்ற வித்வான்களின் பேச்சில் மயங்கி இப்போதைக்கு ஊர்த் தாசிகளைப் போலக் கெட்டுப் போயிருக்க மாட்டேனா?

**கரட:** உன் தாய் எப்படிப்பட்ட புத்திசாலி? அவளது முயற் சியால்தான் நீ கல்வி, அழகு இரண்டிலும் சிறந்து விளங்குகிறாய்.

**மதுர:** இதைவிட, குடியானவப் பெண்ணாக பிறந்து கணவனுடைய தோட்டத்தில் கத்திரிச் செடிகளுக்கும் மிளகாய்ச் செடிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சி உயிருள்ள வரைக்கும் காப்பாற்றும் தன்னவர் என்றிருப்பார் களல்லவா?

கரட: என்ன அப்படிச் சொல்கிறாய்! மதுரவாணி என்று ஒரு வேசிகுல சிகாமணி இந்தக் கலிங்க நாட்டில் இல்லாது போனால் கடவுள் சிருஷ்டிக்கே எத்தகைய குறை வந்திருக்கும்?

மதுர: சிருஷ்டிக்குக் குறை வந்தாலும் வராவிட்டாலும் இப்போதுள்ள சிக்கலில் உங்களைப் பொறுத்தமட்டிலு மாவது குறை வந்திருக்கும்.

கரட: எங்களைக் காப்பாற்ற உன் ஆலோசனை எதுவோ சொல்லவில்லையே.

மதுர: என்னை சௌஜன்யராவ் பந்துலுவிடத்திற்கு அழைத்துக் கொண்டு போவதற்கு நீங்கள் ஒப்ப வில்லையே.

கரட: அவர் உன்னையும் என்னையும் வீட்டிலிருந்து கம் பெடுத்து விரட்டி யடிப்பார்.

மதுர: முன்கோபியா?

கரட: அவருக்குக் கோபமென்ற பேச்சே கிடையாது.

மதுர: அப்படியானால் பயமெதற்கு?

கரட: கெட்டவர்களிடம் செருப்படிகூடப் படலாம். ஆனால் நல்லவர்களிடம் வசவுமட்டும் வாங்குவது மிகவும் கஷ்டம்.

மதுர: புதிய ஒரு விஷயம் இன்று எனக்குத் தெரிந்தது. சிருஷ்டிக்கெல்லாம் அழகைக் கொண்டுவந்த மதுரவாணி என்னும் வேசிகுல சிகாமணி கிரீசம்போன்ற நாய்களின் சேர்க்கைக்குத்தான் தகுந்தவளாக இருந்தாளன்றி, சௌஜன்யராவ் பந்துலுபோன்ற உத்தம புருஷர்களைப் பார்ப்பதற்குக்கூடத் தகுதி படைத்திருக்கவில்லை. ஊம். கிரீசம் என் வீட்டில் அடிவைத்ததற்காக உங்கள் தங்கையின் வீட்டில் அடியெடுத்து வைக்கத் தகுதியில்லை என்று நீங்கள் கருதுகிறீர்கள். தங்களைப் போன்ற பண்டிதோத்தமர்கள் மட்டும் காரியம் கைகூடவேண்டி ஊரைத் தேடி வந்து மதுரவாணிக்கருகிலே சுற்றலாம் போலிருக்கிறது. அப்படியானால் டிப்டி கலெக்டர்கூட நாய்தானா?

கரட: லஞ்சம் வாங்க மாட்டான் என்றாலும் பெண்கள் மீதாசையுண்டு. பெரிய உத்யோகஸ்தன் ஆகையால் சீமை நாய் என்று சொல்வோம். அவனை ஏதாவது வலைக்குள் போட்டாயா என்ன?

மதுர: போட்டால்...?

கரட: பிழைத்துக் கொள்வேன். அவன் உதவியிருந்தால் கேஸ் பனிமாதிரி விலகிவிடும். தெரிந்தது. இதுதான் நீ செய்த யோசனை. எவ்வளவு நல்லவள்!

மதுர: அவன் நாயுடு மூலமாகத் தூது அனுப்பிக் கொண் டிருக்கிறுன்.

கரட: போ, போ, போ! இன்னும் என்ன யோசனை செய் கிருய்? உன் அதிர்ஷ்டமும் என் அதிர்ஷ்டமும் என்ன வென்று சொல்ல?

மதுர: போகும் உத்தேசமில்லை.

கரட: கொன்றுவிட்டாயே. அவன் ஒருவன்தான் எங்களைக் காப்பாற்ற முடிந்தவன்.

மதுர: இனிமேல் ஊர் நாய்களையும் சீமை நாய்களையும் தூரத்திலேயே வைக்க ஆலோசனை செய்து கொண் டிருக்கிறேன்.

கரட: அவரை ஹாசியத்துக்காக சீமை நாய் என்றேனே தவிர, எத்தகைய ரசிகர் என்று நினைத்தாய். கைக்கு எலும்பில்லாத வள்ளல் அவர். ஏட்டுக்குக் குறைந்து விட்டாரா என்ன?

மதுர: பட்டணத்தை விட்டுப் பட்டிக்காட்டுக்குப் போனதுமே உங்கள் கண்ணுக்குச் சுலபமாகி விட்டேன் போலிருக்கிறது. ஏட்டை வேலைக்காரன் மாதிரி திரிய வைத்தேனே தவிர வேறென்றும் இல்லையே. இந்தப் பத்து நாளும் சர்க்கார் ஊழியத்தை விட்டுவிட்டு எனக்கு ஊழியம் செய்தான். அவன் உதவி இல்லாவிட்டால் நீங்கள் அந்த ஊர் எல்லையைத் தாண்டி யிருக்க முடியுமா? இந்தச் சாமியார் தாண்ட முடியுமா? உலகில் எல்லோரும்எவ்வளவு சுயநலவாதிகளாக இருக்கிறுர்கள்!

கரட: தப்பு, தப்பு. கலெக்டரிடம் போகமாட்டேனென்ற தும் மனசு திடுக்கிட்டதால் அப்படிச் சொன்னேன். நீ அந்தக் கிராமம் முழுவதையும் ராணிமாதிரி ஆட்சி செய்ததை நான் இந்தக் கண்ணுரக் காணவில்லையா?

மதுர: நான் கலெக்டரைப் பார்க்க மாட்டேனென்றுல் உங்கள் மனசு திடுக்கிடுவானேன்? என்ன அதிசயம்?

சௌஜன்யராவ் பந்துலு இந்தப் பேச்சைக் கேட்டால் சந்தோஷம் அடைவார் போலிருக்கிறது.

**கரட:** கழுத்தை நெரித்துவிடுவார்.

**மதுர:** அதென்னமோ பார்க்கிறேன்.

**கரட:** பிரம்மஹத்தியை ஏற்கப்போகிருயா என்ன?

**மதுர:** ஆஹா! எத்தகைய பிராமணர்கள். ஆனுலும் போலி செட்டி சொன்னதுபோல எவ்வளவு கெட்டாலும் பிராமணர்கள் பிராமணர்கள்தான். இந்தாருங்கள். (நகையைத் தருகிருள்.) தாரை வார்க்க வேண்டியது தானு?

**கரட:** என்ன சொன்னுய்? பூவில் வைத்து திரும்பவும் வராதா? உன் எதிரே சொல்லக் கூடாதென்ருலும் உன்னைப் போன்ற நல்லவள் யாருமில்லை, கொஞ்சம் குறும்புத்தனமில்லாவிட்டால்...!

**மதுர:** அந்தக் குறும்புதானே உங்களுக்கு உதவுகிறது.

**கரட:** என்ன உதவி? அந்த டிப்டி கலெக்டரை ஒரு தடவை போய்ப் பார்த்து இந்த ஏழை உயிரைக் காப் பாற்றினுல்...

**மதுர:** நிறுத்துங்கள். இனி விஜயம் செய்யுங்கள். (போகும் படி கையால் சைகை காட்டுகிருள். கரடக சாஸ்திரியும் சிஷ்யனும் போய்க் கொண்டிருக்கும் போது) சாஸ்திரி களே!

[கரடக சாஸ்திரி திரும்பி வருகிருர்.]

**மதுர:** உங்கள் மகளை மகேசத்துக்குத் தரப்போகிறீர்களா?

**கரட:** தருகிறேன்.

**மதுர:** அப்படியானுல் எனக்கொரு உறுதிமொழி கொடுப் பீர்களா?

**கரட:** தருகிறேன்.

**மதுர:** இனி அவனை நாடகங்களில் ஆடவைத்துச் சிறுக்கிகள் வீடுகளுக்கு அலைய வைத்துக் கெடுக்காதீர்கள்.

**கரட:** இனிமேல் கெடுக்க மாட்டேன். எனக்கு மட்டும் அக்கறை யில்லையா? (பொடியை உறிஞ்சி) உன்னு டைய சொற்கள் குரு உபதேசம் மதுரவாணி!

**மதுர:** பிராமணர்களில் உபதேசம் அதிகம். செயல்படுவது மிகக்குறைவு. உறுதியாகத்தானு?

**கரட:** உறுதிதான்.

**மதுர:** பிராமணன் ஆகிவிட்டதால் கடவுளின் கண்களை மூட முடியாதென்று நினைக்கிறேன்.

**கரட:** வைவதற்கு இதுதானு சமயம்?

**மதுர:** சித்திரகுப்தனுக்கு லஞ்சம் கொடுக்க முடியுமா? அவனிடம் மதுரவாணியை அனுப்பிச் செய்த பாவங்களை எல்லாம் துடைக்கச் செய்ய முடியாது போலிருக்கிறது?

**கரட:** மதுரவாணி! அவசர வேலைகளிருக்கின்றன. மறந்து போய் விட்டேன். போய் நாளை மறுபடியும் வருகிறேன்.

**மதுர:** (சிரிப்பினுல் நாற்காலியில் சாய்ந்து பின், சிரிப்பை அடக்கிக்கொண்டு) ஒரு நிமிஷம் பொறுங்கள். சிஷ்யா! (சிஷ்யன் வருகிருன்) எங்கே அன்று நீ, ராமச்சந்திரபுர அக்கிரகாரத்தில் ராமப்பந்துலு வீட்டுக்கு வெளியேயும் நானும் மீனுட்சியும் கதவுக்கு இந்தப்புறமும் அந்தப் புறமுமாக இருந்து, கதவை மூடியிருக்கும் போது, விடியற்காலையில் நிசப்தமான நேரத்தில் ஆகாச வாணியைப் போலப் பாடின கிளிப்பாட்டைப் பாடி, உன் மாமாவுக்குப் புத்தி சொல்லு. தன்னுல் ஒரு கிழட்டுப் பிராமணன் உயிருக்கு ஊசலாடும்போது தான் மறைந்து கொள்ளப் பார்க்கிருர்.

**சிஷ்ய:** (பாடுகிருன்.) "சிவந்த மூக்குடைய சிங்காரக் கிளியே!"

**மதுர:** (பிரம்பால் அடிக்கப்போவது போல் நடித்து) சொன்ன வேலையைச் செய்யாவிட்டால் ஜெயில்நிச்சயம்.

[சிஷ்யன், "எத்தனை நாள் வாழ்ந்தாலும்" என்ற பாட்டைப் பாடுகிருன். இரண்டு சரணங்கள் பாடிய பிறகு.]

**கரட:** ரொம்ப அவசரமான வேலையிருக்கிறது. மதுரவாணி! மற்ருெரு தடவை வருகிறேன். (போய்க்கொண்டே) தலைவீங்க உபதேசித்து விட்டாள். நரைத்த மயிர்கள் ஜாஸ்தியாகிவிட்டது. இனி மனதைக் கொஞ்சம் மாற்றிக் கொள்வோம்.

## காட்சி—7

இடம்: *சௌஜன்யராவ் பந்துலு வீட்டில் கச்சேரி அறை.*

*[சௌஜன்யராவ் பந்துலுவும் அக்னிஹோத்ராவதானியும் வருகின்றனர்.]*

**சௌ:** இனி உங்களை மிஞ்சினவர்கள் கிடையாது. தான் பெற்ற மக்களை விற்பது சிஷ்டாச்சாரம் என்கிறீர்களே.

**அக்னி:** ஆகா! எங்கள் அப்பாவின் சகோதரிகள் எல்லோரையும்கூட விற்றார்கள். அவர்கள் எல்லாம் சுமங்கலிகளாகவே செத்தார்கள். எங்கள் தாத்தாவின் சகோதரிகளையும் விற்கத்தான் செய்தார்களாம். இப்போது இந்தப் பாழாய்ப்போன இங்கலீஷ் படிப்பினாலே அந்த அற்பப்பயல் அவளைக் கூட்டிக்கொண்டு போய் விட்டானே தவிர அந்தக் காலத்திலெல்லாம் விதவைகள் எவ்வளவு கற்போடு இருந்தார்கள் தெரியுமா?

**சௌ:** சிறு குழந்தைகளை வயதான முதியோர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் விதவையாகாமால் இருப்பார்களா? சாவதானமாக யோசித்துப் பாருங்கள்.

**அக்னி:** பிராப்தம் போதவில்லையானால் எல்லோருக்கும் வருமுங்க. சிறியவர்களுக்குக் கொடுத்தாலும் பெரியவர்களுக்குக் கொடுத்தாலும் தலையிலெழுதிய எழுத்தை யாராவது மாற்ற முடியுமா?

**சௌ:** நீங்கள் படித்தவர்களல்லவா? பிராப்தம் என்று எந்த மனித ப்ரயத்தனத்தைவிட்டு விட்டீர்கள்? கேஸ் விதிவிட்ட வழியே எப்படியானாலும் ஆகட்டும் என்று வக்கீலை அமர்த்தாமல் நிறுத்தினீர்களா? பெண்களை விற்பது சாஸ்திர விரோதமில்லையா? பணத்துக் காசைப்பட்டுச் சிறு குழந்தைகளைக் கிழவர்களுக்குக் கட்டிக்கொடுத்து விட்டு விதிவிட்ட வழி என்று சொல்வது நியாயந்தானா? சொல்லுங்கள்.

**அக்னி:** இப்போது உங்களில் வரதட்சிணை என்று ஆயிரம் இரண்டாயிரம் வாங்குகிறீர்களல்லவா? கிரீசம் சொன்னதுபோல—அவன் பிண்டத்தைப் பூனைக்கு வைக்க—உங்களில் பெண் குழந்தைகளுக்கு இத்தனை காசு தங்கம் வைக்கவேண்டும், இவ்வளவு வெள்ளி வைக்கவேண்டும் என்று நிச்சயம் செய்துகொள்வது இல்லையா? அது மட்டும் கன்யாசுல்கம் ஆகாதா?

**சௌ:** அப்படிச் செய்வதை நான் நல்லதென்று சொன்னேனு? தப்புதான். கிரீசம் சொன்னதுபோல என்றீர்களே, யாரது?

**அக்னி:** அந்த நீசன் பெயரை என்னெதிரே சொல்லாதீர்கள்.

**சௌ:** ஆகட்டும். உங்கள் இரண்டாவது மகளைத் தகுந்த வரனைப் பார்த்துக் கல்யாணம் செய்துவையுங்கள். என்ன சுகத்தைக் காணக் கிழவர்களுக்குக் கொடுக்கிறீர்கள்? சொல்லுங்கள்.

**அக்னி:** அதெல்லாம் உங்களுக்கெதற்கய்யா? ஓகோ! இதற்குத்தானு என்னைக் கூப்பிட்டீர்கள்? உங்கள் சொந்த விவகாரத்தில் நான் தலையிட்டேனு? என்னுடைய சொந்த விவகாரத்தில் நீங்களேன் தலையிட வேண்டும்?

**சௌ:** அவசரப்படாதீர்கள் அவதானியாரே! எதிர் காலத்தையும் யோசியுங்கள். உங்கள் வயிற்றில் பிறந்த குழந்தையின் சௌக்கியத்தை நினைத்து ஆலோசனை சொல்கிறேனே தவிர என் சொந்த லாபத்துக்காகச் சொல்லவில்லை. பெரிய மகளுக்கேற்பட்ட கதியை கண்ணுரக் கண்ட பிறகாவது கிழவர்களுக்குக் குழந்தைகளைக் கட்டிவைக்கும் முயற்சியை நிறுத்துங்கள்.

**அக்னி:** என் குழந்தையின் பொறுப்பெல்லாம் உங்கள் தலைமேல் போட்டுக்கொண்டு பேசுகிறீர்களே! அந்தத் தொந்தரவெல்லாம் உங்களுக்கெதற்கு?

**சௌ:** என்னை உங்களுடைய சினேகிதனுகச் சேர்த்துக் கொள்ளுங்கள். அயலவனுக நினைக்காதீர்கள். தயவு செய்து என் யோசனையைக் கேளுங்கள். நல்ல குடும்பத்தில் பிறந்த புத்திசாலியான பையனைப் பார்த்து உங்கள் சிறிய மகளைக் கல்யாணம் செய்துகொடுங்கள். இனி, பெரிய மகளை விதவைகள் மடத்திலே சமூக சீர்திருத்த சபைக்காரர்கள் படிப்பு, புத்தி சொல்லிக் கொடுப்பார்கள். உங்கள் வயிற்றில் பிறந்த குழந்தை எங்கே இருந்தாலும் அவள் சுகமாக இருக்கவேண்டுமென்றுதான் தகப்பனுனவன் விரும்பவேண்டும். அவளது சொத்து கொஞ்சம் தங்களிடம் இருக்கிறதல்லவா? அதைப்பற்றி என் சினேகிதரும் விதவா விவாஹ சபைத் தலைவருமான ராமையாபந்துலு எனக்கு எழுதியிருக்கிருர்கள். அந்தச் சொத்து விவகாரங்களை

இழுக்காமல் நீங்கள் அந்தப் பெண்ணை அங்கே அனுப்புவது நல்லது.

**அக்னி:** என்னடா இது! அவன் யார்? இவன் யார்? நீங்கள் யார்? அவள் யார்? என் மகள் என்ன? விதவைச் சிறுக்கி! நாளைக்கு வீட்டுக்குப் போனதுமே சிரார்த்தம் செய்துவிடுகிறேன்.

**சௌ:** இப்போது கோபத்தில் நீங்களிப்படிச் சொன்னாலும் போகப் போக உங்களுக்கே இரக்கம் பிறக்கும். இப்போதே இரக்கப்பட்டால் உங்களுக்கு நான் கொஞ்சம் உதவி செய்ய முடியும்.

**அக்னி:** இரக்கமில்லாமல் என்ன? மனதிற்குள் அழவில்லையா? சொத்துகித்து கேட்டால் மட்டும் தரமாட்டேன். அந்த அற்பனைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் வீட்டுக்கு வந்தால், வீட்டில் வைத்துக்கொள்கிறேன். அவ்வளவுதான்.

**சௌ:** அது இனிமேல் நடக்காது.

**அக்னி:** இது அதைவிட நடக்காது.

**சௌ:** அவள் சொத்தை நீங்கள் கொடுக்காவிட்டால் தாவா ஆகும். அனாவசியமாகச் செலவழிக்கப் போகிறீர்கள்.

**அக்னி:** நான் அக்கிரகாரத்துக் கையாக்கும். தாவா கீவா என்று பயமுறுத்தினால் பயப்படுகிறவனில்லை.

**சௌ:** என் பேச்சைக் கேட்டுச் சொத்தைக்கொடுத்துவிட்டு, கிரீசம்மேல் நடவடிக்கை எடுக்கும் முயற்சியை கைவிட்டு விட்டால் லுப்தாவதானி உங்கள்மீது போட்ட கேசை நிறுத்திவிடுகிறேன். உங்கள் மகள்மீது தயவு தாட்சண்யமில்லா விட்டாலும் உங்கள் நன்மையை யாவது பார்த்துக்கொள்ளுங்கள்.

**அக்னி:** விதவை சிறுக்கியைக் கூட்டிக்கொண்டு போனவன் பக்கமாகவே பேசுகிறீர்களே. என்ன பெரிய மனுசனய்யா? நானு கேசை விட்டுவிடுவேன். அந்த அற்பன் என் கண்ணில் பட்டால் கொலை செய்துவிடுகிறேன். பெரிய பிளீடர் கூப்பிட்டனுப்பினாரே என்று கேசில் என்ன யோசனை சொல்கிறாரோ என்று வந்தேன். விதவைச் சிறுக்கிகளுக்குக் கல்யாணம் செய்துவைக்கும் போதாத காலம் பெரிய மனுசர்களையும் பிடித்துக் கொண்டது.

**சௌ:** ஹுப்தாவதானியார் சார்பில் உங்கள்மீது நடவடிக்கைகளை நானே நடத்தவேண்டியிருக்கிறது. உங்களுக்கு வீணாகப் பணம் செலவாகித் தண்டனையுடன் அபராதம் கூட ஏற்படுமே என்று இவ்வளவு தூரம் சொன்னேன். நல்லதற்கு நீங்கள் பணிந்துபோகிற ஆளாகத் தோன்றவில்லை. ஆகையால் என்னால் முடிந்த அளவு முயற்சி செய்து உங்களுக்குக் கடுந்தண்டனை வரும்படி கேசை நடத்துகிறேன். உங்கள் மகளுடைய சொத்து விஷயமான தாவாகூட நானே நடத்துகிறேன்.

**அக்னி:** உன் வீடு பாழாய்ப்போக...!

**சௌ:** நீங்கள் என்ன சொன்னாலும் நான் கோபிக்கமாட்டேன். வீட்டுக்குப் போய் நன்றாக யோசித்துக்கொண்டு என் உதவி தேவைப்பட்டால் திரும்பி வாருங்கள்.

**அக்னி:** (போய்க்கொண்டே, தனக்குள்) இவனுக்குப் பைத்தியம் போலிருக்கிறது.

(திரை விழுகிறது)

# ஏழாம் அங்கம்

## காட்சி—1

இடம்: விசாகபட்டினத்தின் தெரு.

பைராகி, பின்னே பத்துப்பேர்களுடன் வருகிறார்.]

**ராமண்ணா:** எங்கே இருந்து விஜயம் செய்கிறீங்க குருவே?

**பைராகி:** காசியிலிருந்தப்பா!

**ராம:** எத்தனை நாளாகுது குருவே?

**பைராகி:** காலையில் கங்கையை சேவித்துவிட்டுப் புறப்பட்டோம்.

**ராம:** இவ்வளவு சீக்கிரம் எப்படி வந்தீங்க குருவே?

**பைரா** காற்றை அடக்கி வாயு வேகத்தில் வந்தோம்ப்பா!

**புச்சன்னா:** யோகிகளுக்குச் சித்திகள் இருக்காதாடா? இவர் தாண்டா விஜய நகரத்திலும் சிம்மாசலத்திலும் முந்தாநாள் சிவராத்திரிக்கு ஒரே தடவையில் ஏககாலத்தில் காட்சி தந்தார்.

**லக்ஷ்மண்ணு:** வெள்ளைக்காரன் தந்திக்கம்பிகள் போட்டு விட்டான். ஏககாலத்தில் நிமிஷத்துக்குள் செய்திகளை தேச தேசங்களுக்குப் போகவில்லையா?

**பைராகி:** பாமரர்கள், பாமரர்கள்.

**ராம:** சும்மா இரடா! உனக்கென்ன தெரியும்? முட்டாள் பயலே!

**பைரா:** இந்த ஊர் தீர்த்தப்படித்துறையில் இரண்டு மைல் ஆழத்திலே தர்மராஜா பிரதிஷ்டை செய்த சிவாலயம் வெண்கலக் கோயில் ஒன்றிருக்கிறது. ராத்திரி அந்தத் தெய்வத்தைச் சேவித்துக்கொண்டு நாளைக்கு ராமேஸ்வரம் போகிறோம். சாப்பாடு எங்கே கிடைக்கும்?

**ராம:** இந்த ஊரில் மடமில்லை குருவே! நாங்களெல்லாம் இருக்கும்போது தங்களுக்குக் குறைவென்ன குருவே? காசிச் செய்திகள் என்ன குருவே!

**பைரா:** நாலு நாட்களுக்கு முன்பு விஸ்வேஸ்வரநாதர் கோவிலில் ஒரு தங்கத்தகடு ஆகாயத்திலிருந்து விழுந்தது. அதில் எழுதிய எழுத்து பிராமணர்கள் யாருக்கும் புரியவில்லை. யாம் மனசு வைத்தோம். சித்தர்கள் பாஷையிலே அதில் தங்கம் செய்யும் யோகமும் சாஸ்வதமாக வாழும் காயகல்ப யோகமும் எழுதியிருந்தது.

**ராம:** என்ன ஆச்சரியம். குருவே! என்ன சாப்பிடுவீர்கள்?

**பைரா:** பால் பழம் காய்கனிகள். இந்த விதம் ஒரு மாதம் உட்கொள்வோம். மற்றொரு மாதம் வாயு பட்சணம் செய்கிறோம்.

**ராம:** ஒரு நொடியில் பலகாரம் தயார்செய்கிறோம் குருவே. எங்கள் ராமமந்திரத்திற்கு வருகை தரவேண்டும் குருவே.

**பைரா:** சரி, நட. இந்த ஊர் விசேஷங்களென்ன?

**லக்ஷ:** ஒன்றுமில்லை. ராமச்சந்திரபுர அக்ரகாரத்தில் கிழட்டுப் பார்ப்பான் தன்னுடைய பெண்டாட்டியைக் கொன்றுவிட்டானும். அவனுக்குக் கள்ள சாட்சி சொன்னவர்களுக்கும் தாசில்தாருக்கும் தண்டனையாகிவிட்டதாம்.

**பைரா:** இந்த ஊரில் பாபம் நிறைந்திருப்பதாக தெரிகிறது. இந்த ஊரில் யாம் நிற்கமாட்டோம்.

**ராம:** லக்ஷ்மண்ணு பைத்தியக்காரன் குருவே. அவன் பேச்சை நம்பாதீர்கள். நீங்கள் போய்விட்டால் எங்க

ளைப் போன்றவர்கள் கடைத்தேறுவதெப்படி குருவே? அவர்கள் இந்தக் ஊர்க்காரர்களில்லை.

**புச்ச:** அந்த ஊர்க் கடைக்காரன் இதோ வந்துகொண்டிருக் கிருன்.

**பைராகி:** இந்த ஊரில் குடி அதிகம் போலிருக்குறது. யாம் குடிகாரனுடன் பேசமாட்டோம். அந்தக் கடைக்காரன் வருவதற்குள் இந்தச் சந்து வழியே திரும்பிப் போவோம் வாருங்கள். (கடைக்காரன் ஓடிவந்து சேர்ந்துகொண்டு பைராகியின் மடியில் கையைப் போட்டு பிடித்துக் கொள்கிருன்.)

**கடை:** ரூபாயைத் தந்துவிட்டு அப்புறம் நகருங்கள்.

**பைரா:** என்ன இந்தத் துணிச்சல்? இவன் தாறுமாருகக் குடித்துவிட்டு உளறுகிருன். நான் முதலிலேயே சொல்லவில்லையா, இந்த ஊர்ச் சங்கதியெல்லாமே பாவத்தால் நிறைந்துள்ளது. வேமனு என்ன சொன் ஞன்? "குடிகாரன் கூட்டுறவு கூடவே கூடாது!"

**ராம:** (கடைக்காரனிடம்) அண்ணே! உங்களுக்கு மூளை கெட்டுவிட்டதா? குருவுக்குக் கும்பிடு போட்டுக் கன்னத்தில் போட்டுக்கொள்ளுங்கள்.

**கடை:** குருவுமில்லை; குட்டையுமில்லை. சும்மா இருடா! இவனு குரு? என் கடையில் சாராயம் முழுதும் குடித்து விட்டுப் பணம் கொடுக்காமல் கம்பி நீட்டிவிட்டான்.

**ராம:** உங்களுக்கு மூளை குழம்பிவிட்டதா அண்ணே! அவ ராவது உங்கள் கடையிலே குடிப்பதாவது! காசியி லிருந்து இப்போதுதானே வந்தார்!

**கடை:** வானத்தைப் பிளந்துகொண்டு குதிக்கவில்லையா? (பைராகியிடம்) பணத்தைக் கொடுத்துவிட்டு அப்பாலே போ.

**பைரா:** எங்களைப் போன்ற சாதுக்களிடம் வாதமெதற் கப்பா? யாரைப் பார்த்து யார் என்று நினைத்தாயோ? என்னைப் போன்றுள்ள சாமியார் ஒருத்தன் பைராகி வேஷம் போட்டுக்கொண்டு இந்தத் தேசத்தில் திரிந்து கொண்டிருக்கிருன். சென்ற தடவை யாம் தேச சஞ் சாரம் செய்தபோது அவனைக் கண்டு கண்டித்தோம். உனக்குப் பணத்தின்மேல் ஆசையிருந்தால் ஒரு துலாம் செம்பு வாங்கிக்கொண்டு வா. தங்கம் ஆக்கித் தரு

கிறேன். பாதியைத் தருமம் செய்து பாதியை நீ அனுபவி. இல்லையென்றால் தலை வெடித்துவிடும்.

**ராம:** என்ன பைத்தியக்காரத்தனம் செய்தாயண்ணே! தங்கம் செய்யும் சித்தர்களுக்குப் பணமொரு குறியா? காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**கடை:** சும்மா இரப்பா! உனக்கென்ன நஷ்டம். என் பணமல்லவா போகுது...

[ஹெட் கான்ஸ்டபிள் வருகிறான்.]

**ஹெட்:** என்னங்க குருஜீ! நீங்கள் கிடைத்தது எனக்குத் தெய்வத்தைக் கண்டாற் போலிருக்கிறது. இனி பிழைத்தேன். உங்களிடம் கொஞ்சம் அவசரமான சங்கதிகள் பேசணும். வாருங்கள்.

**கடை:** என் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பிறகு பேசுங்கள்.

**பைரா:** நாலு பேர் நடுவிலே மானத்தை வாங்குவது நியாயந்தானா தம்பி? யோக ரகசியங்களைப் பாமரர்களிடம் வெளிப்படுத்தலாமா?

**கடை:** பணம் ஏமாற்றும் யோகம் என்னிடம் செல்லாது. இதில் ரகசியமென்ன? இந்த யோக ரகசியத்திற்கு எல்லோரும் குருக்கள்தான்.

**பைரா:** பைத்தியக்காரா! பைராகிகளான எங்களுக்குப் பணத்தின்மேல் பற்றிருக்குமா? ஒருவருக்குக் கொடுத்ததுமில்லை; வாங்கியதுமில்லை.

**ஹெட்:** அண்ணே! உன் பணத்தை நான் தருகிறேன். அறிவில்லாமல் பேசாதே! குருஜீயின் கண்ணில் கோபம் வந்தால் நாம் சாம்பலாகி விடுவோம். நீங்களெல்லோரும் போய் வாருங்கள். (பைராகியிடம்) குருவே! கொலைக்கேஸ் கழுத்துக்கு வந்துவிட்டது. ஒரு காரணமுமில்லாமல் அன்றிரவு நாலு ரூபாய் கிடைக்குமென்று நாமந்தக் கிழட்டைக் கலாட்டா செய்தோமா? அதன் பிறகு தாசில்தார் வந்து கன்னபின்னவென்று பயமுறுத்திப் பத்திருவது பிடுங்கிக் கொண்டான். தன்னுடைய நகை கிடைக்கவில்லையென்று ராமப்பந்துலு இன்ஸ்பெக்டருக்கும் போலீஸ் சூப்பிரண்டண்டுக்கும் மனுக்கள் அனுப்பினான். நிஜமாகக் கொலைக்கேஸ் நடந்திருக்க நாங்கள் லஞ்சம் வாங்கி கேஸ் வாபஸ் செய்து விட்டதாக தாசில்தார்மேலும் என்மேலும் ரிப்போர்டு செய்திருக்கிறார்கள்.

பைரா: நாங்களிருக்கும்போது உனக்குப் பயமெதற்கு தம்பி?

ஹெட்: ஆகையால்தானே என் தெய்வமாகக் கிடைத்தீர்கள் என்கிறேன்.

பைரா: உன் பகைவர்களின் வாயைக் கட்டிவிடுகிறேன். அவர்கள் பேரை எழுதிக் கொடு. ஆமாம்; இன்ஸ்பெக்டருக்கு உங்கள்மேல் பிரியம் என்று சொன்னீர்களே!

ஹெட்: இந்தப் பெரிய உத்யோகஸ்தர்களுடைய தயாதாட்சண்யங்கள் ஒரு கணக்கா குருவே? அவர்களுக்கு எவ்வளவு செய்தாலும் அவர்களுக்கு காரக்டு வருகிறதென்றும் பிரமோஷன் வருகிறதென்றும் ஆசை பிறந்தால் மழுங்கிய கத்தியாலே கூடக் கழுத்தறுத்து விடுவார்கள். எங்கள் இன்ஸ்பெக்டருக்கு சூப்பிரண்டாக வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. தாசில்தாருக்கும் அவருக்கும் பெரிய சண்டை. அந்தப் பகை, நடுவிலே இருக்கிற என்னை வாட்டுகிறது.

பைரா: பார்த்துக்கொண்டே இருங்கள். நாளையிலிருந்து திசை மாறிவிடும்.

ஹெட்: உங்கள் தயவு குருவே. சௌஜன்யராவ் பந்துலு என்று ஒரு பெரிய வக்கீல் இருக்கிறார். அவர் எனக்கு ரொம்பவும் உதவி செய்கிறார். கேஸ் தீர்வதற்குச் சாதனம் அவர் ஒன்று சொன்னார். ஆனால், அது கிடைக்காமல்தான் அலை மோதுகிறேன்.

பைரா: என்ன அந்தச் சாதனம்?

ஹெட்: ஓடிப் போன அந்தப் பெண்ணின் தகப்பனார் குண்டூர் சாஸ்திரிகள் என்று ஒருவன் இருக்கிறான். அவன் கிடைத்துவிட்டால் கேஸ் தீர்ந்துவிடும். அவன் எங்கும் தென்படவில்லை.

பைரா: இதென்ன பெரிய வேலை? ராத்திரி அஞ்சனம் போட்டு ஒரு நிமிஷத்திலே கண்டு கொள்வோம்.

ஹெட்: அப்படியே காப்பாற்றுங்கள் குருவே. அந்தப் பையன், அதாவது அந்தப் பெண்—இப்போது எங்கே இருக்கிறாள் என்று பார்க்க முடியுமா குருவே?

பைரா: அதுவும் அஞ்சனத்தில் தெரியும்.

ஹெட்: அவள் ஆணானாலும் பெண்ணானாலும்கூடத் தெரியுமா குருவே?

**பைரா:** பெண் ஆணுக எப்படியாவாள் தம்பி?

**ஹோட்:** (தனக்குள்) சொன்னுல் என்ன ஆபத்து வருமோ? (வெளிப்படையாக) இந்தக் குழப்பத்தால் என் மூளையும் குழம்பிவிட்டது குருவே! தயவு செய்யுங்கள். வீட்டுக்குப் போவோம்.

**பைரா:** இந்த சிஷ்யர்களுக்குக் கொஞ்சம் ஞானேபதேசம் செய்துவிட்டு வருகிறேன். நீங்கள் முன்னே நடங்கள்.

**ஹோட்:** இந்தக் காரியம் முடிந்துவிட்டால் உங்கள் பாதங்களை விடமாட்டேன். காரியம் முடிந்தால் நீங்கள் ஹரித்துவாரத்தில் கட்டுகிற மடத்திற்கு நூற்றுப் பதினுறு காணிக்கை செலுத்துகிறேன்.

[எல்லோரும் போகின்றுர்கள்.]

## காட்சி—2

இடம்: டிப்டி கலெக்டர் கச்சேரி.

[டிப்டி கலெக்டர், வக்கீல்கள், பியூன்கள் முதலியோர் உள்ளனர்.]

**பீமாராவ்:** எனக்கு முன்சீப் கோர்ட்டில் ஒரு கேஸ் இருக்கிறது. ஒரு மனுவை தாக்கல் செய்துவிட்டு விடை பெற்றுக்கொள்கிறேன்.

**கலெக்டர்:** கோர்ட்டாருக்கு அவகாசம் கிடைக்கும்வரை பொறுக்க முடியாத வக்கீல்களெல்லாம் கேசெதற்கு தாக்கல் செய்யவேண்டும்? இது சொன்னபடியெல்லாம் ஆடும் கோர்ட்டென்று நினைத்தீர்களா?

**பீமாராவ்:** உங்கள் மனசு. தங்கள் பிரிடிசெசர்கள் அப்படிக் கடத்திவந்தார்கள்.

**கலெ:** ஆபீஸ் வேலைகள் பார்த்துக்கொண்டு நான் கூப்பிடும் வரை இருங்கள்.

**அக்னி:** (ராமப்பந்துலுவிடம்) என்னங்க, நம் புது வக்கீல் மேல் கோபப்படுகிருர்?

**ராம:** (அக்னிஹோத்ராவதானியிடம்) இந்த அதிகாரிகளின் உண்மை என்னவென்றுல் யார் மீது தயவு வைக்கிருர்களோ, யார் பக்சம் சாதகமாக இருக்கிருர்களோ அவர்கள் மேல் கோபப்படுவதுபோல பேசு

வார்கள். நீங்கள் கோர்ட்டு சங்கதிகளெல்லாம் தெரியும் என்கிறீர்களே! இதுதானு உங்கள் அனுபவம்?

**அக்னி:** (உரக்க) ஆமாம், ஆமாம். எனக்குத் தெரியும்.

**கலெக்டர்:** யாரங்கே பேசுவது?

**நாயுடு:** (எழுந்து) குற்றத்தை மன்னித்தால் விண்ணப்பித்துக்கொள்கிறேன். இவர் கிருஷ்ணராயபுரம் அக்கிரகாரத்தில் குடியிருக்கும் நூலக அக்னி ஹோத்ராவதானியார். மகா(அ)யோக்கியனை பிராமணன். வேதம் படித்தவர். இவர்தான் லுப்தாவதானிக்குக் தன் மகளைக் கன்யாதானம் செய்வதாக இரண்டாயிரந்துக்கு (வியாபாரம்) பேரம் பேசிவிட்டு, வரப்போகும் மாப்பிள்ளையின் உடலைப் பதம் பார்த்தவர். அதனுல்தான் சமீபத்தில் லுப்தாவதானியார் கனம் கோர்ட்டாரவர்கள் சமூகத்தில் சார்ஜி தாக்கல் செய்தார். அதில் பிரதிவாதி இந்த மகானுபாவர்தான். மல்லவரத்தில் ஆயிரம் மாதத்து உயிரான ஒரு பிராமண சிரேஷ்டனுக்குத் தன் பெரிய மகளைக் கன்யாதானம் செய்து, தாரைவார்க்கும் போது கல்யாணத்திலேயே அந்தப் பிராமணன் புண்ணியமெல்லாம் சேர்ந்து பரமபதத்தை அடைந்தான். அந்தப் பெண்ணின் சார்பில் நிலங்களுக்குத் தாவா செய்தார்கள். இவர் தங்களைப் போன்ற கவர்மெண்ட் ஆபீசர்களுக்கு அடிக்கடி வேலை தந்து வக்கீல்களை போஷித்துக் கொண்டிருக்கிருர். இவர் யோக்கியதைகள் என்ன? இரக்க சித்தம் என்ன? இவரது பண்பாடென்ன? ஆகா! எல்லாம் விவரிக்க ஆயிரம் நா படைத்துள்ள ஆதிசேஷனுலும் முடியாது. இவர் சார்பில் கேஸ் தாக்கல் செய்யவே பீமாராவ்பந்துலு கோர்ட்டுக்கு எழுந்தருளினுர்.

[விரசமாக சிரித்து உட்காருகிருர்.]

**கலெ:** பலே! சபாஷ்! (குமாஸ்தாவிடம்) எங்கே பீமாராவ் பந்துலுவை பிராது மனு தாக்கல் செய்யச் சொல்.

[குமாஸ்தா வாங்கி தாக்கல் செய்கிருன்.]

**கலெ:** என்னய்யா கேசின் தன்மை?

**பீமா:** சித்தம். இவளுடைய விதவை மகளை இவருடைய மகனுக்கு டியூஷன் சொல்லிக்கொடுக்கும் கிரீசம் என்பவன் நகைநட்டுகள் சொத்துகளுடனே கடத்திக் கொண்டு போய்விட்டான்.

**அக்னி:** தஸ்தாவேஜுகள், கோர்ட்டு காகிதங்கள் கூடத்தாங்க.

**கலே:** என்ன! ஆஹா...ஹா...ஹா! (சிரித்து பூட்சை தரையில் தட்டுகிருன்) பலே சபாஷ்! (மனுவைப் பார்த்துக்கொண்டே) இத்தனை நாள் என்ன செய் தீர்கள்?

**பீமா:** தாசில்தாரிடம் குற்றம் நடந்த மூன்ரும் நாளே முன்சீப் கோர்ட் வக்கீல் வெங்கட்ராமபந்துலு சார்ஜி தாக்கல் செய்ததற்கு அந்த தாசில்தார் கேசின் தன்மை என்னவென்று கேட்டார். எப் டக்ஷன் என்று வெங்கட்ராவ்பந்துலு சொன்னதற்கு இங்கிலீஷ் தெரி யாததனுல் தாசில்தார் அந்தச் சொல்லை என்றும் கேட்ட தில்லை என்ருர். பிறகு கேசின் தன்மை தமிழில் சொன்ன பிறகு, இப்படிப்பட்ட குற்றம் எங்கள் ஜுரிஸ்டிக்ஷனில் நடக்காது. வழியில் ரோட்டில் எந்த தாலுகா எல்லையில் இழுத்துக்கொண்டு போனுன் என்று மனு தாக்கல் செய்து கொள்ளவில்லை என்ருர். லுப்தாவதானியாரின் கொலைக் கேசை கமாப் செய்த தாசில்தார் இவர்தான்.

**நாயுடு:** இங்கிலீஷ் தெரியாவிட்டாலென்னங்க? தாசில் தார் எத்தகைய அறிவாளி! முன்பிருந்த இங்கிலீஷ் அதிகாரிகள் எத்தனை பேருடைய பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிருர். அவர் லுப்தாவதானியின் கேசை கமாப் செய்ததாக பீமாராவ்பந்துலு சொல்கிருர். இன்னும் என்குவரி ஆகிக்கொண்டிருக்கும் கேசில் இப்படிச் சொன்னதற்கு இவர்மேல் தாசில்தாரவர்கள் மான நஷ்ட வழக்குப் போட இடமிருக்கிறது.

**கலே:** (பீமாராவ்பந்துலுவைப் பார்த்து) பெண்ணுக்குப் பதினுறு வயதென்று ருஜு இருக்கிறதா?

**பீமா:** ஜாதகமிருக்கிறது.

**நாயுடு:** கோர்ட்டாரிடம் அந்த ஜாதகத்தைத் தாக்கல் செய்யவேண்டும்.

**பீமா:** இந்தக் கேசில் அவர் பேசிக்கொண்டே இருந்தால் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது.

**நாயுடு:** இந்தக் கேசில் எனக்குக்கூட வக்காலத்து நாமா இருக்கிறதுங்க. (என்று தாக்கல் செய்கிருர்.)

**பீமா:** (அக்னி ஹோத்ராவதானியிடம்) என்னய்யா, இவரிடம்கூட வக்காலத்து கொடுத்தாயா?

**அக்னி:** முதலில் ராமப்பந்துலு இவரிடம் கொடுக்கச் செய்தார்.

**பீமா:** (அக்னிஹோத்ராவதர்னியிடம்) அப்படியானல் அழு.

[அக்னிஹோத்ராவதானி பிரமித்துப் பார்க்கிருன்]

**கலே:** எங்கே ஜாதகம்? தாக்கல் செய்யுங்கள்.

[பீமாராவ்பந்துலு தாக்கல் செய்கிருர்.]

**நாயுடு:** கோர்ட்டாரிடம் ஒரு விஷயத்தை விண்ணப்பித்துக் கொள்கிறேன். இந்த ஜாதகம் விஸ்வாமித்திரனேப் போன்ற யோக்கியமான பிராமணனுல் தயார் செய்யப் பட்டது. அதோ, அந்த மூலேயில் நிற்கும் ராமப்பந்துலு வுக்கு இந்த ஜாதகத்தில் நல்ல பாண்டித்தியம் இருக் கிறது.

**பீமா:** நான் பஸ்ட் வக்கீல். கேஸ் ஹீரிங் நான்தான் செய்ய வேண்டுமே தவிர, நாயுடு செய்தால் நான் கொஞ்சங் கூடச் சம்மதிக்கமாட்டேன்.

**நாயுடு:** ஸ்மாலெட்துரையார் பக்கத்திலிருந்தே ஏஜன்ஸி கோர்ட்டிலே வக்காலத்து செய்து கொண்டு இருக் கிறேன். பணம் வாங்கியதற்காக என் பார்ட்டி சார்பில் நாலு பேச்சு பேசித்தீர்ப்பேனே தவிர, இங்கிலீஷ் படித்த சில வக்கீல்கள் மாதிரி வாயிலிருந்து பேச்சு வராமல் மரக்கட்டை மாதிரி நிற்கமாட்டேன்.

**கலே:** (அக்னிஹோத்ராவதானியிடம்) உங்கள் மகள் எந்த வருஷத்தில் பிறந்தாளய்யா?

**அக்னி:** அங்கீரச வருஷம்.

**கலே:** ஜாதகத்தில் பவ வருஷம் என்று எழுதியிருக்கிறதே. பிராமணர்களின் மரியாதையைக் கெடுத்துவிட்டீர்களே. புத்தியில்லாமல் பிள்ளேயை விற்ருய். சரிதான். இப்படிப்பட்ட தில்லுமுல்லுகள்கூட செய்கிருயா? பிராமணர்களிடம் இருக்கிற சீர்கேடு மற்றெங்கேயு மில்லே. உன் கெட்ட நடவடிக்கைகளால் உன் மகளே இந்த நிலேக்குக் கொண்டுவந்ததுமல்லாமல் மீண்டும் எப்டக்ஷன் கேஸ்கூட போடுகிருயா? இரு. உன்னே கவனித்துக்கொள்கிறேன். (குமஸ்தாவிடம்) கேசில் நோட்டீஸ்கள் தாக்கல் செய்.

**குமாஸ்தா:** '(கேஸ் காகிதங்களேப் பார்த்து) இதிலே பிரதி வாதியின் வீட்டுப் பெயரும் முழு விலாசமும் இல்லீங்க.

**நாயுடு:** இந்த மனு மொட்டையாக இருக்கிறது. இங்கிலீஷ் வக்கீல்கள் தாக்கல் செய்கிற காகிதங்களெல்லாம் இந்த ரீதியில்தான் இருக்கிறது.

**பீமா:** (குமாஸ்தாவிடம் ரகசியமாக) சொச்சத்தை பூர்த்தி செய்யவில்லையா ஐயா? (வெளிப்படையாக) இப்படி நாயுடு என்னை அவமரியாதை செய்யும்போது கனம் கோர்ட்டாரவர்கள் சும்மா இருப்பது நியாயமில்லை.

**கலெ:** நாயுடு உம்மை ஒன்றும் சொல்லவில்லையே?

**பீமா:** (தனக்குள்) நான் இங்கே வந்தது முட்டாள்தனம்.

**குமாஸ்தா:** (பீமாராவ் பந்துலுவிடம்) வீட்டுப் பெயர், முழு விலாசம் என்னங்க?

**பீமா:** (அக்னி ஹோத்ராவதானியிடம்) என்னய்யா?

**அக்னி:** அவன் பெயர் கிரீசம். இதைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது.

**கலெ:** சபாஷ்! நன்றாயிருக்கிறது! அவதானியார் மகளை யாரோ கூட்டிக்கொண்டு போய்விட்டான். ஆகையால் தெரிந்தவர்கள் அவன் ஊரும் பேரும் தெரியப்படுத்த வேண்டியதென்று தண்டோரா அடித்து, கெஜட்டிலே போடுங்கள். போலீஸ்காரர்களுக்கெதற்கு நோட்டீஸ் தரவில்லை? முழு விலாசம் இல்லாமல் கேசை அட்மிட் பண்ண முடியாது. டிபனுக்கு வேளையாகிவிட்டது, போவோம். (என்று எழுந்து போகிறார்.)

**அக்னி:** (பீமாராவ் பந்துலுவிடம்) என்னங்க, கேஸ் குறுக்காகத் திரும்பிவிட்டது?

[பீமாராவ் பந்துலு பேசாமல் இருக்கிறார்.]

**அக்னி:** என்னங்க, உங்களோடுதான் பேசுகிறேன்.

**பீமா:** கொடுத்த பீசுக்கு வேலையாகி விட்டது. மறுபடியும் பீஸ் தந்தாலொழியப் பேச முடியாது.

**அக்னி:** என்ன வேலை செய்து கிழித்துவிட்டாய்? கலெக்டர் கண்டித்துக்கொண்டிருக்கும்போது ஊமை மாதிரி சும்மா பேசாமலிருந்தாய்.

**பீமா:** பியூன்! இவ்ரை என்னிடம் வரவிடாமல் வெளியே தள்ளு.

**அக்னி:** ஓகோ! நல்லா இருக்குது விவகாரம். ராமப்பந்துலு எங்கே?

**நாயுடு:** (மெல்ல பின்னாலிருந்து வந்து) தில்லு முல்லு பேச்சை எடுத்ததுமே பையப் பைய நகர்ந்து போய் விட்டான். இப்போது அவன் ஊருக்கு நடு வழியிலே இருப்பான்.

**அக்னி:** ஐயோ, குடிகெடுத்துவிட்டானே.

**நாயுடு:** இங்கிலீஷ் வக்கீல் ஆசை தீர்ந்ததா? தில்லு முல்லுகளுக்கு உங்களுக்குகூட ஜெயில் வாசம் கிடைக்கும்.

**அக்னி:** ஐயோ! உன் வீட்டிலே கோழியைச்சுட!

**நாயுடு:** தினந்தோறும் சுட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

(திரை விழுகிறது)

## காட்சி—3

இடம்: சௌஜன்யராவ் பந்துலுவின் கச்சேரி அறை.

[சௌஜன்யராவும் போலி செட்டியும் வருகின்றனர்.]

**சௌ:** பார்த்தீர்களா செட்டியாரே! இந்தக் காலத்தில் கடவுளிடத்தும் பிராமணர்களிடத்தும் பக்தியோடிருப்பது செட்டியார்கள்மட்டும்தான். லுப்தாவதானியார் பிராமணர். முதியவரும்கூட. அவரைக் காப்பாற்றினால் உங்களுக்கு ரொம்ப புண்ணியமுண்டு.

**போலி:** ஐயா! தங்கள் சொல்லுக்கு ஆட்சேபணை என்ன!

**சௌ:** பார்த்தீர்களா? நீங்கள் சாட்சியம் சொல்லி அவரை ஆபத்திலிருந்து காப்பாற்றாவிட்டால், அவருக்கு உண்மையை மூடிமறைத்ததால் எந்த ஆபத்து வந்தாலும் அந்தப் பாவம் உங்களைத்தான் பிடிக்கும்.

**போலி:** ஆட்சேபணை என்ன அய்யா!

**சௌ:** உண்மையாகக் கொலை நடக்கவில்லை என்று நீங்கள் நம்புகிறீர்களல்லவா?

**போலி:** ஆட்சேபணை என்ன அய்யா!

**சௌ:** அந்தப் பெண் சுவர் தாண்டி ஓடிப் போனதைப் பார்த்தீர்களல்லவா?

**போலி:** ஆட்சேபணை என்ன அய்யா!

**சௌ:** நீங்கள் அப்போது வெளியே உலாவப் போனீர்கள்!

**போலி:** *ஆட்சேபனை என்ன அய்யா!*

**சௌ:** *நீங்கள் உலாவப் போகும்போது துணைக்கு உங்கள் வேலைக்காரனைக் கூட அழைத்துக்கொண்டு போனீர்களா?*

**போலி:** *ஆட்சேபனை என்ன ஐயா!*

**சௌ:** *(பேனாவும் காகிதமும் எடுத்து) இதையே எழுதுகிறேன். சொல்லுங்கள்.*

**போலி:** *என்னய்யா!*

**சௌ:** *நீங்கள் சொல்லப்போகும் சாட்சியத்துக்கு 'ஸ்டேட்மெண்ட்' எழுதிக் கொள்கிறேன். நடந்ததெல்லாம் சொல்லுங்கள். எழுதுகிறேன்.*

**போலி:** *என் மனைவி கஷ்டமான நோயில் படுத்திருக்கிருள் என்று செய்தி வந்தது. எனக்குக் கைகால் நடுங்குகிறது. வண்டி அமர்த்திக்கொண்டு வந்தேன். விடை கொடுங்கள். இந்தச் சாட்சியத்திற்கு அலைந்தால் பெண்டாட்டி பிள்ளை குட்டிகள் பிழைப்பார்களா ஐயா?*

**சௌ:** *இவ்வளவு நேரமும் சொல்லவில்லையே, ஏன்? நோய் உண்மையேயானால் மிகவும் வருந்தத்தக்க செய்திதான். நீங்கள் எப்படியும் சாட்சியம் சொல்லித்தான் ஆக வேண்டும். தப்ப முடியாது. சொல்லப் போகிற சங்கதிகளை முதலிலேயே எழுதிக்கொள்வது நல்லது. இல்லையென்றால் கூண்டில் ஏறியதும் உளறிவிடுவீர்கள். பத்து நிமிஷம்கூட ஆகாது. சொல்லுங்கள். எழுதுகிறேன்.*

**போலி:** *சாட்சி சொல்லித்தான் ஆகவேணுமா?*

**சௌ:** *சொல்லாமலிருக்க முடியுமா? உண்மை தெரிந்தவர்கள் சாட்சியம் சொல்லாவிட்டால் பிறகு யார்தான் சொல்லுவது?*

**போலி:** *ஐயா, தாங்கள் பெரிய வக்கீல். செட்டியார் பேச்சைத் தட்டாமல் கேட்பீர்களா?*

**சௌ:** *கேட்காமலென்ன?*

**போலி:** *உண்மை என்ன, பொய் என்ன ஐயா? நான் கண்ணாரக் கண்டு உண்மையா சொன்னேன்? நானு நடு நிசியிலே உலாவப் போவேன்? போனால் வேப்ப மரத்துப் பிசாசு அப்படியே கொன்று போட்டுவிடாதா? என்னய்யா! சாட்சிக்கு இந்த போலிச் செட்டிதானு கிடைத்தான்? உங்களைப் போன்ற அதிகாரிகளைப் பார்த்தால் உயிரே பறந்து போகிறதல்லவா? நீங்கள் நினைத்தால்*

சாட்சிகளுக்குக் குறைவா? பிராமணர்கள் லட்சோப லட்சம்பேர். கொஞ்சம் கையில் கொடுத்தால் சாட்சி சொல்லிவிட்டுப் போவார்கள்.

**சௌ:** இதோடு நிறுத்துங்கள். கள்ளச் சாட்சியங்கள் என்னிடம் செல்லாது. உண்மை தெரிந்த சாட்சிகள் தான் எனக்கு வேண்டும்.

**போலி:** இந்தப் பேச்சை யாரும் சொன்னதில்லை ஐயா! உண்மை எனக்கொன்றும் தெரியாது. எந்தத் தெய்வத் தின்பேரிலும் சத்தியம் செய்து சொல்கிறேன் ஐயா!

**சௌ:** பிறகு ஏன் தெரியும் என்று சொன்னீர்கள்?

**போலி:** ஐயா! சொல்லமாட்டேன் என்றால் போலீஸ்காரர் கள் சும்மா விடுவார்களா?

**சௌ:** இப்போது மட்டும் சும்மா விடுவார்களா?

**போலி:** சொன்னால் இன்ஸ்பெக்டர் என் கழுத்தைத் திருகி விட மாட்டாரா ஐயா?

**சௌ:** சொல்லாவிட்டால் ஹெட்கான்ஸ்டபிள் உம் கழுத்தைத் திருகிவிட மாட்டாரா?

**போலி:** அதிகாரிகள் செய்யச் சொன்னால் எங்களைப் போன்றவர்கள் அதெல்லாம் செய்யவேண்டுமல்லவா? இல்லையென்றால் கழுத்துக்குக் கயிறுதானே கிடைக்கும். "போலி செட்டி சாட்சியம் சொல்ல வேண்டும்" என்று ஏட் சொன்னால், 'ஆகட்டும் ஐயா' என்று சொல்ல வேண்டும். 'போலி செட்டி! ஜாக்கிரதை! சாட்சி சொன்னால் கொன்றுவிடுவேன்' என்று இன்ஸ்பெக்டர் சொன்னாலும், "ஆகட்டும் ஐயா" என்று சொல்ல வேண்டும். "ஏட்டை மாற்றிவிடுவோம். பயப்படாதே" என்றால், "ஆகட்டும்!" என்று சொல்ல வேண்டும். அன்று ராத்திரி நான் ஊரிலேயே இல்லையே ஐயா! ரங்கபுரம் சந்தைக்குப் போய்விட்டேனே.

**சௌ:** உங்கள் சாட்சியத்தை நம்பிக்கொண்டு லுப்தாவ தானியாருக்கு நான் தைரியம் சொல்லிவிட்டேனே.

**போலி:** பெரிய அதிகாரிகள். நீங்கள் நினைத்தால் முடியாததா? செட்டியார் பேச்சைத் தள்ளாதீர்கள். தங்களைப் போன்றோர் நினைத்தால் பிராமண சாட்சிகள் லட்சோப லட்சம்பேர் வருவார்கள்.

**சௌ:** உங்கள் யோக்கியதை தெரிந்தது. போதும். இதோடு போங்கள்.

**போலி:** (எழுந்து நின்று) கோபமா ஐயா? நாங்கள் பிழைக்க முடியுமா ஐயா? பசுநெய் கமகமவென்றிருக் கிறது. ஒவ்வொரு வாரமும் அனுப்பட்டுமா?

**சௌ:** உங்கள் இன்ஸ்பெக்டருக்கு அனுப்புங்கள்.

**போலி:** (போய்க்கொண்டே) அவருக்கு அவர். தங்களுக்குத் தாங்கள். இருவரும் எங்களுக்கொன்றுதான்.

**சௌ:** போதும். போங்கள். போங்கள்.

**போலி:** தங்களுக்குக் கோபம் வந்தால் பிழைக்க முடியுமா ஐயா? (வாசலைத் தாண்டி) பிழைச்சேண்டா கடவுளே! விடியற்காலம் வீட்டுக்குப் போனதும் வெங்கடேசப் பெருமானுக்கு நெய்விளக்கேற்றுகிறேன்.

*[போகிருன்]*

## காட்சி—4

இடம்: தெரு.

*[அக்னி ஹோத்ராவதானியும் நாயுடுவும் வருகின்றனர்.]*

**அக்னி:** அப்படியாளுல் கேசை விட்டுவிடச் சொல்கிறீர்களா?

**நாயுடு:** இல்லையென்ருல் உங்களுக்கு ரொம்பத் தொந்தரவுண்டாகும். அந்த இங்கிலீஷ் வக்கீல் எல்லாவற்றையும் பாழாக்கிவிட்டான்.

**அக்னி:** அப்படியாளுல் ராமப்பந்துலு கம்பி நீட்டி விட்டாளு?

**நாயுடு:** அதற்குச் சந்தேகமென்ன?

**அக்னி:** என் நகையை வாங்கிக் கொண்டுபோய் அடகு வைத்தானே.

**நாயுடு:** அதற்கும் தாரை வார்க்க வேண்டியதுதான்.

**அக்னி:** அந்த நகை எங்கள் தாத்தா காலத்தது. நீங்கள் முந்தாநாள் கொல்லைப்புற வழியே வந்தீர்களே, அந்தத் தாசி வீட்டிலே அடகு வைத்தான்.

**நாயுடு:** ராம! ராம! அந்த நகையை அவளிடம் வைக்கவே இல்லை. அதுமட்டுமில்லை. அவளுடைய நகை ஒன்றை அவனே வாங்கிக்கொண்டுபோய் எங்கேயோ அடகு

வைத்தான். அந்தக் குடிகாரன் உங்களுக்கெப்படிக் கிடைத்தான்?

**அக்னி:** ராமப் பந்துலு குடிப்பானு?

**நாயுடு:** பின்னே! உங்கள் நகையையும் குடித்து விட்டானல்லவா?

**அக்னி:** அவன் தலையிலே இடிவிழ!

**நாயுடு:** அது சரி. உங்கள்மேல் போர்ஜரி கேஸ் எடுக்காமல் டிப்டி கலெக்டரிடம் சிபார்சு செய்தேனல்லவா? எனக்கென்ன தருகிறீர்கள்?

**அக்னி:** என்னத்தைத் தர. வெற்றிலை வாங்கக்கூட தம்பிடி கூட என்னிடம் இல்லை. ஊருக்குப் போனுலொழிய பணம் கிடைக்காது.

**நாயுடு:** சரி, போகட்டும். ஒரு பிராம்சரி நோட் எழுதிக் கொடுங்கள். ரூபாய் வாங்கித் தருகிறேன்.

**அக்னி:** என் உயிர் போனுலும் எழுதித் தரமாட்டேன். கடன் பத்திரம் எழுத மாட்டேன் என்று எங்கள் தகப்பனுரிடம் மரணப் படுக்கையிலிருக்கும்போது சத்தியம் செய்து கொடுத்துவிட்டேன்.

**நாயுடு:** அப்படியானுல் உங்களோடு உங்களூருக்கு வருகிறேன். ஒரு கோட்டை நெல்லாவது தாருங்கள்.

**அக்னி:** பணத்தோடு தானியதவசங்களும் வக்கீல் தலையில் கொட்டிவிட்டால் வருஷம் முந்நூற்றறுபது நாளும் பிழைப்பதெப்படி? ரெண்டு துலாம் மிளகாய் வற்றல் தருகிறேன்.

**நாயுடு:** கிடைத்தது லாபம். உறுதிதானு?

**அக்னி:** அக்னி ஹோத்ராவதானி சொன்ன பேச்சை மீறுவானு? லுப்தாவதானி என்னை கேவலப் படுத்தினுனே, அவனுக்கு தண்டனையில்லையே ஏன்?

**நாயுடு:** ஆமாம். சௌஜன்யராவ் பந்துலு அவனுக்கு உதவி செய்கிறுர். அதிகாரிகள் எல்லாம் அந்த பந்துலுவின் பேச்சைக் கேட்கிறுர்கள்.

**அக்னி:** அந்த பந்துலு அவதானியின் மகளைக் கல்யாணம் செய்து கொள்வானு? என்ன?

**நாயுடு:** அவர் செல்வாக்குக்கு அவதானியின் மகளையா கல்யாணம் செய்துகொள்ளப் போகிறுர்?

**அக்னி:** பிறகு எதற்காக லுப்தாவதானிக்காக உயிர் விடுகிறான்?

**நாயுடு:** சௌஜன்யராவ் பந்துலு மிகவும் நல்லவர். கோடியில் ஒருவர். ஆபத்திலிருக்கும் யாருக்கும் அவர் உபகாரம் செய்வார்.

**அக்னி:** அப்படியானால் விதவைச் சிறுக்கியைக் கல்யாணம் செய்துகொண்ட அந்தக் கழுதைப் பயலைப் பின்னால் வைத்துக்கொண்டு என் கழுத்தை ஏன் அறுக்கிறான்? அதோ, அந்தக் கழுதைப் பயல்!

[கிரீசம் அவசரமாக வருகிறான். அக்னிஹோத்ராவதானி பக்கத்திலிருந்து கிரீசத்தின்மேல் பாய்கிறான். கிரீசம் தப்பித்துக்கொண்டு கீழே வழுக்கி விழுந்து அக்னிஹோத்ராவதானியின் காலைப் பிடித்திழுத்து, 'மாமாவுக்கு நமஸ்காரம்' என்று சொல்லிவிட்டு ஓடுகிறான். அக்னிஹோத்ராவதானி கீழே விழுகிறான்.]

**நாயுடு:** உங்கள் மாப்பிள்ளையா என்ன? (தூக்கிவிட்டு உடலைத் தட்டுகிறான்.)

**அக்னி:** இவன் சிரார்த்தத்தை மரத்திலே வைக்க! எங்கே, பயலைக் கொன்றுவிடுகிறேன்.

**நாயுடு:** மாப்பிள்ளையைக் கொன்றுவிட்டால் மகள் டபிள் விதவையாகிவிடுவாள். பொறுமையாக இருங்கள்.

**அக்னி:** உன் வீட்டிலே கோழியைச் சுட!

**நாயுடு:** அமோகமான ஆசீர்வாதம்! போங்கள்.

[செல்கின்றனர்.]

## காட்சி—5

இடம்: லுப்தாவதானியார் விடுதி.

**லுப்:** ராமநாமதாரகம், பக்தி முக்தி தாயகம்.

[கிரீசம் வந்து லுப்தாவதானியைக் கட்டி அணைத்துக்கொண்டு 'அண்ணா' என்று அழுகிறான்.]

**லுப்:** இதென்னடா?

**கிரீ:** உன்மேல் கொலைக் கேஸ் வந்ததென்று தெரிந்ததும் ஊணுறக்கமில்லாமல் ஓடோடியும் வந்தேன்.

எங்கண்ணுவுக்கும் மற்றவர்களுக்கும் செய்தி சொல்லி யனுப்பவில்லையே, ஏன்?

**லூப்:** யார் என்ன செய்ய வேண்டும்? எல்லாவற்றுக்கும் சௌஜன்யராவ் பந்துலு அவர்களே இருக்கிறுர்கள். ஆனாலும் தம்பி, அக்னிஹோத்ராவதானி மகளைக் கடத்திக் கொண்டு போனுயாமே. அவனுக்குத் தகுந்த மரியாதை செய்தாய்! அவளை ஏதாவது......கல்யாணம் மட்டும் செய்யவில்லையல்லவா?

**கிரீ:** நான் அத்தகைய அறிவில்லாத செயல் செய்வேனென்று நினைக்காதே அண்ணு! நீ என்னை சுவீகாரம் எடுத்து வளர்த்துக் கொள்வாயென்றும் கல்யாணம் செய்து வைப்பாய் என்றும் நம்மவர்கள் மலைபோல ஆசை வைத்திருக்கிறுர்கள் அல்லவா?

**லூப்:** இந்தக் கண்டத்திலிருந்து தப்பினுல் அதைப்பற்றி ஆலோசிப்போம்.

**கிரீ:** (தளர்ந்த குரலில்) சௌஜன்யராவ் பந்துலு சொல்லும் பேச்சைக் கேட்டால் இந்தக் கண்டத்திலிருந்து பிழைப்பாயென்றே எனக்கு நிறைய தைரியம் இருக்கிறது. உனக்கு வேண்டியவன். படித்தவன். புத்திசாலி. ஆகையால் என்னை உனக்கு நல்ல யோசனை சொல்லச் சொல்லி சௌஜன்யராவ் பந்துலு என்னிடம் அடிக்கடி சொன்னுர்.

**லூப்:** அவரைப் பார்த்தாயாடா?

**கிரீ:** பார்த்தாயா என்று கேட்கிறுய்? அவரிடத்திற்கு பெரிய சிபார்சு வாங்கிக் கொண்டு வந்தேன். அவர் என்மேல் மகனைப்போல பாசம் வைத்திருக்கிறுர். அவருக்கு ஒன்றும் புரிபடாமல்தான் என்னை உங்களிடமும் ஏட்டிடமும் பேசி நல்ல யோசனை சொல்லும்படி அனுப்பினுர். ஆகையால் என் பேச்சைக் கேள். எதற்கும் நல்லது. ஒரு சுவீகார பத்திரம் எழுதிவை, பிறந்த மகன் இல்லாததற்கு. மறு உலகத்திற்காகவாவது திதி கொடுக்கவாவது வேண்டுமல்லவா?

**லூப்:** எனக்கிருக்கிற பந்துக்களெல்லாம் என்னிடம் பணத்தைப் பிடுங்கப் பார்க்கிறுனே தவிர என் கஷ்ட நஷ்டங்களுக்கு உதவக் கூடியவன் ஒருவன்கூட இல்லை.

**கிரீ:** எவனுக்காவது என்றுவது ஒரு தம்பிடி காசாவது செலவழித்தாயா? நான் ஒருத்தன் மட்டும் உன் மேல்

அபிமானத்துடன் அலேந்து கொண்டிருக்கிறேன். மற்ற உன் பந்துக்கள் யாருக்காவது இம்மியளவாவது அபிமானம் இருக்கிறதா? சொல்.

**லூப்:** இல்லாவிட்டால் தொலேகிறது. சனியன் விட்டது.

**கிரீ:** என்னேப் பொறுத்தமட்டிலும் உன்னிடமிருந்து ஒரு தம்பிடி காசுகூட என்றைக்கும் விரும்பவில்லே. உன் மறுமைக்காக சுவீகாரம் எடுத்துக்கொள்ளச் சொன்னேன். என்னே விட்டால் வேருெருவனேயாவது தத்தெடுத்துக் கொள்.

**லூப்:** இம்மை இந்த லட்சணத்தில் இருக்கிறது. இனி மறுமை ஒரு கேடா? எல்லாம் பிழைத்து நன்ருக இருந்தால் பின்னுல் பார்த்துக் கொள்ளலாம்.

**கிரீ:** சௌஜன்யராவ் பந்துலு உனக்கு நல்ல யோசனே சொல்லும்படி சொன்ஞர். அதற்காக உன்னிடம் இந்தப் பேச்சை எடுத்தேனே தவிர வேறில்லே. நீ வேண்டியவர்கள் சொல்லும் யோசனேயைக் கேட்கமாட்டாய் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். போனுல் போகிறது. இன்னெரு விஷயம் சொல்லுகிறேன். அதையாவது கேள். உனக்கொரு வேளே தண்டனே கிடைத்தால், உன் சார்பில் விவகாரங்கள், மற்ற சகல நடவடிக்கைகளேயும் பார்த்துக்கொள்ள யாராவது வேண்டுமல்லவா? உன் பந்துக்களில் இங்கிலீஷ் தெரிந்த விவகார ஞானம் உள்ளவன் நானெருத்தனே இருக்கிறேன். எனக்கொரு பவர் ஆப் டார்னு எழுதிக் கொடுத்துவிடு.

**லூப்:** என்னே எதற்காக ஏற்கெனவே இருக்கிற துக்கம் போதாதென்று மீண்டும் மீண்டும் துன்புறுத்துகிருய்? எல்லாவற்றுக்கும் எனக்கு சௌஜன்யராவ் பந்துலு ஒருத்தர்தான் இருக்கிருர். அவர் எப்படிச் சொல்கிருரோ அப்படிச் செய்கிறேன்.

**கிரீ:** அதைத்தானே நானும் சொல்கிறேன். நீயும் நானும் மட்டுமல்ல. எல்லோருமே அவர் சொல்கிறபடி கேட்க வேண்டியதுதான். இந்த இரண்டு விஷயங்களேயும் அவரிடம் சொல்லி அவர் யோசனேப்படியே கேட்டு நடப்போம். என்ன சொல்லுகிருய்?

**லூப்:** இப்போது என் சிக்கலேத் தீர்க்கும் உபயோகமான செய்தி ஏதாவதில்லே யல்லவா?

கிரீ: பின் எதற்கு வந்தேனென்று நினைத்தாய்? சும்மாவா இவ்வளவு தூரம் வந்தேன். நான் அன்று எழுதிய கடிதத்தின்படி யோசித்து நீ நடந்திருந்தால் இந்தச் சிக்கல்களெல்லாம் வந்திருக்காதல்லவா?

லூப்: அப்போது புத்தியில்லாமல் செய்தேன்.

[ஹெட் கான்ஸ்டபிளும் கடைக்காரனும் வந்து.]

ஹெட்: அவதானியாரே! இவர் யார்?

லூப்: என் தம்பி.

ஹெட்: எனக்கொன்றும் தோன்றவில்லை. பைராகி மாய மாக மறைந்து விட்டான்.

லூப்: ஐயோ! வேறென்ன செய்வது?

ஹெட்: அதுதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

லூப்: எங்கே போனானோ?

ஹெட்: ஸ்ரீ ஜகன்னாத ஸ்வாமிகளின் கட்டளை வந்தது என்று இன்று காலையிலிருந்து சொல்லிக் கொண்டிருந் தான்.

கடை: சாராயக்கடைகளிலே தேடினால் கிடைப்பான்.

ஹெட்: என்னண்ணே சொல்கிறாய்! சித்தர்கள் என்ன செய்தாலும் அவர்களுக்குத் தப்பில்லை. எந்தக் கடை யிலும் காணோம்.

கடை: அப்படியானால் அனகாபள்ளி ரோடு பக்கத்தில் தேடுங்கள்.

கிரீ: பைராகி எதற்கப்பா?

ஹெட்: அவன் மை போட்டு குண்டூர் சாஸ்திரிகளையும் அவன் மகளையும் காண்பித்தான்.

கிரீ: டாமிட். நான்ஸென்ஸ். க்ரோஸ் சூபர்ஸ்டிஷஸ்—இந்த பைத்தியக்காரச் செய்திகளை எந்தத் துரை நம்புவான்.

ஹெட்: துரைகள் நம்பாவிட்டால் போகட்டும். அந்தப் பெண் பிழைத்திருக்கிறாள் என்றும் இன்ன இடத்தில் இருக்கிறாள் என்றும் நமக்குத் துப்பு தெரிந்தால் போதாதா?

கிரீ: இக்னொரன்ஸ். என்ன துப்பு தெரிந்தது?

ஹெட்: அந்தப் பெண் ஒரு கூரைவீட்டுக்குள்ளே கட்டிலின் மேலுட்கார்ந்துகொண்டு அழுவதுபோலத் தெரிந்தது.

கிரீ: உங்களுக்கே தெரிந்ததா?

ஹெட்: எனக்கெப்படித் தெரியும்? பாப புண்ணிய மறியாத சிறு குழந்தைகளுக்குத்தான் தெரியும்.

கிரீ: உலகமெங்கும் கூரை வீடும் கட்டிலும்தான் இருக்கிறது. எந்த வீடு, எந்த ஊர் என்று எப்படிக் கண்டுபிடிக்கிறது?

ஹெட்: இன்று ராத்திரி மறுபடியும் மை போட்டுப் பார்த்து ஊர்பேரெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னார்.

கிரீ: எவிடென்ஸ் ஆக்டில் மைகளும் பிசாசுகளும் உபயோகப்படுமாப்பா?

ஹெட்: அந்த பைராகியை உங்களுக்குத் தெரியாது. அவர் பெரிய சித்தர். எதைச் செய்யவேண்டுமானாலும் அதைச் செய்வார். அவர் என் பக்கத்திலிருந்தால் எனக்கு தைரியம் வரும். ஸ்ரீ ஜகன்னாத ஸ்வாமியைக் கும்பிட்டுவிட்டு சாயந்திரம் அவர் வந்தால் நான் அதிர்ஷ்டசாலிதான்.

கிரீ: பத்து நாள் பிரயாணமல்லவா? ஒரே நாளில் போவதும் வருவதும் எப்படி?

ஹெட்: அவருக்கு வாயுவேகம் இருக்கிறது.

கடை: கடன்காரன் தென்பட்டால் வாயுவேகமாகப் பறப்பான். என் பாக்கி வசூல் செய்ய விடவில்லையே அண்ணே!

ஹெட்: என்ன பெரிய பாக்கி! இந்தக் கண்டம் தப்பினால் நான் தந்துவிடுகிறேன்.

கடை: கண்டமெங்கே தப்பப் போகிறது? என் பணம் என் கையில் வருவதெங்கே அண்ணே!

ஹெட்: உங்களெல்லோருடைய உதவியுமிருந்தால் தப்பாமலென்ன?

கடை: உயிரைத் தருகிறேன் அண்ணே! சாட்சி சொல்ல மட்டும் சொல்லாதீர்கள்.

ஹெட்: சாட்சி சொல்லமாட்டீர்களா என்ன?

கடை: கடை வைத்துக்கொண்டு பிழைக்கிறவர்களுக்கு சாட்சி சொல்லிக்கொண்டிருந்தால் முடியுமா அண்ணே! இப்படி அலைந்ததிலிருந்து வியாபாரம் கெட்டது. இன்று ஊருக்குப் போகாவிட்டால் கடையை எடுத்து மூடிவிட வேண்டியதுதான் வரும்.

ஹெட்: இதுதானு உங்கள் சினேகம்? உறவு?

கடை: உங்கள் பின்னுல் திரிந்தால்—புதிய ஏட்டையா—

ஹெட்: புதிய ஏட்டு என்னண்ணே!

கடை: இன்ஸ்பெக்டர் சொன்னுர். என் பண விஷயம் என்ன ஆச்சுதண்ணே?

ஹெட்: இன்ஸ்பெக்டர் எல்லா விதத்திலும் என் குடியைக் கெடுத்துவிட்டான்.

கடை: அந்த பைராகி என் குடியைக் கெடுத்து விட்டான். இனிமேல் என் பணம் என் கைக்கு வருவதெங்கே? (போகிருன்.)

[அசிரிகன் வருகிருன்.]

அசிரி: (தலையைச் சொறிந்து கொண்டே) சாமி, எங்க பாட்டிக்கு ஆபத்தா யிருக்குதாம். செய்தி வந்தது சாமி!

ஹெட்: மடையா! சாட்சி சொல்லாமல் போகப் போகிருயா என்ன?

அசிரி: சாட்சியம் முடியும் வரைக்கும் அவள் பிழைப்பாளா சாமி?

ஹெட்: அடே ராஸ்கல்! பொய் சொல்கிருய். மண்டையை உடைத்துவிடுவேன். உனக்கு யார் செய்தி சொன்னது?

அசிரி: நம்ம ஊர் வண்டிக்காரங்கள் வந்தாங்க சாமி!

ஹெட்: கழுதைப்பயலே. இங்கிருந்து நகர்ந்தாயானுல் முதுகுத் தோலே உரித்துவிடுவேன்.

அசிரி: போனுல் நீங்கள் உதைப்பீங்க, போகாவிட்டால் அவங்க உதைப்பாங்க.

ஹெட்: அவர்கள் யாரடா?

அசிரி: இன்ஸ்பெக்டர்.

ஹெட்: இந்த இன்ஸ்பெக்டர் சாட்சிகளே வரவிடமாட்டான் போலிருக்கிறதே!

கிரீ: அசிரீ! என் அடி உனக்குத் தெரியும். இன்ஸ்பெக்டர் கின்ஸ்பெக்டர் ஜான்தே நை. நேராக கூண்டிலேறி உண்மை ஏதோ அதை சாட்சியம் சொல்லாவிட்டால் கழுத்தை முறித்துக் கிணற்றிலே எறிந்து விடுவேன்.

அசிரி: என்ன சாமி! நீங்க ஒரு பக்கம். அவங்க ஒரு பக்கம். இவங்க ஒரு பக்கம். எனக்கென்ன தெரியும் சாமி? உங்க வேலேக்கு ஒரு கும்பிடு. போறேன் சாமி!

அந்த அம்மா சுவரைத் தாண்டியதை நான் பார்க்க வில்லை சாமி. கவரய்யா பிசாசை சீசாவிலே மூடிய பிறகு, சுவரைத் தாண்டிப் போவதெப்படி சாமி? பெரிய பொய். நான் பார்க்கவில்லை சாமி.

**கிரீ:** அவன் பார்க்காததைச் காட்சி கூறச் சொன்னால் எப்படிச் சொல்வான் அண்ணு?

**லுப்:** என் தலைவிதி. என்னவென்று சொல்வது?

**ஹெட்:** யாரிவர்? கேஸ் முகம் ஏதாவது இவருக்குத் தெரியுமா?

**கிரீ:** கேஸ் முகம் எனக்கும் தெரியாது. உண்மையின் முகம் போலீஸ்காரர்களுக்கும் தெரியாது. பொய்ச் சாட்சி யங்களினால் தப்பித்துக்கொள்வதைவிட ஜெயிலில் உட்கார்ந்து கொள்வதே மேல். உடல் பொருள் ஆவி மூன்றும் போனாலும்கூட மனிதனாகப்பட்டவன் பொய் சொல்லக் கூடாது. சொல்லுவிக்கவும் கூடாது.

**ஹெட்:** என்ன இவரது சல்லியசாரத்தியம்! யாரிவர்?

**கிரீ:** நான் லுப்தாவதானியின் தம்பி. என் பெயர் கிரீசம். நான் கவர்மெண்ட் பரீட்சையில் பாஸானவன். தெரிந்ததா?

**ஹெட்:** விதவைச் சிறுக்கியைக் கடத்திக்கொண்டு போன மகானுபாவன் நீதானு?

**கிரீ.** டிபமேஷன் என்றால் உங்களுக்கு என்னவென்று தெரியுமா? நான் சௌஜன்ய ராவ்பந்துலுவின் சினேகி தன். சாட்சிகள் எந்த ரீதியிலிருக்கிறார்கள், என்ன என்று பார்த்துவிட்டு, அண்ணுவுக்கும் உங்களுக்கும் யோசனை சொல்வதற்காக பந்துலு அனுப்பியதனால் வந்திருக்கிறேன்.

**ஹெட்:** அப்படியானால் எங்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமே தவிர, பொய்யில்லாமல் சாட்சி வேண்டு மென்றால் இந்த பூலோகத்தில் எங்கேயாவது கிடைக் குமா? என் தலையில் எத்தனை மயிர் உண்டோ அத்தனை சாட்சிகளைப் பார்த்திருக்கிறேன். பெரிய பெரிய வக்கீல் கள் தயார் செய்த சாட்சிகளைக்கூடப் பார்த்திருக் கிறேன். நீங்கள் அனுபவம் இல்லாமல் நீதிகள் சொல் வீர்களே தவிர, ஹைக்கோர்ட்டு வக்கீல்கள்கூட சாட்சிகளை மாற்றியடிக்கிறார்கள். உங்களுக்கு புண்ணிய முண்டாகட்டும். உண்மை பொய்களை 'ஆராய்ச்சி

செய்யாமல் ஏதோ ஒரு விதத்தில் தயார் செய்தால் தவிர காரியம் நடக்காது.

**கிரீ:** அண்ணுவுக்கும் உங்களுக்கும் உதவிசெய்ய வராவிட்டால் அவ்வளவு தூரத்திலிருந்து நான் எதற்கு வர வேண்டும்? உங்கள் இஷ்டப்படியெல்லாம் பொய்ச் சாட்சி தயாரிப்பதற்கு ஆட்சேபணை இல்லை. அப்ஸ்ட்ராக்ட் ட்ருத், அதாவது சுத்தமான சத்தியம் என்பது சாக்ஷாத் பகவானுக்கு சமமான வஸ்து என்பது மட்டும் மறந்து போகக்கூடாதென்பது என் அபிப்பிராயம். என்னைப்பொறுத்தமட்டிலும் சத்தியத்திற்காகதேவைப்பட்டால் என் உயிரைக்கூட மகிழ்ச்சியோடு தந்துவிடுவேன். உலகம் பலவிதம் என்பார்கள். சிலருக்குத் துவரம் பருப்பு பிடிக்கும், சிலருக்கு உளுத்தம்பருப்புப் பிடிக்கும். சில அதிர்ஷ்ட சாலிகளுக்கு இரண்டுமே ருசிதான். அதுபோல சிலருக்கு பொய் என்ருல் ருசி. சிலருக்கு மெய் என்ருல் ருசி. ரொம்பப் பேருக்கு இரண்டுமே ருசிதான். இது உலக இயல்பு. ஆகையால் அவசியம் நேர்ந்தால் கொஞ்சங்கூடத் தயங்காமல் பொய் சொல்ல வேண்டியதுதான். இப்போது அசிரிகளைப் பொய் சொல்லச் சொல்லவேண்டியது என் பொறுப்பு. அசிரீ! என் அடியை ஞாபகம் வைத்துக்கொள். ஜாக்கிரதை. சாட்சி சொல்லவில்லையென்ருல் கொன்றுவிடுவேன்.

**ஹெட்:** அப்படி வாருங்கள் வழிக்கு. (லுப்தாவதானியிடம்) அந்தச் சண்டாளன் ராமப்பந்துலுவை நம்பாமல், இப்படிப்பட்ட வேண்டியவர்களின் பேச்சைக் கேட்டிருந்தால் உங்களுக்கு இந்தக் கதி வந்திருக்காதல்லவா?

**கிரீ:** எங்களண்ணன் வேண்டியவர்களின் பேச்சைக் கேட்பாளு? சுவீகாரம் செய்துகொள்கிறேன் என்று எத்தனையோ நாளாகச் சொல்கிருன். சுவீகாரம் செய்துகொண்டால் கூடவே இருக்கமாட்டேனு? போகட்டும். ஒரு பவர் ஆப் டர்னுமாவாது என்பேரில் எழுது, உன் விவகாரங்களைப் பார்க்கிறேன் என்ருல் காதில் கேட்கமாட்டேனென்கிருன்.

**ஹெட்:** என்ன அவதானியாரே, அப்படிச் செய்யக் கூடாதோ?

**லுப்:** பின்னுல் பார்த்துக் கொள்ளலாம்.

**கிரீ:** திடீரென்று ஜெயிலுக்கு இழுத்துக்கொண்டு போனுல் அதன் பிறகு என்ன செய்ய முடியும்?

ஹெட்: ஜெயில் முடிவுக்கே வந்துவிட்டீர்களா?

கிரீ: சும்மா பேச்சுக்குச் சொன்னேன். லாப நஷ்டங்களைப் பார்க்கவேண்டுமல்லவா? இன்ஸ்பெக்டர் பலமாகச் சதி செய்கிறார். போலி செட்டி சாட்சி சொல்லமாட்டேன் என்று சௌஜன்யராவ் பந்துலுவிடம் சொல்லிவிட்டு ஊருக்குப் போய்விட்டான்.

ஹெட்: அய்யோ! வேறு கதியில்லையா?

கிரீ: அதுதான் நானும் பந்துலுவும் வருந்திக்கொண்டிருக்கிறோம்.

[பூசாரி கவரய்யா வருகிறான்.]

ஹெட்: கவரய்யா! குருஜீ தென்பட்டாரா?

கவ: இதோ என்கூட வருகிறாரே. உங்கள் கொல்லைப் புறத் திண்ணைமீது இவ்வளவு நேரமும் சமாதியில் தானிருந்தார்.

ஹெட்: எனக்குத் திண்ணையில் தென்படவில்லையே? போகட்டும். அவர் வந்தால் நான் பிழைத்துவிடுவேன். எங்கே?

கவர: என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? இதோ உங்கள் எதிரிலிருக்கிறாரே (காலி இடத்தைக் காட்டுகிறான்) உங்கள் கண்ணுக்குத் தென்படவில்லையா என்ன? (காலி இடத்தைப் பார்த்து) என்ன குருஜீ? திரஸ்கரணி மந்திரத்தைக் கொண்டிக்ருகிறீர்களே, ஏன்? ஓஹோ! உங்கள் குருவினுடைய கட்டளை என்றா? அப்படியானால் எனக்கெப்படித் தென்படுகிறீர்கள்? எனக்கு மந்திரசித்தி இருக்கிறதென்றா? அப்படியானால் எத்தனை நாள் இப்படிக் கண்ணுக்குத்தெரியாமல் இருக்கப்போகிறீர்கள்? ஒரு மாதமா? (ஏட்டிடம்) இது பைராகியார் சொன்ன பேச்சு.

ஹெட்: இதற்குள் எங்கள் கழுத்துக்குத் தூக்குக் கயிறு வந்து விடுமே.

கவர: (காலி இடத்தைப் பார்த்து) என்ன உத்தரவு குருஜீ? (ஏட்டிடம்) உங்களுக்கொன்றும் வராதென்கிறார்.

ஹெட்: இன்று ராத்திரி மை போட்டுப் பார்ப்போம் என்றாரே?

கவர: (காலி இடத்தைப் பார்த்து) என்ன உத்தரவு குருஜீ. (ஏட்டிடம்) எல்லா வேலையும் என் மூலம் செய்விக்கிறேன் என்கிறார்.

**ஹெட்:** அவர் கண்ணுக்குத் தெரிந்தால் நல்லது.

**அசிரி:** அதென்ன சாமி. அவர் என் கண்ணுக்குத் தென் படுகிறாரே.

**கவர:** சித்தர்களும் பிசாசுகளும் எங்களைப் போன்ற மாந்திரீகர்களுக்குத் தென்படுவார்கள். இவனைப் போன்ற மூடபக்தியுள்ளவர்களுக்குத் தென்படுவார்கள். பாப புண்ணிய மறியாத சிறுகுழந்தைகளுக்கும் தென்படு வார்கள். மற்றவர்களுக்குத் தென்படமாட்டார்கள்.

**கிரீ:** டாமிட். சுத்த ஹம்பக். (கம்பினால் கவரய்யாவின் பக்கமாகக் காலியிடத்தை அடித்து) யாரிங்கே இருக்கிறது? ஏட்டையா! இதெல்லாம் வெறும் பித்த லாட்டம்.

**கவர:** நீ ரெண்டு இங்கிலீஷ் வார்த்தைகள் படித்துவிட்டு நாஸ்திகனானதுமே சித்தர்களின் மகாத்மியங்கள் இல்லாமற்போகுமா? நீ தடிக்கம்பால் அடித்ததுமே சித்தர்கள்மேல் படுமா? உன்னைப் போலவே தெம்பாகப் பேசின ரிஜிஸ்டிராரை மயானத்துக்கு கூட்டிக்கொண்டு போய் பேயைக் காட்டியதும் ஆறுமாசம் படுத்த படுக்கையாகக் கிடந்தான். சித்தர்களை இகழ்ந்தால் தலைவெடித்துவிடும்.

**அசிரி:** அவர் எங்கே சாமி இருக்கிறார்? பைராகி எங்கே?

**கிரீ:** (அசிரிகன் மேலே பாய்ந்து) முட்டாள்! எங்கேடா!

**அசிரி:** இல்லே சாமி, இல்லே சாமி. சும்மா சொன்னேன்!

**கிரீ:** திருட்டுக் கழுதைப் பயலே. (ஏட்டிடம்) நீங்கள் சாட்சிகளை அமர்த்துவதை விட்டுவிட்டு இந்தக் கவரய்யா மாயத்தில் விழுந்து கிடந்தால் கேஸ் ஜெயிப்பதெப்படி?

**ஹெட்:** அண்ணே! அப்படிச் சொல்லாதீர்கள். இவர் உதவியால்தான் நாம் கரை ஏறவேண்டும். (காதில்) கவரய்யா நமக்கு முக்கியமான சாட்சி!

**கவர:** கிறிஸ்தவர்கள் உள்ள இடத்தில் மாந்திரீகர்களும் சித்தர்களும் இருக்கக்கூடாது. (காலி இடத்தைப் பார்த்து) வாருங்கள் குருஜீ! நம் வழியில் நாம் போவோம்.

**லூப்:** கவரய்யா! எங்கே போகிறீர்கள்?

**கவர:** என் இஷ்டப்பட்ட இடத்துக்கு.

**லூப்:** பிறகு சாட்சியம்?

**கவர:** ஷுப்தார்வதாரனியார் கல்யாணம் முடித்தது மோஹினிப் பிசாசுதான். 'அது மனுஷி, அவர் தாண்டி ஓடிவிட்டாள்' என்று பொய்ச் சாட்சி சொன்னேனானால் பிறகு மந்திரம் எனக்குப் பலிக்குமா? எனக்குப் பதிலாக அந்தக் கிரீசத்தையே சொல்லச் சொல்லு.

''நம்பிக்கெட்டவர்கள் இல்லை
நம்பாது கெட்டுப்போனால் போகிறார்கள்''

(கிரீசத்திடம்) இன்ஸ்பெக்டர் உன்னைவிட அதிகம் இங்கிலீஷ் படித்திருந்தாலும் அவருக்கு நம் சாஸ்திரத்தில் நம்பிக்கை கெடவில்லை.

**ஹெட்;** அவரிடத்துக்குப் போகிறாயா என்ன?

**கவர:** (போய்க்கொண்டே) கூப்பிட்டு ஆளை யனுப்பினார்.

**ஹெட்:** வாருங்கள், வாருங்கள் கவரய்யா, ஒரு சிறிய சங்கதி.

**கவர:** (போய்க்கொண்டே) அந்தச் சிறிய சங்கதியை (கிரீசத்தைச் சுட்டிக் காட்டி) அந்த மகானுபாவனிடத்தில் சொல்லுங்கள். (போகிறான்)

**ஹெட்:** (கிரீசத்திடம்) இந்தச் சாட்சியைக்கூட நீங்கள் கெடுத்துவிட்டீர்கள். இனி வேறு சாட்சி என்பதே இல்லை.

**கிரீ:** அப்படியானால் நானே சாட்சியத்துக்கு வந்து கேசைத் தவிடுபொடியாக்கி விடுகிறேன். என் சக்தியைப் பாருங்கள். சௌஜன்யராவ்பந்துலுவிடம் மட்டும் இந்தச் சங்கதியைச் சொல்லாதீர்கள்.

[திரை விழுகிறது.]

## காட்சி—6

இடம்: சௌஜன்யராவ்பந்துலுவின் பங்களா.

[மேல்மாடியில் பந்துலுவின் படுக்கை அறை. ஒரு மேஜையில் மென்மையான கண்ணாடி விளக்கு சிறிது ஒளியை உண்டாக்குகிறது. அறையின் மத்தியில் படிகளுக்குப் பக்கத்தில் உள்ள வாசலுக்கெதிரே கொசுவலை போட்ட கட்டில் இருக்கிறது. அதன் மேல் சௌஜன்யராவ் பந்துலு விழித்துக்கொண்டே படுத்திருக்கிறார்.

கட்டிலுக்கு அடுத்த பக்கத்தில் சிறியவட்ட மேஜையில் கில்ட்கவர் விளிம்புள்ள பகவத் கீதை புஸ்தகம் இருக்கிறது. பக்கத்திலுள்ள நாற்காலியில் கிரீசம் உட்கார்ந்திருக்கிறான்.]

**கிரீ:** என் மனசு குழப்பதிலாழ்ந்து ரொம்ப வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறேனுங்க. எப்படியாவது எங்க ளண்ணன் இந்த ஆபத்திலிருந்து தப்பிப் பிழைப்பானு என்ற ஆத்திரம் ஒருபக்கம், பொய் சொல்லியா காரியத்தைச் சாதிப்பது என்ற வருத்தம் ஒருபக்கம் என்னை வாட்டுகிறது. பொய்ச் சாட்சி வேண்டாம், நிஜ சாட்சி தயார்செய்யுங்கள் என்று ஹெட்கான்ஸ்டபி ளிடம் சொன்னதற்கு என் பேரில் கோபப்பட்டா னுங்க. நிஜமானசாட்சி முயன்றால் கிடைக்கமாட்டானு?

**சௌ:** நிஜமான சாட்சியா? என்ன பத்தாம்பசலித்தனம்! உண்மை சொல்பவன் சாட்சியத்திற்கு வரமாட்டான். சாட்சியத்திற்கு வருபவன் உண்மை சொல்லமாட்டான்.

**கிரீ:** எதற்காகச் சொல்லமாட்டான்?

**சௌ:** வாதிக்கு விரோதமான உண்மை வாதிதரப்பு வக்கீலுக்கு அவசியமில்லை. பிரதிவாதிக்கு விரோதமான உண்மை பிரதிவாதி வக்கீலுக்கு அவசியமில்லை. கிராஸ் எக்ஸாமினேஷன் ஆரம்பமாகும்போது எப்பேர்ப்பட்ட சாட்சியும் கவிபாட ஆரம்பித்துவிடுவான். அதற்காகத் தான் பெரிய மனிதர்கள் கூண்டிலேறப் பயப்படு கிறார்கள்.

**கிரீ:** வக்கீல்கள் பொய் சொல்லச் சொன்னால் நியாயம் கண்டுபிடிக்கச் சம்பளம் வாங்குகிற ஜட்ஜ் என்ன செய் கிறார்?

**சௌ:** இருதரப்பு வக்கீல்களும் சொல்லுவிக்கும் பொய் களைக் கை ஒடியும்படி எழுதிக் கொள்கிறான்.

**கிரீ:** அப்படியானால் இந்தக் கோர்ட்டுகளெல்லாம் எதற்காக இருக்கிறது?

**சௌ:** நானும் அதைத்தான் ரொம்ப நாளாக யோசித்துக் கொண்டிருக்கிறேன். பெரிய பெரிய வக்கீல்கள்கூட வெட்கமில்லாமல் வேண்டுமென்றே பொய்ச் சாட்சி களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். சிலர் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிச் சொல்லச் சொல்கிறார்கள். என்னைப் போன்ற கையாலாகாத

அப்பாவிகள் சிலர் அப்படிப்பட்ட பாவத்திற்கு ஒப்புக் கொள்ளமாட்டோம் என்ருலும், எங்கள் பார்ட்டி சாட்சிகள் பொய் சொல்கிருர்கள் என்று தெரிந்திருந் தும் சும்மா இருக்கிறேம். இப்படிப்பட்ட பொய் களுக்குச் சம்மதிக்க வேண்டியிருப்பதால்தான் நான் பிராக்டீஸ் ரொம்பவும் குறைத்துக் கொண்டேன். கொஞ்ச நாளில் இந்தத் தொழிலேயே விட்டுவிடலாம் என்றே எண்ணுகிறேன்.

**கிரீ:** எல்லோரும் தங்களைப் போன்ற வக்கீல்களேயானுல் பொய் என்பது இருக்கவே இருக்காதுங்க. வக்கீல் தொழிலில் இவ்வளவு அக்கிரமங்கள் இருக்கிறதென்று எனக்குத் தெரியாது. எதற்கு வேண்டுமானுலும் சகித் துக் கொள்வேன். பொய் என்பதை மட்டும் என்னுல் பொறுக்க முடியாது.

**சென:** ஒரு பொய்யோடு போகவில்லை. சாதாரணமாக வக்கீல் தொழிலில் பல சீர்கேடுகள் இருக்கின்றன. ஆண்ட்டிநாச் போல ஆண்ட்டி வக்கீல் என்று ஒரு பெரும் மூவ்மெண்ட் நம் நாட்டில் ஆரம்பிப்பது அவசியம் என்று தோன்றுகிறது. ஹெட்கான்ஸ்டபிள் சொல்வதிலும் குற்றமில்லை. பொய்ச்சாட்சி இல்லாமல் கேஸ் ஜெயிக்காது. நீங்கள் நல்ல வழியில் பற்றுடைய வர்கள் ஆதலால் உங்களுக்கு கேஸ் நடத்தும் முறைகள் வெறுப்பைத் தருகின்றன.

**கிரீ:** பின் அண்ணுவின் கதி என்னுவது?

**சென:** ஒரே வழிதான் இருக்கிறது. அந்தக் குண்டூர் சாஸ் திரிகளை யாராவது தெரிந்து கண்டு பிடித்துவிட்டால் மற்ற சாட்சிகள் அவசியமில்லை.

**கிரீ:** பிடிபடும் வழி எதுவோ நீங்கள் சொன்னுல் மூன்று லோகத்திலும் தேடிப் பார்த்தாவது கண்டுபிடித்துக் கொண்டுவந்து விடுகிறேன்.

**சென:** உங்கள் ஆர்வம் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களைப்போன்ற இளைஞர்கள் மிகுதியாக இருந்தால் நம் நாடு நன்மையடையும். உங்கள் முயற்சிக்கு ஒத்தாசையாக வேண்டிய பந்தோபஸ்து எல்லாம் நான் செய்கிறேன். உங்கள் சொந்தப் பிரச்னைகள் கூடத் தீர்ந்து விட்டதாகையால் நீங்கள் உடனே புறப் படுங்கள். அந்தக் குண்டூர் சாஸ்திரிகளைத் தேடுங்கள்.

இதனால் உங்கள் கல்யாணம் ஒத்திப்போடவேண்டி வருமே என்றுதான் கவலைப்படுகிறேன்.

**கிரீ:** அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். எங்கள் குருவின் உபதேசம் என்னவென்றால், முதலில் டூட்டி, பிறகுதான் ப்ளெசர். அதிலும் நான் சிறு வயதிலிருந்தே இந்திரிய நிக்கிரகம் உடையவன் ஆகையாலும், உடலின்பத்தைக் கருதாமல் எப்போதும் ஏதாவதொரு கடமையைச் செய்து கொண்டிருப்பதாலும் பெண்ணின்பத்தில் எனக்கு அலட்சியம் ஜாஸ்தி. அதனால்தான் எனக்கு 'நெபோலியன் ஆப் ஆண்ட்டிநாச்' என்று பட்டப் பெயர் வைத்தார்கள். இந்த வாழ்க்கை முழுவதையும் சோஷியல் ரிபார்மருக்காகத் தியாகம் செய்யவேண்டும் என்ற லட்சியத்துடன் கல்யாணம் செய்துகொள்ளாமல் எங்கள் குருவிடம் லெப்டினண்ட்டாகச் சேர்ந்தேன். புச்சம்மாவின் இருதயத் தூய்மையும் அவளுடைய அவல நிலையும் பார்த்து மனதிரங்கியும், என் சிஷ்ய னிடம் எனக்குள்ள அன்பினாலும் அவள் மேல் காத லேற்பட்டு, அவளை மணக்க ஒத்துக்கொண்டேன். அது வன்றி இந்திரிய சுகங்களை விரும்பியல்ல. அவளும் என்னைக் காதலித்து, விதவா விவாஹம் செய்து கொள்ள ஒத்துக்கொண்டாள். ஆகையால் எங்கள் மேரேஜ் ட்ரு லவ் மேரேஜே தவிர, வெறும் விடோ மேரேஜ் இல்லைங்க.

**சௌ:** உங்கள் குருவும் அப்படித்தான் எழுதினார். நீங்கள் விடோ மேரேஜ் செய்து கொண்டால் உங்களண்ணா உங்களைச் சுவீகாரம் செய்துகொள்ள மாட்டார் போலிருக்கிறதே.

**கிரீ:** உங்கள் பேச்சை அவர் தட்டமாட்டார். ஒரு வேளை அவர் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், சுவீகாரத்தை விட்டாலும் விடுவேனே தவிர, உயிரைவிடச் சிறந்த புச்சம்மாவை மட்டும் விடமாட்டேனுங்க.

**சௌ:** அவள் அதிர்ஷ்டசாலி.

**கிரீ:** இப்படிப்பட்ட மாதர்குல மாணிக்கம்......(சத்த மின்றி ஒரு ஆள் படியேறி வந்து வாசலுக்கருகில் தனக் கெதிராக நிற்பதைக் கண்டு கிரீசம் பிரமித்து பேச்சை நிறுத்திக்கொண்டு வாயைத் திறக்கிறான். அதைக் கண்ட சௌஜன்யராவ் பந்துலு வியப்புடன்-)

**சௌ:** என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? (கிரீசம் பார்க்கும் பக்கம் தன் பார்வையைச் செலுத்தி வந்த ஆளைப் பார்க்கிறார்.)

**கிரீ:** இப்படிப்பட்ட மாதர்குல மாணிக்கம் கிடைத்ததனால் நான்தான் அதிர்ஷ்டசாலியென்று நினைக்கிறேன். "பரோபகாரம் புண்ணியம் பாபம் பர பீடணம்" என்றாற்போல ஒருவரைக் காப்பாற்றி உதவி செய்வது உத்தமமான புண்ணியமாகும். தன் பாட்டிற்கு வாழ்கிறவனுக்குக் காரணமின்றி அபகாரம் செய்வதுதான் பாவமாகும். ஆகையால் எங்களண்ணாவை எப்படியாவது காப்பாற்றுவது என் கடமையாகுமென்பதை உணர்கிறேனுங்க.

**சௌ:** (புதிதாக வந்த ஆளைப்பார்த்து) யார் நீங்கள்?

**புது ஆள்:** அவசர வேலையாக வந்தேனுங்க. முன்னறிவிப்பில்லாமல் வந்ததற்காக மன்னிக்கவேண்டும். கீழே வேலைக்காரர்களைக் காணோம்.

**சௌ:** வாருங்கள். உட்காருங்கள்.

**கிரீ:** (எழுந்து போய் ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து தன் நாற்காலிக்கு அருகில் போட்டு) உட்காருங்கள்.

**புது ஆள்:** (உட்காராமல்) வேண்டாம். பரவாயில்லை.

**சௌ:** உட்காருங்கள். (புதுஆள் உட்காருகிறார்) நீங்கள் யார்?

**புது ஆள்:** நான் யார் என்று கட்டாயம் சொல்லித்தான் ஆகவேண்டுமா?

**சௌ:** ஏதாவதொரு காரணத்தால் பேர் சொல்ல இஷ்டப்படாவிட்டால் சொல்லவேண்டியதில்லை.

**புது ஆள்:** நான் வந்த காரியத்துக்கு என் பெயர் அவசியமில்லைங்க. சில காரணங்களால் என் பெயரைச் சொல்ல இயலவில்லை. மன்னிக்கவேண்டும்.

**கிரீ:** சேக்ஸ்பியர் சொல்லவில்லையா, 'வாட் ஸி னேம்" என்று? அதையே நான் மொழிபெயர்த்து சிறிய குறட்பாவாக்கி யிருக்கிறேன். "பெயரினான் ஆவது மென் கொல்? நயம்பட, சீர்மை யறிந்து தெளி" என்பதாகும். நம் சாஸ்திரத்தில்கூட யாரும் தங்கள் பெயரை உரக்கச் சொல்வது பாவம் என்றார்கள். தங்களுக்குத் தெரிந்ததுதான்.

**புது ஆள்:** வேறொருவராக இருந்தால் கற்பித்துப் பொய்ப் பெயர் சொல்லியிருப்பேன். தங்களிடம் பொய் சொல்ல என்னால் இயலாது.

**கிரீ:** போஜ ராஜன் முகத்தைப் பார்த்தாலே கவிதை பிறக்கும் என்பதுபோல, தங்கள் முகத்தைப் பார்த்தால் எப்பேர்ப்பட்டவனுக்கும் உண்மைதான் வாயிலிருந்து வருகிறது.

**புது ஆள்:** ஒரே ஒருவரைத் தவிர்த்து!

**கிரீ:** சச் எ மேன் ஈஸ் டுபி'டிட். அதாவது அப்படிப்பட்ட மனிதன் இருந்தால் அவனுக்கு நாம் இரங்கவேண்டும். அவ்வளவுதான்.

**சௌ:** பொய் யென்பது யாரிடமும் சொல்லக்கூடாது.

**புது ஆள்:** நல்லவரிடம் நல்லதனமாகவும் தீயவரிடம் தீயதாகவும் நடந்து கொள்ளவேண்டுமென்று என் தாயார் உபதேசம் செய்தார்கள். ஆகையால் தங்களிடம் பொய் சொல்லமாட்டேன்.

**சௌ:** உங்கள் தாயார் வணக்கத்துக்குரியவர்கள்தான். ஆனாலும் அவருடைய உபதேசத்தில் நீங்கள் முதல் பாதியை மட்டும் அனுஷ்டித்து வருவதுபோல, பிற் பாதியை மாற்றி, நாம் தீயவர்கள் என்று நினைப்பவர் களிடமும் நல்லபடியாக நடக்க முயன்றோமானால் கருணைக்கடலான கடவுளானவர் சிருஷ்டித்த இந்த உலகம் உங்களுக்கு இன்னும் அதிக சந்தோஷத்தைத் தரும். மேலும் நன்மை தீமைகளை நிர்ணயிக்க முடிந்தவர்கள் யார்? நல்லதிலும் தீயதிருக்கிறது. தீயதிலும் நல்லதிருக்கிறது.

**கிரீ:** என்ன உயரிய கருத்துக்கள்! ஒரு தீயவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். ஒருவனைச் சொல்வானேன். நானே அந்தத் தீயவன் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட தீயவனாகிய என்னிடம் நல்லதாக நடந்து கொள்வதுதான் சீலமாகும். தங்களைப் போன்ற நல்லோரிடம் எல்லோரும் நல்லபடியாகத் தான் நடக்கிறார்கள். "தீயவை செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற கவிஞனின் சொற்கள் பெர்பெக்ட் ஜெம் அல்லவா?

**சௌ:** என்னுடைய கருத்தை அழகாக விரித்துரைத்தீர்கள்.

**புது ஆள்:** (சௌஜன்யராவ் பந்துலுவிடம்) தங்கள் வாக்கியத்தை குரு உபதேசமாக மதித்து இனிமேல் தீயவரிடமும் நல்லபடியாக நடக்க முயல்கிறேன். தங்கள் சிஷ்யனாகும் பாக்கியம் கிடைத்தது எனக்குப் பெறற்கரிய பெரும் பேருகும். நல்லோரைப் பார்ப்பதுவும் நன்றே. தாங்கள் நன்மையில் தீயதிருக்கும் என்று சொன்னீர்கள். பரிபூரணராகிய தங்களிடம் நல்லதன்றி தீயதென்பதே இல்லை என்று கேள்விப்படுகிறேன்.

**சௌ:** பரிபூரணமான நன்மை, ஒரு கடவுளிடம் மட்டும் தானிருக்கிறது. என் தீயவை உலகத்துக்கெப்படித் தெரியும்?

**கிரீ:** கிறிஸ்தவர்கள் ஒரிஜினல் சின் என்பார்கள். நம் மதத்தார் தீவினை என்பார்கள். அதன் தலையிலே இடிவிழ! (பெக்யுவர் பார்டன்) அந்த ஒரிஜினல் சின் அதாவது வினை என்பது எப்படிப்பட்ட நல்லவனையும் எப்பேர்ப் பட்ட கட்டுப்பாடுடையவனையும் கூடக் கையைப் பிடித்துக் கெட்ட வழிக்கு இழுத்துப் போட்டுவிடும். தங்களுக்குத் தெரியாததென்ன இருக்கிறது?

**சௌ:** ''பலவான் இந்திரிய நிக்'ராமோவித்' வாம்ஸாம பிகர்ஷதி'' என்று பகவத்கீதை சொல்லுகிறது. ஒவ்வொருவனும் தத்தமது தீயவற்றை உள்ளே மறைத்து நல்லதை மட்டுமே வெளிக் காட்டுகிறுன்.

**புது ஆள்:** ஒரு சிலர் இல்லாத நல்லதைக் கூட உள்ளதாக விளம்பரப் படுத்துகிருர்கள்; உலகத்தை ஏமாற்றுகிருர்கள்.

**சௌ:** உண்மை. அதனுல்தான் நன்மை தீமைகள் மனதுக்குத்தான் தெரிய வேண்டுமன்றி உலகத்துக்கென்ன தெரியும் என்று சொன்னேன்.

**புது ஆள்:** நடிப்பினுல் சில நாட்கள் உலகத்தின் கண்ணை மறைக்கலாமே தவிர, என்றுவதொருநாள் தங்கத்தையும் பித்தளையையும் உலகம் கண்டு கொள்ளத்தான் போகிறது. (கிரீசத்திடம்) என்ன சொல்கிறீர்கள்?

**கிரீ:** பந்துலுவுக்குத் தூக்கம் கெடுகிறது. நீங்கள் வந்த வேலை எதுவோ?

**புது ஆள்:** இயல்பாக உலகத்தின் கண்களுக்கு நல்லது தென்படாது. தீயவற்றைக் காண்பதற்கு மட்டும்

அகன்ற கண்கள் உண்டு. பார்த்துப் பார்த்து உலகம் 'இவர் நல்லவர்' என்று முடிவு செய்த பிறகு அவர் நல்லவராகாமல் இருக்க முடியாது. தங்களைப் போன்ற நல்லவரை வலை போட்டுத் தேடினாலும் காண்பதரிது. தங்கள் தரிசனம் எனக்குக் கிடைத்ததற்காக இந்த நாளை என் வாழ்நாளிலேயே ஒரு நல்ல நாளாகக் கருதி மகிழ்ச்சியடைகிறேன்.

**கிரீ:** சந்தேகமென்ன?

**சௌ:** நல்லவனாக இருக்க முயல்கிறேன். இதைத் தவிர என்னிடம் வேறு தகுதியொன்றுமில்லை. நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லவில்லையே?

**கிரீ:** நான் விசாரித்து அறிந்து தங்களிடம் காலையில் சொல்லட்டுமா?

**சௌ:** அவசரமாக வந்தவர்கள் அதுவும் பெயரைச் சொல்லாதவர்கள், உங்களிடம் அவர்களுடைய காரியத்தைச் சொல்வார்களா? நீங்கள் பத்தாம்பசலியாக இருக்கிறீர்களே!

**கிரீ:** அவருக்கு நானேதாவது உதவி செய்யும் வாய்ப்பிருக்குமோ என்றும் தாங்கள் தூங்குவதற்கு நேரமாகி விட்டதே என்றும்தான் சொன்னேன்.

**புதுஆள்:** கிரீசம் அவர்கள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.

**சௌ:** உங்களுக்கு அறிமுகமானவர்களா?

**புது ஆள்:** அவரைத் தெரியாதவர்கள் யாரிருக்கிறார்கள்?

**கிரீ:** அவர் என் மேலுள்ள அபிமானத்தால் அப்படிச் சொல்கிறாரே தவிர, என்னை எல்லோருக்கும் தெரிய நானென்ன அவ்வளவு பெரிய மனுஷனா? ஆனாலும் அடிக்கடி லெக்சர்கள் செய்வதனால் இவரைப் போன்ற நல்லவர்கள் தெரிந்திருப்பதுமுண்டு. பாராட்டுவதும் உண்டு. இவரைக்கூட நான் பார்த்திருப்பேன். அதனால் தான் இவரைக் கண்டதுமே, 'பார்த்த முகமாக இருக்கிறதே, யாராக இருக்கலாம்' என்று திகைத்தேன். அவரும் மறைந்திருக்க முயன்றதால், நானும் ஞாபகப் படுத்த முயலவில்லை. நான் போய்ப் படுத்துக் கொள்கிறேன். நீங்கள் இருவரும் பேசிக் கொள்ளலாம்.

**சௌ:** அப்படியே செய்யுங்கள்.

**கிரீ:** (சௌஜன்யராவ்பந்துலுவிடம்) நமஸ்கார்ரம், (புதிய ஆளிடம்) நீங்கள் பிராமணரா?

**புது ஆள்:** இல்லை.

**கிரீ;** (புது ஆளிடம்) அப்படியானல் அடியேன் நோன் டு தி அன்னேன்! (போய்க் கொண்டே வாசல் பக்கம் திரும்பிப் பார்த்து, புது ஆளிடம் கெஞ்சிக் கேட்பதுபோல் நடித்துவிட்டுப் போகிருன்.)

**சௌ:** கிரீசம் கவிஞன். நல்ல யோக்கியமான இளைஞன்.

**புது ஆள்:** விதவைகளைக் கல்யாணம் செய்து கொள்வதும் பிரம்மச்சரியமும் நன்மைக்கு அவசியந்தானு?

**சௌ:** விதவைகளை இஷ்டப்பட்டால் கல்யாணம் செய்து கொள்ளலாம். இல்லையென்ருல் சும்மா இருக்கலாம். நன்மைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஆனல் தாசிகளுடன் தொடர்பு கொண்டவன் என்றும் நல்லவனுக முடியாது.

**புது ஆள்:** இவ்வளவுதானு? இல்லை; தாசியைப் பார்க்கக் கூடாது, தாசிகளுடன் பேசக் கூடாது, தாசிகளின் பாட்டைக் கேட்கக் கூடாது என்ற கட்டுப்பாடுகூட இருக்கிறதா?

**சௌ:** இப்படிப்பட்ட கட்டுப்பாடிருந்தால் மிகவும் நல்லது.

**புது ஆள்:** தாங்கள் பிரம்மச்சாரி என்று நினைக்கிறேன்.

**சௌ;** ஆம்.

**புது ஆள்:** (புன்னகையுடன்) கிரீசம்கூட பிரம்மச்சாரி தானே?

**சௌ:** உங்களுக்குத் தெரியாதா? அவர் பிரம்மச்சரியத்திற்குக் குரு.

**புது ஆள்:** அவர் எனக்குக்கூட குருதானுங்க.

**சௌ:** அப்படியா? ரொம்ப சந்தோஷம்!

**புது ஆள்:** இந்த விஷயத்தில் ரொம்ப நாளாக எனக்கொரு சந்தேகமிருக்கிறது. மன்னித்தால் சொல்லிக் கொள்கிறேன்.

**சௌ:** சொல்லுங்கள். தப்பென்ன?

**புது ஆள்:** தாசிகளைப் பாட்டுக் கச்சேரிக்கு அழைக்காவிட்டால் அவர்கள் பிழைப்பதெப்படியுங்க?

சௌ: கல்யாணம் செய்துகொண்டால் போகிறது!

புது ஆள்: கிரீசம் போன்றவர்களை என்று தங்கள் அபிப்பிராயமா?

சௌ: என்ன பேச்சு சொன்னீர்கள்! நாளைக்கோ மறு நாளோ அவர் ஒரு புனிதமான விதவையைக் கல்யாணம் செய்துகொள்ள இருக்கிறார். தாசியையா கல்யாணம் செய்து கொள்வார்?

புது ஆள்: ஜப்பான் தேசத்தில் கெயிஷாக்கள் என்று தாசிகள் இருப்பதாகவும், அவர்களைப் பெரிய மனிதர்கள் கூட கல்யாணம் செய்து கொள்கிறார்களென்றும் சொன்னது, இந்தக் கிரீசம்தான் போலிருக்கிறது, சொல்லக் கேட்டேன். ஜப்பான் தேசம் நல்ல தேசம் தானே?

சௌ: ஆமாம். அதற்காக நல்ல நாட்டிலுள்ள தீயவற்றைப் பின்பற்ற வேண்டுமா?

புது ஆள்: அப்படியானால் கல்யாணம் செய்துகொள்ள விரும்பும் தாசிகளுக்கு விரும்பத் தகுந்த வரன் கிடைப்பதெப்படி? இல்லை, யாரானாலும் சரிதான் என்பது உங்கள் அபிப்பிராயமா?

சௌ: இதைப்பற்றி நான் இன்னும் நன்றாக ஆலோசிக்கவில்லை. தாசிகள் நன்றாகப் படித்து மற்ற தொழில்களின் மூலம் நல்ல வழியில் வாழக் கூடாதா?

புது ஆள்: அப்படிச் செய்தால் தங்களைப் போன்றவர்கள் அவர்களைக் கல்யாணம் செய்து கொள்வீர்களா?

சௌ: என்ன கேள்வி? நானென்றும் தாசியை மணக்க மாட்டேன். என் உயரத்துக்குத் தங்கத்தைக் குவித்தாலும் கூட தாசியைத் தொடமாட்டேன்.

புது ஆள்: தவறுதலாக தாசியின் உடல் தங்கள் மேல் பட்டால்......?

சௌ: (சிரித்துக் கொண்டே) பட்ட இடத்தை அறுத்தெறிந்துவிடுவேன். விசித்திரமான கேள்விகளைக் கேட்கின்றீர்கள்!

புது ஆள்: தாசி குலம் கெட்டதாக இருக்கலாம். ஆனால் தாங்கள் சொன்னது போலக் கெட்டதில் நல்லதிருக்கக்

கூடாதா? நல்லதெங்கிருந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததுதானே.

சௌ: நல்லதெங்கிருந்தாலும்ஏற்றுக் கொள்ளத் தகுந்தது தான். சரி, நீங்கள் வந்த வேலையைச் சொல்லவில்லையே!

புது ஆள்: என்னைப் பொறுத்தமட்டிலும் உங்களைப் பார்ப்பதுதான்.

சௌ: பார்ப்பதற்கு நிசி வேளையில்தான் வரவேண்டுமா?

புது ஆள்: உங்கள் வேலைக்கு இடையூறாகக் கூடாதென்று இந்நேரம் வந்தேன்.

சௌ: அப்படி மிஞ்சிப்போகிற காரிய மொன்றும் இல்லையே!

புது ஆள்: துன்பப்படுகிறவர்களின் வேலையெல்லாம் தங்களது சொந்த வேலையாகவே கருதுவீர்களென்று உலகத்தார் சொல்லக் கேட்டேன். வேறொன்றுமில்லை. லுப்தாவதாணியாரின் கேசில் பெரும் உதவி செய்யக் கூடிய ஒருவரை எனக்குத் தெரியும்.

சௌ: அப்படியானால் உங்களை என் குல தெய்வமாகவே கருதுகிறேன்.

புது ஆள்: அதற்கு நான் கொடுத்து வைக்கவில்லையே.

சௌ: என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?

புது ஆள்! வேறொன்றுமில்லை. அந்த உதவி ஒரு தாசியினால் ஆகவேண்டி இருக்கிறது. அதுதான் சங்கடம்.

சௌ: பணம் தருவோம்.

புது ஆள்: அந்தத் தாசி பணத்துக்கு இணங்கக் கூடியவளில்லையே?

சௌ: அப்படியானால் அவள் என்ன விரும்புகிறாள்?

புது ஆள்: அவளது விருப்பம் அசாத்தியமானதென்று நினைக்கிறேன்.

சௌ: பரவாயில்லை. சும்மா என்னவென்று சொல்லுங்கள்.

புது ஆள்: சொன்னால் உங்களுக்குக் கோபம் வருமே தவிர, பலனிருக்காதென்று நினைக்கின்றேன்.

சௌ: தன்னை வைத்துக் கொள்ளச் சொல்கிறளா என்ன? அது என்றைக்கும் நடக்காது.

புது ஆள்: அந்தக் கிழட்டுப் பிராமணனின் துரதிர்ஷ்டம்! நாமென்ன செய்ய முடியும்?

சௌ: எவ்வளவு புத்தியற்றவள்! தகுதியற்ற இத்தகைய கோரிக்கைகளைக் கோரலாமா? நீங்களெப்படி இந்தத் தகுதியற்ற சொல்லைச் சொல்ல வந்தீர்கள்?

புது ஆள்: விவகார விஷயங்களைப் பேசும்போது நல்லதோ கெட்டதோ உள்ளதைப் பேசுவது நியாயந்தானே. அவள் தகுதிக்கு மீறிய பைத்தியக்கார ஆசைதான் வைத்திருக்கிறள் என்று சோறு சாப்பிடும் மனிதர்களுக்குத் தெரியாதா?

சௌ: என்னை மன்மதன் என்று காதலித்தாள்?

புது ஆள்: மிகவும் நல்லவர் என்பதனால்தான் போலிருக்கிறது.

சௌ: தாசிக்கும் நல்லவனுக்கும் என்ன சம்பந்தம்? இதில் ஏதோ சூதிருக்கிறது.

புது ஆள்: மிருச்ச கடிகம் படித்தாளோ என்னவோ?

சௌ: வசந்தசேனையைப் போன்றவள் பைத்தியக்காரக் கவிஞர்களின் கற்பனையில் இருக்கவேண்டுமே தவிர, உலகில் உண்மையாக இருக்க முடியாது. ஏதோ சூது தான். இதற்குச் சந்தேகமில்லை. வேறு வழியே இல்லையா?

புது ஆள்: நீங்கள் கேள்விகள் கேட்கிறீர்கள். கேட்டதற்குச் சொன்னல் கோபப்படுவீர்கள். என்ன செய்வது?

சௌ: ஸ்ரீ கிருஷ்ண பகவான் அனுக்கிரகத்தால் கோபம் என்னும் பகையைக் கொல்வதற்கே, சதாகாலமும் முயற்சி செய்கிறேன். குற்றத்தை எடுத்துக் காட்டினீர்கள். மிக நன்றி. சொல்லவேண்டியதைச் சொல்லுங்கள்.

புது ஆள்: தங்களுக்கு வைத்துக்கொள்ள இஷ்டமில்லா விட்டால், தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்பது அவள் கருத்து.

சௌ: நல்லவர்களை ஏளனம் செய்ய வேண்டுமென்பதுகூட உங்கள் தாயாரின் உபதேசம் போலிருக்கிறது.

**புது ஆள்:** உங்கள் ஸ்ரீ கிருஷ்ணன் மேல் ஆணை. உங்களிடம் எனக்கு அளவு கடந்த பக்தியுண்டு. தங்களை அவமதிக்கும் எண்ணம் என் இதயத்தில் என்றும் பிறக்காது. நம்புங்கள். தூதர்கள் கொண்டுவரும் செய்திகளுக்காகத் தூதர்களைக் குற்றம் சொல்வது தருமமல்ல. இவையெல்லாம் நடக்குமென்று நினைத்துச் சொல்ல வரவில்லை. உள்ளதைச் சொன்னால் நீங்கள் வக்கீல் ஆகையால் தாசி போட்ட சிக்கலை அவிழ்க்க முடியாதா என்று சொன்னேன்.

**சௌ:** தாசிகளும் வக்கீல்களும் சமநிலைமைதான் என்று? (சிரித்து) என்னைப் பொறுத்தவரையில் தோற்று விட்டேன் என்று ஒப்புக்கொள்கிறேன். கேலி செய்யாதீர்கள். தாசி பணத்துக்குச் சம்மதிக்காமலிருக்க மாட்டாள். பணமெவ்வளவு வேண்டுமானாலும் கேட்கச் சொல்லுங்கள். ஒன்று அவராவது தருவார். நானாவது தருவேன்.

**புது ஆள்:** அதுவரைக்கும் போவானேன்? தங்கள்வரைக்கும் அவசியமில்லை. அந்தப் பிராமணனுக்கு உபகாரம் செய்ய நானே தந்துவிடுவேன். அவள் பணத்துக்கு மசியமாட்டாள் என்றால் நம்பமாட்டீர்களா?

**சௌ:** சொன்னாற்போல, நீங்கள் கிரீசத்தின் சிஷ்யன் என்றீர்களே. நீங்கள் பிரம்மச்சாரியில்லையா? அப்படியானால் தாசியினாலிந்தச் சங்கதிகளெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியும்? இதெல்லாம் கேலியா? சதியா?

**புது ஆள்:** நம்பாதவர்களிடம் என்னத்தைச் சொல்ல! இது கேலியுமில்லை; சதியுமில்லை. நான் முற்றிலும் பிரம்மச்சாரிதான். புத்தியுள்ளவர்கள் எல்லோருமே பிரம்மச்சாரிகள் தானல்லவா? ஆனால், விதியின் செயலால் எனக்குத் தாசியின் சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

**சௌ:** அதென்ன விதியின் செயல்...?

**புது ஆள்:** இது. (புதுஆள் தலையிலுள்ள தலைப்பாகையை எடுத்து, கூந்தலை நழுவவிட்டு, பின்னுக்குத் திரும்பி, அணிந்திருந்த கோட்டைக் கழற்றி, போர்த்திருந்த சால்வையைத் துண்டுபோல் கழுத்தில் சுற்றிக்கொண்டு சௌஜன்யராவ் பந்துலுவின் பக்கம் திரும்பி) என் ஊரும் பேரும் கேட்பீர்கள். ஊர் விஜய நகரம். பேர் மதுரவாணி.

**சௌ:** (முதலில் வியப்பில் மூழ்கி, தெளிந்து கோபாவேமடைந்து நின்று) என்ன மோசம் நடந்து விட்டது!

**மதுர:** குருவின் உபதேசத்தை குருவே மறந்துவிடக்கூடாது. கெட்டதிலும் நல்லதிருக்கலாம். அதோடு நன்மை தீமைகளைத் தெரிந்தவர் யார்?

**சௌ:** என்ன போக்கிரித்தனம்!

**மதுர:** தூய உள்ளத்துடன் வந்தேன். உண்மை கடவுளுக்குத்தான் தெரியும். போக்கிரித்தனமாக உங்களுக்குத் தோன்றுகிறது. என்ன செய்ய முடியும்? போகிறேன்.

**சௌ:** சீக்கிரம் போகலாம்.

[மதுரவாணி பாகை, கோட்டு வைத்துவிட்டு வாசல் வரைக்கும் போகிருள்.]

**மதுர:** நில். நில்.

[மதுரவாணி திரும்பவும் வந்து கொஞ்சம் இடப் பக்கமாக எதிரே நிற்கிருள்.]

**சௌ:** தலைப்பாகையை மறந்துவிட்டாய்.

**மதுர:** இவ்வளவுதானு! மனதே மறந்து போய்விட்டேன். வேறென்ன?

[திரும்பவும் இரண்டெட்டு எடுத்து வைக்கிருள்.]

**சௌ:** ஒரு செய்தி.

**மதுர:** இந்தத் தடவை எதை மறந்துவிட்டேனுங்க?

**சௌ:** நீ மறக்கவில்லை. நான் மறந்துவிட்டேன். லுப்தாவதானியார் கேஸ் விஷயமென்ன?

**மதுர:** தங்களது நல்ல குணம் உலகப் பிரசித்தமானுலும் அவரிடம் தங்களுக்கவ்வளவு கருணையைக் கடவுள் உண்டாக்கவில்லை.

**சௌ:** அவரைக் காப்பாற்றுவதற்கு நியாயமான வேலை எதைச் செய்யச் சொன்னுலும் செய்கிறேன். அனேக வருஷங்களாகிவிட்டது. தாசி என்கிறவள் என் வீட்டுக்கு வந்ததில்லையே. நான் தாசியுடன் பேசியதுமில்லையே. இன்று விரதபங்கமாகி விட்டதல்லவா என்று மிகுந்த வருத்தப்படுகிறேன்.

**மதுர:** தாங்கள் அறிவாளி! விரதபங்கம் என்ன வந்து விட்டது?

**சௌ:** நிசி வேளையில் படுக்கையறையில் தாசியுடன் பேசிக் கொண்டிருப்பதைவிட வேறென்ன வேண்டும்?

**மதுர:** தாங்கள் என்னைக் கூப்பிடவில்லையே. தாசிகள் பார்ட்டியாக இருந்தால் வக்கீல்கள் கேஸ் நடத்த மாட்டார்களா?

**சௌ:** நடத்துவோம். நடத்தமாட்டோம். எதுவானாலும் நீ பார்ட்டிகூட இல்லையே?

**மதுர:** இல்லை. ஆனாலும் பார்ட்டியைக் காப்பாற்றும் ஆளாகிய நான் யாராயிருந்தாலென்ன? என்னைப் பார்க்கக்கூடாதா? அதிருக்கட்டும். தாசிகள் தேவாலயத்துக்கு பகவானை தரிசிக்கப் போகலாமல்லவா? நல்ல மனிதராகிய தங்களைப் போன்றவர்களைத் தரிசிப்பது மட்டும் கூடாதா?

**சௌ:** நல்லவர், நல்லவர் என்று பல தடவை சொல்லிக் கொண்டிருப்பது எனக்கு நாணமாக இருக்கிறது. அதை மீண்டும் சொல்ல வேண்டாம். பார்க்க வரலாம் என்றாலும் ராத்திரி வேளையில் படுக்கையறைக்கா வருவது?

**மதுர:** தாசி என்று தெரிந்தால் சொல்லிவிட்டு பகலில் வந்தால் பார்ப்பீர்களா?

**சௌ:** என் பகைவர்கள் யாரோ உன்னை என்னிடம் அனுப்பி யிருக்கிறார்கள். (அடியிலிருந்து முடிவரை பார்த்து) எப்படிப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

**மதுர:** அப்படியானால் உங்கள் நல்ல குணமே உங்கள் பகையாக இருக்கலாம். உங்கள் காரியத்தைச் செவ்வனே முடித்துத் தந்து, பணம் வேண்டாம் என்ற பிறகாவது சூது சதியில்லை என்று நம்புவீர்களா?

**சௌ:** அவ்வளவு நல்ல ஆளாக இருந்தால், பாவம்! அந்த பிராமணனுக்கு நீயே உபகாரம் செய்யக்கூடாதா? இடையில் எனக்கேனிந்தத் தொந்தரவுகள்?

**மதுர:** நான் நல்லவள் என்று நம்புவீர்களா?

**சௌ:** அந்தப் பிராமணனைக் காப்பாற்றினால் நம்ப மாட்டேனா?

**மதுர:** அப்படியானால் ஒருவனுடைய போக்கிரித்தனத்தைப் பற்றி விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

**சௌ:** சொன்ன பிறகும் என் எதிரில் நின்ருல், நீ எந்தச் சிக்கலேத் தீர்த்தாயோ அந்தச் சிக்கலில் மாட்டி விடுவாயோ என்று பயப்படுகிறேன்.

**மதுர:** (முகத்தைப் பக்கமாகத் திருப்பி) ஒரு சிறு முத்தத்திற்குப் பஞ்சமா?

**சௌ:** அதோடு காரியத்தை முடித்துத் தருவாயா?

**மதுர:** பிறகு வேறென்ன செய்ய?

**சௌ:** எனது விரதபங்கம் செய்வதுதான் உன் பிடிவாதமா?

**மதுர:** கீழிறங்கி வந்துவிட்டேனென்று கௌரவம் இல்லேயல்லவா? இஷ்டமில்லாத வேலே எதற்காகச் செய்ய வேண்டும். வணக்கம்.

[இரண்டடி எடுத்து வைத்துப் போக முயல்கிருள்.]

**சௌ:** நில். (கட்டிலின்மேல் உட்கார்ந்து கொண்டு போர்வையைப் போர்த்துக்கொண்டு) உட்கார்.

**மதுர:** உட்காரமாட்டேன்.

**சௌ:** ஆயிரம் ரூபாய் தருகிறேன். வாங்கிக்கொண்டு பிராமணனேக் காப்பாற்று.

[மதுரவாணி மீண்டும் போக முயல்கின்ருள்.]

**சௌ:** போகாதே. உனக்கு முத்தம்தான் வேண்டுமா? என்ன பைத்தியக்காரப் பெண்! இதனுலென்ன லாபம்?

**மதுர:** எனக்குத் தெரியாது.

**சௌ:** வேறு வழி இல்லேயா?

**மதுர:** வேறு வழியில்லேயென்றே நினேக்கிறேன்.

**சௌ:** அப்படியானுல் வேறு வழியின்றி ஒப்புக்கொள்கிறேன். ஆச்சரியம்! ஆயிரம் ரூபாயைவிட ஒரு முத்தம் அதிக விலேயா? சரி. நீ செய்யும் உதவி எதுவோ சொல்.

**மதுர:** லுப்தாவதானியார் கல்யாணம் செய்துகொண்ட குழந்தை பெண்ணில்லே.

**சௌ:** (ஆச்சரியமுடன்) என்ன!

**மதுர:** மறந்துவிட்டேன். அதில் சம்பந்தப்பட்டவர்களே யாருக்கும் தீங்கு நேராமல் காப்பாற்றுவேன் என்று சொன்னலொழியப் பெயர்கள் சொல்ல மாட்டேன்.

**சௌ:** இல்லேயென்ருல் சொல்லமாட்டாயா?

மதுர: சொல்ல மாட்டேன்.

சௌ: லுப்தாவதானியாரால் யாருக்கும் தீங்கு நேராமல் காப்பாற்றுகிறேன். அவரைத் தவிர வேறு யாருக்காவது தீங்கிழைத்திருந்தால் என்னால் முடியாது.

மதுர: போதும். இனிச் சொல்கிறேன். கரடக சாஸ்திரிகள் அவர் சிஷ்யனுக்குப் பெண்வேஷம் போட்டுவைத்துக் கல்யாணம் செய்து வைத்தார்.

சௌ: கரடக சாஸ்திரியா குண்டூர் சாஸ்திரிகள்?

மதுர: ஆமாம். கொஞ்சம் தாடி ஒட்டிவைத்துக் கொண்டார். அவ்வளவுதான் வித்தியாசம்.

சௌ: அடே! அவன் போக்கிரித்தனம் பார்த்தாயா?

மதுர: அவர்மேல் தப்பில்லை. அக்னிஹோத்ராவதானியின் மகள் அவருக்குத் தங்கச்சி மகள் வேணும். அந்தக் குழந்தையை லுப்தாவதானிக்குக் கொடுக்க நிச்சயமான சங்கதி தங்களுக்குத் தெரிந்ததுதான். அந்தச் சம்பந்தத்தைத் தவிர்க்கத்தான் கரடக சாஸ்திரிகள் இந்தமாதிரியெல்லாம் செய்தார். அவருக்கு மட்டும் தீங்கு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

சௌ: அடே, என்ன ஆச்சரியம்! விழித்திருக்கிறேனா? தூங்குகிறேனா?

மதுர: என் பீஸைக் கொடுத்துவிட்டுப் பிறகு தூங்குங்கள்.

சௌ: ஏழை என்னால் கொடுக்க முடியாதே.

மதுர: எனக்கு உலகத்தில் செல்வம் முழுதும் அது ஒன்றுதானென்று நினைக்கிறேனே.

சௌ: நீ அழகுடையவள். முத்தமிடுவது கசப்பென்றா? விரதபங்கம் ஆகுமல்லவா என்று அஞ்சினேன்.

[முத்தமிடப் போகிறார்.]

மதுர: நில்லுங்கள்!

சௌ: என்ன?

மதுர: என்னுடைய விரதம்?

சௌ: என்ன அது?

மதுர: கெடாதவர்களைக் கெடுக்கக்கூடாதென்பது என் தாயின் உபதேசம்,

சௌ: அதனால்...?

மதுர: ஆகையால் உங்களை முத்தமிட விடமாட்டேன்.

சௌ: நன்றியோடிருக்கிறேன்.

மதுர: அந்த புஸ்தகத்தை நான் பார்க்கலாமா?

சௌ: பார்.

[மதுரவாணி புஸ்தகத்தைப் பிரித்துப் படிக்கிறாள்.]

மதுர: பகவத்கீதை. இது நல்லவர்கள் படிக்கும் புஸ்தகமா?

சௌ: இது கெட்டவர்களையும் நல்லவராக்கும் புஸ்தகம்.

மதுர: இதில் என்ன இருக்கிறது?

சௌ: இதைப் படித்தவர்களுக்கெல்லாம் விலைமதிப்பற்ற ஒரு நண்பன் கிடைக்கிறான்.

மதுர: யார் அந்த நண்பன்?

சௌ: கண்ணன்.

மதுர: கண்ணன் தாசிகளுடன்கூட நட்பாக இருப்பானா?

சௌ: ஸ்ரீ கிருஷ்ணன் தன்னை நம்பியவர்களிடத்திலெல்லாம் நட்பாக இருப்பான். பரமாத்மாவுக்கு ஜாதி பேதங்களில்லை.

மதுர: ஸ்ரீ கிருஷ்ணன் பிரம்மச்சாரியில்லையா?

சௌ: என்ன பேதையாக இருக்கிறாயே!

மதுர: அப்படியானால் இந்த புஸ்தகத்தைப் படிக்கிறேன். படித்து நல்லவளாகிறேன்.

சௌ: வேண்டுமானால் அந்த புஸ்தகத்தைக் கொண்டுபோ.

மதுர: மிகுந்த நன்றி. விடைபெற்றுக்கொள்ளட்டுமா.

சௌ: (சிறிது யோசித்து) நீ நல்லவள். யாரோ கால் நழுவிய நல்ல மனிதனின் குழந்தையாக இருப்பாய். இந்தத் தொழிலைவிட முடியாதா? நிலைமை மோசமா?

மதுர: கடவுளருளால் குறையொன்றும் இல்லை. என் தொழிலின் இழிவை நானறிவேன். நல்லவர்களின் அருள் கிடைத்த பிறகும் இழிதொழில் புரிவேனா?

சௌ: (பகவத்கீதை புஸ்தகத்தின் மேலுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவானின் உருவப் படத்தை விரலால் சுட்டிக்காட்டி) நல்லவர் என்ற பெயருக்கு உரியவரான இந்த நல்லனை உனக்குத் தந்தேன். அவனுடைய நட்பு மிகுந்ததும் எம் போன்றவர்களை மறந்துவிடுவாய்.

மதுர: அவ்வப்போது தங்களைத் தரிசனம் செய்து கொள்ளலாமா?

சௌ: (விழிக்கிறார்)

மதுர: தொழிலை விட்ட பிறகும்...நல்ல...

சௌ: அப்படியானால் வரலாம்.

மதுர: மிக்க நன்றி. (புஸ்தகத்தை மார்பில் ஊன்றி, கரங் குவித்து) வணக்கம்.

சௌ: இன்னுமொரு சங்கதி (மதுரவாணி கேள்விக் குறியுடன் புருவங்களை உயர்த்திப் பார்க்கிறாள்) உனக்கு கிரீசத்தின் அறிமுகம் எங்கே?

மதுர: மன்னிக்கவும்.

சௌ: சொல்லமாட்டாயா?

மதுர: தாங்கள் சொல்லத்தான் வேண்டுமென்று கட்டளையிட்டால் மறுக்க முடியுமா? பாவம். அவரைப் பிழைக்க விடுங்கள்.

சௌ: அவன் வாழ்க்கையைப் பார்க்கிறாய். அவன் வேறு விதமாக இருந்தால், பாவம் அந்த புச்சம்மாவின் வாழ்க்கை கெடுகிறது. இதைப் பார்க்கவில்லையே.

மதுர: (ஆலோசித்து) ஆம். அவர்கள் எனக்குக் கொஞ்ச நாட்கள் இங்கிலீஷ் படிப்பு சொல்லித் தந்தார்கள். அதோடு கொஞ்ச காலம் என்னை வைத்துக் கொண்டார்கள்.

சௌ: எத்தனை நாட்களுக்கு முன்பு?

மதுர: முந்தா நாள் வரைக்கும்.

சௌ: ஆச்சரியம்! ஒரு நிமிஷம் நில். (மேலே சென்று கிரீசத்தைப் பின்னால் அழைத்துக் கொண்டு வந்து) நெப்போலியன் ஆப் ஆண்ட்டிநாச் அவர்களே! இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?

கிரீ: கொஞ்ச காலத்துக்கு முன்பு கிரீசம் என்று ஒரு பூலிஷ் யங்மேன் இருந்தான். மதுரவாணி என்று ப்'யூட்டிபுல் தாசி டெவில்(பேய்) இருந்தாள். அவன் தனது துரதிர்ஷ்டத்தினால் அவள் வலையிலே சிக்கி, மெய் மறந்து இருளில் வீழ்ந்துவிட்ட செய்தி உண்மை. குருவின் உபதேசத்தால் சில நாட்களுக்கெல்லாம்

உண்மையை உணர்ந்துகொண்டான். அந்த இருளி லிருந்து வெளிப்பட்டு குருவின் பாதங்களைச் சேர்ந்து நடந்ததெல்லாம் கனவாகப் பாவித்து மறந்து விட்டு நல்வழிப்பட்டான். அந்தக் கிரீசமே இந்தக் கிரீசம். அந்த மதுர்வாணியே இந்த மதுரவாணி. சுவர்க்கத் திற்கு ஒரு படி கீழிருக்கும் என்னை நரகத்துக்கு இழுக்க மீண்டு மிங்கே என் பூர்வஜன்ம வாசனையால் தோன்றி யிருக்கிறாள். ஐ டர்ன்ட் ஆல்டு கெதர் அன் யு லீப், பாபத்தில் கால்வழுவி பச்சாதாபப்பட்டு ரிபார்மராகி விட்டேன். என்னைப்போன்ற சின்னர்ஸ்களுக்கு சகாயம் செய்து நல்லவர்களாக்குவதே தங்கள் கடமையேயன்றி வாழ்க்கையைக் கெடுப்பது நியாயமில்லை. ஐ க்ரேன் யுவர் மெர்ஸீ.

**சௌ:** எத்தனை நாளாயிற்று இருளிலிருந்து ஒளிக்குள் குதித்து?

**கிரீ:** (சும்மா இருக்கிறான்)

**சௌ:** (மதுரவாணியிடம்) நீ சொல்ல முடியும்.

**கிரீ:** எத்தனை நாளானால்தானென்னங்க. சீர்திருந்தி உண்மையுணர ட்வண்ட்டிபோர் ஹவர்ஸ் போதா துங்களா?

**சௌ:** அடே! உன்னைப்போன்ற ஆஷாட பூதிகளால் உங்கள் குருவாகப்பட்டவர் எவ்வளவு சுலபமாக ஏமாற்றப் படுகிறார். அடடா! என்னைக்கூட ஏமாற்றி விட்டாயே. உன்னை இனிமேல் சேரவிடக் கூடாதென் றும், புச்சம்மாவை பூனாவில் விடோஸ் ஹோமுக்கு அனுப்பும்படியும் உங்கள் குருவின் பேரில் டெலிகிராம் தருகிறேன். அவள் படித்து அறிவு தெரிந்ததும், தனக் கிஷ்டமான இளைஞனைக் கல்யாணம் செய்து கொள் ளட்டும். இல்லையென்றால் சும்மா இருக்கட்டும். நீ ரிபார்ம் ஆகிவிட்டேன் என்றல்லவா சொன்னாய்? அது உண்மையானால் காலேஜுக்குப் போய், மேல் படிப்புப் படித்துக்கொள். உன் நடவடிக்கைகள் நன்றாக இருக்கும் வரைக்கும் நான் பொருளுதவி செய் கிறேன். புத்தி வரவழைத்துப் பிழைத்துக் கொள். மதுரவாணியை டெவில் என்றாயே. நீதான் டெவில். அவள் உன் அயோக்கியத்தனத்தைக் கூட அழுத்திக் கேட்ட பிறகன்றி சொல்லவில்லை. ஒரு அப்பாவி

பிராமணனைக் காப்பாற்றியதோடு, துன்மார்க்கனாகிய உன் கையில் விழாமல் புச்சம்மாவையும் காப்பாற்றினாள். எனக்கொரு பெரும் உதவிகூடச் செய்தாள். ஆகையால் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள இதோ அவளுடன் ஷேக்ஹாண்ட் செய்கிறேன். (கைகுலுக்குகிறார்) நெப்போலியன்! இப்போதே வீட்டைவிட்டு வெளியே போ!

**கிரீ:** (அறை வாசற்படியைத் தாண்டி) டாமிட்! கதை குறுக்காகத் திரும்பிவிட்டது.

(திரை விழுகிறது)

சுபம்.

# அறிமுகக் குறிப்புகள்

## குரஜாடா அப்பா ராவ்

### (சரித்திரச் சுருக்கம்)

ஆந்திர நாட்டில் விசாகப்பட்டினம் ஜில்லாவிலுள்ள ராமவரம் எனும் கிராமத்தில் குரஜாடா அப்பாராவ் 1861-ம் ஆண்டு நவம்பர் மீ 30வ யன்று பிறந்தார். தந்தையார் பெயர் வெங்கட ராமதாஸ் பந்துலு. தாயார் பெயர் கௌசலம்மா. அப்பாராவ் விஜயநகரம் காலேஜில் படித்து 1886-ல் B.A. பாஸ் ஆனூர். இவர் படித்துக்கொண்டிருக்கும் போது ஆங்கிலத்தில் கவிதைகளெழுதி பத்திரிகைகளில் வெளியிடுவது வழக்கம். சிந்நாள் ஆசிரியராகவும், டிப்டி கலெக்டர் ஆபீஸில் ஹெட்கிளார்க் ஆகவும் வேலை பார்த்தார். பின் காலேஜில் விரிவுரையாளராக அமைந்தார். விரிவுரையாளராக இருக்கும்போதுதான் 1896-ல் இந்த 'கன்யா சுல்கம்' நாடகத்தை இயற்றினூர். பின் சில உயரிய கவிதைகளும் சிறுகதைகளையும் இயற்றியுள்ளார்.

விஜயநகரம் மகாராஜா ஆனந்தகஜபதி அவர்கள் அப்பாராவின் உடல்நலக் குறைவை உணர்ந்து விரிவுரையாளர் பதவியிலிருந்து விடுத்து 1896-ஜூன் மீ முதல் சமஸ்தான சாசனப் பரிசோதகராக நியமித்தார். அப்பாராவ் 1910-ல் எழுதிய "தேசபக்தி" என்ற கவிதை அவருக்கு சிறந்த புகழைத் தேடித் தந்தது. ஒவ்வொரு தெலுங்கனும் இப்பாடலைப் பாடி மகிழ்கின்றுன். இப்பாடல் தேசபக்தியை ஊட்டுவதோடு வீறுகொண்டெழச் செய்கிறது. இத்தகைய அரிய நாடகமும் கவிதையும் எழுதி தெலுங்கர்கட்கு வழி காட்டியாக அமைந்த கவிஞர் குரஜாட அப்பாராவ் 1915 நவம்பர் 30வ தமது 54-வது வயதில் பூத உடல் நீத்து புகழ் உடல் எய்தினூர்.

அப்பாராவ் சமுதாய சீர்திருத்தவாதி; மக்கள் கவிஞர்; மக்களது பேச்சு நடையிலேயே இலக்கியங்களை உருவாக்க வேண்டும் எனும் உறுதியான கருத்தைக்கொண்டிருந்தார். பண்டிதர்களின் எதிர்ப்பைச் சிறிதும் லட்சியப்படுத்தவில்லை. இவரது கொள்கைகளையும் அறிவாழத்தையும் கற்பனைத் திறனையும் கன்யா சுல்க நாடகத்தில் தெளிவாகக் காண முடியும்!

## மு. கு. ஜகந்நாத ராஜா

**வயது : 30. ஊர் : இராஜபாளையம்.**

இளைஞர்; சுயமாகக் கற்றவர். தமிழில் "ஆபுத்திர காவியம்" எனும் காவியமும், பல கவிதைகளும் எழுதியுள்ளார். தெலுங்கில் "குறிஞ்சிப் பாட்டு" மொழிபெயர்த்துள்ளார். தெலுங்கிலக்கியங்களைத் தமிழாக்கம் செய்வதும், தமிழ் இலக்கியங்களை தெலுங்கில் மொழி பெயர்ப்பதும் இவரது நோக்கங்களில் முக்கியமானது. அறிந்த பிற மொழிகள் — மலையாளம், கன்னடம், ஹிந்தி. சமஸ்கிருதத்திலும் பயிற்சியுண்டு. இலக்கியத்திலும், தத்துவத்திலும் ஈடுபாடுடையவர். ஒரே உலகம், ஒரே அரசாங்கம் என்பதே இவரது லட்சியம். தொழில்—ஜவுளி வியாபாரம்.

### பிற இலக்கியப் பணிகள்

1. நாகானந்தம் —வடமொழி நாடகத் தமிழாக்கம்.
2. தேய்பிறை —தெலுங்குக் கவிதை மொழிபெயர்ப்பு.
3. சிலம்பில் சிறு பிழை —விமரிசனக் கட்டுரை.
4. ஆபுத்திர காவியம் —பெருங் காவியம்.
5. சிறு காப்பியங்கள்-I
   டாமன்—பிதியஸ்.
   மைதாஸ்.
   யார் காரணம்?
   ஹாதிம் தாய்.
   வஞ்ச மது.
6. கற்பனைப் பொய்கை —கவிதைத் தொகுதி.
7. வேமனா —வேமனா உபதேசங்கள். (தெலுங்கிலிருந்து தமிழாக்கம்.)
8. சுமதி சதகம் —தெலுங்கு நீதி நூலின் தமிழாக்கம்.

45-ம் பக்க அடிக் குறிப்பில் கூறப்பட்டுள்ள
இங்கிலீஷ் பாட்டு.

# THE WIDOW

She leaves her bed at A.M. Four
And Sweeps the dust from off the floor
and heaps it all behind the door
The Widow!

Of wond'rous size she makes the cake
And takes much pains to boil and bake
and eats it all Without mistake
The Widow!

Through fasts and feasts she keeps her health
And pie on pie, She stores by stealth
Till all the town talk of her Wealth
The Widow!

And now and then She takes a mate
And lets the hair grow on her pate
And cares a hang what people prate
The Widow!

I love the Widow—however she be,
Merried again—or Single free,

Bathing and praying,
Or frisking and playing,

A model of saintliness,
Or model of Comeliness

What were the Earth
But for her birth...? The Widow!

இதன் சுதந்திரமான தமிழாக்கம் பின்பக்கம் காண்க. நகைச்சுவைப் பாடலேயாதலின் நயமொன்று மிராதென்பதும் அறிக்.

# விதவை

காலேமணி நான்கிற்கே கட்டிலினை விட்டெழுவாள்
ஞாலமுறும் தூசிகளை நன்ருகப் பெருக்கியதை
கோலமுறு கதவிடுக்கில் குவித்திடுவாள் விதவையவள்.

அற்புதமாம் அப்பத்தை அழகாகச் செய்திடுவாள்
பொற்புடனே துயர்பொறுத்துப் புரட்டியதைச் சுட்டிடுவாள்
விற்பனமாய் அத்தனையும் விழைந்துண்பாள் விதவையவள்.

விருந்தினிலும் விரதத்திலும் விரும்புடலைப் பேணிடுவாள்
அருந்தனத்தை மெலப்பிறர்தா னறியாமற் சேகரிப்பாள்
பொருந்துசெல்வம் தனையூரார் புகல்மட்டும் விதவையவள்.

தோழமையைச் சேர்த்திடுவாள் துணிவுடனே தலைமயிரை,
மீளவுமே வளர்த்திடுவாள் மேலுமவ் வூரார்கள்
ஏளனமாய் பேசிடினும் இதயத்துட் கொள்ளாளே.

நான்வித வைதனைக் காதலிக் கின்றேன்
மீண்டும் மணமுடித் தாலும் சுதந்திர
மாகத் தனித்திருந் தாலும் மேலும்
குளிப்பினும் துதிப்பினும் களிப்பினும் கருதேன்
எப்படி இருப்பினும் இன்புடன் ஏற்பேன்
ஞானமே உருவினள் ஞாலத் திவள்பிறப்
பானதெய் வமென அதிசயிக் கின்றேன்.

# கன்யா சுல்கம்

(அற்புதத் திருமணம்)

ஆண், பெண் வேஷம் பூண்டு ஒரு குழப்பத்தை உண்டுபண்ணுகிறான். ஒரு பெண், ஆண் வேஷம் பூண்டு அந்தக் குழப்பத்தைத் தீர்த்து வைக்கிறாள்.

கொலையே நடைபெறவில்லை. ஆனால், கொலைக் கேஸ் மட்டும் தடபுடலாக நடைபெறுகிறது. சாட்சிகள் வருகின்றனர். ஜட்ஜும் விசாரிக்கிறார்.

கிழவர் இளங்குமரியை மணக்க முயன்றார். கல்யாணம் நடந்தது. மணப்பெண் மறுநாளே காணோம். அழகிய இளைஞன் இளம் விதவையை மணக்க முயன்றான். அவளும் சம்மதித்தாள். ஆனால், பாவம்! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை!

அவள் வேசிதான். ஆனால், ஆயிரம் ரூபாயை விட அவரது ஒரு முத்தம் பெரியது, விலைமதிப்புடையதென்று கருதினாள். அவரோ அதைத் தர மறுத்தார். பரோபகாரத்திற்காக முத்தம் தரச் சம்மதித்தார். ஆனால், அதே வேசி அவரது முத்தத்தைப் பெறத் தனக்கு தகுதியில்லையென்று மறுத்தாள். உணர்ச்சிகரமான இந்தக் கட்டம் நூலின் இறுதியிலே வருகிறது. உலக இலக்கிய நிகழ்ச்சிகளில் சிறந்த ஒரு நிகழ்ச்சியாக இந்தக் கட்டம் திகழ்கின்றது.

'சத்தியம் வெல்லும்; தீமை மாயும்' என்ற பேருண்மையை விளக்கி, சமுதாய சீர்கேடுகளை அம்பலப்படுத்தி, கலை மெருகு கெடாமல் பிரத்தியட்ச வாழ்வைச் சித்திரிக்கும் இந்த நாடகம், உலக நாடக இலக்கியத்தில் ஒன்றாக வைத்தெண்ணப்படுகிறது.

'கன்யா சுல்கம்' நாடகம் மட்டுமன்று; கருத்துக் களஞ்சியம்; களிப்பூட்டும் கனிரசம்; இன்பந்தரும் எழில் மிகுந்த இலக்கியப் பூஞ்சோலை!

Jacket Printed at Neo Art Press, Madras - 2